ஸ்ரீ வேதாந்த தீபிகை

தொகுதி - 27 எண். 4.5.6.

ஏப்ரல் முதல் ஜூன் வரை

1938

JL
R65m 211,N12
N38.27.4-6
158716

SRI VEDANTA DIPIKA

VOL. 27] APRIL 1938 [PART 4

474

ஸ்ரீ வேதாந்த தீபிகை

பகுதா்ன்ய ஷூ

சித்திரை மீ

பத்ராதிபர்கள் :

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

வீ. அனந்தாசாரியர்

உப-பத்ராதிபர்கள் :

வேதாந்த சிரோமணி T. வேணுகோபாலாசாரியர்

ஏ. ஸ்ரீநிவாஸராகவன் M.A., [மகாராஜா காலேஜ், புதுக்கோட்டை.]

CONDUCTED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,

VANI VILAS 4—5, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS.

OFFICE OF THE REGISTRAR ... MAY 1938 MADRAS

अम्रतांजनम्

ஸ்ரீ:

ஶ்ரியை நம:

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

விஷய ஸூசிகை

1. ஹானரபிள் ஜஸ்டிஸ் கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் — 109

2. ஸ்ரீ ராமாயண ரஸாஸ்வாதம் — 111
   [ஸ்ரீ. உ. வே. தி. வீரராகவாசார்யர்]

3. பட்டரின் திருமஞ்சனக்கவிகள் (3) — 121
   [ஸ்ரீ. ஸ்ரீ.]

4. விசாரம் செய்யவேண்டிய விஷயங்கள் — 124
   [ஸ்ரீ. உ. வே. வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார்]

5. விருத்தாந்தங்கள் — 125

6. अभीतिस्तवः — 17—24
   [ஸ்ரீ. உ. வே. எ. வி. கோபாலாசார்யர், M. A., B. L., அட்வகேட், திருச்சி.]

7. ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தி — 73—80

8. வேதாந்த ஸாரம் — 94—56

9. வேத வைபவ பரிசிஷ்டம் — 1—16
   [ஸ்ரீ. உ. வே. வி. ஆர். எஸ். தாதாசார்யர், திருவாதி]

अमृताञ्जनम्

அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முது மொழி கூறுகிறது.

“ अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् । ”
“ अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः । ”

தலைவலி, ஜலதோஷம்,
சுளுக்கு முதலான சகல
நோய்களையும் தீர்க்கவல்ல
ப்ரஸித்தமான லேபனம்—

அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

அதிர்ஷ்டம்! **எப்படி?**

L. N. பெப்பர்மெண்டையே வாங்கவேண்டும்.

குழந்தைகளின் சிநேகிதர்கள்! பெற்றோர்களின் களிப்பு!!

விலை மலிவு! சுவை பெரிது!

நன்மை தரும்!

இந்திய முதல்—இந்திய தொழிலாளிகள்.

வாங்க முந்துங்கள்! **கொடுக்கும் பணத்திற்கு நல்ல பெப்பர்மெண்டு!!**

For Delicious and wholesome Confectionery made of selected Fruit Essence and healthy glucose, apply to :—

SRI L. N. SHIYALI CONFECTIONARY, LTD.,

MADRAS OFFICE :—**Phone No. 3658 : Res. No. 4258**

304, Thambu Chetty St., G. T. Madras.

L காயம்—பெருங்காயம் G

இதை ஹிங்கு—हिङ्गु என்று ஏனைய பாஷைகளிலும் வழங்குகிறார்கள். இது தன் குணத்தினாலும் நறு மணத்தினாலும் ஜீர்ணகாரியான மற்றச் சரக்குகள் பலவற்றையும் வென்றது என்பதை இப்பெயர் குறிக்கிறது. அதனாலேயே இதற்கு "ஸஹஸ்ரவேதி" என்றும் மற்றொரு பெயரும் வடமொழியில் வழங்கப்படுகிறது. "வயிற்றில் வாயு சேருவதையும், நெஞ்சில் கபம் சேருவதையும் தடுத்து விலக்கும்; வயிற்றுவலி முதலிய அஜீர்ணக் கோளாறுகளை அகற்றும்; பித்தஹரம்; சுவையில் காரமாயிருப்பதால், உணவை நன்கு ஜீர்ண செய்யும்; அரோசகத்தையும் போக்கும்; பசி தீபநம் செய்யும்" என்று ஆசார்ய வாக்படர் ஆயிரங் காலத்திற்கு முன் உயர்ந்த பெருங்காய குணங்களை உவந்து மொழிந்திருக்கிறார்.

" हिङ्गु वातकफानाहशूलघ्नं पित्तनाशनम् ।
कटुपाकरसं रुच्यं दीपनं पाचनं लघु ॥ "

இக்குணங்களை யெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிர உண்மையில் வேறெதுவுமன்று. இதைக் கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

லால்ஜீ கோது & கம்பெனி

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

சென்னை கும்பகோணம்

158716

கனம் ஹைகோர்ட் ஜட்ஜ்
ஸ்ரீ. உ. வே. சே. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி

OFFICE ... OF BOOKS
7-MAY 1938
MADRAS

ஹானரபிள்

ஜஸ்டிஸ் கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்

மங்களவாரமாகிய சென்ற ஏப்ரல்மீ 19உ, சென்னை ஹைகோர்டில், இம்மஹான், உத்தம நியாயாதிபதி ஸ்தானத்தில் நியமிக்கப்பட்டு, அதிகார அங்கீகாரணம் செய்தபோது, அது ஸம்பந்தமாய் நடந்தேறிய க்ரியா கலாப வைகரியானது, நூதனமாயும் மிகவும் அபிநந்தநீயமாயுமிருந்தது. இது வரையில் நூற்றுக்கணக்கான நியாயாதிபதிகள், ஹைகோர்ட்டில், ஷெஸ்தானத்தை ஒப்புக்கொண்டிருந்தபோதிலும், இம்மாதிரி பஹிரங்கமாக இவருக்கு நடந்த பிரதிஷ்டாபன வைபவம் அஸாதாரணமாகவும் அபூர்வமாகவும் இருந்தது. இவர் விஷயத்திலேயே முதல் முதல் இவ்வைபவப் பிரக்ரியை அநுஷ்டிக்கப்பட்டதென்று சொல்லலாம். நீதிஸ்தல மண்டபத்தில் இடமேயில்லாமல் வக்கீல்களும் பிறரும் நிறைந்திருக்க, நியாயாதிகாரிகளும் காத்திருக்க, நாலு சமுத்ரமும் ஒன்று சேர்ந்தாப்போல், பிரதம நியாயாதிபதி உட்பட முத்ராதிகாரிகளான நான்கு ஜட்ஜுகளும் ஒன்று சேர்ந்து, அய்யங்காரவர்களை வரவழைத்து, பட்டாபிஷேகம் செய்தார்கள் என்றே நினைக்கும்படி இருந்தது அவ்வைபவம். ஹைகோர்டு நியாயாதிபதி ஸ்தானத்தை ஒப்புக்கொள்ளும்பொழுது பிரமாணம் ஒன்று செய்வது பழையதோர் வழக்கம். அந்தப் பிரமாணத்தில், இந்தியா சக்ரவர்த்தி அவர்களுக்கு விச்வாஸமும், நியாய பரிபாலனத்தில் நிஷ்பக்ஷபாதமும், உறுதிமொழி கொடுக்கவேண்டியதாக ஏற்பட்டிருக்கும் வசனங்களை ஸ்ரீமான் அய்யங்கார், மெதுவாயும், கம்பீரமாயும் படித்தது, ஸந்தர்ப்பாநுகுணமாகவிருந்தது. பிறகு ஸ்ரீமான் அட்வொகேட் ஜனரல் ஸர். அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள், சில அபிநந்தன வசனங்கள் சொல்ல, அதற்குப் பிரத்யுத்தரமாய் ஸ்ரீமான் அய்யங்காரவர்கள், தாம், தம்மால் இயன்றின அளவு, மனுஷ்யன் ஒருவருக்கும் பயப்படாமலும், பகவான் ஒருவருக்கே எபபொழுதும் பயப்பட்டும் நியாய நிர்வாஹம் செய்வதாகத் தன் ஸங்கல்பத்தை உச்சஸ்வரத்தில் சொன்னதும், எல்லோராலும் அநுமோதிக்கப்பட்டு கொண்டாடப்பட்டது.

ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் வைதிக வித்வத் வம்சத்தில் ஜனித்தவர். சிறுபிராயம் முதல் சிரமத்தைப் பாராமல், சிரத்தையுடன் உரிய கர்மங்களைச் செய்து முடிப்பதில் ஊர்ஜஸ்வியாயிருப்பவர். வக்கீல் வேலையில் அமர்ந்த நாள் முதல் தாம் சம்பந்திக்க நேர்ந்த ஒவ்வொரு

பெரிய வக்கீல்களாலும் பஹுமானிக்கப்பட்டு வந்திருப்பவர். தம்மிடம் வந்த கக்ஷிக்காரர்களுக்கு தம்மால் ஸாத்தியமானவரையில் சிரமப்பட்டு, அவர் கக்ஷிகளை எந்த ரீதியில் வாதித்தால் ஜயம்பெறலாமோ அவ்விதம் திறம்படவே வாதித்து ஜயம் பெறுபவர் என்று பிரஸித்தி யடைந்தவர். "வழிதெரிந்து வழிநடந்து, சேரிடம் அறிந்து சேர்ந்தவர்" நியாயாதிபதிகள் அனைவராலும் சரிதம், ஸாமர்த்தியம் இவ்விரண்டிலும் வெகுமானிக்கத் தகுந்தவாறு பதம் பெற்றவர்.

இப்பெரியோர் தமக்கு ஸ்திதி, ஸம்பத்து, பிராபல்யம் முதலானவை தம்மை வந்து அடைந்த காலத்தும், வைதிக ஸ்ரீயை கைவிடாதவர். இவ் விஷயத்தில் ஹைகோர்டில் இது வரையில் நியாயாதிபதிகளா யிருந்த பிராம்மண சிரேஷ்டர்களின் ரீதியை இவரும் அனுஷ்டித்து வந்திருக்கிறார். சில நாட்களுக்குமுன் திருப்பதியில் கோயில்கொண்டிருக்கும் எம் பெருமானிடமுள்ள பக்தி சிரத்தையையே காரணமாகக்கொண்டு, அந்த தேவஸ்தான ஸம்பந்தமான பெரிய வியாஜ்யத்தில் இரண்டு மாதகாலம் இடைவிடாமல் வாதித்து ஜயமளித்துக் கொடுத்திருக்கிறார்.

ஸ்ரீமான் அய்யங்கார் மிகவும் மிருதுபாஷி. கோர்டு வாதத்தில் அபிநயிக்கும் கோபம் தவிர்த்து ஸ்வபாவத்தில் இம்மகானுக்குக் கோபமே உண்டோ வென்று சந்தேகிக்க ப்ராப்தம். அடக்கமும், சாந்தியும் இதர அரிய ஆத்ம குணங்களும் இவருக்கு விலையுயர்ந்த ஆபரணங்களாக அமைந்திருக்கின்றன.

இத்தீபிகையை தத்காலம் நடத்திவரும் நம் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபா (லிமிடெட்) ஸ்தாபன விஷயத்தில் அக்ரகண்யராயிருந்தவர். இவரே இந்த ஸபையின் கைங்கர்யங்கள் பூர்த்தியாகும் விஷயத்தில் செய்திருக்கும் உபகாரத்திற்கு அளவில்லை.

இம்மஹான் சென்னை ஹைகோர்ட்டில் அநேக வருடகாலம் நியாய பரிபாலனம் செய்து, முடிவில் இனிது விராமம் பெற்றபின்பும் அரோக திருடகாத்திரராயும், நமது ஸித்தாந்த புரோவ்ருத்தி விஷயத்தில் பத்த சிரத்தராயும், உத்ஸாஹியாயும், இஹபர சிரேயஸ்ஸுக்களில் ஈடுபட்டு தீர்க்ககாலம் எழுந்தருளியிருக்க வேண்டுமென்பதே நமது பரிபூர்ண மனோரதம்.

———

ஸ்ரீ:

ஸ்ரீ ராமாயண ரஸாஸ்வாதம்

[சிரோமணி, தர்க்கார்ணவ, பண்டிதரத்ன, உத்தமூர் தி. வீரராகவாசார்யர்]

(Vol. 25. 452-வது பக்கத்துக்குமேல் தொடர்ச்சி)

ஆயினும் ச்லோக ரூபமாக வந்தது வியக்கத்தக்கதே. எப்பொழுது பேசினாலும் ச்லோகத்திலேயே பேசுவதென்கிற வ்யவஸ்தையை யாரும் கொள்ளமாட்டார்கள். ஆகையாலே வால்மீகி மஹர்ஷி 'இதென்ன! ஆச்சர்யம்! பரத்வாஜனே! அக்ஷரங்கள் ஒற்று நான்கு பாதங்கள் பெற்று சுலோகமாய் கானத்திற் கிசைந்து வந்திருப்பதைப்பார்' என்று சொல்வது யுக்தமே. இதனால் இதற்குமுன் ச்லோகமே கிடையாதென்றேற்படாது. இவரே 'அனேக ச்லோகங்களை இந்த ஸ்ரீ ராமாயணத்தில் ஆங்காங்கு உதாஹரித்திருக்கிறாரென்பதை முன்னமே சொன்னோம். அவைகளை எடுக்கும்போது ச்லோகமென்று சொல்லியெடுப்பதாலே ச்லோகம் என்கிற பெயரும் பத்யத்திற்கு ஏற்கனவே இருந்ததாக ஏற்படுகிறது. இப்படி பல ச்லோகங்களை இவர் தாமும் இதற்கு முன் செய்திருக்கலாம். அந்த அப்யாஸமும் இப்போது இப்படி ச்லோகமாக வந்ததற்குக் கொஞ்சம் காரணமாகலாம். ஜைமினி மஹர்ஷியின் பூர்வ மீமாம்ஸா ஸூத்ரங்களில் அனேகமாய் அனுஷ்டுப் வ்ருத்தத்தினுடைய ஏதேனுமொரு பாதம்போல் பாகங்கள் அமைந்திருப்பதையும் காண்கிறோம். இவையெல்லாம் ச்லோக ரசனையில் அப்யாஸத்தை அறிவிக்கிறதென்பதுக்கு ஸந்தேஹமில்லை. ஆனாலும் நான்கு பாதங்களுள்ள ஒரு பூர்ண ச்லோகம் புத்தி பூர்வமல்லாமல் சோகாவேச ஸமயத்தில் அவசமாய் வந்தது ஓர் ஆச்சர்யமென்றே நினைக்கவேண்டி யிருக்கிறது. ஆக சிஷ்யனிடம் இதை ஆச்சர்யமாகக் குறிப்பிட்டு ஸந்தோஷிப்பது யுக்தமானதே.

மேலும் இங்கே 'ச்லோகோ பவது நாந்யதா' என்ற விடத்தில் ச்லோக சப்தத்திற்கு ஸாதாரணமாய் ச்லோகமென்பது மாத்திரம் அர்த்தமல்ல. பின் எதென்னில்—

ஸமாக்ஷரைஶ்சதுர்பிர்ய: பாதைர் கீதோ மஹர்ஷிணா ।
ஸோऽநுவ்யாஹரணாத் பூய: ஶோகஶ்ஶ்லோகத்வமாகத: ॥

[ஸமமான எண்ணிக்கையுள்ள அக்ஷரங்களடங்கிய நான்கு பாதங்களுடையதாக எது மஹர்ஷியாலே கானம் செய்யப்பட்டதோ; அந்த

ச்லோகம் (பிரம்மாவின் வார்த்தையைக் கேட்டபிறகு) சிஷ்யர் எல்லோரும் திரும்பத்திரும்ப ஆவ்ருத்தி செய்ததாலே ச்லோகத் தன்மையை அடைந்தது]

என்கிற விடத்தில் ஶ்லோகத்வம் என்கிற பதத்திற்குப்போல ஶ்லோக்யத இதி ஶ்லோக: என்கிற வ்யுத்பத்தியாலே ப்ரஸித்தி பெறத் தகுந்த, ச்லாகிக்கப் படக்கூடிய ச்லோகம் என்று அர்த்தம். அவ்விடத்தில் முன்னமே எட்டு அக்ஷரங்களுள்ள நாலு பாதங்களிருப்பதாலே ச்லோகமாகவேயிருந்திருக்க சிஷ்யர் அடிக்கடிச் சொன்னதாலே ச்லோகமாயிற்றென்பது எப்படிப் பொருத்தமுடையதாகும்? ச்லோகமாகயிராததொன்று ஶத ஶ: சொன்னவளவாலே ச்லோகமாய்விடுமா? ச்லோகமாயிருப்பதொன்று அப்படி ஆவ்ருத்தி செய்யாவிட்டாலும் ச்லோகமே. ஆகவே முதலில் வால்மீகி மஹர்ஷி இதை ப்ரசம்ஸை செய்திருந்தபோதிலும் பிரம்மதேவன் நேரில் வந்து தன் ஸங்கல்ப்பத்தாலே ஸரஸ்வதி இப்படி விலக்ஷண ச்லோக ரூபமாக ஆவிர்பவித்தாள் என்று சொன்னவாறே சிஷ்யர்கள் இந்த ச்லோகத்தின் மேன்மையை விச்வஸித்துணர்ந்து வெகு ப்ரஸித்தி பெறக்கூடியதென்று ச்லாகித்துச் சொல்லத் தொடங்கினார்களாகையாலே இது சரியான ச்லோகமாயிற்று. அதாவது—ச்லோகமென்று கீர்த்திக்கும் பெயர். கேவலம் நாலு பாதங்களைப் பெற்ற மாத்திரத்திலே முக்கிய ச்லோகமாகாது. அப்போது அதைப் பத்யமென்று சொல்லலாம். அது கீர்த்தி பெறக்கூடியதாகில் ச்லோகமென்று சொல்லப்படுவது உசிதம். ஆக இப்படிக்கொத்த பத்யங்களே ச்லோகங்கள். இதுவும் அப்படிப்பட்டது என்று தாத்பர்யம். ஆகையால் 'ஶ்லோகோ பவது நான்யதா' என்கிறவிடத்தில் இதுவோர் உயர்ந்த பத்யமாகக் கடவதென்று அர்த்தமாகையாலே ஒரு விரோதமுமில்லை.

இந்த ச்லோகம் ச்லாகிக்கத் தகுந்ததாயிருப்பதற்குப் பல காரணங்கள் உள:—வேட ஜாதிக்குப் பட்சியைக் கொல்லுவது ஸ்வபாவமாயிருந்தாலும் காமமோஹிதமாய் விஹரித்துக் கொண்டிருக்குந் தருணத்தில் ஆண் பட்சியை வேடன் அடித்ததையும், பெண் பட்சி கதறிக் கூச்சலிடுவதையும் பார்த்து அதனாலே மஹர்ஷி அனுபவிக்கப்பெற்ற சோகரஸத்தின் பரீவாஹமாய் வெளிவந்து ரஸப்ரதானமாய் முக்ய காவ்ய லக்ஷணம் பொருந்திய ச்லோகமாயிருப்பது ஓர் காரணம். இதை 'க்ரௌஞ்சத்வந்த்வ வியோகோத்த: ஶோக: ஶ்லோகத்வமாகத:' என்று த்வன்யாலோகத்திலும் 'ஶ்லோகத்வமாபத்யத யஸ்ய ஶோக:' என்று ரகுவம்சத்திலும் சொன்னார்கள். இந்த ச்லோகங்களை யனுஸரித்து மேலெடுத்த ஸ்ரீ ராமாயண

ச்லோகத்திலே 'ஶ்லோகஶ்லோகத்வமாகத:' என்பதற்கு பதிலாக 'ஶோகஶ்லோகத்வமாகத:' என்றொரு பாடமிருக்கிறது. ஆனால் 'எது கானம் பண்ணப்பட்டதோ அந்த' என்று அர்த்தமுள்ள பூர்வார்த்தத்தோடு ஸ்வரஸமாக அந்த பாடம் இசையாததாகையாலே 'ஶ்லோக: ஶ்லோகத்வமாகத:' என்கிற பாடமே யுக்தமானது. இங்கே 'சோகமானது ச்லோகமாயிற்று' என்கிற விடத்தில் சோகம் என்பதாலே பட்சி துக்கத்தைப் பார்த்து மஹர்ஷி துக்கப்பட்டாரென்றும் அந்தத் துயரமே ச்லோகமாயிற்றென்றும் நினைக்கலாகாதென்றும் அப்பட்சி சோகத்தின் ஆஸ்வாதன விசேஷத்தாலே ஆவிர்பூதமான கருணரஸமே ச்லோகமாயிற்றென்றும் அல்லாதபோது காவ்யத்துக்கு ரஸம் ஆத்மா என்பதற்கு விரோத முண்டாமென்றும் த்வன்யாலோக வ்யாக்யானமான லோசனத்திலே வ்யக்தம். ஸர்வஸாக்ஷாத்காரம் செய்யும் ஸாமர்த்யமுள்ள பகவானுக்குப் பிறரின் ஹர்ஷ சோகங்களுடைய ஆஸ்வாதன விசேஷத்தாலேற்பட்ட ரஸாவிர்பாவத்தையு மிப்படியே ஹர்ஷ சோகங்களாகச் சிற் சில விடங்களில் வ்யவஹரிப்பதுண்டு. இப்படி சோக ரஸபரீவாஹமான இந்த 'மாநிஷாத' ச்லோகத்தினால் இவர் வேடனை சபித்தது ந்யாயமா? காம மோஹிதமான பட்சியை வதம் செய்யக் கூடாதாகில் அதற்குப் பலத்தை அவனே அனுபவிக்கிறான். இவர் இம்மாதிரி சபிப்பது யுக்தமாகுமோ. சபித்தாலும் இவருக்கு பின்னிட்டாவது அனுதாபம் ஏற்பட்டிருக்க வேணுமே. அதுவுமில்லையே. பட்சியின் கஷ்டத்தை நினைத்து நினைத்து வருந்துகிறாரேயொழிய நாம் ஏன் சபித்தோமென்று வருத்தப்படவில்லையே யென்று கேழ்க்கலாம். இதற்கு இம்மாதிரி விலக்ஷணமா யேற்பட்ட சோகரஸ பரிவாஹமாகையாலே தான் காவ்யத்திற்கழகு. வேறு சிந்தையாலே பங்கம் செய்யக்கூடிய ரஸமாகில் அப்போது இவ்வழகு ஏற்படாதென்றே ஸமாதானம். ஸ்வபாவத்திலேயே காருணிகராயும் ஸ்ரீராம விச்லேஷத்தோடு ஆச்ரமத்தில் வருந்துகிற ஸீதாபிராட்டியைப் பார்த்துமிருக்கு மிவருக்கு க்ரௌஞ்சியின் துர்த்தசையைப் பார்த்து சோகரஸம் அபிவிருத்தமாய்விட்டது. மேலும் இவர் புதியதாக ஒரு விதம் அவனை சபித்ததொன்றுமில்லை. காமமோஹித வதம் செய்தாலேற்படும் சாஸ்திரார்த்தத்தை வெளிப்படுத்தினது மாத்திரமே. ஆகையால் இவருக்கு அனுதாபம் வரவேண்டியதற்கு அவகாசமில்லை. இப்படி அவசமாய் விலக்ஷண சோகரஸ பரீவாஹமாய் ச்லோகமாய் வந்தது இதன் ச்லாகனத்துக்கோர் காரணம்.

இனி மற்றுமோர் காரணத்தைக் குறிப்பிடுகிறோம்:—வால்மீகி மஹர்ஷி ஸ்வபாவத்திலேயே ஸ்ரீ ராம பக்தராய், ஸீதை தத்காலம் தம்

ஆச்ரமத்தில் வஸித்து வந்ததாலே தபஃக்லேசித்தாய், அன்றையதினம் காச்யப மஹர்ஷியின் உபதேசத்தாலே ஸம்பூர்ண ராமகதாநுபவத்திலே மூழ்கியிருக்கும்பொழுது அவர் முகத்திலிருந்து வேடனைப் பார்த்துச் சொல்லும் வியாஜத்திலே வெளி வந்த இந்த ச்லோகத்தில் ஸ்ரீ ராம கதைப் பூராவாகத் தோற்றுவதும் இதை யாதரித்துப் போந்ததற்கு ஒரு முக்ய காரணம். இதிலிருந்து அக் கதை பூராகவும் எவ்வாறு தெரிவிக்கப்படுகிறதென்னில் கேண்மின் : இங்கே 'அவதீ:' என்கிற பதம் ஹந — ஹிம்ஸாகத்யோ: என்கிறபடி ஹநதாதுவிலிருந்து ஏற்பட்டதாகையால் அதற்குக் கொன்றாய், அடைந்தாய் என்றிரண்டு அர்த்தங்களுண்டு. இப்படி க்ரௌஞ்ச—என்பதுக்கும் க்ருசமான, குடிலமான என்றிரண்டர்த்தங்களிருக்கின்றன. ஹநதாதுவுக்குக் 'கொல்லுகிறது' என்கிற அர்த்தத்திலேயே ப்ரஸித்தியாகையாலே அப்ரஸித்தமான மத்யமத்தைக் கொண்டால் 'நிஹதார்த்த' என்கிற தோஷம் வருமென்று சங்கிக்கக்கூடும். ஆனாலும் ப்ரஸித்தார்த்தத்தை விட்டு அதை மாத்திரம் விவக்ஷித்தால் தான் அந்த தோஷம் வரும். இங்கு ப்ரகரணத்தை யனுஸரித்துப் பட்சியைக் கொன்றாய் என்கிற அர்த்தமே முதலிலேற்பட்டது. அப்படியே கொன்றாய் என்கிற அர்த்தத்தை வைத்துக் கொண்டே ராம கதையில் அனேகாம்சங்கள் கிடைத்து விடுகின்றன. அவற்றோடு இதராம்சங்களையும் கூடியவரையில் ஸூசிப்பதற்காக அப்ரஸித்தமான அர்த்தத்திலும் தாத்பர்யங் கொள்ளுகிறோம். இம் மாதிரி அனேகார்த்தம் கொள்ளுமிடத்தில் நிஹதார்த்த என்கிற தோஷங் கிடையாதென்றே ஆலங்காரிகரின் நிர்ணயம். ஆகையாலே, உத்காதம், உபோத்காதம், ஸம்வாதம், ஸம்ஹநநம் இத்யாதிஸ்தலங்களிற்போலே மத்யமமாகக் கொள்ளுவதில் குற்றமில்லை. ஆக 'அவதீ:' என்பதற்கு ஹிம்ஸித்தாய், அடைந்தாய் என்று இரண்டு அர்த்தங்கள். 'மாநிஷாத ப்ரதிஷ்டாம்' என்கிற விடத்தில் மாநிஷாத ப்ரதிஷ்டாம் என்றும், மாநிஷாத—அப்ரதிஷ்டாம் என்றும் இரண்டு பதங்களாகவும் மா-நிஷாத-ப்ரதிஷ்டாம் என்று மூன்று பதங்களாகவும் விபாகம் செய்யலாம். ஆக இவ்விடத்தில் அனேக யோஜனைகள் ஏற்படுகின்றன. அவற்றிற்குத் தக்கவாறு பத விபாகங்களையும் அர்த்தங்களையும் பார்த்துக் கொள்ளவும். யோஜனைகளாவை யென்னில் :—

(1) ஹே மாநிஷாத! இராஜ்ய லக்ஷ்மியைப் பாம்பரையாகத் தன் வம்சத்திலே நிலை நிறுத்த ப்ரயத்னமுள்ள தசரத மஹா ராஜனே! நீர் தபோனுஷ்டானத்தாலும் ஸ்வபாவத்தாலும் க்ருசரான ருச்யச்ருங்கர், சாந்தை என்கிற மிதுனத்தில் ஒருவராயும், கணிகா ஸ்திரீகளின் மூலமாக மோஹிக்கப் பண்ணி ரோமபாத ராஜனாலே ஸ்வாதீனம் செய்யப்பட்டவருமான ருச்யச்ருங்கரை யடைந்தபடியாலும்,

(2) க்ரௌஞ்சமிதுநாத்— சாந்தை, ருச்யச்ருங்கா என்கிற மிதுனத்தை முன்னிட்டுக் கொண்டு, காமமோஹிதம் ஸஜஸமஹுகாமனையாலே அச்வமேத யாகத்தில் மூர்ச்சிக்கும்படி செய்யப்பட்ட முக்யமான ஒரு குதிரையை வதம் செய்தபடியாலும் (அச்வமேதம் செய்தபடியாலும்),

(3) ஸ்வ ஸ்வரூபத்தை மாற்றி குடிலமாக மானிட உருவங்கொண்டு அவதரிக்க முயன்ற திவ்ய தம்பதிகளிலொருவராய், லக்ஷ்மீவ்யாமோஹமும் தேவதைகளுடையவும் உம்முடையவும் மனோரதத்தில் மோஹமும் உடைய விஷ்ணுவை (க்குமாரராக) அடைந்தபடியாலும் வெகு வருஷ காலம் ப்ரதிஷ்டையை யடைந்தீர்.

(4) ஹே மாநிஷாத! பெருமாளோடு பிராட்டியைச் சேர்க்க முயன்ற விச்வாமித்ர மஹர்ஷியே! க்ரௌஞ்சமிதுநாத் (ஹேதௌ) அவதரித்துப் பிரிந்திருப்பதாலே கார்ச்யமடைந்த தம்பதிகள் நிமித்தமாக (அவர்களைச் சேர்க்கவேண்டியதை யுத்தேசித்து) காமத்தாலே அதாவது யஜ்ஞத்தைக் கெடுக்கவேணுமென்கிற தீய்ச்சையாலே ஸ்ரீ ராம பத்ரனுடைய ஸ்வரூபம் தெரியாமல் மோஹித்து எதிர்த்த ஸுபாஹுவை (ஸ்ரீ ராமனைக் கொண்டுக்) கொன்றபடியாலே ப்ரதிஷ்டையை யடைந்தீர்.

(5) ஸீதையை யடைவதற்காகப் புறப்பட்ட ஸ்ரீ ராம பத்ரனே தபஸ்ஸினால் க்ருசர்களான அஹல்யை கௌதமரிருவரில் இந்திரனிடம் காமத்தாலே மோஹிதையான அஹல்யையை அனுக்ரஹிக்க அடைந்தபடியாலே ப்ரதிஷ்டையைப் பெற்றீர். இப்படி பாலகாண்டார்த்தங்கள் சொல்லப்பட்டன.

(6) ஹே மாநிஷாத! ராஜ்ய லக்ஷ்மியைப் பிள்ளையினிடம் வைக்கப் பரவர்த்தித்த கைகேயியே! நீ குடில தம்பதிகளான உங்களிலொருவனாய் உன்னிடம் காமத்தாலே மோஹித்த தசரதரைக் கொன்றபடியாலே தீர்க்கமாக அப்ரதிஷ்டையை அபகீர்த்தியை யடைந்தாய்.

(7) ஹே மாநிஷாத! இராஜ்யத்தைத் தமயனாரிடம் ஸமர்ப்பிக்க முயன்ற பரதனே! வருத்தத்தாலே கார்ச்யத்தையும் கௌடில்யத்தையுமுடைய பதி பத்னீக்களிருவரில் ராஜ்ய காமத்தாலே மோஹங்கொண்ட உன் தாயை ஹிம்ஸித்தபடியாலே, வெறுத்தபடியாலே, நீ சாச்வதமான கீர்த்தியைப் பெற்றாய்.

(8) நிஷாத! லோக ஹிம்ஸகனான ராவணனே தபஸ்ஸினால் க்ருசர்களாய்க் காட்டிலிருக்கும் திவ்ய தம்பதிகளிருவரில் ஒருவளாய் பர்த்தாவினிடத்திலேயே வ்யாமோஹமுடைய ஸீதையை ஹிம்ஸித்தபடியாலே ப்ரதிஷ்டையை வெகு காலம் அடைய மாட்டாய்.

(9) ஹே மாநிஷாத ஸ்ரீநிவாஸனான ராமனே, ருமை, ஸுக்ரீவன் என்கிற வாநர மிதுனத்திற்காக அக்ரமமாய் ருமையினிடம் காம மோஹிதனான வாலியைக் கொன்றதாலே ப்ரதிஷ்டையைப் பெற்றீர்.

(10 ஹே மாநிஷாத! க்ரௌஞ்ச! கதி விசேஷத்தாலே நிர்விக்னமாகக் கடலைக் கடந்து பிராட்டியைப் பெருமாளிடம் சேர்ப்பிக்க முயன்ற ஹனுமாரே திவ்ய தம்பதிகளிலொருவளாய் ராமைகசரணஸ்தையான ஸீதையை இலங்கையில் அடைந்து அறிந்து வந்ததாலே ப்ரதிஷ்டையைப் பெற்றீர்.

(11) ஸீதையையும் ராஜ்ய லக்ஷ்மியையும் பெறும் பாக்யமுடைய ஸ்ரீ ராம பத்ரனே இராவணனிடம் நடுங்கிக் க்ருசராய் அவன் அறியா வண்ணம் அடியிலிருந்து ஒளிந்து உம்மிடம் பக்தர்களான விபீஷணர் அவர் பத்னியாகிய ராக்ஷஸ தம்பதிகளுக்காக மந்தோதரீ ராவண மிதுனத்தில் காம மோஹிதனான ராவணனை ஸம்ஹரித்தபடியாலே சாச்வதமாக ப்ரதிஷ்டையைப் பெற்றீர்.

(12) ஹே நிஷாத! ஹிம்ஸகனான ரஜகனே, வெகு காலம் ச்ரமப் பட்ட பரஸ்பர வ்ரதமுள்ள திவ்ய தம்பதிகளிலொருவளான ஸீதா தேவியை மறுபடியும் வனம் போக வைத்து ஹிம்ஸித்தபடியாலே நீ வெகு காலம் ப்ரதிஷ்டையை யடைய மாட்டாய். இச் சாபத்தினால் தான் போலும், இவன், மற்ற அயோத்தி ப்ரஜைகளைப் போல ஸ்ரீ ராமனோடு திவ்ய லோகம் போகாமல் ஜன்மாந்தரத்தில் கம்ஸ புரியில் ரஜகனாய்ப் பிறந்து ஸ்ரீ கிருஷ்ணனிடம் வதம் பெற்றது. இப்படியே மற்றும் ஸம்பவிக்குமர்த்தங்களை விமர்சிப்பது, போஜசம் பூவ்யாக்யானத்திலுள்ள அர்த்தங்களையும் பார்ப்பது. ஆக 7-காண்டங்களின் அர்த்தங்களும் இதில் ஸங்க்ரஹிக்கப் பட்டன. இவ்விதமாக அனேகார்த்தங்கொண்ட ச்லோகமாகையாலே—

'ஶோகார்த்தஸ்ய ஶகுநே: கிமிதம் வ்யாஹ்ருதம் மயா' இப் பக்ஷி விஷயமாக நான் சோகித்துச் சொன்ன விது என்ன விலக்ஷணமாயிருக்கிறதென்று ஆச்சர்யப்பட்டு இதை சிஷ்யன் ரக்ஷிக்கவேண்டுமென்றெண்ணி 'ஶ்லோகோ பவது' என்று ச்லாகிக்கத் தகுந்த ச்லோகமாயிருக்குமென்றது.

இப்படியே ஸ்ரீமத் ராமாயணம் வேதோபப்ரும்ஹணமான இதிஹாஸமாகையாலே அது தத்வஹித புருஷார்த்தங்களைத் தெளிவிக்க வந்ததென்று முன்னமே நாம் விவரித்திருப்பதால் அதற்கு மூல பூதமான இந்த ச்லோகமும் அப்படியே வேதோப ப்ரும்மணமாகிறது. எங்ஙனேயென்னில்—இங்கே 'க்ரௌஞ்சமிதுந'மென்று வாக், மனஸ் என்கிற மிதுனத்தைச் சொன்னபடி. இவ்விரண்டையும் மிதுனமாகச் சொல்வது வேதத்திற்கு வழக்கம். வாக் என்பது ஸ்திரீலிங்க பதமாகையாலும் புருஷருடைய வ்ருத்தியை ஸர்வ ப்ரகாரத்தினாலும் ஸ்திரீகள் அனுவர்த்திப்பதுபோல் 'யத்தி மநஸா த்யாயதி தத்வாசா வததி' என்கிறபடி வாக்கானது ஸர்வதா மனஸ்ஸை அனுஸரித்திருப்பதாலும் வாக்கை ஸ்திரீயாகவும் ஸர்வேந்திரிய நிர்வாஹகமான மனஸ்ஸைப் புருஷனாகவும் சொல்லுகிறது. இப்படியே எல்லா இந்திரியங்களைச் சொல்லவேண்டுமிடத்தில் வாக்கை ப்ரதானமாகச் சொல்வதும் ச்ருதிக்கியற்கை. கர்மேந்திரியங்களைவிட ஜ்ஞானேந்திரியம் ப்ரதானமாக யிருந்தாலும், ப்ரத்யக்ஷ—அப்ரத்யக்ஷ, ஸமீபஸ்த—தூரஸ்த, ஐஹிக ஆமுஷ்மிக ஸர்வ பதார்த்தங்களையும் அறிவிக்கக்கூடிய சப்த ப்ரமாணத்துக்குப் பிறவிக் கருவியாகையாலே வாகிந்திரயத்திற்கு மேன்மையுண்டு. "யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ" இப்படிப்பட்ட வாக்குக்குக் கௌடில்ய மேற்படவேணுமானால் அதற்கு மனஸ்ஸுதான் மூல காரணம். மனஸ்ஸு குடிலமாகில் வாக்கும் குடிலமே. ஆக வாக்கை ருஜுமார்க்கத்தில் வைக்க விருப்பமிருந்தால் அதற்காக மனஸ்ஸை ஒழுங்காக்கினாற்போதும். அது காமமோஹங்களுக்குட்பட்டதாகில் வாக்கையும் திருத்தமுடியாது. ஆக ஹே மாநிஷாத ஸ்ரிய:பதியான பகவானே குடிலமான வாக் மனஸ் என்கிற மிதுனத்தில் ஒன்றாய் முக்கியமாய் காமமோஹிதமான மனஸ்ஸை ஹிம்ஸித்தாய். அதாவது—அதன் காமமோஹங்களை தீர்த்தொழித்தாய். ஆகையாலே ப்ரதிஷ்டையை ஸர்வ பலப்ரதன்—ஸர்வேச்வரன்—முக்த போக்யன் என்றிப்படி பிருதங்களைப் பெற்றீர் என்று ச்லோகார்த்தம். இங்கே வாக் என்பது ஸர்வேந்திரியங்களுக்குமுபலக்ஷணமே. ஆக

த்வம்ஸம் யாந்தாம் ஷோரம் யோ மோஹநாஶ ஜீவாந் ।
விவேகஸாரஜாயே ந ஸம் நயதி யோ மிநாந் ॥

என்று முன் சொன்ன ராமாயண ரஹஸ்ய மிதிலும் உள்ளடங்கியிருக்கிறதென்றாயிற்று. இதனால் மாநிஷாத என்று ஸ்பஷ்டமாக லக்ஷ்மீபதியே பரதத்வமென்றும் பரம புருஷார்த்தமென்றும் பக்தி ப்ரபத்திகளுக்கர்ஹமான மனச்சுத்தியே ஹிதமென்றும் தெளிவிக்கப்பட்டது.

(2) இப்படியே ஹேமாநிஷாத ஸ்ரிய:பதியே-க்ரௌஞ்சமிதுநாதேகம் அவதீ: காமமோஹிதம்—ப்ராக்ருதி புருஷ மிதுனத்தில் ஒன்றான—"அஜாமேகாம் லோஹிதஶுக்லக்ருஷ்ணாம் பஹ்வீ: ப்ரஜா: ஜநயந்தீம் ஸரூபா: । அஜோ ஹ்யேகோ ஜுஷமாணோ(அ)நுஶேதே" என்கிறபடி காமமோஹிதமாய் தாரதமனை ஜீவனை-

அவயீ:—" க்ஷூராமீம் யோநி ஈரவஞா ஈ-பிஷா ஜநீநி ஜநீநி ।
ஈரவு்ரவெவ்வ களவெஷய தவெதா யாஙு்யஈரம் மதிழ ॥"

என்று கீதையிற் சொன்னபடி வைஷ்ணவ ப்ராப்யமான பரமஸ்தானத்தை யடையாதபடி வதித்தாய். இதுவும் கர்மாநுகுணமாக பல ப்ரதானம் செய்யுமுமக்குத் தன்னுடைய ஸிரந்தனுஜ்ஞா நியமத்திற்கு க்ஷேபமின்றி ஸம்ரக்ஷணமாகையாலே ப்ரதிஷ்டையே யென்று மர்த்தம். இதனால் 'அஸூர ப்ருகிருதியாயிருந்து வீணே அதமகதியில் விழுந்து வருந்த வேண்டாம். வித்வேஷாஸூயைகளை விலக்கி உள்ளபடி தத்வஹிதங்களை உணர்ந்து ஆத்மக்ஷேமத்தை அடையமுன் வாருங்களென்று ஹிதோபதேசம் செய்ததாகிறது.

(3) ஈநிஷாத என்பதாலே 'ஸா ஹி ஸ்ரீரம்ருதா ஸதாழ' என்கிற ஜ்ஞானஸம்பத்தைத் தாமடைந்து ஆச்ரயிப்போரை அடைவிக்கும் ஆசார்யரை ஸம்போதனம் செய்து அவர் சிஷ்யமனஸ்ஸைத் திருத்தினபடியாலே ப்ரதிஷ்டை யடைவதையும் இங்கு சொல்லலாம்.

(4) ஹெ நிஷாத ஹெ கஷ்ளஹு என்று ஹிம்ஸகமாய் குடிலமான அஹங்காரமமகாரங்களிலொன்றை ஸம்போதனம் செய்து பிராட்டியோடு வாசியற, பரம புருஷனைப் பார்த்தவளவில் தன்னை ஸ்திரீயாக நினைத்து அவனுடன் விஹரிக்க மோஹங்கொண்ட, ஜீவேச்வர மிதுனத்திலொருவரான, ஜீவனை ப்ராக்ருதமாயுள்ள சில்வான பலங்களிற் கண்ணோட்டம் பண்ணிவைத்து வதித்தாயே, ஆயினும் நீ ப்ரதிஷ்டையை அடைய மாட்டாய். அபார காருண்ய சாலியான அந்த எம்பெருமான் காலம் பார்த்து வைராக்யத்தை விளைவித்து உன்னை அழித்துத் தன் ஜீவனைப் பரிக்ரஹிக்கும் என்று அர்த்தமும் சொல்லலாம்.

(5) இதுபோல் நிரீச்வரவாதி போன்ற நாஸ்திகனைப் பார்த்து ஓர் அர்த்தம் சொல்லலாம். ஹெநிஷாத பகவத் ஸ்வரூபத்தை யறியாமல் காம்ய பசு ஹிம்ஸாபரனுகவோ லோக ஹிம்ஸாபரனுகவோ யிருக்கிற ஜீவனே, மஹா காருணிகனாய் ஸர்வஸ்வாமியான படியாலே 'எப்போது நாம் இவனை யடைவது' என்று காமமோஹிதமான, ஜீவேச்வர மிதுனாந்தர்கதமான ஈச்வரனை அபலபித்து ஐயோவென்று அவன் க்லேசப்படும்படி ஹிம்ஸித்தாயே. நீ இந்த க்ஷுத்ர க்ரியைகளாலே யாதொரு சாச்வத ப்ரதிஷ்டையு மடையமாட்டாய். ஆக ஸேச்வரவாதியாக மாறி விடு என்று.

(6) ஹெ ஈநிஷாத ச்ரிய: ப்தியே! சாச்வதமாக நீர் ப்ரதிஷ்டையை யடைந்தீர் என்பதாலே அனுத்யனந்தமான நித்ய விபூதியின் நியமனத்தை

யும் ப்ராக்ருதி மண்டலத்தில் நடவாநிற்கும் ஸ்ருஷ்டி ஸ்திதிகளையும் சொன்னபடி. இப்படி உபய விபூதிகளுக்குள்ளே யஜ-வாகழ ஸ்ரீமா விபூதியில் அந்தர்கதமாய், மிதுனம் மிதுனமாக ஸ்ருஷ்டியைப் பெற்றிருக்கிறது எதுவோ அந்த காமமோஹிதமான பத்தசேதனனை அதிக பாபங்களைப் பண்ணுதபடி ஸமயங்களில் ஸம்ஹாரம் செய்தீரென்கிற உத்தரார்த்தத்தாலே ஸ்ரீமாவிஹ-பிதி ஸம்ஹாரகர்த்தாவென்று சொல்லப்படுகிறது ஆக ஸர்வவித ஜகத்காரணமென்றும் உபயவிபூதி நாதனென்றும் லக்ஷ்மீபதி யென்றும் பரதத்வத்தைச் சொல்லிற்றாயிற்று. இப்படி யதாஸம்பவம் அனேக தத்துவார்த்தங்களை இதற்கு மேலும் விமர்சிக்கலாம்.

ஆகையால் வேடன் விஷயமாக ப்ராக்ருதார்த்தம் போலே அனேக ஸ்ரீமத் ராமகதா பாகங்களையும் பற்பல வேத வேதாந்தங்களையும் அறிவிக்கக் கூடியதான இந்த ச்லோகத்தின் மஹிமை வாசாமகோசரமாகையாலே வால்மீகி ஆச்சர்யப்படுவதும் சிஷ்யர்கள் ஆனந்திப்பதும் ப்ரம்மதேவன் வந்து ப்ரசம்ஸை செய்வது மெல்லாம் உபபன்னம். ஆக அவசமாய் வந்த உயர்ந்த ச்லோகமாகையாலே அப்போது ஆச்சர்யப்பட்டதே யல்லது அது வரையில் ஒருவருக்கும் ச்லோகம் செய்யத் தெரியாமலிருந்ததாலேயன்று. ஸமய விசேஷமும் அர்த்த விசேஷமும் பதங்களின் அமைப்புமே ஆச்சர்யத்துக்குக் காரணம். இவ்விதம் அனேகார்த்தங்க ளேற்படுவதற்காகத்தான் 'ஈ' என்கிற பதம் சேருவதை யுத்தேசித்து 'மஈ:' என்று ப்ரயோகிக்க வேண்டியிருந்தும் 'கமஈ:' என்று ப்ரயோகம் செய்தது. 'ஈநிஷாத' என்று ஒரு பதமாகிறபோது 'கமஈ:' என்று தானே வேண்டியிருக்கிறது. 'ஊஷ்' என்கிற அவ்யயம் தவிர 'ஈ' என்று தனித்தோர் அவ்யயமாகையாலே அந்த யோஜனையிலும் 'கமஈ:' என்பதுக்கு தோஷமில்லை. அப்போது ஆர்ஷமென்று ஸமாதானமு மொன்றுண்டு.

ஸரஸ்வதிதேவி முதன்முதலாக வால்மீகியினிடம் ஆவிர்பவித்தாளென்பதும், இப்படி உபச்லோக்ய நாயகனுடைய மாஹாத்ம்யத்தாலே மஹநீயதமமாய் பத்தெட்டு ச்லோகம் படிக்குமவர்க்கும் தேஹம் புளகாஞ்சிதமாம்படி ஸர்வ ஹ்ருத்யமாய் ஸர்கபந்த ரூபமாய் ஒரு பெரிய ஸரஸ காவ்யமிதற்கு முன் பிறவாமலிருந்த மாத்திரத்தைக் கொண்டே வால்மீகி ஸ்ரீ ராமாயணம் செய்வதற்கு முன்பு யாரும் பேசினதேயில்லையா? பேசுவதென்றால் அது ஸரஸ்வதீயன்றோ? அடியோடு பேசாமலேயிருந்தார்களா இப்பாஷையே எவருக்கும் தெரியாததாகையாலே மஹர்ஷி கோஷ்டிகளிலும் ஸ்ரீராம ஸதஸ்ஸிலும் எப்படி இதைக்கேட்டு ஆனந்தித்தது. ருக் வேதம் முதலியவற்றை நிரூடி செய்வதில் நோக்கமுடைய ப்ராசீனருக்கு ச்லோகம் செய்ய அவகாசம் ஏற்படவில்லை யென்பதும் பிசகு. இது

வால்மீகிக்குப் பிறகும் துல்யம். வைதிக சந்தஸ்ஸில் அப்யாஸமுள்ள வருக்கு அக்காலத்தில் ச்லோகம் செய்ய அதிக ப்ரயாஸமும் வேண்டுவ தில்லை. கத்ய ரூபமான வாக்யங்கள் முன் இருப்பதாக ஒப்புக் கொண்டா லும் வால்மீகியினிடம் ஸரஸ்வதீயின் ப்ரதமாவிர்பாவத்தை ஸமர்த்திக்க முடியாது. தசரத சக்ரவர்த்தி ராஜ்ய பரிபாலனம் செய்யும்போது அயோத்தியில் அனேக கவி திலகங்க ளிருந்தனரென்றும் ஏற்படுகிறதே. கத்யமும் ஸரஸ்வதியன்றோ? பத்ய ஸரஸ்வதீயென்று ஸங்கோசம் செய் வதாயிருந்தால் உத்க்ருஷ்டரஸகாவ்யஸரஸ்வதீயென்றே ஸங்கோசிக்கலாம். வால்மீகிக்குமுன் பத்யமேயில்லை யென்பதெல்லாம் முன் சொல்லியபடி ப்ரமாண யுக்தி விருத்தமாகையாலே அவருடைய ப்ரசம்ஸைக்காக ஏற்ப ட்ட அதிவாதமே. அதற்குமுன் சொன்னபடியே தாத்பர்யம். ஆக இவ ருக்கு முன்னம் அனேக ச்லோகங்களிருந்தாலும் இதற்கு ஆதிகாவ்ய மென்கிற பெயருக்கு யாதொரு விரோதமுமில்லை. இப்படி ராமாயணம், ஸீதா சரிதம், பௌலஸ்த்யவதம், ஆதிகாவ்யமென்று இவ்விதிஹாஸம் ப்ரஸித்தி பெற்றிருக்கிறதென்று நிரூபிதமாயிற்று.

இவ்விதிஹாஸம் செய்தருளினதற்குக் காரணங்களாவன :—வால் மீகிக்கு ஸ்வயம் பகவத் குணானுபவத்திலிருந்த ஈடுபாடும், பிறரை அப்படிச் செய்விக்கவேண்டுமென்கிற அபிஸந்தியும், வேதார்த்தோப ப்ரும்ஹணம் செய்வதிலேற்பட்ட குதூஹலமும், ஆச்ரமத்தில் வஸித்திருந்த ஸீதா தேவிக்கு ஸ்ரீ ராமகதா வர்ணனம் செய்து விரஹதாபசமனம் செய்யவேணு மென்கிற உத்தேசமும்.

இப்படி உபோத்காதத்தை முடித்துக்கொண்டு இனி க்ரந்தத்தை யெடுத்துக்கொண்டு ஆவச்யகமாகத் தோற்றின ஒவ்வொரு அம்சத்தையும் விமர்ச்சிக்கத் தொடங்குவோமாக.

க்ஷுத்ருஷி வாசா நிதராஷு ஸம்க்ஷா:
நிரஸ்ய ஸவ்யாயம் விவேசநேஜ்ஞா: ।
உக்தா தஸாரோரய க்ஷேமஷ்ஷி தஷ்ஷு
ஹ்ருதயே விஸிஷ்யாஷ்லீ ஹ ஜ வ்ருத்தி: ॥

உபோத்காதம் முற்றிற்று.

ஸ்ரீ பராசரபட்டரின் திருமஞ்சனக் கவிகள் (3)

[ஸ்ரீ. ஸ்ரீ.]

ஹரி: ஓம் ॥ अनेकशाखाश्रितमाश्रितेभ्यो
दत्ताभिकांक्षं त्रिदशैकभोग्यं ।
सुपर्णरम्यं सुमनस्समेतं
सुरद्रुमं त्वां सुधियो वदन्ति ॥[1]

ஸகல ஜகத்-ஸ்ரஷ்டாவாய், ஸர்வரக்ஷகனாய், ஸகல ஜகந்நியந்தாவாய், ஸர்வசேஷியாய், ஸமாப்யதிக-ரஹிதனாய், அயர்வறும் அமரர்கள் அதிபதி யாய், 'பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்கு ஆதும் சோராமே ஆள்கின்ற செங்கோலுடைய திருவரங்கச் செல்வ'னான தேவரீரை ஒரு கல்பகதருவாக விண்ணப்பம் செய்யலாயிரா நின்றது. எங்ஙனே யென்னில் :

---

1 அநேக சாகாச்ரிதம்—பல வேதங்களா லும் விஷயமாக ஆச்ரயிக்கப்பட்ட வரும்
ஆச்ரிதேப்ய:—அடைந்தோர்க்கெல்லாம்
தத்தாபிகாங்க்ஷம்—வேண்டியதை வழங்கு கிறவரும்
த்ரிதசைக போக்யம்—நித்ய ஸூரி களுக்கு ஒப்புயர்வற்ற போக்யமா யிருப்பவரும்
ஸுபர்ண ரம்யம்—கருடன் மேல் (எழுந் தருளி) மனோஹரமாயிருப்பவரும்
ஸுமநஸ் ஸமேதம்—நல்ல ஹ்ருதயம் ஞானம் முதலியவைகளை யுடைய பல ஸாத்விகர்களோடு கூடியிருப் பவருமான
த்வாம்—உம்மை
ஸுதிய:—தெளிந்த புத்தியையுடைய மஹான்கள்
ஸுரத்ருமம்—கல்பகவ்ருக்ஷமாகவே
வதந்தி—சொல்லுகிறார்கள்

[கல்பக வ்ருக்ஷமும் பல சாகைகளோடு கூடியதாயும், தன்னை அடைந்தார்க்கு வேண்டியவற்றைக் கொடுப்பதாயும், தேவதைகள் மட்டும் அனுபவிக்கக்கூடியதாயும், அழகிய இலைகளால் ரமணீயமாயும், புஷ்பங்கள் நிரம்பினதாயும் இருக்கும்.]

அநேக-ஶாகாஶ்ரிதம்—கல்பகமானது ஸர்வாநந்தமான நந்தந வனத்திலே ஸம்பவிக்கையாலே [2]அநுகல-கந்தளிதமான கவடுகளாலே பூர்ணமாயிருக்கும் ; தேவரீரும் [3]**वेदैश्च सर्वैरहमेव वेद्यः** (வேதைஶ்ச ஸர்வை: அஹம் ஏவ வேத்ய:) என்கிறபடியே [4]ஸகல-ஶாகா-ஶிரஸ்-ஸுவித்ருத-சரண-யுகள-ஸரோருஹராய் இருந்தீர்.

ஆஶ்ரிதேப்யோ தத்தாபிகாங்க்ஷம்—கல்பகமானது தன் பக்கலிலே சென்று அபேக்ஷித்தவர்க்கு அபேக்ஷாநுகுணமாக [5]பல-ப்ரதாந-விசக்ஷணமாயிருக்கும் ; தேவரீரும் 'வேண்டிற்றெல்லாம் தரும் கோதில் என் வள்ளலாயிருந்தீர்.

த்ரிதஶைக-போக்யம்—கல்பகமானது [6]அம்ருதாஶநராய் அத ஏவ அமர்த்யரான தேவ-வர்க்கத்திற்கு அநுகூலாநுபாவ்யமாயிருக்கும்; தேவரீரும் [7]**यत्र पूर्वे साध्याः सन्ति देवाः** (யத்ர பூர்வே ஸாத்யா: ஸந்தி தேவா:) என்றும், 'விண்ணாட்டவர் மூதுவர்' என்றும் சொல்லுகிறபடியே நிரந்தராநுபவ-காமுகரான நித்யஸூரிகளுக்கு நிரதிஶய போக்யராயிருந்தீர்.

ஸுபர்ண-ரம்யம்—கல்பகமானது கண்டவர் கண்கள் உகந்திருக்கும்படி [8]கௌதுக-ஜநகமான பத்ர-விசேஷங்களாலே ரமணீயமாயிருக்கும் ; **सुपर्णोऽसि गरुत्मान्** (ஸுபர்ணோऽஸி கருத்மான்) என்கிறபடியே திருவடி மேற்கொள்ளுகையாலே [9]"மஞ்சுயர்பொன்மலைமேல் எழுந்த மாமுகில்

2. (**अनुकल**) ப்ரதிக்ஷணமும், (**कन्दलित**) துளிர்த்துக் கொண்டிருக்கிற (கவடு—) கிளைகளால்.

3. 'ஸகல வேதங்களாலும் ப்ரதானமாக அறியப்படுபவன் நானே' என்கிறபடியே

4. ஸகல வேதங்களாலும் சிரமேல் கொண்டு போற்றப்படுகிற இரண்டு பத கமலங்களையுடையராயிருந்தீர்.

5. **फलप्रदानविचक्षण**—பலத்தைக் கொடுப்பதில் ஸமர்த்தமாய்

6. (**अमृताशन**) அம்ருதத்தைச் சாப்பிடுகிறவர்களாய், (**अत एव**) அதனாலேயே (**अमर्त्य**) இறப்பில்லாதவர்களான

7. எங்கே ஸாத்யர்கள் என்னும் (அல்லது முக்தன் சென்று சேரத்தக்க) நித்யமான தேவர்கள் இருக்கிறார்களோ

8. **कौतुकजनक**—ஆவலைப் பிறப்பிக்கும் ; பத்ர—இலைகள்

9. அழகிய சிறகுகளையுடைய பெரிய திருவடியின்மேலே ஏறி எழுந்தருளுகிற இவர் மேக மண்டலத்தளவும் உன்னதமான ஒரு பொன்மலையிலே படிந்த பெரிய மேகம்போல் இராநின்றார்—(பெரிய திருமொழி 9. 2. 8.)

போன்று உளர் வந்துகாணீர், அஞ்சிறைப்புள்ளும் ஒன்றேறி வந்தார்" என்னும்படியாயிருந்தீர்.

ஸுமநஸ்-ஸமேதம்—கல்பகமானது [10]மதுகர-குல-கர்வ-நிர்வாஹகமாய் [11]மத-முதித-மநோபவ-மாந்ய-ஶஸ்த்ரமாலாயமான மஞ்ஜரிகளாலே மாநநீயமாயிருக்கும் ; தேவரீரும் ஸத்வநிஷ்டராய், ஸதாசார-ஸேவா-நிபுணராய்; விதித-ஸகல-தத்வார்த்தராயிருக்கிற வித்வத்-ஸங்கங்களாலே ஸேவ்யமாநராயிருந்தீர்.

ஆக இப்படி ஸகல ஶிரோமாந்யமாய், ஸகல-ப்ரதான-தீக்ஷா-தக்ஷமாய், ஸுலபமாய், ஸுஜாதமாய், "எனக்கே தன்னைத் தந்த கற்பகம்" என்கிறபடியே ஸர்வோபாய-தரித்ரரான அடியோங்களுக்கு ஸர்வஸ்வத்தையும் கொடுக்கைக்கு ஒருப்பட்டு நிற்கிற (ஒரு கல்பகத்தருவின்) நிலைபோலே இருந்தது.

॥ हरिः ओं ॥

10. **मधुकरकुलगर्वनिर्वाहक**—(பெருகும் தேனைக்கொடுப்பதால்) கூட்டம் கூட்டமான வண்டுகளின் மதத்திற்குக் காரணமாய்

11. **मदमुदितमनोभवमान्यशस्त्रमालायमान**—மதங்கொண்ட மன்மதனும் போற்றும் பாணங்களின் ஸமூஹம் போன்ற (மஞ்ஜரி) பூங்கொத்துக்கள்

விசாரம் செய்யவேண்டிய விஷயங்கள்

[உ. வே. வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார்.]

தேவாலயங்களில் மூல பகவத் விக்ரஹங்களுக்கு திருமண்காப்பு ஸமர்ப்பிப்பதைப் பற்றி விசாரம்.

இக்காலத்தில் ஸ்ரீவைஷ்ணவ ஸமூகத்திற்கே மஹத்தான க்ஷோபத்தை உண்டாக்கக் கூடியதாய் ஏற்பட்டிருக்கும் கலாவைஷம்யங்களைப் பற்றி சில நாட்களுக்கு முன் அடியேன் ஆலோசித்துக் கொண்டிருந்த 'ஸந்தர்ப்பத்தில் நமது கோயில்களில் பகவத் விக்ரஹங்களுக்கு திருமண்காப்பு ஸமர்ப்பிப்பதற்கு ப்ரமாணம் உண்டோ? அப்படி இருக்குமாகிலும், எவ்விதத்திலும் அது ஒப்புக் கொள்ளப்படவேண்டியது தானோ? என்று இப்படி எல்லாம் மனதில் ஸம்சயம் ஜநித்தது. பகவத் பாத சின்னம் என்று ஸ்ரீ வைஷ்ணவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு வழங்கி வருகிற அந்த சின்னத்தை பகவத் விக்ரஹங்களுடைய லலாடத்தில் சாத்துவது ஸமஞ்ஜஸம் ஆகாது என்று நினைக்கவும் இடமுண்டு. தென் கலையார் கோயில் வட கலையார் கோயில் என்று கூட இல்லாமல் தென் கலைக் கோயில் வட கலைக் கோயில் என்று தற்காலத்தில் வழங்கி வருவதற்கும், கலாவைஷம்யங்கள் நாளடைவில் குறையாமல் வளர்ந்து வருவதற்கும், ஸேவிக்கும் போதெல்லாம் ப்ரத்யக்ஷமாய் பகவத் விக்ரஹ திருமுக மண்டலத்தில் ஏற்பட்டிருக்கும் திருமண் காப்பின் ஆக்ருதி பேதமே முக்கிய காரணமாய் இருக்கக்கூடும் என்று தோன்றுகிறது. இவற்றை எல்லாம் ஆலோசித்து தீபிகாபிமானிகளான பண்டிதர்கள் அடியேனுக்கு உதித்திருக்கும் ஸம்சயத்தை திருப்திகரமாய் ஸப்ரமாணமாய் ஸமாதாநம் சொல்லி, நிவ்ருத்தி செய்யுமாறு பிரார்த்திக்கிறேன்.

விருத்தாந்தங்கள்

(1)

காஞ்சீபுரத்தில் ஸநாதநிகளின் கூட்டம்

25—3—1938இல் மாலை 4 மணிக்கு சின்ன காஞ்சீபுரம் ஆஞ்ஜநேய ஸ்வாமி கோவிலில் பெரியதோர் ஸநாதநிகளின் கூட்டம் நடைபெற்றது. ராவ் ஸாகிப். வி. ஆறுமுக முதலியார், பென்ஷன் தாசில்தார், தலைமை வகித்தார். ஸ்ரீ. உப. வே. நாவல்பாக்கம், நரசிம்மாசார்யர், அய்யா கிருஷ்ண தாதாசார்யர், கவிவல்லப ஸ்ரீ பாஷ்யகாரர், ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யர் இன்னும் பல ப்ரபல வித்வான்களும் ஸபையில் சேர்ந்தனர். தைவ ப்ரார்த்தனை முடிந்தவுடன், வித்வான்களால் தேவாலய ப்ரதிஷ்டைகளைப்பற்றி உபந்யாஸங்கள் நிகழ்ந்தன. சைவாகமங்களைக் கொண்டும் வைஷ்ணவாகமங்களைக் கொண்டும், ஆலயங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன வென்றும், அவ்வாகமங்களில் பஞ்சமர்களின் ப்ரவேசம் முற்றும் விலக்கப்பட்டிருக்கிறது என்றும் விஸ்தாரமாய் நிரூபிக்கப்பட்டது. ஸபையைச் சேர்ந்த அனைவரும் ஏகமனதாய் தீர்மானம் கொண்டு வரவிருக்கும்போது, டாக்டர் ஸ்ரீநிவாஸன் என்பவர், மற்றும் சில காங்கிரஸ் கட்சியினர்களோடு தீர்மானத்தை ஆக்ஷேபிக்க, சச்சரவு உண்டாகி ஸபை கலைந்தது. போலீசாருடைய ஒத்தாசையால் கலகம் முற்றாமல் முடிந்தது. கலகம் செய்வோர் வெளியில் சென்றதும், அதே இடத்தில் மற்றொரு ஸபை கூடியது. அதில் சென்னை பச்சையப்பன் கலாசாலை ஸம்ஸ்கிருத போதகாசார்யராயிருந்த வி. அனந்தாசார்யர் அக்ராஸநம் வஹித்தார். அக்ராஸநாதிபதி தத்காலத்தில் தேவாலய ப்ரவேசக் கிளர்ச்சியின் தத்துவத்தையும், அதில் உள்ள நீதிக்குறைகளையும் எடுத்து உரைத்தபின், காஞ்சீபுரம், ஸநாதந தர்ம சேவாசங்கத்தின் கார்யதரிசியாகிய ராமசந்திர சர்மா அவர்கள், கீழ்க்கண்டபடி தீர்மானங்களைக் கொண்டு வந்தார்.

(1) கோயில்களில் விக்ரஹாராதநம் அநாதி காலமாய் நடந்துவருகிறது. பகவானே பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்கி பற்பல உருவங்களை எடுத்து சேவை ஸாதிப்பதாக நமது கொள்கை. கோயில்கள் மஹாஜநங்கள் அனைவருக்கும் பொதுவானதல்ல. ஆதியில் எந்த வகுப்பினரால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டதோ, அவ்வகுப்பினருக்கே அக்கோயில்களில் சென்று தொழ உரிமை உண்டு. மற்றவர் உரிமை கொண்டாடுவது துராகிருதம்.

(2) டில்லி சபையில் தாஸ் என்பவரால் விவாஹ விஷயமாய் கொண்டு வரப்பட்ட சாரதா பில் அமெண்ட்மெண்டும், மத விஷயங்களில் மஹாஜநங்களின் உரிமைக்கு முற்றும் விரோதமானது.

(3) இராஜாங்கத்தார் ஜனங்களின் மதவிஷயமான சடங்குகளில் இனி தலையிடாமல் க்வீன் விக்டோரியாவின் அபய அளிப்பை பாதுகாக்குமாறு வேண்டுகிறோம்.

(4) இத்தீர்மானங்களை கனம் வைஸ்ராய் அவர்களுக்கும், கனம் சென்னை கவர்னர் அவர்களுக்கும், அஸெம்பளி ப்ரெசிடெண்டுக்கும் வர்த்தமான பத்திரிகைகளுக்கும் அனுப்புமாறு அக்ராஸநர் கேட்டுக்கொள்ளப் படுகிறார்.

மேற்கண்ட தீர்மானங்கள் கிராக்ஷேபமாய் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டு ஏகமனதாய் கரகோஷத்துடன் நிறைவேறின. மாலை 7-மணிக்கு ஸபை கலைந்தது. [—ப-ர்]

(2)

ராமராஜ்யத்தின் காலமானம்—ப்ரபந்த ஸாரத் திருநாமத்தின் ஔசித்யம்.

உத்தர ஸ்ரீராமாயணம் 73-வது ஸர்க்கத்தில் அகாலத்தில் தேக வியோகமடைந்த பகவானின் தகப்பனரான ப்ராஹ்மணர் ‘அப்ராப்த யௌவனம் பாலம் பஞ்ச வர்ஷ ஸஹஸ்ரகம்; அகாலே காலமாபந்நம்’ என்று சொல்லுகிறார். ‘பஞ்ச வர்ஷ ஸஹஸ்ரகனை பாலன்’ என்று ச்லோகம். இங்கே ‘வர்ஷ’ சப்தம் தினத்தைச் சொல்லுகிறது; ‘ஸஹஸ்ர ஸம்வத்ஸரம் உபாஸிக்கக் கடவன்’ என்ற விடத்தில் போல என்று ஸ்ரீ மஹேச்வர தீர்த்தர் வ்யாக்யானம். இந்தக் கணக்கில் 14 வயது சுமாராகும். இந்த ச்லோகத்தில் இப்படிக் கொள்ளுவது உசிதமென்று ஸஹ்ருதயர் ஒப்புவர். மற்ற விடங்களில் இவ்வகையாக வர்ஷக் கணக்கைக் கொள்ளலாமோ என்று ஸஹ்ருதயராலோசிக்கவேணும். அடியேன் ஸாஹஸோக்தியே.

‘ப்ரபந்த ஸாரம்’ என்னும் திருநாமத்தின் கருத்து ஒவ்வோர் ப்ரபந்தத்திலும் முழுவதும் ஸாரம், ஏகரூபமாக க்ருத்ஸ்நமும் ரஸகநமாக இருப்பதால், ஸாரத்தை உரைப்போமென்றால் அந்தாதி 100-க்கு 100-ம் ஸாரம், திருச்சந்த விருத்தம் 120ல் 120ம் ஸாரம், இப்படியே மற்றெல்லாம் என்று ரஸத்தைக் காட்ட ‘ஸாரம்’ என்று திருநாமமிட்டு முழு விலக்கத்தைக் கணக்கிட்டதோடு முடிக்கிறாரென்று நினைக்கலாம். விரிவாக விரிக்கலாமே யொழிய, எள்ளளவும் சுருக்க முடியாதென்று ரஸம். அஸாரம், அல்பஸாரம், என்று ஏதாவது துளியிருந்தாலல்லவோ அதை விட்டுவிட்டு ஸாரமென்று சிலதைப் பொறுக்கி எடுக்கக் கூடும்? ஒவ்வொரு ப்ரபந்தத்திலும் எல்லாப் பாசுரங்களும் ஏகரூபமாய் அகண்ட ஸாரமே என்று வ்யஞ்ஜிப்பதில் திருவுள்ளமெனத் தோன்றுகிறது. ப்ரபந்தங்களுக்குள் புகுந்து அதில் ஸாரத்தைச் சுருங்கச் சொல்லுவோமென்று ஸம்க்ஷேபத்தை யத்னிப்பது ஸாஹஸம். முழுதும் ஸாரம், ஒவ்வொன்றும் ஸாரம், ஓர் பாசுரமேனும் ஸாரமல்லாதது இல்லை யென்றே அறுதியிடுவோம். பாசுரங்கள் முழுவதும் ஸாரமாயிருப்பதை யறுதியிடுவது தவிற, ப்ரபந்தங்களைப் பற்றி வேறு ஸாராம்சங்கள் காட்டவேண்டு மென்றால், வக்தாக்கள் ஸாரபூதர், அவர்கள் அவதரித்த திந நக்ஷத்ரமாஸ க்ஷேத்ராதிகள் எல்லாம் ஸாரபூதம், உத்தமம் என்று ஸாரங்களைக் காட்டுவோம். ப்ரபந்தங்களில் ஸார ஸம்க்ஷேபம் அஸாத்யமென்று விளக்குவதில் திருவுள்ளத்தால், ஸாரமென்று திருநாமமிட்டு, ஸம்க்ஷேபத்தில் இறங்காமல், முழுவெண்களையும் காட்டுவதோடு நின்றது.

அ. வே. கோபாலாசார்யன்.

இதிவ சுபதாநி ய: படதி நாமதேயாநி தே
ந தஸ்ய யமவச்யதா நரக-பாத-பீதி: குத: ॥ (7)

ய:—எவன்
ரமாதயித—லக்ஷ்மீகாந்த !
ரங்கதாமண—ஸ்ரீரங்கத்தில் ரமிப்பவனே !
க்ருஷ்ண—கண்ணா ! (பூர்ணாநந்த பூமியே !)
விஷ்ணோ—எங்கும் நிறைந்தவனே !
ஹரே—ஹரியே ! (ஆபத்தை ஹரிப்பவனே ; சிங்கமே !)
த்ரிவிக்ரம—மூவுலகளந்த சேவடியோனே !
ஜநார்தந—ஜநார்தனனே !
த்ரியுக—ஆறுகுணத்தோனே !
நாத—நாதனே !

நாராயண—நாராயணனே !
இதிவ—இதுவும், இதுபோலுள்ளவுமான
சுபதாநி—க்ஷேமத்தை அளிக்கும்
தே—உம்முடைய
நாமதேயாநி—திருநாமங்களை
படதி—உச்சரிக்கிறானோ,
தஸ்ய—அவனுக்கு
யமவச்யதா—காலனுக்கு வசமாவதென்பது
ந=கிடையாது ;
நரக-பாத-பீதி:—நரகத்தில் வீழ்வதென்னும் பயம்
குத:=எங்கிருந்து வரும் ?

முன் சுலோகத்தில் ‘துப்புடையாரை’ நினைத்தார்; அத்திருமொழியில் மேல்பாசுரங்களில் “என்னை அநேக தண்டம் செய்வதா நிற்பர் நமன்தமர்கள்”, “நமன் தமர் பற்றும்போது”, “நமன் தமர் பற்றலுற்ற அற்றைக்கு” என்று யமவச்யதாபயமில்லாமல் காப்பவராக அரங்கத்தரவணைப் பள்ளியானைத் துதிக்கிறார்.

பல விஷயங்கள் சேர்ந்து ஸ்வாமி நெஞ்சில் ஓட இங்கே இந்த சுலோகம் அமைக்கப்பட்டுள்ளது. நம்பெருமாள் திவ்யமங்களவிக்ரஹம் கோயிலை விட்டு வெளியே எழுந்தருளியிருந்த ஸமயம், ஸ்ரீரங்கநாய்ச்சியாரை விட்டுப் பிரிவு நேர்ந்திருந்தது. ஸ்ரீரங்க பூமியை விட்டுப் பிரிவு. ஸ்ரீரங்க பூமியிலுள்ள மனுஜ திர்யகாதி விஷய வாஸிகளை விட்டும் பிரிவு. ஸ்வாமியைப்போல் ததேகநியதாசயராய் ஸ்ரீரங்கநாதனையே த்யானம் செய்து ரமிப்பவரோடும் பிரிவு. ‘உம்மோடுகூட இருப்பதே ஸ்வர்க்கம்; உம்மை விட்டுப் பிரிவே நரகம்’ என்று ஸ்வர்க்க நரக லக்ஷணம் ஸீதை லக்ஷ்மணன் போன்ற சேஷ ஜனங்களுக்கு. நம்பெருமாளை விட்டுப் பிரிவு நரகபாத துல்யம். ‘விஷ்ணு பக்தருக்கு, வைஷ்ணவருக்கு, நமன்தமர் பயமில்லை, நமனுக்கு வசமாவதில்லை; அவர்கள் இவர்களைக் கண்டு பயந்து ஓடுவார்கள்’ என்று விஷ்ணு புராணத்தில் பீஷ்மர் நகுலனிடம் யமனுக்கும் அவன் படர்களுக்கும் நடந்த ஸம்வாதத்தை வர்ணித்தார். அவர்கள் ஸம்வாதத்தை நரகத்தில் அப்போது அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்த காளிங்கர் நேரில் கேட்டவர். அவர் ஜாதிஸ்மரர்; அதாவது ஒரு சக்தி விசேஷத்தால் பூர்வ ஜன்மங்களில் தாம் அநுபவித்ததை யெல்லாம் ஸ்ம

சிப்பவர். பூர்வ ஜன்மத்தில் தாம் நரகத்தில் கூட இருந்து கேட்ட பேச்சை அப்படியே அவர் தம்முடைய பிராமண ஜன்மத்தில் பீஷ்மருக்கு வர்ணித்தார். பீஷ்மர் நகுலனுக்கு வர்ணித்ததை பராசரர் வர்ணித்தார். இந்த ஸம்வாதத்தில் ஸ்ரீ சங்கரர் முதலிய அத்வைதப் பெரியார்களுக்கு விசேஷ ஈடுபாடு. யமன் பாடினன் என்று 'ஹரிகுருவஶகோऽஸ்மி ந ஸ்வதந்த்ர: ப்ரபவதி ஸம்யமநே மமாபி விஷ்ணு:' (हरिगुरुवशगोऽस्मि न स्वतन्त्रः प्रभवति संयमने ममापि विष्णुः) என்ற சுலோகத்தை பாமதீக்ரந்தம் உதாஹரித்தது. 'மது ஸூதந ப்ரபந்நரைப் பரிஹரிப்பாயாக; வைஷ்ணவர்கள் பேரில் எனக்கு அதிகாரமில்லை; வைஷ்ணவர்க ளல்லாதாருக்கே நான் ப்ரபு' என்ற சுலோகத்தை மதுஸூதநர் தம் அழகான கீதா வ்யாக்யானத்தி லுதாஹரித்தார். ஹரி, விஷ்ணு, ஜநார்த்தனன், மதுஸூதனன், வாஸுதேவன் முதலிய திருநாமங்களை தர்ம ராஜர் அங்கே அடிக்கடி கீர்த்தனம் செய்கிறார். இந்தத் திருநாமங்களை உச்சரிப்பவர்களைக் கண்டு யமபடர்கள் நடுங்கவேண்டும்.

"நமன்தமர் தலைகள் மீதே......நின்நாமம் கற்ற ஆவலிப்புடைமை கண்டாய் அரங்கமாநகருளானே" என்று அரங்கனையே அத்யந்தம் ஐகாந்த்யத்தோடு பற்றிய (ததேகநியதாஶயரான) தொண்டரடிப்பொடிகளும் யமனுடைய கானத்தை அநுகானம் பண்ணினார். காதோடு ரஹஸ்யமாகச் சொல்லுகிறேன் என்று தொடங்கிய யமன் போகப்போக ஸந்தோஷ பாரவச்யத்தால் மெய் மறந்து உரக்கப் பாடினான் என்னும் ரஸத்தை பாமதி அநுபவித்தது. பீஷ்மரும் பராசரரும் அநுபவித்தார்கள். छिन्धि भिन्धि (சிந்தி பிந்தி) (கிழி, பிள) என்று கொடுமையே பேசுபவர் பாடினார் என்றும் ரஸம். गीतं वैवस्वतेन यत् (கீதம் வைவஸ்வதேந யத்) என்று கடைசியில் யமன் இப்படிப் பாடினான் என்று பீஷ்ம பராசரர்கள் ரஸித்தார்கள். யமன் பாட்டுக்களில் கடைசிப் பாட்டு

कमलनयन वासुदेव विष्णो धरणिधराच्युत शङ्खचक्रपाणे ।
भव शरणमितीरयन्ति ये वै त्यज भट दूरतरेण तानपापान् ॥

'கமலநயந வாஸுதேவ விஷ்ணோ தரணிதர அச்யுத சங்கசக்ரபாணே ।
பவ ஶரணம் இதீரயந்தி யே வை த்யஜ பட தூரதரேண தாந் அபாபாந்॥'

என்பது. 'இந்தத் திருநாமங்களைச் சொல்லி நீயே அடைக்கலம் என்று பேசுபவரிடமிருந்து, அதி தூரம் விலகிச் செல்லுங்கள்.' முன் 'விலகு' 'தூர விலகு' என்று பாடிற்று; இங்கு திருநாமத்தைச் சொல்லி 'அடைக்கலம்' என்று பேசுபவர் விஷயத்தில் 'தூரதரம் விலகு' என்று பாடப்பட்டது.

முன் பாதியில் திருநாமங்கள் அடுக்காகப் படிக்கப்பட்டது. இந்த சுலோகத்திலும் அதே ரீதியாக முன்பாதியில் திருநாமங்களைமட்டும் அடுக்கி அமைத்து 'இதி ஈரயந்தி' என்றதுபோல் 'இதீவ படதி நாமதேயாநி தே' என்று இங்கும் பின்பாதியின் அமைப்பு. 'இதீவ' 'இதுபோன்ற நாமதேயங்களை'. யமனுடைய சுலோகத்திலும் அதே நாமங்களையோ மற்ற நாமங்களையோ என்று தாத்பர்யம் என்பதை ஸ்வாமி 'இவ' என்று காட்டியருளுகிறார். யமன் பாடினபடியும் தொண்டரடிப்பொடிகள் பாடினபடியும் உம்திருநாமங்களைச் சொல்லி நீரே சரணம் என்று வாயாலேயாவது சொல்லும் எம்போல்வாருக்கு யமவஶ்யதை என்பதே ஸம்பவிக்கமாட்டாது. 'த்வயா விநா' உம்மைவிட்டுப் பிரிவினால் நாங்கள் நரகத்தையே அநுபவிக்கிறோம். யமவஶ்யதை இல்லாதார்க்கு நரகாநுபவம் வர ந்யாயமில்லை. உம் பிரிவால் ரௌரவாதி ஸப்த நரகங்களை நாங்கள் இப்போது அநுபவிப்பது உண்மை. எங்களுக்கோ யமவஶ்யதை கிடையாது என்பது திண்ணம். யமவஶ்யதை நரகாநுபவத்திற்குக் காரணம். காரணமில்லாமல் கார்யம் உண்டாகிறதே, இது என்ன அந்யாயம் என்று கடைசிப் பாதத்தில் கைமுத்யத்தால் விளக்கும் அழகு ரஸிக்கத்தக்கது.

ஸ்வாமி திருவுள்ளப்படி ஒவ்வொரு பதத்தின் ரஸத்தைக் கொஞ்சம் காட்டுவோம்:

ரமாதயித!—தேவரீர் செஞ்சிக்கோட்டையிலும், ஸ்ரீரங்கநாச்சியார் கோயிலிலுமாக இருப்பது ந்யாயமோ? 'நிரயோ யஸ்-த்வயாவிநா' 'விஷ்ணோ: ஸ்ரீ: அநபாயிநீ'. 'அகலகில்லேன் இறையும்' என்னும் உம் பிரிய காந்தைக்காகவாவது நீர் கோவிலுக்குத் திரும்பி எழுந்தருள வேண்டாமோ? निवर्त्य राज्ञा दयितां दयालुः (நிவர்த்ய ராஜா தயிதாம் தயாளு:) என்று ரகுவம்சம். தயிதை விஷயத்திலும் தயாளுவல்லவோ?

ரங்கபூரமண—பிராட்டி விபுவாக நம்மோடு எங்கும் எப்போதும் गाढोपगूढ (காடோபகூட)மாய் அணைந்தே இருப்பவள்; அவளை விட்டுப் பிரிவு என்பதே இல்லை என்பீரோ, ரங்கபூ என்னும் அரங்கநகர் (அயோத்யை) நோவுபடுகிறதே. அதற்கு நீர்தானே ரமணன். அதற்குப் பொறுக்காத அரதி. அதில் வஸிக்கும் மநுஜ-திர்யக்-ஸ்தாவரமெல்லாம் ராம விரஹத்தில் அயோத்தியில் சராசரம்போலக் கதறுகின்றனவே. ரமணனில்லாமல் ரங்கபூமி நாயகனற்ற ஸ்திரீபோல் துக்கப்படுகிறதே. 'ரங்கம்' என்னும் நகர், 'பூ' என்னும் பூமிதேவி, இருவருக்கும் 'ரமண,' என்றும் கொள்ளலாம். ரங்கம் பூமியில் ஏகதேசமானாலும், ரங்கத்தை மட்டும் தனித்து எடுத்துப் பேசுவது ரஸம். அரங்கமும் கதறுகிறது; பூமிப் பிராட்டியும் கதறுகிறாள். अश्रुमुखी खिन्ना-क्रन्दन्ती करुणं (அஶ்ரு

முகீ ஸிந்நா-கரந்தந்தீ கருணம்). உபயநாச்சிமாரும் அவர்களிருக்கும் நகரமான ரங்கமும் கதறுகிறார்கள் என்பதைக்காட்ட, 'ரங்க' என்பதை இரண்டு நாச்சிமாருக்கும் நடுவில் வைத்தார். தாய்களும் ப்ரஜைகளும் நோவுபடுகின்றன என்றபடி. அடைக்கலம் கொள்ளுவதற்கு இந்தத் திருநாமங்களெல்லாம் ஸப்ரயோஜநம்.

க்ருஷ்ண!—'ஹா க்ருஷ்ண' என்று த்ரௌபதி கூப்பிட்ட திருநாமம். பத்தொன்பதாவது சுலோகத்தில் அவள் வ்ருத்தாந்தத்தைப் பேசப் போகிறார். 'க்ருஷ்ண' என்பதற்கு 'ஆநந்தத்தின் எல்லை பூமி' என்று பொருள். 'க்ருஷி' என்று பூமிக்குப் பெயர். 'ரங்கபூ' என்று பேசினதும், 'பெருமாளே நிர்வ்ருதிபூமி', 'ஆநந்தத்திற்கு எல்லைபூமி' என்று ரஸமாகச் சேர்க்கிறார், ரங்கபூமியில் நிர்வ்ருதிபூமியான நீர் சேர்ந்திருந்தால் பரஸ்பர ரஸம். 'ரங்கம்' என்பதற்கு 'ரதிம் கத:', 'ரதியை அடைந்தார்' என்று பொருள். அதிலிருப்பதால் ரதி அடையப்படுகிறது. **रतिं गतो यतस्तस्मात् रङ्गमित्यभिधीयते**' (ரதிம் கதோ யதஸ்-தஸ்மாத் ரங்கம் இதி அபிதீயதே).

விஷ்ணோ! ஹரே!—யமன் பாடிய திருநாமங்கள்; யமபடருக்கு பயமுண்டாக்குமவை. '**रकारादीनि नामानि**' '**अकारादीनि नामानि**' (ரகாராதீநி நாமாநி, அகாராதீநி நாமாநி) உலகத்தின் ஆபத்தையெல்லாம் ஹரிப்பவராயிற்றே. ப்ரணதார்த்திஹரனல்லவோ?

த்ரிவிக்ரம!— '**लोकविक्रान्तचरणौ शरणं तेऽव्रजं विभो**' (லோகவிக்ராந்த சரணௌ ஶரணம் தே அவ்ரஜம் ப்ரபோ)—'உலகமளந்த உம் சேவடிகளை சரணம் புகுந்தேன்' என்று சரண்புகும்வகை. **विष्णुं क्रान्तं वासुदेवं विजानन्** (விஷ்ணும் க்ராந்தம் வாஸுதேவம் விஜாநந்) என்றபடி.

ஜநார்தந!—இதுவும் யமன் பாடல்களிலுள்ளது.

த்ரியுக!—மூவிரண்டான ஆறு குணங்களை யுடையவரே! முதல் மூன்று யுகங்களில்மட்டும் மத்தியில் அவதாரம் செய்பவர்; கலியில் அதன் முடிவில்தான். விபவாவதாரம் கலிமத்தியில் கூடாதென்று இருக்கிறீரோ?

நாத!—'ரங்கநாத' என்று கூப்பிடக்கூடாமலிருக்கிறதே; இதனிலும் எங்களுக்குக் கஷ்டமுண்டோ?

நாராயண!—இடராயினவெல்லாம் நிலம்தரம் செய்யும் நாமம். பெருமாள் சக்ரபாணியாய் ஆகாசத்தில் எழுந்தருளி தன்னைக் காட்டக் கண்டபோது, "நாராயண! அகிலகுரோ! பகவந்! நமஸ்தே" என்று

கஜேந்த்ராழ்வார் முதலில் கூப்பிட்ட நாமம். திருவஷ்டாக்ஷரத்திலும் த்வயத்திலும் விளங்கும் திருநாமம்.

இதீவ—இப்படி; இது போன்ற. 'இவ' என்பதால் முழுவதும் ஸரியாகச் சொல்லாவிடினும், சொல்லுவதுபோலிருந்தாலும் போதும்.

படதி இவ—வேறு ஏதோ ப்ரஸ்தாவத்தில் இந்த சப்தத்தை மட்டும் உச்சரித்தாலும்; 'நாராயண' என்னும் திருநாமத்தால் அஜாமிளன் கதையை நினைத்து, 'படதீவ'—பாடம் படிக்கிறதுபோலிருந்தாலும் என்றும் கருத்து. **आक्रुश्य पुत्रमघवान् यदजामिलोऽपि नारायणेति म्रियमाण अवाप मुक्तिम्** । (ஆக்ருஶ்ய புத்ரம் அகவாந் யதஜாமிளோபி நாராயண இதி ம்ரியமாண அவாப முக்திம்). இந்த நாமத்தின் ப்ரபாவத்தை ரஸித்த ஸ்ரீவித்யாரண்யஸ்வாமி பஞ்சதசியில் இந்த சுலோகத்தை உதாஹரித்தார்.

நாமதேயாநி—திருநாம சப்தத்தை மட்டும்; அர்த்தம்கூட வேண்டியதில்லை. வாச்யனை உம்முடைய நினைப்பில்லாமல், உம் பேராயிருப்பது மாத்ரமே போதும். 'பவ ஶரணம்' என்று பேசுவார் என்றான் யமன். 'இதி ஈரயந்த:'; '**शरणागतिशब्दभाजः**' (ஶரணாகதிஶப்தபாஜ:) என்று ஆழ்வான். 'ஸ்வார்த்தே தேயட் ப்ரத்யய' என்பர்.

தே—உம் திருநாமமாதலால் சப்தத்தின் படநமாத்ரத்திற்கு இத்தனை ப்ரபாவம்.

ந தஸ்ய யமவஶ்யதா—அவர்கள் விஷயத்தில் தனக்கும் தன் படர்களுக்கும் அதிகாரமில்லை என்று அதிகாரி புருஷனான தர்மராஜனே சொல்லி யிருப்பதால், அதில் ஸந்தேஹமில்லை. இதைக்காட்டவே அந்த சுலோகத்தின் ரீதி இங்கே அநுஸரிக்கப்பட்டது. யமவஶ்யதை வராமல் நரகபாதம் ஸம்பவிக்க ந்யாயமில்லையே. ஸப்த நரகங்களிலும் யமனுடைய அதிகாரம் (வ்யாபாரம்) தான் என்று ஸூத்ரகாரர் '**अपि सप्त**' **तत्रापि च तद्व्यापारादविरोधः**' என்று தீர்மானித்தார். ஸூத்ரப் பிரஸித்தியைக் கொண்டு இங்கே கைமுதிக ந்யாயத்தை வைக்கிறார். நரகாநுபவத்திற்குக் காரணமான யமவஶ்யதை இல்லாமலே நாங்கள் நரகதுல்யமான யாதனைகளை உம் பிரிவினால் அநுபவிக்கிறோம். இதையெல்லாம் உடனே நிவர்த்திக்கவேணும். ஸ்ரீரங்க நாச்சியார், அரங்கம், பூதேவி, அரங்கவாஸிகள் எல்லோரும் நாதனோடு கூடியிருக்கவேணும். நாதனோிடம், அரங்கமோ ரிடமாக இருக்கலாகாது என்கிறார். (7)

कदाचिदपि रङ्गभूरसिक ! यत्र देशे वशी
त्वदेकनियताशयः त्रिदशवन्दितो वर्तते ।

तदक्षततपोवनं तव च राजधानी स्थिरा
सुखस्य सुखमास्पदं सुचरितस्य दुर्गं महत् ॥ ८ ॥

கதாசிதபி ரங்கபூ-ரஸிக! யத்ர தேசே வசீ
த்வதேக-நியதாசய: த்ரிதச-வந்திதோ வர்த்ததே ।
ததக்ஷத-தபோவநம் தவ ச ராஜதாநீ ஸ்திரா
ஸுகஸ்ய ஸுகமாஸ்பதம் ஸுசரிதஸ்ய துர்கம் மஹத் ॥ (8)

ரங்கபூரஸிக—ஸ்ரீரங்கத்தில் வஸிப்பவரே!	தத்—அது
வசீ—இந்த்ரியங்களை வசப்படுத்திய வரும்	அக்ஷத—இடையூறில்லாத
த்வதேக-நியத-ஆசய:—(தொண்டரடிப் பொடிகள்போல) உம்மிடத்திலேயே நிலைநிறுத்திய பக்தியை யுடைய வரும்	தபோவநம்—தபோவநம்;
த்ரிதச வந்தித:—தேவர்களால் நமஸ் கரிக்கப் படுபவருமான (பெரியவர்)	தவ ச—உமக்கும்
யத்ர தேசே—எந்த தேசத்தில்	ஸ்திரா—ஸ்திரமான
கதாசிதபி—ஒருபொழுதாவது	ராஜதாநீ—நகரம்;
வர்த்ததே—இருக்கிறாரோ	ஸுகஸ்ய (ச)—ஸுகத்திற்கும்
	ஸுகம்—ஸுகமான
	ஆஸ்பதம்—இடம்;
	ஸுசரிதஸ்ய—நல்லொழுக்கத்திற்கு
	மஹத்—பெரிய
	துர்கம்—அரண் (கோட்டை).

யமவச்யதையில்லாமலே நரகாநுபவம் வருகிறதே என்று காட்டி, நீர் இப்படி சாஸ்த்ரமர்யாதையைக் குலைக்கலாமோ என்று த்வனிக்கும்படி முன் சுலோகத்தில் பேசினார். உம்மிடம் பாரமைகாந்த்யமுடைய ஒரு பக்தர் ஏதோ ஒரு காலத்தில் ஒரு தேசத்திலிருந்தால் அந்த தேசம் பகவானுக்கு ஸ்திரமான ராஜதானியாகும், தவம் செய்வதற்கு இடையூறில்லாத தபோவனமாகும், நல்லொழுக்கத்திற்கு அழிவற்ற கோட்டையாகும் என்பரே. தொண்டரடிப்பொடிகளினும் உம்மிடம் பாரமைகாந்த்ய முடையவருண்டோ? अत्रैव श्रीरङ्गे सुखमास्स्व (அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகம் ஆஸ்ஸ்வ) என்றல்லவோ இத்தகையவடியார்களுக்கு உம்முடைய ஆக்ஞை. 'அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமாநகருளானே' என்று பரமபதத்து வைகுண்ட நாதனையும் ஒதுக்கி உம்மிடம் நியதாசயராயிருந்தனர். 'இங்கே ஸ்ரீரங்கத்திலேயே ஸுகமாயிரு' என்று எங்களுக்குக் கட்டளையிட்டுவிட்டு, நீர் இவ்விடமிருந்து வெளியேறுவது தகுதியோ? பெரிய பெருமாள் ஓரிடமும் நீர் ஓரிடமுமானால், எங்களுக்கு ஸ்ரீரங்கத்தில் ஸுகமான இருப்பு எப்படி ஏற்படும்?

ரங்கபூரஸிக—பாற்கடல், ஸௌர்யமண்டலம், வைகுண்டம் எல்லாவற்றைக் காட்டிலும் உமக்கு ஸ்ரீரங்கத்திலே (ரதி) இன்பம் இருக்கிறது. रतिं गतो यतस्तस्मात् 'ரதிம் கதோ யதஸ்தஸ்மாத்' என்று ரிஷிகள் பொருள் கூறினார்கள். அரங்கத்தில் அரங்கனாகிய நீர் ஸபாநாயகராக வீற்றிருந்து காவ்யங்களை ரஸித்து அரங்கேற்றுவது. रङ्गस्थाने रसिकमहिते रञ्जिताशेषचित्ते (ரங்கஸ்தாநே ரஸிகமஹிதே ரஞ்ஜிதாசேஷசித்தே). ரங்கபூரஸிக-ரங்கபூமிக்கும் ரங்கநகரவாஸிகளுக்கும் உம்மிடம் ரஸமிருப்பதுபோல, உமக்கும் அவர்களிடம் ரஸம். இப்படிப் பரஸ்பர ரஸமிருப்பதால் ரஸபூர்த்தி. ப்ரஹ்மாவினால் ஸத்யலோகத்தில் சிரகாலம் ஆராதிக்கப்பட்டு, அதை விட்டு அயோத்தி வந்தீர்; அங்கு நீண்டகாலமிருந்து அதை விட்டு ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளினீர். இனி ஓரிடமும் போகமாட்டீராதலால் இங்கே உமக்கு நிரதிசயப்ப்ரீதி என்று பாதுகாஸஹஸ்ரத்தில் உம்பாதுகை என்னையிட்டுப் பாடுவித்தது. सत्यालोकात् परममहितात् स्थानतो वा रघूणां (ஸத்யால்லோகாத் பரமமஹிதாத் ஸ்தாநதோ வா ரகூணாம்)' என்று கூறினது பொய்யாகலாமோ?

யத்ர தேசே—எந்த தேசத்தில். 'யத்ர' என்றுமட்டும் ப்ரயோகித்தார் 'யத்ரைகாந்த்ய' என்ற ஸ்தாநவிசேஷாதிகார சுலோகத்தில்.

வசீ—'இந்திரியங்களையெல்லாம் அடக்கினவர் எங்கே எங்கே வஸிக்கிறாரோ, அங்கங்கே குருக்ஷேத்ரமும் நைமிசமும் புஷ்கரமுமுள' என்ற சுலோகம் ஸ்தாநவிசேஷாதிகாரத்தில் எடுத்துக்காட்டப்பட்டது.

த்வததேகநியதாசய:—ऐकान्त्यव्यवसितधियः (ஐகாந்த்ய-வ்யவஸித-திய:) என்று அதிகார ச்லோகம்.

கதாசிதபி—यस्य कस्यापि लाभः (யஸ்ய கஸ்யாபி லாப:) என்று அங்கு. இரண்டிடத்திலும் இரண்டையும் अपि (அபி) என்பதைக் கொண்டு சேர்த்துக் கொள்ளவேணும்.

த்ரிதசவந்திதோ வர்த்ததே—தேவர்கள் இவருக்குப் பலி ஸமர்ப்பித்துப் பூஜிக்கிறார்கள். तस्मै देवा बलिमावहन्ति (தஸ்மை தேவா பலிமாவஹந்தி). 'நித்யஸூரிகளும் கோயிலில் வாஸத்தைத் தேடி மனுஷ்யர்களோடும் திர்யக்குக்களோடும் சேர்ந்து தொழுகிறார்கள்' என்று பட்டர் ஸாதித்தார். பரமைகாந்திகளும், அவர்களைப் பூஜிக்கவும் உம்மை ஸேவிக்கவும் வரும் நித்யஸூரிகளும் ஏமாறும்படி செய்யலாமோ? 'த்ரிதசவந்திதராக இருக்கிறார்' என்பதால் அவர்களோடு தேவர்களும் வஸிக்கிறார்கள் என்று காட்டப்படுகிறது. 'தஸ்மை தேவா பலிமாவஹந்தி" பெருமாளை அவர்கள் ஸேவிக்க வருவது ராகப்ராப்தம்; இவர்களை வந்தனம் செய்து பலி ஸமர்ப்பிப்பது வைதம், சுருதிவிதித்த ஆக்ஞாகைங்கர்யம்.

ஸா ச ராஜதாநீ ஸ்திரா—விதேயம் முக்கியமானதால், அதை அநுஸரித்து 'ஸா' என்று ஸ்திரீலிங்கம் உபயோகிக்கப்படுகிறது. ராஜதானிக்கே ஆபத்துக்கள் அதிகம்: சத்ருக்கள் பலரிருப்பார்கள்; யுத்தமும் முற்றுகையும் வந்து கொண்டேயிருக்கும். பரமைகாந்தி வஸித்த அல்லது வஸிக்கும் ரங்கராஜதாநீ ஸ்திரமாயிருக்கவேண்டும். ராஜா வஸிக்கும் இடம் ராஜதாநியாகையால், நம்பெருமாள் வேறொரிடத்தில் இருந்தால் அதுவும் ராஜதாநியாகிலும், அது ரங்கராஜதானியாகாதல்லவா?

ஸுகஸ்ய ஸுகமாஸ்பதம்—ஸுகமென்பதற்கே இது ஸுகமான இருப்பிடம்; மற்ற விடங்களில் ஸுகமும் இத்தனை ஸுகமாக இராது.

ஸுசரிதஸ்ய துர்கம் மஹத்—தர்மம் உலகத்தைக் காக்கும் என்பர்; தர்மத்திற்குப் பரமைகாந்தி வஸிக்கும் க்ஷேத்ரம் தான் பெரிய அரண். இத்தனைக்கும் ஹாநி வரலாமோ? (8)

त्रिवर्गपथवर्तिनां त्रिगुणलङ्घनोद्योगिनां
द्विषत्प्रमथनार्थिनां अपि च रङ्गदृश्योदयाः ।
स्वलत्समयकातरीहरणजागरूकाः प्रभो !
करग्रहणदीक्षिताः क इह ते न दिव्या गुणाः ॥ ९ ॥

த்ரிவர்க-பத-வர்த்திநாம் த்ரிகுண-லங்கநோத்யோகிநாம்
த்விஷத்-ப்ரமதநார்த்திநாம் அபி ச ரங்கத்ருஶ்யோதயாঃ ।
ஸ்கலத்-ஸமய-காதரீ-ஹரண-ஜாகரூகாঃ ப்ரபோ ।
கர-க்ரஹண-தீக்ஷிதாঃ க இஹ தே ந திவ்யா குணாঃ ॥ (9)

ப்ரபோ—என் ப்ரபுவே!

த்ரிவர்கபத-வர்த்திநாம்—தர்மார்த்தகாமங்களைக் கோறுகிறவருக்கும்,

த்ரிகுண-லங்கநோத்யோகிநாம்—ப்ரகிருதி மண்டலத்தைத் தாண்ட வேண்டுமென்ற எண்ணத்துடன் ப்ரயத்னப்பட்டு கைவல்யத்தையும் மோக்ஷத்தையும் கோறுகிறவருக்கும்,

த்விஷத்-ப்ரமதநார்த்திநாம் அபி—(பெருமாளுடையவோ அல்லது தன்னுடையவோ) சத்ருக்களின் நிரஸநத்தைக் கோறுகிறவருக்கும்

ரங்கத்ருஶ்யோதயா:—அரங்கத்தில் ப்ரத்யக்ஷமாக அனுபவத்திற்கு வருமவையும்

ஸ்கலத்ஸமய-காதரீ-ஹரண-ஜாகரூகா:—தடங்கல்வரும் காலத்தில் நேரும் பயத்தை விலக்குவதில் தூங்காமல் விழித்து ஜாக்கிரதையாய்க் காத்துக் கொண்டிருப்பதுமான

தே திவ்யா: குணா:—உம்முடைய திவ்ய குணங்கள்

இஹ—இங்கே

கே—எவை

கர-க்ரஹண-தீக்ஷிதா: ந—கைகொடுத்து ரக்ஷிப்பதையே தீக்ஷையாக (வ்ரதமாகக்) கொண்டவையல்ல

திற்கு தேசகால வைகுண்யாதிகள் ஒன்றுமின்றிக்கே இருந்து ஆசார்யனும் க்ருத்ஸ்நோபதேச சக்தனுகவிருந்தால் ஆசார்யாந்தரகவேஷணம் வேண்டாமென்று திருவுள்ளம். இதுக்கும் மஹரிஷிகள் பக்கல் ஆசாரம் காட்டுகிறார். "மைத்ரேயாதிகளுக்குப் போலே" இதி. மைத்ரேயருக்கு ஸ்ரீ பராசர பகவானிடத்திலே க்ருத்ஸ்நார்த்தோபதேசம் என்பது ஸ்ரீ விஷ்ணு புராணோபக்ரமத்திலே ஸித்தம். வ்யாஸாதிகளுமப்படியேயாயிருக்கும். சிலர்க்குண்டாமென்றது நாதமுனி ப்ரப்ருதிகளுக்குப் போலே கிடாம்பி அப்புள்ளார் பக்கலிலே நமக்கு க்ருத்ஸ்நோபதேசம் உண்டானதும் கூட விவக்ஷிதம் என்றருளிச் செய்யக் கேட்டிருப்பதுண்டு. உண்டாமென்றத்தாலே ஒரே ஆசார்யனுகத் தானுகவேண்டும் என்றுவது பல ஆசார்யர்கள் வேண்டுமென்றுவது நிர்பந்தமில்லை. ஞாநோபஜீவநம் ஆவச்யகமாகையால் யாவதபேக்ஷிதம் ஓராசார்யனையோ பல ஆசார்யர்களையோ அநுவர்த்தித்துக் கேட்டுத் தெளியவேண்டுவது ஆவச்யகம் என்று வ்ருத்தாபிப்ராயம்.

அவ—ஆனாலும் ஓரர்த்தத்தை ப்ரதாநாப்ரதாநாம் சபோதேந பலருபதேசித்தால் யாரிடத்தில் ஆசார்ய ப்ரதிபத்தி பண்ணுகிறது? எல்லாரிடத்திலும் ஏக ரீதியாயிருக்கவமையாதே. ப்ரதாநாம்சோபதேஷ்டாவினிடத்திலே ஆசார்ய ப்ரதிபத்தியும் மற்றவரிடத்திலே பாகவத ப்ரதிபத்தியும் பண்ணுகிறது என்னுல் ஒன்றுமுபதேசியாத பாகவதரிடத்திலும் பாகவத ப்ரதிபத்தி ஆவச்யகமாகையால், உபகாரகத்வ ப்ரதிபத்தியும் பண்ணுகிறதென்றால் த்ரவ்யத்தாலே உபகரித்தவர்களிடத்திலும் உபகாரகத்வ ப்ரதிபத்தி ஆவச்யகமாகையாலே, ப்ரதிபத்தியில் வைஷம்யமில்லாதே போகாதோ வென்ன வருளிச் செய்கிறார்.

மூ—ப்ரதாநாம்சத்தினுடைய ப்ரதிஷ்டார்த்தமாக பலர் உபதேசித்தால் "அல்பம்வாப ஹுவா யஸ்ய ச்ருத ஸ்யோபகரோதிய: ॥ தமபீஹ குரும் வித்யாத் ச்ருதோபக்ரியயாதயா" ॥ என்கையாலே அவர்கள் பக்கலிலும் ஆசார்ய ப்ரதிபத்தி பண்ண ப்ராப்தம்.

வ்யா—ப்ரதாநாம்சத்தினுடைய—அங்கியினுடைய, ப்ரதிஷ்டார்த்தமாக—ப்ரதாநாம்சம் அப்ரதிஷ்டிதமாயிருந்து, அப்ரதாநாம்சம் ப்ரதிஷ்டிதமாயிருந்தாலும் அது கார்யகரமாகாது. "ப்ரதாநமொவாநுஸாரமொவ:" என்கிற ந்யாயத்தாலே தேசகாலாவஸ்தா வைகுண்யத்திலே அப்ரதாநங்கள் இல்லாதே ப்ரதாநமே கார்யகரமாமாகையாலே அதுவே முக்கியமாகையால் அதன் ப்ரதிஷ்டை ஆவச்யகமாயிருக்கும்.

" அல்பம்வா பஹுவா " இத்யாதி—ப்ரதாநாம்ஸ ஸ்ரவணாதேவ வா வஸ்துதா தத்வ நிஷ்டாநம் ஸஹதாம் ஸஹ்யாஹ்யாதி ந்யவம்

ஷூஜீம்வா, ஶ்ருஸ்ஷூவஷநாதிபி: ஷஹூவா, ய உவகரோதி, தவேி, ஸவிரூக்ஷ ஶஜ்ஞாஜேூ்ாதக:, ஐஹ—ப்ரதாநாம்சத்திலே தானே ஶூரூம விஜ்ாக—“ஶூஶஷூஷுஸகாரெஷூாக, ரூஶஷூஷஹிரொயக: “ஸஸகார நிரொயிகூாக ஶூரூரிதூஹியீயதெ” என்கிற குருசப்தார்த்தம் இவர் பக்கலிலும் உண்டாமாகையாலே இதி பாவ:. ஆசார்ய ப்ரதிபத்தி பண்ண ப்ராப்தம். கேவலம் உபகாரகத்வ ப்ரதிபத்தியன்றிக்கே ஆசார்யராகக் கொண்டும் ப்ரதிபத்தி பண்ண ப்ராப்தம்.

அவ—இப்படி ஒருத்தனுக்குப் பல ஆசார்யர் கூடினால் ப்ரதாநாசார்ய க்ருதயம் எதென்ன வருளிச் செய்கிறார்:—

மூ—அவ்யவஹித மோக்ஷோபாய வ்யவஸாயம் பிறப்பிக்கை ப்ரதாநாசார்ய க்ருத்யம் ॥

வ்யா—அவ்யவஹித மோக்ஷோபாயங்களாகிறது—பக்திப்ரபத்திகள். இதுகளில் வ்யவஸாயம் பிறப்பிக்கையாவது—திருமந்த்ராதி முகத்தாலே பகவச் சேஷ பூதமாயிருந்த ஸ்வஸ்வரூபத்தையும் ஸ்வரூபாநுகுணமாயிருந்த புருஷார்த்தத்தையும் தெளிவித்து அப் புருஷார்த்தம் பெற விருப்பமுண்டாக்கி, ஸ்வாதிகாராநுகுணமாயிருந்த பக்திப்ரபத்திகளிரண்டத் தொன்றிலே நிலையுண்டாம்படியான த்ருடாத்யவஸாயத்தைப் பண்ணி அநுஷ்டாந பர்யந்தமாக்குகை—பக்தி ப்ரபத்திகள் பகவத் ப்ரஸாதத்தை உண்டாக்கி மோக்ஷஹேதுவாலும் மோக்ஷோபாயமாயிருந்த தனக்கும், ஃபலத்துக்கும் நடுவே, சேதந ஸாத்யமாயிருந்த வ்யாபாரத்தை அபேக்ஷியாமையாலே இதுகளை அவ்யவஹித மோக்ஷோபாயங்கள் என்கிறது—ஸகிஞ்சநாதிகாரிக்கு பக்தி அவ்யவஹித மோக்ஷோபாயமாய் அகிஞ்சநாதிக்காரிகு ப்ரபத்தி அவ்யவஹித மோக்ஷோபாயமாய் இருக்குமாகையாலே இரண்டும் அவ்யவஹித மோக்ஷோபாயமாக இருக்கக் குறையில்லை. வ்யவஸாயம் பிறப்பிக்கை ப்ரதாநாசார்ய க்ருத்யம் என்று அருளிச் செய்கையாலே ஞாநோத்பாதகனே ப்ரதாநாசார்யன். ஆசார்யத்வம், ஞான ப்ரதியோகிகமொழிய அநுஷ்டாந ப்ரதியோகிக மன்றென்றதாயிற்று. இத்தால் ஞாநாம்சத்தில் கிஞ்சித்தேனும் உபகாரகனன்றிக்கே கேவலம் ப்ரபத்தி மாத்திரம் அநுஷ்டிக்குமவன் ஆசார்யனன்றென்றதாய்த்து. இங்ஙன் இசையாதபோது பக்திதானே அநுஷ்டிக்கவேண்டியவத்தாலும் ப்ரபத்தி தன்னிலும் ஸ்வ நிஷ்டையும் உக்தி நிஷ்டையும் தனக்குத் தானே அநுஷ்டிக்க வேண்டியவத்தாலும் தன்னைப் பற்றி ஆசார்யத்வம் தனக்கே வர ப்ரஸங்கிக்கும். இப்படி பக்திப்ரபத்திகளிலே நிஷ்டை உண்டாக்கினவனே ப்ரதாநாசார்யன் என்றவித்தாலே மந்த்ரமாத்ரோபதேஷ்டாவுக்கு இங்கு சொன்ன ஆசார்யத்வம் கடியாமையாலே நேரே

ஆசார்யன் என்பது ஸம்ஸார நிவர்த்தகமான பெரிய திருமந்திரத்தை உபதேசித்தவனை என்று சொல்லுமது ஸத் ஸம்ப்ரதாயமன்றென்றதாய்த்து. இவர்கள் சொன்ன மந்த்ரோபதேசம், “ஸாக்ஷாதாசார்யத்தம்” என்கிறபடிக்கு ஸார்த்தமாய் அநுஷ்டாந பர்யந்தமானால் ஸம்ப்ரதாயத்தில் வரும் விரோதம் ஒன்றில்லை. மந்திரம் அநுஷ்டேயார்த்த ப்ரகாசகமாகையாலே அநுஷ்டாந முகத்தாலே யிறே இது கார்யகரமாவது—மந்த்ர ஸ்வரூபோபதேச மாத்திரத்தாலே ஸம்ஸார நிவர்த்தகமென்று கொண்டாயிற்று உபதேசிக்குமளவில் இன்ன மந்த்ரத்தை உபதேசித்தவனையே ஸாக்ஷாத் ஆசார்யன் என்பது என்கிறார், என்று வ்யாக்யாதா இவ் வாக்யத்தை அவதரிப்பித்தது. ஸம்ஸார நிவர்த்தகமான பெரிய திருமந்த்ரத்தை உபதேசித்தவனை என்பதற்கு ஸம்ஸார நிவர்த்தக த்வப்ரதிபத்தியோடே உபதேசித்தவனை என்று வ்யாக்யாநிக்கையாலே உபதேஷ்டாவுக்கு இப்ரதிபத்தியே அமையுமென்று தோற்றுகையாலும் தனியே இம் மந்த்ர ப்ரதிபாத்யமான உபாயாநுஷ்டாநம் தங்கள் பக்கலிலாவது ஆசார்யாதி பாகவதர் பக்கலிலாவது காணாமையாலும் தனியே உபாயாநுஷ்டாநம் பண்ணும் ஸத் ஸம்ப்ரதாயத்தில் விரோதம் காண்கையாலும் அவ் வாக்யத்திற்கு அநுஷ்டாந பர்யந்தமான உபதேசம் அர்த்தமென்று சொல்ல வழி இல்லை.

அவ—இப்படி மோக்ஷோபாய வ்யவஸாயம் ப்ரதாநாசார்யனாலே பிறந்தால் இவன் ஞாநாம்சத்தில் க்ருத க்ருத்யனாகையாலே அந்ய நிரபேக்ஷனாயிருந்த இவனுக்கு அப்ரதாநாசார்யராக சிலரைக் கொள்ள வேண்டுமோ, வேண்டாமென்றில் அப்ரதாநாசார்யன் உண்டானாலன்றோ இவன் ப்ரதாநாசார்யனாவது என்னவருளிச் செய்கிறார்.

மூ—இது கலங்காதபடி பண்ணுகையும் பரிகர பூர்த்தியை உண்டாக்குகையும் ஆசார்யாபிமத சிக்ஷகாந்தர க்ருத்யம்.

வ்யா—இது = ஆசார்யனாலே பிறந்த அவ்யவஹித மோக்ஷோபாய வ்யவஸாயம். கலங்காதபடி பண்ணுகையும் இதி. ஆருருக்ஷூக்களாயிருப்பார்க்கு

“ஶ்ரூயதெ கிஶெஶாவிநெ ஹதூஜஹதாம் நூணாம் ।
ஸம்ஸாரநூஜநதாஹீதா ஷூீடிஶா: வரிவதிநஃ ॥
ஸதூம்ஶதெந விஷூாநாம் ஸஹஜெஷூணதயாதவ: ।
விஷூாயாதெந ஶெஷாவிநெ நூணாம்ஹதிநிவாயதெ ॥”

என்கையாலே கலக்கமுண்டென்னுமிடம் ஸித்தம். கலக்கமுண்டானால்

“ராகாதிதூஷிதே சித்தே நாஸ்பதீ மதுஸூதந: ।
ந பத்நாதி ரதிம் ஹம்ஸ: கதாசித் கர்த்தமாம்புநி ॥
நிஸ்ஸம்ஶயேஷு ஸர்வேஷு நித்யம் வஸதி வை ஹரி: ।
ஸஸம்ஶயாந் ஹேதுபலாந் நாத்யாவஸதி மாதவ: ॥

என்றதிறே. அசரண்ய சரண்யனை ஸர்வேச்வரனை சரணமாகப் பற்றுகிற பரமாஸ்திகருக்கு சிலரோடு சேர்த்தியாலே பாஹ்யதை வாராதாகிலும் அவருக்குக் கலக்கங்கள் வரவும் அதுக்குப் பரிஹாரங்கள் ஸதாசார்யர் பண்ணவும் காணாநின்றோம். எம்பாருக்கு விபரீத ஸம்ஸர்க்கத்தாலே கலக்கமும் திருமலை நம்பிகள் உபதேசத்தாலே தத்பரிஹாரமும் சொல்லிப் போருவர்கள் நம் முதலிகள். ஆகையால் தாங்கள் தெளிகைக்காகவும் குதர்க்கங்களாலே கலங்குவாரைத் தெளிவிக்கைக்காகவும் ஸமீசீந யுக்திகளோடே கேட்க ப்ராப்தம்.

ஶுஷ்கம் யஶோவதேஶம் ச வேதஶாஸ்த்ரவிரோதிந: ।
பக்ஷேணாநேந ஸம்யுக்தம் ச யச்சம் வேதநிந்தகா: ॥

என்றார்களிறே. இப்படி தெளியாதபோது “காணாதஶாக்யபாஷண்டை: த்ரயீமார்கோ விரோதித:” என்கிறபடியே வேதவிரோதி தர்க்கங்களை விட்டு ப்ராமாணிகாநுஷ்டாநங்களுக்கு அபஹாரம் வரும்படியாம். ஆகையால் தான் கலங்காதபடி பண்ணிக் கொள்ளுகை ஆவச்யகமிறே. “பரிகர பூர்த்தியை உண்டாக்குகையும் இதி — ப்ரபத்திக்குப் பரிகரங்களாவது, ஆநுகூல்ய ஸங்கல்பாதிகள். பக்திக்குப் பரிகரங்கள்—யமநியமாதிகளும் வர்ணாச்ரம தர்மங்களும். இந்த பரிகரங்களில் ஒன்று குறைந்தாலும் “ஸர்வாபேக்ஷா யஜ்ஞாதி ஶ்ருதேரஶ்வவத்” என்கிற சூத்திரத்திற் சொன்ன ந்யாயத்தாலே ஃபலஸாதநமென்றெண்ண வொண்ணாதாகையாலே பரிகர பூர்த்தி ஆவச்யகமாயிறே இருப்பது. ஆசார்யாபிமத என்றது. “அவிஜ்ஞாதாய நாபாயம் வதேத்” என்கிற ப்ரமாண கதியாலேயும், பாஞ்சவாந் ஶிஷ்ய ஹராஜநு என்கிற ந்யாயத்தாலும் ஆசார்யனும் தானும் ஏகமநஸ்கனாயிருக்க வேண்டியத்தால் ஆசார்யாநபிமதன் தனக்கு மநபிமதனாய், அநபிமதனிடத்திலே சாஸ்திரார்த்தச்ரவணம்,

யஸ்யாயத்தேந சைவ ஶ்ருதே யஸ்யாயத்தேந வர்த்ததி ।
தயோராத்மா: ப்ரீதிவிஶேஷம் வாயிருஞ்ஜதி ॥

என்கிறபடிக்கு அநர்த்தாவஹமாகையாலே ஆசார்யாபிமதனானால், தனக்கும் அபிமதனாய் ஒரு குறையும் வாராதென்று திருவுள்ளம். “சிக்ஷகாந்தர க்ருத்யம்” என்றது ஆசார்யாநுமதியாலேயோ இவன் தன் ப்ரார்த்தனையா

லேயோ ப்ரீதிப்ரேரிதனான சிக்ஷகாந்தரன் இவனுடைய அநுவ்ருத்தியாலே அபேக்ஷித பூரணம் செய்விக்கவடுக்கும். சிக்ஷகாந்தர என்றத்தாலே “ஆசாரஸ்தாபயத்யபி” என்றும் “ஸ்வாமித்யாஶாஸிதாரம்” என்றும் ஆசார்ய லக்ஷணமாகையாலே இவர்களையும் ஆசார்யரென்னக் குறையில்லை. ஆசார்யாபிமத சிக்ஷகாந்தர என்கையாலே சிக்ஷகர் உபகாரகாசார்யராய் இவர்களுக்கு ப்ரதாநாசார்ய பரம்பரையிலே அந்வயமின்றிக்கே உபகாரகாசார்ய கோடியிலே இவர்களை சேர்த்தநுஸந்திக்கிறது.

அவ—ஆனாலும் உண்டுடுத்து உழல்கின்ற இவனுக்கு ஹிதோபதேசாதிகளாலே ஆசார்ய ஸம்பந்தத்தை உண்டாக்கின ஸாத்விகரும் க்ரந்த நிர்மாணம் பண்ணி குதர்க்கங்களாலே கலங்காதபடி பண்ணினவர்களும் ஆசார்யரென்னவேண்டாவோ என்னவருளிச் செய்கிறார்.

மூ-ஆசார்ய ஸம்பந்தத்தை உண்டாக்கினவர்களும், ப்ரபந்தமுகங்களாலே பரம்பரயா உபகரித்தவர்களும் ஆதரணீயர்.

வ்யா—ஆசார்ய ஸம்பந்தத்தை உண்டாக்கினவர்களும் இதி.

பாபிஷ்ட: க்ஷத்ரபந்துஶ்ச புண்டரீகஶ்ச புண்யக்ருத் ।
ஆசார்யவத்தயா முக்தௌ தஸ்மாதாசார்யவாந் பவேத் ॥

என்கிறபடியே இவனுடைய புண்ய பாபங்கள் அநுபகாரகமாய் ஆசார்ய ஸம்பந்தமே உத்தாரகமாய் முடிகையாலே அவ்வாசார்ய ஸம்பந்தந்தானும்

ஈஶ்வரஸ்ய ச ஸௌஹார்த்தம் யத்ருச்சாஸுக்ருதம் ததா ।
விஷ்ணோ: கடாக்ஷமத்வேஷம் ஆபிமுக்யம் ச ஸாத்விகை: ॥
ஸம்பாஷணம் ஷடேதாநி ஹ்யாசார்யப்ராப்திஹேதவ: ॥

என்கிறபடி ஸாத்விக ஸம்பாஷண மந்தரா கடியாதாகையாலே இப்படி அலப்யலாபமாயிருந்த வாசார்ய ஸம்பந்தத்தை உண்டாக்கின பரம ஸாத்விகரென்றபடி. ப்ரபந்தமுகங்களாலே பரம்பரயா உபகரித்தவர்களும் இதி. தேசகாலாந்தரங்களிலேயோ, அத்தேசகாலத்திலே தானேயோ, தங்களுடைய ஞானங்களை பாழ்படுத்தாதபடி அத்யாத்ம விஷய ப்ரபந்தங்களை ஸ்வாதந்த்ர்யேணவோ பூர்வாசார்ய க்ரந்த வ்யாக்யாந ரூபமாயோ இட்டு தத்துவ ஹித புருஷார்த்தங்களைத் தெளிவித்தவர்கள். இவர்களாகிறார்—ஸ்ரீமச்ச்ருதப்ரகாசிகாசார்யர் மகாசார்யர் முதலானோர். இப்படியன்றிக்கே அத்யாத்ம சாஸ்திரத்துக்கு சேஷபூதமாக ஸாமாந்ய சாஸ்திரங்களைப் பாடம் சொல்லி, பரம்பரயா உபகரித்தவர்களுமென்றும் சொல்லுவார்கள். ஆதரணீயரென்றது—ப்ரதாநாசார்ய பரம்பரையிலும் உபகாரகாசார்ய

பரம்பரையிலும் சேர்த்தநுஸந்தாநம் இவர்களுக்கில்லாதே போனாலும் அவர்களோப்பந்தமே இவர்களிடத்திலும் உபகாரத்தையிட்டு ஆதரம் வேணுமென்றபடி. இப்படி கீழ் மூன்று வாக்யங்களில், ப்ரதாநாசார்ய க்ருத்யமென்றும், சிக்ஷகாந்தர க்ருத்ய மென்றும், ஆதரணீயரென்றும், மூன்று ப்ரகாரமாக வருளிச் செய்தவித்தால் ஆசார்ய பரம்பராந்தர்கதராயும், க்ரந்த ரூபேண உபகாரகராயுமிருப்பாரை ப்ரதாநாசார்ய பரம்பரையிலும் உபகாரக பரம்பரையிலும், ஸ்வதந்த்ரமாயோ, ப்ரதாந க்ரந்தங்களுக்கு வ்யாக்யாநமாயோ உபகரித்தவர்களை கேவலோபகார பரம்பரையிலேயும், அவ்வோ க்ரந்தங்களை அநுஸந்திக்குமிடத்தில் அநுஸந்திக்க வேண்டுமென்றும், நல்வார்த்தைகளாலே உபகாரகரானவர் பக்கல் அநுஸந்தாநமில்லாதேபோனாலும் அவர்கள் பக்கல் போலே ஆதரம் வேணுமென்றும், தோற்றுகிறது. க்ரந்த முகங்களாலே உபகாரமின்றிக்கே இருந்தாலும் ஸ்ரீ பாஷ்யகாரர் ரஹஸ்யார்த்தங்கள் சிக்ஷித்தார் என்கிற இவ்வளவைக்கொண்டு ரஹஸ்ய க்ரந்தங்களிலே உபகாரகதயா திருக்கோட்டியூர் நம்பிகளை அநுஸந்திக்கிறது. ச்ருத ப்ரகாசிகை, தத்வடீகை இதுகள் ஸேவியாதே ஸ்ரீ பாஷ்யம் ஸேவிக்கும்போது உபகாராதிசயத்தை யிட்டு உபகார பரம்பரையிலே பிள்ளையையும் ச்ருத ப்ரகாசிகாசார்யரையும் அநுஸந்திக்கிறது.

அவ—இப்படி மோக்ஷோபாய வ்யவஸாயம் பிறப்பித்தவன் ப்ரதாநாசார்யனென்றும், இது கலங்காதபடி ப்ரதிஷ்டிதமாம்படி பண்ணினவன் உபகாரகாசார்யன் என்றும் ஆசார்ய ஸம்பந்தத்தை உண்டாக்கினவர்களும் ஆதரணீயர் என்றும் இப்படிச் சொன்னால், அத்யாத்ம ஸம்ப்ரதாய ப்ரதம ப்ரவர்த்தகனான ஸர்வேச்வரனுக்கு ஆசார்யத்வமின்றிக்கே, உபகாரகத்வமுமின்றிக்கே ஆதரணீயத்வமுமின்றிக்கே யொழியாதோ. இஷ்டாபத்தியென்னில், "தஸ்மை ஸ வித்வாநுபஸந்நாய ஸம்யக் பிதாமஹாய" என்னும், "ஶாஸ்தைவ" என்னும், "ஶாஸ்தா விஷ்ணுரஶேஷஜகதாம்" என்னும், "பிதக வாடைப் பிரானார் பிரம குருவாகி" என்னும் சொல்லுகிற ப்ரமாண ஸம்ப்ரதாயங்கள் விரோதியாதோ வென்னவருளிச் செய்கிறார்.

மூ—இவர்களில் ப்ரதாநதமன் ஸர்வப்ரேரகனான ச்ரிய:பதி என்று.

வ்யா—இவர்களில்—கீழ்ச் சொன்ன மூவர்களில், ப்ரதாநதமன்—அவ்யவஹித மோக்ஷோபாய வ்யவஸாயம் பிறப்பித்த, ப்ரதாநாசார்யனைக் காட்டிலும், எம்பெருமானே ப்ரதாநாசார்யன்; இவனாலே தானே கீழ்ச் சொன்ன த்ரிவிதோபகாரங்களும் உண்டு.

"ஸாக்ஷாந்நாராயணோ தேவ꞉ க்ருத்வா மர்த்யமயீம் தநும் ।
மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச்சாஸ்த்ரபாணிநா ॥"

பிதகவாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து, என்கையாலே அவ்யவஹித மோக்ஷோபாய வ்யவஸாயம் பிறப்பிப்பானும் அவனே. இவனுபாயமநுஷ்டித்தாலும் பலப்ரதாந ரூபரக்ஷை பண்ணுவானும் ரக்ஷிக்குமிடத்தில் அபர்யநுயோஜ்ய ஸ்வாதந்த்ர்ய மடியாக, சங்கிதமாம் விச்சேதத்துக்குப் பரிஹாரமாக, "இருளகத்து மெரிகதிரோன் மண்டலத்தூடேற்றி வைத்து ஏணி வாங்கி, போயினால் பின்னையித்திசைக்கென்றும் பிணைக் கொடுக்கிலும் போகவொட்டாரென்றும்" சொல்லுகிறபடியே புநராவ்ருத்தியில்லாதே ரக்ஷை பண்ணுவானும் "யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி" என்னும் "ஜ்ஞாநப்ரதாத்ருத்வஸ்ய நாராயண꞉ ஸ்வயம்" என்னும் சொல்லுகிறபடியே, ப்ரபந்தமுகேந உபகரிப்பானும் "ஶாஸ்த்ரஸ்ய ஸௌஹார்தம்" "விஷ்ணோ꞉ கடாக்ஷம்" இத்யாதிகளில்படியே ஸதாசார்ய ஸம்பந்தோத்பாதகனும் இவனே யாகையாலே ப்ரதாநதமனானான். "ஸர்வ ப்ரேரகனான" என்றது, "தேநவிநா த்ருணாக்ரமபி ந சலதி" என்கிறபடியே ஆசார்யாதிகளையும் சிஷ்யனையும் அநுப்ரவேசித்து உபதேசாதிகள் பண்ணவும், தலை வணங்கிக் கேழ்க்கும்படிக்கும், ப்ரேரகனாயிருப்பானென்றபடி. "ஸ்ரிய꞉பதி" என்றது—ப்ரேரிக்குமிடத்தில் ஸ்ரீ விசிஷ்டனாயிருப்பானென்கைக்காக.

"அஸ்யா மம ச ஶேஷம் ஹி விபூதிருபயாத்மிகா ।
இதி ஶ்ருதிஶிரஸ்ஸித்தம் மச்சாஸ்த்ரேஷ்வபி ॥"

என்று இருவருமே சேஷியானால் சேஷபூதமான வஸ்துவை இருவருக்கும் நியமிக்க ப்ராப்தி உண்டாயிருக்க, ஒருவன் தான் நியந்தாவென்ன வழியில்லையிறே.

அவ—ஆனாலும் இப்படி எம்பெருமானை ப்ரதாநதமன் என்னப்போமோ? "வஸிஷ்ட வ்யாஸ வைஶிகா꞉" என்கிறபடியே வஸிஷ்டாதிகளான க்ஷேத்திரஜ்ஞருக்கு இவன் சிஷ்யனாகவன்றோ இருப்பது. அப்போது வஸிஷ்டாதிகள் அன்றோ ப்ரதாநதமாளாக வேண்டுவது. இப்படி இவனுக்கும் ஓராசார்யன் உண்டாகையாலே பரமாசார்யனும்படி தான் எங்ஙனே என்ன வருளிச்செய்கிறார்.

மூ—இவனொருவனுமே தனக்கோராசார்யனில்லாத பரமாசார்யன் என்று.

வ்யா-இவன் ஒருவனுமே என்றது "ஆஸீதேகஸ்ஸதைவாக்ரே ஸ்ருஷ்டிகாலே மஹாப்ரபு꞉ ॥ ஏக ஏவ ஸ்தித꞉ ஸாக்ஷாந்நாராயண꞉ ப்ரபு꞉" என்று மஹாப்ரளயத்திலே ஜீவித்திருந்து புநச்ச ஸ்ருஷ்டி காலத்திலே

"यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदांश्च प्रहिणोति तस्मै" என்கிறபடியே ஸர்வ புருஷார்த்தங்களுக்கும் மூலமாயிருந்த வேதத்தை உபதேசிப்பானிவனே என்று தோற்றுகைக்காக. ஒருவனுமே என்கிறவவதாரணத்தாலே "आनीदवातं स्वधया तदेकम्" என்று ஸ்வதா சப்தவாச்யையாயிருந்த பிராட்டியுமிவனு மொழிய வேறொருவருமில்லை என்று சொல்லிற்றாயிற்று. ஒருவனென்றது—பதிப்ராதாந்யத்தாலே, யாகத்திலே தம்பதிகள் யாஜமாந்யம் வஹிக்க ஏகன் யஜமானன் என்பதுண்டிறே. "தனக்கொரு ஆசார்யனில்லாத" "वसिष्ठव्यपदेशिनः" என்றிருந்தாலும் அதுதானவதார விசேஷத்திலே. அஜ்ஞாந நிவ்ருத்யர்த்தமன்றிக்கே கேவலலோக ஸங்க்ரஹார்த்த மாகையாலே வஸிஷ்டாதிகளை ஸ்ரிய:பதிக்கு ஆசார்யன் என்ன வொண்ணாதிறே. இவன் ப்ரதமம், சதுர்முகனுக்கு உபதேசம் பண்ணும்போதும், பெரிய பிராட்டியாருக்கு த்வயத்தை உபதேசிக்கும் போதும், வஸிஷ்டாதிகளுக்கு சிஷ்யனாயிருந்து உபதேசித்தானன்றிறே, " பரமாசார்யன்.

"आचिनोति हि शास्त्रार्थान् आचारे स्थापयत्यपि ।
स्वयमाचरते यस्मादाचार्यस्तेन चोच्यते ॥"

என்ற आचार्यशब्दनिर्वचनम् இவனிடத்திலே பூர்ணமாகையாலே ஆசார்ய சப்தவாச்யனாய் ஆசார்ய பரம்பரையில் இவனுக்கப்புறம் அநுஸந்தேயனாக ஓராசார்யனில்லாமையாலே பரமாசார்யன் என்கிறது. ஆகையாலே யிறே "अस्मदाचार्यवंशो ज्ञेयः आचार्याणामसावसावित्याभगवत्तः" என்று அநுஸந்தேயமாயிருந்த வாசார்ய பரம்பரைக்கு எம்பெருமானை கடைசியான அவதியாக ஓதித்து, எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் பரஸ்பரம் பதிபத்நி பாவ நிபந்தநமாக சேஷ சேஷி பாவமுண்டானாலும் "उभयाधिष्ठानं चैकं शेषित्वम्" என்று ஷடர்த்த ஸங்க்ஷேபத்திலே ஸோமாசியாண்டான் நிஷ்கர்ஷித்தபடியே இருவரும் ஜநகஸுதா ராகவஶேஷிகள் ஆனைப்போலே இருவருக்கும் ஆசார்ய சிஷ்ய பாவம் உண்டானாலும் ஜநகஸுதை வேறு ஒரு ஆசார்யன் இல்லாத பரமாசார்யன் என்னக் குறையில்லை. பிராட்டிக்கு பகவச் சிஷ்ய பாவம் எம்பெருமானுக்கு வஸிஷ்ட சிஷ்ய பாவம் போலே அல்லது அபூர்வார்த்த க்ரஹணமவன்று, இந்த ரஹஸ்யத்தில் இவனொருவனுமே இத்யாதியான ஸ்ரீ ஸூக்திக்கு மேலே ஸ்ரீ பாஷ்யகாரருடைய இத்யாதிக்குக் கீழே சில க்ரந்த பாதங்கள் உண்டென்று சில ப்ராசீந ஸ்ரீ கோசங்களில் காண்கிறது. அப்படியன்றிக்கே இவ்விரண்டு ஸ்ரீ ஸூக்தியும் அவ்யவதாநேநவும் காண்கிறது. இந்த பூர்வோத்தர வாக்யங்களுக்கு ஸங்கதி அத்தினை ஸ்வரஸமாயில்லாமையாலே நடுவே சில ஸ்ரீ ஸூக்திகள் உண்டென்று கொள்ளு

॥ ज्योतिराधिकरणम् ॥

सू—ज्योतिश्चरणाभिधानात् ॥ १. १. २५. ॥

சாந்தோக்கியத்தில் "अथ यदतः परो दिवो ज्योतिर्दीप्यते" என்னும் இடத்தில் ஜோதி என்பது பரமாத்மாவே. உலகத்தில் பிரசித்தமான அக்னி, சூர்யன் முதலிய ஜோதி அல்ல. ஏனெனில் கீழ் வாக்யத்தில் இந்த ஜோதிக்கு எல்லா உலகங்களும் பாதமாக நிற்கின்றன என்று சொல்லி இருப்பதால்,

"अथ यदतः परो दिवो ज्योतिर्दीप्यते विश्वतः पृष्ठेषु सर्वतः पृष्ठेषु अनुत्तमेषूत्तमेषु लोकेषु इदं वाव तद्यदिदमस्मिन्नन्तः पुरुषे ज्योतिः" इत्यत्र सर्वस्मात्परत्वेन निर्दिश्यमानतया सकलकारणभूतज्योतिषः कौक्षेयज्योतिषैक्याभिधानात्, स्ववाक्ये विरोधिलिङ्गादर्शनाच्च, प्रसिद्धमेव ज्योतिर्जगत्कारणत्वेन प्रतिपाद्यत इति शङ्कायाम्, यद्यपि स्ववाक्ये विरोधिलिङ्गं न दृश्यते, तथापि पूर्वस्मिन् वाक्ये "पादोस्य विश्वा भूतानि ॥ त्रिपादस्यामृतन्दिवि" इति प्रतिपादितस्य सर्वभूतचरणस्य परमपुरुषस्यैव द्युसम्बन्धितयात्रापि प्रत्यभिज्ञानात् स एव ज्योतिश्शब्देन सर्वस्मात् परत्वेन सकल कारणतयाभिधीयते ॥

வ்யஷ்டி என்னும் ஸமஷ்டி என்னும் இரண்டு விதமான சிருஷ்டிகள் உண்டு. இவ்விரண்டு சிருஷ்டிக்கும் உள்பட்ட உலகங்கள் எல்லாவற்றுக்கும் புறமே நிற்கிற உத்தமமான மேல் லோகங்களில் ஜ்வலித்துக் கொண்டிருக்கும் ஜோதியே, இந்த ஜீவசரீரத்தின் உள்ளில் இருக்கும் ஜோதியாகும், என்று சாந்தோக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா பொருளிலும் உயர்வுபெற்று எல்லாவற்றுக்கும் காரணமாக நிற்கும் ஜோதியை நமது குக்ஷியில் இருக்கும் ஜோதியோடு ஐக்கியம் சொல்லி இருப்பதால், இவ்விரண்டு ஜோதிகளும் ஒன்று என்று சொல்லுவதற்கு விரோதமான காரணங்கள் காணப்படாததாலும், உலகத்தில் ப்ரசித்தமான

ஜாடராக்னியே ஜகத் காரணமாக நிரூபிக்கப்படுகிறது என்பது பூர்வபக்ஷம். இதற்கு சித்தாந்தம் :—

"பாதோஸ்ய விச்வாபூதானி" என்ற கீழ்வாக்யத்தில் ஸர்வபூதங்களையும் தனக்கு பாதமாக உடைய பரம புருஷனே தேவலோகத்தில் ப்ரகாசிக்கிறான் என்று சொல்லி இருப்பதால், ஜாடராக்னிக்கு இவ் விசேஷணம் பொருந்தாதாகையால் அந்த பரம புருஷனே ஜோதி என்னும் சொல்லைக்கொண்டு எல்லாப் பொருள்களுக்கும் உயர்ந்தவனாகவும் ஸகல காரணமாகவும் சொல்லப்படுகிறான்.

अस्य च कौक्षेयज्योतिषैक्याभिधानं फलायोपदिश्यत इति न कश्चिद्विरोधः ॥

தேவலோகத்தில் பிரகாசித்துக்கொண்டு இருக்கிற பரமாத்மாவை நமது குக்ஷியில் இருக்கும் அக்னியோடு சேர்த்துச் சொல்லுவானேன் என்றால்— அந்த பரமாத்மாவை இப்படி உபாஸிப்பதினால் விலக்ஷணமானதொரு பலன் உண்டு என்று அறிவிப்பதின் பொருட்டு, ஆகையால், மேற் சொன்ன பொருளில் விரோதம் ஒன்றுமில்லை.

अखिलजगदेककारणभूतः परमपुरुषोऽप्राकृतस्वासाधारणदिव्यवर्णो दिव्यरूपस्तमसः परस्ताद्वर्तत इति तस्यैव निरतिशयदीप्तियोगात् ज्योतिश्शब्दाभिधेयत्वम् , विश्वतः पृष्ठेषु सर्वतः पृष्ठेषु अनुत्तमेषूत्तमेषु लोकेषु वासश्च युज्यते ॥

உலகங்கள் அனைத்திற்கும் முக்கிய காரண பூதனாயும் இப் பிரகிருதி மண்டலத்தைச் சேராத தனக்கே என்று ப்ரத்யேகமான திவ்ய வர்ணத்துடன் கூடினவனும் திவ்ய ரூபம் உடையவனுமான பரம புருஷனே இப் பிரகிருதி மண்டலத்திற்குப் புறமே இருக்கிறான் என்று சொல்லி இருப்பதால் அவனுக்கே அளவற்ற தீப்தி உண்டாகையால் அவனையே ஜோதி என்னும் சப்தத்தால் சொல்லுவதும், அவனே இப் ப்ரபஞ்ச ஸ்ருஷ்டிக்கு உள்படாத லோகங்களில் வஸிக்கிறான் என்பதும் யுக்தமானது.

सू—छन्दोभिधानान्नेति चेन्न तथा चेतोर्पणनिगमात्तथा हि दर्शनम् ॥ १. १. २६ ॥

கீழ் வாக்யத்தில் गायत्री वा इदं सर्वं என்று தொடங்கி இருப்பதால், அந்த காயத்திரியே இங்கு சொல்லப் படுகிறது என்றும் இந்த வாக்யம் பரம புருஷனைச் சொல்ல வந்ததல்லவென்றும் சங்கையை நிராகரிக்கிறது இந்த ஸூத்திரம். அந்த காயத்ரீ என்னும் சொல்லுக்கு ப்ரஸித்தமான காயத்ரீ சந்தஸ் மாத்திரம் பொருள் அல்ல. இந்த பரமாத்மாவையே காயத்ரீயோடு ஒப்பிட்டு அனுஸந்தானம் செய்ய விதிக்கிறது. அப்படியே மற்ற விடங்களிலும் இந்த காயத்ரியே பரமாத்மா என்று கூறி இருக்கிறது.

पूर्वत्र "गायत्री वा इदं सर्वम्" इति गायत्र्याख्यच्छन्दः प्रस्तुतमिति नात्र परमपुरुषाभिधानमिति चेत्—नैतत् , परमपुरुषस्यैव गायत्रीसादृश्यस्य अनुसन्धानोपदेशत्वात् ।

இந்த ப்ரகரணம் காயத்ரீ என்னும் சந்தஸ்ஸை பற்றிச் சொல்ல வந்தது. இவ்விடத்தில் பரம புருஷனுடைய ப்ரஸ்தாவம் இல்லை என்று பூர்வ பக்ஷி சொல்லுவது உசிதமல்ல. பரமபுருஷனையே காயத்ரீயோடு ஒப்பிட்டு அனுஸந்தானம் செய்ய விதிக்கிறது இந்த ச்ருதி.

तस्य छन्दोमात्रस्य सर्वभूतात्मकत्वानुपपत्तेरेवेति निगम्यते ॥

"காயத்ரீவா இதம் ஸர்வம்" என்னும் ச்ருதி வாக்யத்தில் காயத்ரீ என்னும் சொல்லுக்கு காயத்ரீச்சந்தஸ் என்பது மாத்திரம் பொருள் அல்ல. அத்தை ஸர்வபூத ஸ்வரூபம் என்று சொல்லி இருப்பது பொருந்தாது. ஆகையால் பரம புருஷனையே காயத்ரீ துல்யமாக த்யானிக்க வேண்டும் என்று உபதேசிக்கிறது.

अन्यत्रापि ह्यन्यस्य छन्दस्सादृश्यात् छन्दोनिर्देशो दृश्यते "ते वा एते पञ्चान्ये" इत्यारभ्य "सैषा विराट्" इत्यादौ ॥

வேறு ப்ரகரணங்களிலும், வேறு பொருளை சந்தஸ்ஸுக்கு துல்யமாக இருப்பது கொண்டு சந்தஸ் என்றே சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம். இது சாந்தோக்யம் (4—3—8)ல் காண்க.

सू—भूतादिपादव्यपदेशोपपत्तेश्चैवम् ॥ १. १. २७ ॥

பூதம் முதலியவற்றை அந்த காயத்ரிக்கு பாதமாகச் சொல்லி இருப்பதால் பரமாத்மாவையே காயத்ரீ என்று சொல்லுவது உசிதம்.

भूतपृथिवीशरीरहृदयैश्चतुष्पदेति व्यपदेशश्च परमपुरुषे गायत्रीशब्दनिर्दिष्टे ह्युपपद्यत इति पूर्वोक्तप्रकार एव समञ्जसः ॥

பூதம், ப்ருதிவீ, சரீரம், ஹ்ருதயம் இந்நான்கையும் காயத்ரீ தேவதைக்கு நான்கு பாதங்களாக கூறப்பட்டிருக்கிறது. இவ்வர்த்தம் காயத்ரீ சப்தத்தால் பரம புருஷனைச் சொன்னால் ஒழிய ஒவ்வாது. ஆகையால் முன்சொன்ன அர்த்தமே ஸமஞ்ஜஸமானது.

सू—उपदेशभेदान्नेति चेन्नोभयस्मिन्नप्यविरोधात् ॥
॥ १. १. २८ ॥

கீழ் வாக்யத்தில் திவி என்று தேவலோகத்தில் இருக்கிறது என்றும் ப்ரக்ருத வாக்யத்தில் திவ: பர: என்று தேவலோகத்திற்கு புறமே இருக்கிறதென்றும் சொல்லில் வேறுபாடு இருப்பதால் கீழ்வாக்யத்தில் பரமாத்மாவை சொன்ன போதிலும் இங்குமதையே சொல்லுகிறதென்று ஒப்புக்கொள்ள வழியில்லை, என்றால் இரண்டு விதமாக சொல்லி இருந்த போதிலும் அபிப்பிராயம் ஒன்றே. ஆகையால் விரோதமில்லை.

पूर्वत्र "त्रिपादस्यामृतन्दिवि" इति परमपुरुषो व्यपदिश्यते ॥ अत्र "अथ यदतः परो दिवः" इति पञ्चम्या निर्दिष्टद्युसम्बन्धिज्योतिरिति न प्रत्यभिज्ञेति चेत्—नैतत्, उभयस्मिन्नपि व्यपदेशे विरोधाभावात्, यथा 'वृक्षाग्रे श्येनः, वृक्षाग्रात्परतश्श्येनः' इति व्यपदेशः ॥ अत्र दिवः परत्वमेव उभयत्र विवक्षितमित्यर्थः ॥

கீழ் வாக்யத்தில் "த்ரிபாதஸ்யாம்ருதந்திவி" என்று திவி என்று ஏழாம் வேற்றுமையிலும் ப்ரக்ருத வாக்யத்தில் திவ: என்று ஐந்தாம் வேற்றுமையும், வித்யாஸம் காணும்படி சொல்லப்பட்டிருப்பதால் முன் வாக்யத்தில் சொன்ன பரம புருஷனையே இங்கு போதிக்கிறது என்பதற்கு அடையாளம் ஒன்றுமில்லை என்பது ஆக்ஷேபம்.

இதற்கு ஸமாதானம்—இரண்டு விதமான சொற்களுக்கும் அபிப்பிராயத்தில் பேதமில்லை. ஒரு மரத்தின் நுனியில் உட்கார்ந்திருக்கும் பக்ஷியை, மரத்தின் நுனியில் இருக்கிறது என்றும் மரத்தின் நுனிக்கு

புறமே இருக்கிறது என்றும் சொல்லக்கூடும். அதுபோல் இங்கும் இரண்டு விதமான சொற்களுக்கும் த்யுலோகத்திற்குப் புறமே இருக்கிறது என்று சொல்லுவதிலேயே தாத்பர்யம். ஆகையால் முன் பின் ஸந்தர்ப்பங்களுக்கு விரோதமில்லை.

॥ इन्द्रप्राणाधिकरणम् ॥

सू—प्राणस्तथानुगमात् ॥ १. १. २९. ॥

கௌஷீதகீ என்னும் உபநிஷத்தில் சிறு கதை ஒன்று காண்கிறது. முன் காலத்தில் ப்ரதர்த்தனன் என்றவன் இந்திரனிடத்திற்குச் சென்றான். இந்திரன் அவனைப் பார்த்து "நான் உனக்கு வரம் தருகிறேன். உனக்கு என்ன வரம் வேண்டுவது" என்றான். அதற்கு ப்ரதர்த்தனன் "எனக்கு வேண்டிய வரத்தை நீயே தெரிந்து கொடு. மனுஷ்யனாகிய எனக்கு எது நல்லது என்பதை நீ தெரிந்து கொள்வாய்" என்றான். அதற்கு இந்திரன் இது உசிதமன்று. ஒருவனுக்கு வேண்டியதை மற்றொருவன் சொல்லுவது உலக வழகத்தில் இல்லை. ஆகையால் நீயே வரம் கேள்" என்றான். ப்ரதர்த்தனன் "எனக்கு எது நல்லதென்று தெரியவில்லை. நீயும் கொடுக்காவிட்டால் எனக்கு வரம் வேண்டாம்" என்றான். இந்திரன் "நான் வரம் கொடுக்கிறேன்" என்ற வார்த்தையை பொய்யாக்க மனமில்லாதவனாய் ப்ரதர்த்தனனுக்கு உபதேசம் செய்கிறான். நீ என்னையே உபாஸிக்கவேண்டும். மனுஷ்யனுக்கு இதுவே ஹிதம். நான் விச்வரூபனைக் கொன்றேன். வேதாந்த விசாரத்தில் ருசி அற்ற யதிகளை செந்நாய்களுக்கு பகிர்ந்து கொடுத்தேன். பௌலோமன் முதலான அஸுரர்களை ஹிம்ஸித்தேன்.

இப்படி பிறரை ஹிம்சிக்கும்போது என்னுடைய ஒரு உரோமத்திற்குக்கூட கெடுதி உண்டாகவில்லை. இப்படிப்பட்ட என்னை உபாஸிப்பவனுக்கு மாத்ருவதம், பித்ருவதம் முதலிய கொடும் பாவங்கள்கூட பரலோக ப்ராப்தியைத் தடுக்கமுடியாது. ப்ராணன் என்ற பொருள் நானே, என்னையே ஆயுஸ் என்றும், அம்ருதம் என்றும் உபாஸிக்கவேண்டும்" என்று. இவ்விடத்தில் இந்திரன் தன்னையே ப்ராணன் என்று சொல்லி இருப்பதற்கு என்ன பொருள். ஜீவர்களுக்குள் ஒருவனான இந்திரனே ப்ராண சப்தவாச்யன் என்பது பூர்வ பக்ஷம்—அப்படி அல்ல—ஸர்வ ஜகத்திற்கும் ப்ராண பூதனான பரமாத்மாவே இங்கு ப்ராண சப்தவாச்யன் என்பது ஸித்தாந்தம். ஏன் எனில் பரமாத்மாவிற்கு இன்றியமையாத

ஆனந்தம் அஜரம், அம்ருதம் என்ற குணங்கள் ப்ரஸித்தனை இந்திர னிடத்தில் இல்லை. பரமாத்மாவிற்கே உண்டு. அப்படியே ச்ருதிகளில் காணப்படுவதால்.

आत्मनां हिततमरूपमोक्षसाधनोपासन कर्मतया प्रज्ञातजीव भावस्य इन्द्रस्य "प्राणोस्मि प्रज्ञात्मा तं मामायुरमृतमित्युपास्व" इति विधानात् स एव जगत्कारणम् ॥ कारणोपासनं हि मोक्षसाधनम् "तस्य तावदेव चिरं यावन्नविमोक्ष्ये ॥ अथ सम्पत्स्ये" इति श्रुतेरिति नाशङ्कनीयम्, प्राण शब्दसमानाधिकरणेन्द्रशब्दनिर्दिष्टो जीवादर्थान्तरभूत उक्तलक्षणः परमात्मैव ॥ कुतः? तथाऽनुगमात्, परमात्मासाधारणानन्दा जरामृतादिष्वस्येन्द्रप्राणशब्दनिर्दिष्टस्यानुगमो हि दृश्यते—'स एष प्राण एव प्रज्ञात्माऽऽनन्दोऽजरोऽमृतः' इति ।

ஜீவாத்மாக்களுக்கு ஹிததமமான மோக்ஷத்திற்கு ஸாதனம் உபாஸனம். விச்வ ரூபனைக் கொன்றது முதலிய அடையாளங்களால் ப்ரஸித்தனை இந்திரனையே சொல்லும்படியான இந்திர சப்தத்தைச் சொல்லி, நானே ப்ராணன் ஆகிறேன் என்னையே உபாஸனை செய் என்று விதித்திருப்பதால் அந்த இந்திரனே ஜகத் காரணம். காரணத்தை உபாஸிப்பதே மோக்ஷ ஸாதனம் என்று ச்ருதியில் கூறப்பட்டது-என்று சங்கை.இதற்கு சமாதானம்—ப்ராணம் என்னும் சொல்லோடு சேர்த்து ஒரே வேற்றுமையாக கூறப்பட்ட இந்திர சப்தத்தால் சொல்லப்படும் அவன் ஜீவர்களுள் ஒருத்தனை இந்திரன் அல்ல ஜீவனைக் காட்டிலும் வேறான பரமாத்மாவே. ஏனெனில் பரமாத்மாவிற்கு அஸாதாரணமான ஆனந்தம், அஜரம், அம்ருதம் முதலியவற்றில் இந்த இந்திர, ப்ராண சப்தங்களால் சொல்லப்பட்டவனுக்கு ஸம்பந்தம் கூறப்படுகிறது. ப்ரஸித்த இந்திரனுக்கு இந்த ஆனந்தம் முதலிய குணங்கள் இல்லை ஆதலால் பரம புருஷனே ப்ராண சப்தவாச்யனாகிறான்.

सू—न वक्तुरात्मोपदेशादिति चेदध्यात्मसम्बन्ध भूमा ह्यस्मिन् ॥ १. १. ३० ॥

உபதேசிப்பவனை இந்திரன் தன்னையே உபாஸிக்கவேண்டும் என்று சந்தேகமற சொல்லி இருப்பதால் இங்கு பரமாத்மாவை சொல்ல வழி

இல்லை என்றால் இங்கு உபாஸிக்கப்படவேண்டியவனாக சொல்லப்பட்ட தன்னிடத்தில் பரமாத்மாவிற்கு அஸாதாரணமான பல அடையாளங்களைச் சொல்லி இருப்பதால் இங்கு இந்திர, ப்ராணாதி சப்தங்கள் பரமாத்மாவையே சொல்லும்.

उपक्रमे हि "मामेव विजानीहिं इति त्वाष्ट्रवधादिना प्रज्ञात-जीव भावस्य इन्द्रस्योपदेशात्, उपसंहारस्तदनुगुणो वर्णनीय इति चेत्—नैतत्, अध्यात्म सम्बन्धभूमा ह्यस्मिन्—अध्यात्मं–परमात्म-धर्मः ॥ परमात्मधर्म सम्बन्धबहुत्वमस्मिन्निन्द्रशब्दाभिधेये, वाक्यो-पक्रमप्रभृत्युपसंहाराद्दृश्यते ॥

தொடக்கத்தையும் முடிவையும் சேர்த்து ஒரு சந்தர்ப்பத்திற்கு அர்த்தம் கூறவேண்டும். இங்கு இந்திரன், என்னையே உபாஸனை செய்ய வேண்டும் என்று விதிக்கிறான். பின்பு விச்வரூபனைக் கொன்றவன் என்பது முதலிய குணங்களால் தன் பெருமையை பேசினான். முடிவில் பரமாத்மாவிற்கு அஸாதாரணமான குணங்களையும் சொல்லி தலைக்கட்டுகிறான். ஆரம்பத்தில் சொன்ன தாத்பர்யத்திற்கு விரோதமன்றி முடிவில் உள்ள வாக்யங்களுக்கு பொருள் கொள்ளவேண்டியது அவச்யமாகையால் ப்ரஸித்தமான இந்திரனே இங்கு உபாஸிக்கப்படவேண்டியவனாக கூறப்பட்டவன் என்றால் இப்படி சொல்லுவது சரியல்ல. இங்கு தொடக்கம் முதல் முடிவுவரை பரமாத்மாவுக்குரிய தர்மங்கள் பலவாறாய் சொல்லப்பட்டன. இந்திரனிடத்தில் பரமாத்மாவின் தர்மங்கள் அதிகமாகச் சொல்லப்பட்டிருப்பதால், இந்திர சப்தத்திற்கு பரமாத்மா என்றே அர்த்தம்.

"यं त्वं मनुष्याय हिततमं मन्यसे" इति हिततमोपासनं प्रारब्धम् ॥ तच्च परमात्म धर्मः, "तमेवं विद्वानमृत इह भवति । नान्यः पन्थाः" इत्यादि श्रुतेः ॥

உபக்ரமத்தில் எது மனுஷ்யனுக்கு ஹிதமோ அதைச் சொல்ல வேண்டும் என்று கூறப்பட்டது. மனுஷ்யனுக்கு ஹிததமமாய் இருக்கை என்பது பரமாத்மாவின் தர்மமே. "தமேவம் வித்வான்" என்று தொடங்கிய ச்ருதியில் இது நிரூபிக்கப்பட்டது.

तथा "एष एव साधु कर्म कारयति" इत्यादिना सर्वस्य कारयितृत्वम्, "एवमेवैता भूतमात्राः" इत्यारभ्य "प्रज्ञामात्राः प्राणेर्पिताः" इति सर्वाधारत्वं, तथा आनन्दादयश्च "एष लोकाधिपतिः" इत्यादिना सर्वेश्वरत्वञ्च ॥

அப்படியே, இவனே நல்ல கார்யத்தை செய்விக்கின்றான் என்று தொடங்கி எல்லா செய்கைகளையும் செய்விக்கும் திறமையும், இவனையே ஸர்வ பூதங்களும் ஆதாரமாக கொண்டிருக்கின்றன என்று ஸர்வாதாரத்வமும் ஆனந்தம் முதலியவையும் ஸர்வேச்வரத்வமும் இவையெல்லாம் இந்திர சப்த வாச்யனுக்கு கூறப்பட்டன.

सू—शास्त्रदृष्ट्या तूपदेशो वामदेववत् ॥ १-१-३१. ॥

எல்லா சப்தங்களும் பரமாத்மாவைச் சொல்லுகின்றன என்று, சாஸ்திரங்களில் சொல்லி இருப்பதைக் கண்டு பரமாத்மாவை இந்திர சப்தத்தால் உபதேசித்தது உசிதமாகும். வாமதேவர் என்றவர் தன்னை பரமாத்மாவாக நினைத்து பேசியதுபோல்.

नामरूपव्याकरणादिशास्त्रात्सर्वशब्दैः परमात्मैवाभिधीयत इति दृष्ट्या तज्ज्ञापनायायमिन्द्रशब्देन परमात्मोपदेशः ॥ शास्त्रस्था हि वामदेवादयः तथैव वदन्ति—"तद्धैतत्पश्यन् ऋषिर्वामदेवः प्रतिपेदे अहं मनुरभवं सूर्यश्च" इति ॥

உலகத்தில் எல்லா வஸ்துக்களுக்கும் நாமம் ரூபம் இவற்றை விவரிக்கும் சாஸ்திரம் உபநிஷத்தில் அடங்கியது. இது முதலிய சாஸ்திரங்களால் எல்லா சொற்களும் பரமாத்மாவை பொருள் படுத்தும் என்று சொல்லி இருப்பதைக் கண்டு, இந்த சாஸ்திர விஷயத்தை நினைப்பூட்டுவதற்காக இந்திர சப்தத்தைக் கொண்டு பரமாத்மாவை உபதேசித்தது. அந்த சாஸ்திரத்தில் வாமதேவன் முதலியவர் அப்படியே கூறுகிறார். வாமதேவன் என்ற ரிஷி பரமாத்மாவின் உண்மையான நிலைமையைக்கண்டு நானே மனு என்றும், நானே ஸூர்யன் என்றும் அறிந்தார்—என்று.

सू—जीवमुख्यप्राणलिङ्गान्नेति चेन्नोपासात्रैविध्यादाश्रितत्वादिह तद्योगात् ॥ १-१-३२. ॥

॥ श्रीः ॥

வேத வைபவ பரிசிஷ்டம்

"यस्तित्याज सखिविदं सखायं न तस्य वाच्यपि भागो अस्ति। यदीं शृणोत्यलकं शृणोति न हि प्रवेद सुकृतस्य पन्थाम्।"

अस्तु नमोऽध्येतृभ्यः कृतवेदाद्युदितसफलकर्मभ्यः।
विष्णुप्रमुखा देवा यद्वाचि वसन्ति सादरास्सततम् ॥

ஆஸ்திகர்களுக்கு ஓர் விக்ஞாபநம். சென்ற தாது வருஷ கார்த்திகை மார்கழி மாதங்களின் ஸ்ரீ வேதாந்த தீபிகை ஸஞ்சிகைகளில் வேதவைபவ தூஷணமாக 'வேதவைபவ விமர்சமும் ப்ரஹ்ம விசாராதிகார நிர்ணயமும்' என்ற ஒரு வியாஸம் வெளியாயிருப்பது யாவருமறிந்த விஷயம். அவ்வியாஸத்தில் இப்பொழுது எழுந்தருளியிருக்கும் சில மஹான்களுக்கு பிரஹ்ம விசாரத்தில் அதிகாரமில்லை என்பதை ப்ரகாசப் படுத்துவதற்காக வேதவைபவம் எழுதி வெளியிட்டதாக எழுதப்பட்டிருக்கிறது. அது ஸரியன்று. அந்த வேத வைபவத்தில் வேதம்—தர்மம், அதர்மம், ப்ரஹ்மம் இவைகளை அறிவதற்கு ஸாதநம், பகவானுடைய மூச்சுக் காற்று, ப்ரபஞ்ச ஸ்ருஷ்டிக்கு ஸாதநம், அபௌருஷேயம், நித்யம், ஸ்வதந்திர ப்ரமாணம். ஸ்வரம் எழுத்து இவைகளின் பிழையில் அனிஷ்டஸாதனம், வேத மூர்த்தியான கருடன் பகவானுடைய வாஹநம், ஸ்வசாகாத்யயனம் நித்யம், நைமித்திகம், காம்யம், அங்கி, உபநயநம் அதன் அங்கம், ப்ராஹ்மணர்களுக்கு பிராம்மணன் என்ற நிலையிலும் கர்ம ப்ரஹ்ம விசாரங்களுக்காகவும் ஸ்வ சாகாத்யயனம் ஆவச்யகம், அர்த்த க்ஞானமில்லாமல் கர்மானுஷ்டானம் செய்தாலும் பல ஸித்தியுண்டு, வேதத்தைக் காட்டிலும் சிறந்த வேறு சாஸ்த்ரம் கிடையாதென்று இம்மாதிரியான விஷயங்கள் ப்ரமாணங்களைக் கொண்டு நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. வேறு அபிப்ராயமிருக்குமேயானால் ப்ராம்மணர்களுக்கு ப்ரஹ்ம விசாராதிகாரம் என்றே பெயரிட்டு எழுதப்பட்டிருக்கும். தினந்தோறு மந்தந்த காலங்களில் செய்யவேண்டிய வைதிக கர்மாக்களை வேத வாக்யங்களைக் கொண்டே செய்ய வேண்டியிருந்தும் சிலருக்கு வேதாத்யயனத்தில் ச்ரத்தை குறைவாக இருக்கிறது. அக்குறையை நீக்க வேணுமென்றே வித்வான்களையும் ப்ரபுக்களையும் ப்ரார்த்தித்தேன். அப்படியிருக்க வேதாத்யயனத்தில் இருவித நிர்ப்பந்தமுடையவர் ப்ரார்த்தனையும் விஷய கௌரவத்தையும் ப்ரமாண க்ரந்தங்களையும்

அவைகளின் சப்தஸ்வாரஸ்யத்தையும் முன் பின் ஸந்தர்ப்பங்களையும் கவனிக்காமல் நிஷித்தமான யுக்தி வாதத்தைக் கொண்டு தூஷிக்க முன் வந்தது வைதிக கர்மாக்களை யனுஷ்டிக்கும் எல்லோருக்கும் தாம் செய்யும் கர்மாக்கள் பயனுள்ளன, வேதாத்யயனம் அவச்யம் செய்யவேணும், அனுஷ்டிக்கப்படும் ப்ரஹ்மயக்ஞ ஸ்வரூபம் முதலியது ப்ராமாணிகம் என்று இம்மாதிரி தீர்மானமான அபிப்ராயம் நீங்குவதற்கு ஸாதனமாக இருக்கிறது. பொதுவாக சாஸ்த்ரார்த்தத்தை நிரூபணம் பண்ணும் போது ஒருவர் தாபத்தை யடைந்து தூஷிக்க முன் வந்ததால் எந்த வைதிக தர்மங்களையுமுபஜ்யவஸிப்பதோ எழுதுவதோ பரிபவத்துக்குக் காரணமாகு மென்று தெரிகிறது. அதுவும் தவிர வாச்யமாகவும் வ்யங்க்யமாகவும் வ்யக்தி தூஷணம் பல உள. அவைகளை விமசர்ம் வாசித்த வித்வான்கள் அறிவார்கள். வேத வைபவத்துக்கு சுத்தி பத்ரிகையை சென்ற தாதுஸு ஆவணி மாஸத்தில் ஸ்ரீ பத்ராதிபர் ஸ்வாமிக்கனுப்பியும் புஸ்தகமாக இல்லாத வ்யாஸங்களுக்குசுத்தி பத்திரிகை போடுவது வழக்கமில்லை யென்று பதிலளித்து பிரசுரம் செய்யாததால் **ब्राह्मणेन निष्कारणेन** என்கிற அசுத்த பாட்த்தை தூஷிக்கநேர்ந்தது. அடியேன் ஏற்கனவே நிரூபித்த விஷயத்தில் ப்ரமாணங்களையும் ப்ரமாணங்களின் ஸரியான அர்த்தையும் சுருக்கமாக விக்ஞாபனம் செய்கிறேன். அந்தந்த புஸ்தகங்களைக் கடாக்ஷிக்கும்படி வித்வான்களை ப்ரார்த்திக்கிறேன்.

1. **तस्यैतस्य महतो भूतस्य निश्वसितमेतदृग्वेदो यजुर्वेदः सामवेदोऽथर्ववेद इत्यादि ।** ஒருவன் ஜீவித்திருப்பதை மூச்சுக்காற்றைக்கொண்டே எப்படி அறிகிறோமோ அதுபோல் பகவானை அறிவதற்கு வேதமே சிறந்த ஸாதநமென்றும் வேதமில்லாவிடில் பகவானை அறிய முடியாதென்றும் ஏற்படுகிறது என்கிற அடியேன் வாக்யத்தைக் எடுத்துக்கொண்டு இந்த ச்ருதியில் வேதங்களும் அங்கங்களும் பூதங்களும் பகவானிடமிருந்து அநாயாஸேந உண்டானவை என்று பகவானுடைய வைபவம் சொல்லப்பட்டதாகிறதே யொழிய வேதங்களுக்கு இதரவ்யாவ்ருத்தமான வைபவம் சொல்லப்படவில்லை என்று தூஷிக்கப்பட்டிருக்கிறது. அது ஸரியன்று. இங்கு ச்ருதியிலிருக்கும் நிச்வஸித சப்தம் சக்தியினால் ச்ரமமில்லாமல் உண்டாயின என்கிற அர்த்தத்தை தெரிவிக்காது. அவ்விதம் சொல்லுவதற்கு கோச வ்யாகரணாதிகள் இடம் கொடுக்காது. ஆகையால் அவ்வர்த்தத்தை லக்ஷணை யென்னும் வ்யாபாரத்தால் தெரிவிப்பதாக ஒப்புக்கொள்ளவேண்டும். இந்த பதம் லாக்ஷணிகமானதால்தான் பாஷ்யகாரர்கள் " **ततः प्रवृत्तत्वं विवक्षितम्, निःश्वसितमिव निःश्वसितम्, यथा अप्रयत्नेनैव पुरुषनिःश्वासो भवति ।** " என்கிற வாக்யங்களால் அமுக்யதையை வெளிப்படுத்தினார்கள். சிக்ஷை முதலியன மூச்சுக் காற்றன்றானபடியால் வேதங்களுக்கு மிவைகளுக்கும் பொதுவான

அர்த்தத்தை நிரூபிக்கவேண்டி இவ்விதம் வ்யாக்யானம் செய்யப்பட்டது. இதனால் வேதங்களுக்கு நிச்வாஸரூபதை பாதிக்கப்படமாட்டாது. சந்த்ரிகாகாரர் முதலியோர் '**लिम्पतीव तमोऽङ्गानि**' என்பது முதலிய உத்ப்ரேக்ஷையின் உதாரணங்களில் '**गङ्गायां मीनघोषौ स्तः**' என்கிற ப்ரயோகத்தில் கங்கா என்னும் பதம் சக்தி, லக்ஷணை என்னும் வ்யாபாரங்களால் ப்ரவாஹத்தையும் கரையையும் எப்படி போதிக்கிறதோ அதுபோல் லிம்பதி முதலிய பதம் சக்தி, லக்ஷணை இவைகளால் லேபனம் வ்யாபனம் முதலிய அர்த்தங்களைத் தெரிவிக்கிறதாக நிரூபித்திருக்கிறார்கள். அவ்விதம் இங்கிருக்கும் நிச்வஸித சப்தம் வேதவிஷயத்தில் மூச்சுக்காத்து என்ற முக்யார்த்தத்தையும் சிக்ஷைமுதல் பூதங்கள் வரையிலுள்ள அர்த்தங்கள் விஷயத்தில் ச்ரமமில்லாமல் உண்டாயின, என்ற அமுக்யார்த்தத்தையும் தெரிவிக்கிறது என்று சொன்னால் விரோதமில்லை.

यस्य निःश्वसितं वेदाः यो वेदेभ्योऽखिलं जगत् ।
निर्ममे तमहं वन्दे विद्यातीर्थमहेश्वरम् ॥
महास्वनो निःश्वसितं यस्य वेदाः समीरिताः ।

என்ற வாக்யங்களில் நிச்வஸிதசப்தம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. ச்ருதியில் நிச்வஸிதபதம் ச்ரமமில்லாமல் உண்டானவை என்றர்த்தத்தைத் தெரிவிப்பதால் அப்படியே பிரயோகிக்க வேண்டியிருக்க வேதவிஷயத்தில் நிச்வஸித சப்தத்தையும் உலக விஷயத்தில் நிர்மமே என்றும் வேறு சப்தத்தையும் பிரயோகிக்கக் கூடாதன்றோ. அப்படி யில்லாமல் வேறு சப்தத்தை பிரயோகித்ததால் முக்யார்த்தம் ச்ருதியில் விவக்ஷிதமென்று தெரிகிறது. இதேமாதிரி மஹாஸ்வந: என்ற இடத்தில், சப்தப்ரயோகம் ஸ்வாதீனமாயிருப்பதால் அநாயாஸேந உத்பன்னம் என்று அர்த்தமுள்ள பதத்தை பிரயோகிக்கவேண்டி யிருக்க லாக்ஷணிகமான நிச்வஸிதபதத்தை யுபயோகித்தது அநுசிதமாகும்.

பின்னும் **अन्नमयप्राणमयमनोमयविज्ञानमयानन्दमया मे शुद्ध्यन्ताम् ।** என்ற விடத்தில் சோத்யத்வம் அந்தந்த வஸ்துவுக்குத் தக்கபடி யாகிறதென்று

" **शोध्यत्वं तत्तदर्थानुगुणमिति विभोस्तत्प्रसाद्यत्वमात्रम् ।** "

என்கிற அதிகரணஸாராவளீ ஸ்ரீ ஸூக்தியில் நிஷ்கர்ஷித்தபடி இங்கும் நிச்வஸிதபதத்தால் விவக்ஷிதார்த்தம் அந்தந்த விஷயத்தில் உசிதப்படி விலக்ஷணமாக க்ரஹிக்கப் படலாம் என்பதையும் இவ்வித விசேஷாபிஸந்தியாலேயே

" **अपि च श्रुतिरेव शब्दस्य भूतान्तरनिष्ठत्वमुपपादयति, अध्ययनोपक्रमपरिपाठ्ये शन्नो मित्र इत्यस्मिन् मन्त्रे—'नमस्ते वायो, त्वमेव प्रत्यक्षं ब्रह्मासि, त्वामेव**

प्रत्यक्षं ब्रह्म वदिष्यामि,' इति वायोरेव वेदात्मना परिणतिरुपलभ्यते, तच्च वायोः शब्दाधारत्वमन्तरेण न सञ्जाघटीति। एवं 'तस्य ह वा एतस्य महतो भूतस्य निःश्वसितमेतदृग्वेदः' इत्यादिकमपि भाव्यम्। स्मर्यते च स्वरात्मा, स्वररूपेण वायुरेव स्मर्यते,

"वेणुरन्ध्रविभेदेन भेदः षड्जादिसंज्ञितः।
अभेदव्यापिनो वायोस्तथाऽसौ परमात्मनः॥"

इति। एवं नाभिदेशादेव निर्गतस्य वायोः ताल्वादिस्थानसंबन्धेन तत्तच्छब्दपरिणतिहेतुत्वं स्मृत्यादिप्रसिद्धं स्वयमेवानुसन्धेयम्।

(வாயுவே வேதஸ்வரூபமாகப் பரிணமித்ததாக ச்ருதிகளில் காணப்படுகிறது. வாயு சப்தத்துக்கு ஆதாரமாக இல்லாமலிருந்தால் இது பொருந்தாது. வாயு ஸ்வரரூபமாக ஸ்ம்ருதியில் சொல்லப்படுகிறது. நாபிப்ரதேசத்திலிருந்து கிளம்பின வாயு கடவாய் முதலிய ஸ்தான ஸம்பந்தத்தால் அந்தந்த சப்த பரிணாமத்துக்குக் காரணம் என்னும் விஷயம் ஸ்ம்ருத்யாதிகளில் ப்ரஸித்தம்) என்று அருளிச் செய்யப்பட்ட

'वायुः शब्दस्वभावः श्रुतिशिरसि यतः स्मर्यते च स्वरात्मा'

என்ற தத்வமுக்தாகலாபத்துக்கு வ்யாக்யானமான ஸர்வார்த்தஸித்தி ஸ்ரீ ஸூக்தியையும்

नित्योदितैर्निगमनिश्वसितैस्तवैषा
नासा नभश्चरपते नयनाब्धि सेतुः।
आम्रेडितप्रियतमामुखपद्मगन्धै-
राश्वासिनी भवति सम्प्रति मुह्यतो मे।

என்கிற தேவநாயக பஞ்சாசத் ஸ்ரீஸூக்தியையும் அபிஜ்ஞர்கள் கவனிக்க வேணும். ஆகையால் ச்ருதியில் நிச்வஸிதம் என்பதால் வேதவைபவம் சொல்லப்படவில்லை என்பது ஸரியன்று.

2. वेदेन रूपे व्यकरोत्, सतासती प्रजापतिः என்கிற வாக்யத்துக்கு ப்ராஜாபதி வேதத்தினால் ப்ருதிவி முதலிய பாவ பதார்த்தங்களையும் முயல் கொம்பு முதலிய அபாவ பதார்த்தங்களையும் ஏற்படுத்தினார் என்று தாத்பர்யம் வேத வைபவத்தில் எழுதப்பட்டது. இது "यथा प्रजापतिरेकरूपेण वेदेन पर्यालोच्य सतासती पृथिव्यादिसद्रूपं शशविषाणाद्यसद्रूपं च विभज्याकरोत् तथायमिन्द्रः सारासारविभागं कृतवान्" என்கிற ஸாயன பாஷ்யத்தை யனுஸரித்து எழுதப்பட்டது. நம்முடைய வாக்யத்தில் ஸ்ருஷ்டி சப்தம்

உபயோகப்படுத்தவில்லை என்பதைக் கவனிக்கவேணும். இந்த வாக்யத்துக்கு வேத பாஷ்யகாரர் ரீதியாக நாம் எழுதின அர்த்தத்தைத் தூஷிப்பதற்கு இழிந்த இவர் 'स भूरिति व्याहरत्' 'स भूमिमसृजत' என்று பூமி முதலியவைகளின் ஸ்ருஷ்டியை ச்ருதி மேலே உபபாதித்தாப்போல் என்று எழுதுகிறார். இந்த வாக்யங்களின் ஸ்தலங்களையும் அவைகளின் க்ரமத்தையும் வேதவித்துக்களிடமிருந்து இவர் தெரிந்து கொள்ளுதல் நலம்.

3. ये अर्वाकुत वा पुराणे वेदं विद्वांसमभितो वदन्त्यादित्यमेव ते परिवदन्ति सर्वे अग्निं द्वितीयं तृतीयं च हंसमिति यावतीर्वै देवतास्ताः सर्वा वेदविदि ब्राह्मणे वसन्ति तस्मात् ब्राह्मणेभ्यो वेदविद्भ्यो दिवे दिवे नमस्कुर्यान्नाश्लीलं कीर्तयेदेता एव देवताः प्रीणाति॥ இவ் வாக்யத்தில் வேதவித் என்னும் சப்தம் அர்த்த க்ஞானமில்லாத வேதாத்யயனம் செய்த அதிகாரியையும் குறிக்கிறது என்று நம்மால் எழுதப்பட்டது. இது சப்த ஸ்வாரஸ்யம் ப்ரகரண ஸ்வாரஸ்யம் பாஷ்யஸ்வாரஸ்யம் இவைகளால் வேதவித் சப்தம் கேவலாத்யயனம் செய்தவனைக் குறிக்க மாட்டாது என்று ஸ்தாபிதமாயிற்று என்று தூஷிக்கப்பட்டிருக்கிறது. இது ஸரியன்று. पाराशर्यवचस्सुधां என்கிற ஸ்ரீ பாஷ்ய வ்யாக்யான ச்ருதப்ரகாசிகையில்,

"वचःशब्दस्य अर्थे तात्पर्यम्। यथा—वेदवित् शास्त्रवित् इत्यादौ वेदादिशब्दानाम्"

என்று இருக்கிறது. இங்கு அதன் வ்யாக்யானமான பாவப்ரகாசிகையில் இவ்விஷயத்தில் ஆக்ஷேப ஸமாதானங்கள் உபந்யஸிக்கப்பட்டன. அதாவது வேத வித் முதலிய இடங்களில் வித் என்னும் சப்தம் அர்த்த விஷயமான க்ஞானத்தைத் தெரிவிப்பதாக வைத்துக்கொண்டு வேதபதம் அர்த்த பரமன்று என்று சொல்லலாம். "यः सर्वज्ञः सर्ववित्" என்ற விடத்தில் ஸர்வ பதத்தில் லக்ஷணையில்லாமல் எல்லாவற்றையும் அதின் விசேஷங்களுடன் அறிகிறான் என்று எப்படி ஏற்படுகிறதோ அவ்விதம் வேதம் வேத்தி என்று சொன்னால் வேத்தி என்பதிலிருந்து வேதத்தின் ஆநுபூர்வியை அறிகிறான் என்று மாத்திரம் தோன்றாமல் வேதம் அந்தந்த அர்த்த விசேஷங்களின் க்ஞானத்தையுண்டு பண்ணுகிறது என்றும் அறிகிறான் என்றும் தோன்றுகிறது. அப்படியிருப்பதால் தான் "तदधीते तद्वेद" என்ற பாணிநிஸூத்ரத்தில் மஹாபாஷ்யத்தில் எவன் சப்தம் மாத்திரமறிந்தவனோ அவன் வேத (அறிகிறான்) என்று சொல்லப்படுவதில்லை. அர்த்தம் அறிந்தவனே வேத என்று சொல்லப்படுகிறான் என்று சொல்லப் பட்டது என்று ஆக்ஷேபித்துக் கொண்டு "सोऽहं भगवो मन्त्रविदेवास्मि नात्मवित्" என்ற விடத்தில் ஆத்ம க்ஞான மில்லாதவர் என்று மேலே சொல்லியிருப்பதால் மந்த்ரவித் என்பதில் வித்சப்தம் அர்த்தவிஷயமான

க்ஞானத்தைச் சொல்லாததால் வேதவித் சப்தத்தில் வித் பதம் அர்த்த விஷயக க்ஞானத்தைச் சொல்லாது. ஆகையால் வேத பதத்திற்கு லக்ஷணை சொல்லியே அர்த்த பரத்வம் சொல்லவேணும் என்று ஸமாதானம் செய்யப்பட்டது. अधीते वेद, पठति वेद இம்மாதிரி இடங்களில் विद धातु அர்த்த க்ஞான பரமென்று மஹாபாஷ்யம் ப்ரதீபம் இவைகளுக்குத் தாத்பர்யமென்று ச்ருத ப்ரகாசிகை பாவப்ரகாசிகை இவைகளின் தாத்பர்யம். அப்படி மஹாபாஷ்யாதிகளுக்கு தாத்பர்யம் கொள்ளாமல் அர்த்த க்ஞானம் வேதநமென்றால் नयाऽधीते वेऽत्यप्यसौ என்ற மஹாபாஷ்யத்திலும், योहि यं ग्रन्थमधीते स तं स्वरूपतोऽवश्यं वेत्ति என்றும், பிறகு ஸ்வரூப மாத்ர வேதநமென்றும் ப்ரதீபத்திலும் சப்த விஷயக க்ஞானபரமாக வித தாதுவை ப்ரயோகித்திருப்பது அநுபபன்னமாவதுடன் கீழ்ச்சொன்ன மந்த்ரவித் என்ற விடத்திலும் சப்தவித் பத்வித் முதலிய இடங்களிலும் சப்த க்ஞானத்தைத் தெரிவிக்கிற வித தாதுப் ப்ரயோகம் அநுபபன்னமாய்விடும். विद ज्ञाने என்று தாதுபாடம். இந்த தாதுவின் அர்த்தத்தில் எது கர்மாவோ அதன் விஷயமான அறிவை இது தெரிவிக்கும். ஆகவே 'வித' தாதுவின் ஸ்வாரஸ்யம் போய் விட்டது. வேத பதத்திற்கு சப்தம் அர்த்தம் இரண்டும் வாச்யம் என்று நாகேசர் முதலியோர் அபிப்ராயம். ரஸகங்காதரகாரர் வேதம் கெட்டியாய் படிக்கப்படுகிறது. வேதம் கேட்கப்பட்டது அர்த்தம் அறியப்படவில்லை. வேதத்திலிருந்து அர்த்தம் அறியப்படுகிறது என்று வ்யவஹாரமிருப்பதால் வேத பதம் சப்தத்தைத் தெரிவிக்கிறது என்று எழுதியிருக்கிறார். ஆகவே வேதவித் பதத்துக்கு சப்த மறிந்தவன் என்ற அர்த்தத்தைச் சொல்வது உபபன்னமே. मन्त्रवित् முதலிய இடங்களில் போல் சப்த தாத்பர்யலிங்கங்களுள்ள இடங்களில் வேதநத்தில் கர்மா சப்தமென்றே சொல்லவேணும். லக்ஷணைக்கு ப்ரஸக்தியில்லை. ஆறு அங்கங்கள் இதிஹாஸம் புராணம் மநு ஸ்ம்ருதி முதலிய தர்ம சாஸ்த்ரம் இவைகளுடன் வேதத்தை ப்ரஹ்ம யக்ஞத்தில் சொல்ல வேணுமென்றும் கீழ்ச் சொன்ன ப்ரமாணங்களில் பரிச்ரமத்துடன் கர்ம ப்ரஹ்ம விசாரம் செய்த அதிகாரியே ये अर्वाङ् முதலிய ச்ருதியிலிருக்கும் வேதவித் பதத்துக்கு அர்த்தமென்று சொல்லவேண்டியிருப்பதால கேவலாத்யேதா அர்த்தமென்று சொல்ல முடியாதென்றெழுதப் பட்டிருக்கிறது. இங்கே பூர்வ ப்ரகரணம் எவ்விதமிருக்கிறதென்பதை பராமர்சிப்போம். தைத்திரீயாரண்யகம் இரண்டாவது ப்ரச்னம் अजान् ह वै என்ற -வது அநுவாகத்தில் ஸாயனர், सह वै என்ற ப்ரபாடகத்திற்கு ஸ்வாத்யாய ப்ராஹ்மணம் என்ற பெயரினால் ஸ்வாத்யாயமே இங்கு முக்யமாக விதேயம். அதில் சுத்தன் அதிகாரி ஆகையால் சுத்திக்குக் காரணமான யக்ஞோபவீதம் ஸந்த்யாவந்தனம் கூச்மாண்டஹோமம் இவைகளைச் சொல்லி

ஸ்வாத்யாயத்தை விதிப்பதற்காக ச்ருதி ஓர் உபாக்யானத்தைச் சொல்லுகிறதென்று அவதாரிகை வைத்திருக்கிறார். இதிலிருந்து ப்ருஹ்மயக்ஞமே இந்த ப்ரச்னத்துக்கு ப்ரதான ப்ரதிபாத்ய மென்று தெரிகிறது. இந்த அநுவாகத்தில ச்ருதி, பிருஹ்மயக்ஞம் ஆஹுதியில்லாமல் யாகமாகாதானபடியால், यदृचोऽध्यगीषत ताः पयआहुतयो देवानामभवन्........यद्ब्राह्मणानीतिहासान् पुराणानि कल्पान् गाथानाराशँसीर्मेदाहुतयो देवानामभवन्' என்ற வாக்யங்களால் ஆஹுதியை ஸம்பாதித்தது இங்கே ஸாயனர் மஹாபாரதம் முதலியன இதிஹாஸங்கள் பிருஹ்மாண்டம் முதலியன புராணங்கள் என்று வ்யாக்யாநம் செய்து யத்வா என்று ஆரம்பித்து 'देवासुराः संयत्ता आसन्' முதலியன இதிஹாஸங்கள் ஸ்ருஷ்டி முதலியதைத் தெரிவிக்கும் 'आत्मा वा इदमेक एवाऽग्र आसीत्' முதலிய வசனங்கள் புராணங்கள் गायति என்று விதிக்கப்பட்ட 'योऽस्य कौष्ठ्यजगतः' என்பது முதலிய மந்த்ரங்கள் காதைகள் நராசம்ஸ என்னும் பதமுள்ள மனுஷ்ய வ்ருத்தாந்தத்தைத் தெரிவிக்கும் होता यक्षन्नराशँसं नग्नहु இம்மாதிரியானருக்குகள் நாராசம்ஸிகள் என்று இதிஹாஸம் முதலிய வற்றை வேதத்தில் அடங்கின வாக்யங்களாக வ்யாக்யானம் செய்து இவ்வாக்யங்கள் ருக்கு யஜுஸ் ஸாமம், அதர்வா, ப்ராம்மணம் இவைகளில் அடங்கியிருந்தும் பிரித்துச் சொன்னது பலாதிசயத்தை ஸூசிப்பதற்காக என்று வ்யாக்யாநம் பண்ணினார். இந்தபாஷ்யத்திற்கு பின் எழுதப்பட்டிருக்கும் ருக்வேத பாஷ்யத்தின் உபோத்காதத்திலும், வேதத்தை மந்த்ரம், ப்ராஹ்மணம் என்று இரண்டாகப்பிரித்து இவைகளைக் காட்டிலும் வேறான இதிஹாஸம், புராணம், கல்பம், காதை, நாராசம்ஸி இவைகள் ப்ருஹ்மயக்ஞ ப்ரகரணத்திலிருக்கிறதே என்று சங்கித்து அவைகள் ப்ராம்மணன் வந்தான் ஸந்யாஸி வந்தான் என்பதுபோல் பிராம்மணம் முதலியவற்றின் வாக்யங்களாயிருந்தும் இதிஹாஸம் முதலிய சொற்களால் சொல்லப்படுகிறது என்று சொல்லி ஆரண்யக பாஷ்யத்தில் यद्वा என்று ஆரம்பித்து வ்யாக்யானம் செய்ததுபோல் வ்யாக்யானம் செய்து 'अत ऊर्ध्वं यदि बलिँ हरेत्' என்றாரம்பித்து அநுஷ்டானத்தைத் தெரிவிக்கும் ஆரண்யகம் முதல் ப்ரச்ன வாக்யங்கள் கல்பம் என்று வ்யாக்யானம் செய்து வேதம், மந்த்ரம் பிராம்மணம் என்று இரு வகையே என்று ஸித்தாந்தம் செய்தார். ஆரண்யக பாஷ்யத்தின் முதல் வ்யாக்யானம் இதில் இல்லை. இதிலிருந்து முதல் வ்யாக்யானத்தின் அர்த்தத்தில் ஸாயனருக்கு நோக்கமில்லை யென்று தெரிகிறது. 'यद्ब्राह्मणानीतिहासान् पुराणानि कल्पान्' என்று ப்ரஹ்மயக்ஞாங்கமாக இதிஹாஸ ஸாக்ஷாத்காரம் சொல்லி என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த ஸாக்ஷாத்காரம் எதன் அர்த்தம் என்று ஏற்படவில்லை 'त एतं ब्रह्मयज्ञमपश्यन्' என்றிவ்வளவே யிருக்கிறதே யொழிய 'यद्ब्राह्मणानीतिहासान् पुराणानि कल्पानपश्यन्'

என்று இம்மாதிரி வசனமில்லை. இப்படியிருக்க இதிஹாஸாதி ஸாக்ஷாத்காரத்துக்கு ப்ரஹ்மயக்ஞாங்கத்வம் சொல்லுவது அத்யாச்சர்யத்தை உண்டு பண்ணுகிறது. மேலும் ‘यद्ब्राह्मणानीतिहासान् पुराणानि कल्पान्’ என்று சொல்வதால் இவைகளுக்கே ப்ரஹ்ம யக்ஞத்தில் அந்தர்ப் பாவம் ஸித்திக்குமே யன்றி சிக்ஷாத்யங்கங்களுக்கு அதில் அந்தர்ப்பாவம் ஏற்பட ப்ரமாணமோ நியாயமோ ஒன்றுமில்லை. வேதாத்யனத்தை சுக்ல பக்ஷத்திலும் அங்காத்யனத்தை க்ருஷ்ண பக்ஷத்திலும் விதித்திருப்பதைக் கொண்டு ப்ருஹ்ம யக்ஞத்திலும் அங்காத்யயனம் ஆவச்யகமென்பதும் இது விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸம்மத மென்பதும் ப்ரமாணை கசாணர்கள் ஒப்புக் கொள்ளக் கூடியதன்று. இதனாலேயே ‘यं यं क्रतुं साङ्गमधीते’ என்ற தைத்திரீயாரண்யக பாஷ்ய வாக்யத்திலும் ஸாங்கமென்கிற இடத்திலும் ஆறு அங்கங்களை விவக்ஷிக்கக் கூடாது என்பது வ்யக்தம். यं यं क्रतुभागमधीते என்று பாடாந்தரம் தைத்திரீ யாரண்ய பாஷ்ய கோசத்தில் கீழே போட்டிருப்பதையும் கவனிக்கவேணும். ‘कल्पान्’ என்று ஒரு அங்கத்தை மாத்திரம் கண்டோக்தமாய்ச் சொல்லியிருப்பதால் அது ஒன்றுக்கே ப்ருஹ்ம யக்ஞத்தில் அந்தர்ப்பாவமுண்டு. “कल्पस्त्वारुणकेतुक चयनप्रकरणे समाम्नायते” “इति मन्त्राः । कल्पोऽन ऊर्ध्वं यदि बलिं हरेत् इति’ என்கிற, ருக்வேத பாஷ்யத்தின் உபோத்காதப்படி கல்ப சப்தமும் வேதைகதேசபரமாகில் இந்த ஒரு அங்கத்துக்கும் ப்ரஹ்ம யக்ஞத்தில் ப்ரஸக்தியில்லை. ‘यत्स्वाध्यायमधीयीतैकामप्यृचं यजुस्साम वा तद्ब्रह्मयज्ञःसन्तिष्ठते’ என்றும் ஸ்ம்ருதிகளில்,

यश्च श्रुति जपः प्रोक्तो ब्रह्मयज्ञः स उच्यते ।
स्वशाखाध्ययनं यत्तत् ब्रह्मयज्ञः स उच्यते ॥

என்றும் சொல்லப்பட்ட லக்ஷணப்படி ப்ரஹ்ம யக்ஞத்தில் ப்ரஸித்தமான இதிஹாஸம் முதலியதுக்கு இடமில்லை. ப்ரஹ்ம யக்ஞமென்கிற பெயராலும் இவ்வர்த்தம் ஸித்திக்கிறது. வேதம் அதிலடங்கிய, புருஷ ஸூக்தம் காயத்ரீ இவைகள் தவிர மற்றவையை சிஷ்டர்கள் ப்ரஹ்ம யக்ஞத்தில் ஜபிப்பதில்லை. ஆந்நிகங்களிலு மிவ்விதமே நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதிஹாஸ புராணாதிகளை நாலாவதான ஸ்வாத்யாய காலத்தில் வாசிக்க வேணுமென்று ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷை முதலியவற்றில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ச்ருதியில் இதிஹாஸம் புராணம் முதலியன சொல்லியிருப்பதாக வைத்துக் கொண்டு ப்ரஹ்ம யக்ஞத்தில் அவைகளைச் சொல்லவேணுமென்று ஆச்வமேதிகம் தந்த்ரவார்த்திகம் முதலியதில் சொன்னது காம்ய ப்ரஹ்ம யக்ஞ விஷயமே. இவ்வர்த்தம் ஸ்ம்ருதி முக்தாபலத்தில் ‘காம்ய ப்ரஹ்ம யக்ஞ பலமாஹ’ என்றாரம்பித்து வேதங்களைச் சொல்லுவதற்கு பலம்

சொல்லி,

वाकोवाक्यं पुराणं च नाराशंसीश्च गाथिकाः ।
इतिहासांस्तथाविद्यां शक्त्याधीते हि योऽन्वहम् ॥
मांसक्षीरौदनमधुतर्पणं स दिवौकसाम् ।
करोति तृप्तिं कुर्याच्च पितृणां मधुसर्पिषा ॥
ते तृप्तास्तर्पयन्त्येनं सर्वकामफलैः शुभैः ।

என்கிற சுலோகங்களால் இதிஹாஸம் முதலியதைச் சொல்வதற்கு பலம் சொல்லி இவ்விஷயத்தில்,

यदृचोऽधीते....यद्ब्राह्मणानीतिहासान् पुराणानि कल्पान् गाथा नाराशंसीर्मेदसः कुल्या अस्य पितॄन् स्वधा अभिवहन्ति । यदृचोऽधीते...यद्ब्राह्मणानीतिहासान् पुराणानि कल्पान् गाथानाराशंसीर्मेदाहुतिभिरेव तद्देवांस्तर्पयति त एनं तृप्ता आयुषा तेजसा वर्चसा श्रिया यशसा ब्रह्मवर्चसेनान्नाद्येन च तर्पयन्ति ।

என்கிற ச்ருதி ப்ரமாணமாகக் காட்டப்பட்டது. ஆகையால் நித்ய ப்ரஹ்ம யக்ஞத்தில் இதிஹாஸாதிகள் சொல்லவேண்டியதில்லை. 15-வது அனுவாகத்தில் ‘स्वाध्यायोऽध्येतव्यो यं यं क्रतुमधीते तेन तेनास्येष्टं भवति’ என்பதால் ப்ருஹ்மயக்ஞாத்யயனத்தையும் க்ரஹணாத்யயனத்தையும் செய்யவேணும். இந்த அத்யயனம் செய்தவன் அக்னிஷ்டோமம் ராஜஸூயம் வாஜபேயம் அச்வமேதம் முதலிய யாகங்களுக்குள் அங்கங்களுடன் கூடின எந்தெந்த யாகத்தைத் தெரிவிக்கிற வேத பாகத்தை அத்யயனம் செய்கிறானோ அந்த யாகானுஷ்டானத்தால் ஏற்படும் பயன் இந்த அத்யயனம் செய்கிறவனுக்கு வருகிறது என்று. சொல்லி அக்னி முதலியோரின் தன்மையைச் சொல்லி இவ்வர்த்தத்தை ये अर्वाङ् என்ற மந்த்ரத்தாலும் यावतीर्वै என்ற ப்ராம்மணத்தாலும் ச்ருதி விவரணம் செய்தது. ஆகையினால் ச்ருதியில் 9-வது அனுவாகம் முதல் 14 அனுவாகம் வரையில் அத்யயனமே சொல்லியிருப்பதால் கீழ்ச்சொன்னபடி இங்கு சப்த தாத்பர்ய லிங்கமிருப்பதால் அதின் விவரணமான வாக்யங்களிலிருக்கும் वेदं विद्वांसं वेदविदि वेदविद्भ्यः என்ற பதங்கள் கேவலாத்யேதாவைத்தான் சொல்லும். 16, 17 அனுவாகங்களில் ப்ராயச்சித்தமாக ஸ்வசாகையின் அத்யயனமே சொல்லப்பட்டிருக்கிறது. ச்ருத ப்ரகாசிகாச்சார்யர் ‘यदधीतमविज्ञातं’ என்கிற ப்ரயோகத்தையும் ஸாயனர் ‘अध्येयो ज्ञेयश्च’ என்பதையும் ப்ரமாணமாகக் காட்டி அத்யயனவிதி அர்த்தக்ஞாந பர்யந்தமன்று என்று நிரூபித்திருக்கிறார்கள். अनधीयाना व्रात्या भवन्ति என்பதற்கு கேவலபாடகனுக்கு வ்ராத்யத்வமில்லை யென்பதுதான் என்றும் ‘पावमानीर्यो अध्येति’ என்கிற வாக்யத்தில் அத்யேதி பதத்திற்கு पठति என்றும் வ்யாக்யானம்

செய்திருப்பதாலும் ஸாயனர்ம்தத்தில் அதிபூர்வகமான இந்தாது அர்த்தக்ஞாந பர்யந்தமன்று என்று ஏற்படுகிறது. तद्धीतेतद्वेद என்று இம்மாதிரி ப்ரயோகமும் இவ்வர்த்தத்திற்கு ப்ரமாணமாக ஆகிறது. அத்யயனவிதி அர்த்தக்ஞாந பர்யந்தம் என்று மீமாம்ஸகர்களில் சிலர் சொல்வது ஸரியன்று. ப்ராம்மணாதிகளுக்கு எந்த கர்மாவில் அதிகாரமோ அந்தக் கர்மாவை ப்ரதிபாதிக்கும் வேதபாகத்தின் அத்யயனமே ஏற்படுமென்றும் வேதம் பூராவையும் அத்யயனம் செய்வது இல்லாமல் போய்விடுமென்றும் புருஷார்த்தானுசாஸநம் என்றும் க்ரந்தத்தில் சொல்லி இப்பக்ஷம் தூஷிக்கப்பட்டிருக்கிறது. இக்காரணத்தினாலும் முன் அநுவாகத்திலிருக்கும் வேதவித் முதலிய சப்தம் கேவலாத்யேதாவைக் குறிக்கின்றதென்பது ப்ரதிஷ்டாபிதமாயிற்று. அர்த்த க்ஞானமில்லாத அத்யயனத்துக்கும் ஐஹிகம் ஆமுஷ்மிகம் என்கிற இவ்விரண்டு பலங்கள் உண்டு என்ற விஷயம் 9 முதல் 17 வரையிலுள்ள கீழ்க்கண்ட அநுவாகங்களிலும் ये ब्राह्मणास्त्रिसुपर्णं पठन्ति । ते सोमं प्राप्नुवन्ति । आसहस्रात्पङ्क्तिं पुनन्ति । என்றிம்மாதிரி வாக்யங்களிலும் जपादिना स्वरूपेणापि तत्साधनत्वाच्च । என்ற ஸ்ரீ பாஷ்ய ஸ்ரீ ஸூக்திகளிலும் ஸ்பஷ்டம். ச்ருதி ஸ்வாரஸ்யம் இப்படியிருக்க அர்த்தக்ஞனும் ये अर्वाङ् என்பது முதலிய வாக்யத்திற்கு விஷயமென்று ஸாயனர் எழுதினது அர்த்தக்ஞனிடமும் வேதாத்யயனம் இருக்கிறது என்கிற காரணத்தை முன்னிட்டே. ஆகவே அதிபூர்வகமான இந்தாது அர்த்த க்ஞான பர்யந்தம் அன்று என்று கீழ்ச்சொல்லியபடி अध्येतुर्वाचि என்பதில் अध्येतुः என்னும் பதத்திற்கு அக்ஷரராசியை க்ரஹித்தவனுடைய என்றே அர்த்தமானதால் கேவலாத்யேதா வேதவித் என்னும் பதத்துக்கு அர்த்தமன்று என்பது ஸரியன்று. இவ்வர்த்தம் 'सर्वैनेदविदश्शूराः' இத்யாதிகளில் ஸ்பஷ்டம். இதிலிருந்து கேவலாத்யயநத்தைச் செய்தவர்களையும் நமஸ்கரிக்கவேண்டுமென்றும் அவர்களை தூஷிப்பது சர்வ தேவதைகளையும் தூஷிப்பதாகும் என்றும் ஏற்பட்டுவிட்டது.

4. ருக்வேத பாஷ்ய உபோத்காதத்தில் ஸாயனர் 'ब्राह्मणेन निष्कारणो धर्मष्षडङ्गो वेदोऽध्येयो ज्ञेयश्च' என்று அர்த்த க்ஞான விதியைச் சொல்லி ஞானப்ரசம்ஸை அக்ஞான நிந்தை இவைகளைச் செய்கிற 'स्थाणुरयं', यदधीतम्' என்று இரண்டு வசனங்களை உதாகரித்து अनधीयानाव्रात्या भवन्ति' என்கிற வசனப்படி அத்யயனம் செய்து அர்த்தம் அறியாதவனுக்கு வ்ராத்யத்வம் இல்லை என்பது தான் கர்மானுஷ்டானமோ ஸ்வர்க்கம் முதலிய பலங்களின் சித்தியோ கிடையாது என்று எழுதியிருக்கிறார். அர்த்த க்ஞானமில்லாமல் கர்மானுஷ்டானம் செய்தால் பல சித்தி இல்லை என்று சொல்வது அந்யபரம் என்று வேத வைபவத்தில்

எழுதப்பட்டிருக்கிறது. இதை தூஷித்து அவித்வானுக்குக் கர்மானுஷ்டானத்தில் அதிகாரமில்லையென்றும் அனுஷ்டித்தால் பல ஸித்தி யில்லையென்றும் பாஷ்யகாரர் முதலியோர் ஆசயம் என்று எழுதப்பட்டிருக்கிறது. இது ருக்வேத பாஷ்ய உபோத்காதத்தின் மேல் வாக்யங்களுக்கும் யஜுர்வேதம் முதல் காண்ட பாஷ்யத்தின் உபோத்காதத்துக்கும் விருத்தம். ருக்வேத பாஷ்ய உபோத்காதத்தில் அர்த்த க்ஞானமவச்யமென்று சொல்லிவரும்போது யாகானுஷ்டானத்திற்கும் அந்த யாக க்ஞானத்திற்கும் பலம் ஸமமாக ச்ருதியில் சொல்லப்பட்டிருப்பதைச் சொல்லி க்ஞானத்தாலும் பலம் வருவதால் அனுஷ்டானம் வ்யர்த்தமாகுமே யென்று சங்கித்து யாக க்ஞானத்தைக் காட்டிலும் யாகானுஷ்டானத்துக்கு பலம் அதிகமென்று ஜைமினி ஸூத்ரத்தைக் கொண்டு நிரூபித்து 'तेनोभौ कुरुतो यश्चैतदेवं वेद यश्च न वेद नाना तु विद्या चाविद्या च यदेव विद्यया करोति श्रद्धयोपनिषदा तदेव वीर्यवत्तरं भवति' என்கிற சாந்தோக்ய ச்ருதியில் அர்த்தக்ஞான மில்லாத அனுஷ்டானத்தைக் காட்டிலும் அர்த்த க்ஞானத்தோடு கூடிய அனுஷ்டானத்தில் பலாதிசயம் சொல்லப்பட்டிருக்கின்றதென்று சொல்லி இந்த ச்ருதி வாக்யத்தால் உத்கீதோபாஸநத்துடன் கர்மாவை யனுஷ்டித்தால் அதிக பலம், அதில்லாமல் அனுஷ்டித்தால் அக்கர்மாவுக்கேற்பட்ட பலம், என்று ஸித்திக்கின்றதே யொழிய அர்த்த க்ஞானத்துடன் கர்மாவை அனுஷ்டித்தால் அதிக பலம் க்ஞானமில்லாமலனுஷ்டித்தால் அதற்கேற்பட்ட பலம் என்று ஸித்திக்கவில்லையே என்று ஆக்ஷேபித்துக் கொண்டு இந்த ந்யாயம் எல்லா வித்யைகளுக்கும் பொதுவானது என்று எழுதி அர்த்த க்ஞானமில்லாத கர்மானுஷ்டானம் ஸபலமானால் அர்த்தக்ஞானவிதி வ்யர்த்தமாகுமே யென்று நினைத்து அர்த்த க்ஞானத்தால் அபூர்வம் உண்டாகிறதென்று எழுதியிருக்கிறார். யஜுர்வேத பாஷ்ய உபோத்காதத்திலும், 'ब्राह्मणेन निष्कारणो धर्मः' என்பதினால் வேதாத்யயனவிதியையும் அர்த்தக்ஞான விதியையும் நிரூபித்து யாக விதிகளாலேயே வேதார்த்த க்ஞானம் ஆக்ஷேபிக்கப்படுகிறபடியால் அர்த்தக்ஞானம் விதேயம் அன்று என்று சங்கித்து அர்த்தக்ஞாந விதி சக்தியால் அர்த்த க்ஞான மாத்திரத்தால் ஸ்வதந்த்ரமான அபூர்வ ரூபமான பலமிருக்கட்டும் என்று ஸமாதானம் செய்து

'यत्तु कर्मानुष्ठानकालीन वेदनं तत्कर्मफल एवातिशयं जनयति । उभौ कुरुतो यश्चैतदेवं वेद यश्च न वेदेति विद्वदविद्वत्प्रयोगौ प्रकृत्य—यदेव विद्यया करोति तदेववीर्यवत्तरं भवतीत्याम्नानात् अङ्गोपास्तिविषयमेतद्वाक्यमिति चेन्न न्यायस्य समानत्वात्'

என்பதால் அனுஷ்டான காலத்திலிருக்கும் அர்த்தக்ஞானம் கர்ம பலத்தில் அதிசயத்தை யுண்டுபண்ணுகிறதென்றும் ந்யாயம் ஸமமானதால்

'तेनोभौ कुरुत:' என்ற வாக்யம் அங்கோபாஸநா விஷயமென்று சொல்லுவது ஸரியல்லவென்றும் எழுதியிருக்கிறார். ஆகவே ஸாயணருடைய மதத்தில் அனுஷ்டான காலத்தில் அர்த்தக்ஞானம் நியதமில்லையென்று ஏற்படுவதால் அர்த்த க்ஞானமில்லாவிடில் கர்மானுஷ்டானமோ ஸ்வர்க்காதிபல ஸித்தியோ கிடையாது, என்று அவர் எழுதியிருப்பது விருத்தமாகும். வைதிக வித்வான்களில் ஒருவருக்கும் அர்த்தக்ஞானமில்லாமல் கர்மானுஷ்டானம் செய்வது விபலமென்று அபிப்ராயம் கிடையாது. ப்ரபல பண்டிதரும் வெகு க்ரந்தங்கள் செய்தவருமான ஸாயனருடைய க்ரந்தங்களின் பரஸ்பர விரோதத்தை தாத்பர்ய வர்ணனத்தால் பரிஹரிக்கவேணும். 'न त्वनुष्ठानं स्वर्गादि फलसिद्धिर्वा अस्ति' என்பதில் அனுஷ்டான பதத்துக்கு அர்த்தக்ஞான பூர்வகமான அனுஷ்டானத்திலும் பல ஸித்தி என்ற இடத்திலிருக்கும் பல பதத்திற்கு பலாதிசயத்திலும் லக்ஷணையை ஆச்ரயித்து அர்த்த க்ஞான பூர்வகமான அனுஷ்டானமோ ஸ்வர்க்காதி பலாதிசயத்தின் ஸித்தியோ கிடையாது. ஸ்வர்க்காதி பலஸித்தி மாத்திரமே என்று தாத்பர்யம் சொல்லவேண்டும். ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் "பதவாக்யாதி வ்ருத்தாந்த மறியாத பாலன் ஒருக்கால் 'பவதி பிக்ஷாம் தேஹி' என்றால் ஆட்யரான ஸத்துக்கள் அகத்திலே அப்போதே யபேக்ஷித ஸித்தி யுண்டாமாப்போலே கொள்ளக் குறைவிலன் வேண்டித்தெல்லாம் தரும் என்னும்படியிருக்கிற பரிபூர்ண பரமோதார விஷயத்தில் இவ்வுக்திக்கு பலாவிநாபாவமுண்டு" என்றிருக்கிறது. இதன் வ்யாக்யானத்தில் பாலன் அனுஷ்டிக்கிற வைதிக தர்மங்களில் 'मन्त्रेषु पदवाक्यादिविशेषपरिज्ञानाभावेऽपि फलाविनाभावம் காண்கையால் வைதிக தர்மங்கள் எல்லாவற்றிலும் मन्त्रादिषु सम्यग्ज्ञानापेक्षा நியமமில்லையென்று கருத்து என்று இருக்கிறது. ஹவ்யகவ்ய கர்மாக்களில்

"मन्त्रहीनं क्रियाहीनं भक्तिहीनं हुताशन ।
यद्धुतन्तु मया देव परिपूर्णं तदस्तु ते ॥ என்றும்

"मन्त्रहीनं क्रियाहीनं भक्तिहीनं द्विजोत्तमा: ।
श्राद्धं संपूर्णतां यातु प्रसादाद् भवतां मम ॥" என்றும்

"मन्त्रतन्त्रदेवताविपर्यास स्वराक्षरभ्रेषप्रायश्चित्तार्थं सर्वप्रायश्चित्ताहुतीर्होष्यामि' என்றும் "मन्त्रलोपे द्रव्यलोपे क्रियालोपे नियमलोपे सत्यपि सर्वं यथाशास्त्रानुष्ठितं भूयात्" என்றும் சொல்லுகிறோம். மந்த்ரார்த்த க்ஞானமில்லாத அனுஷ்டானம் ஸபலமாகவேணுமென்று ப்ரார்த்தனையோ மந்த்ரார்த்த க்ஞானலோப ப்ராயச்சித்தானுஷ்டானமோ செய்வதில்லை. குதூஹல வ்ருத்திக்காரர் மந்த்ரலிங்காதிகரணத்தில் கர்மானுஷ்டான காலத்தில் அர்த்தஸ்மரணம் இருந்தால் மந்த்ரோச்சாரணத்துக்கும் ஹோமத்துக்கும்

ஸ்மரணத்தால் வ்யவதானம் ஏற்படுகிறதென்றும் அது பல ப்ரமாணங்களுக்கு விருத்தமென்றும் ருஷிசந்தஸ் தேவதை முதலியவற்றின் க்ஞானம் கர்த்தாவுக்கிருக்கவேண்டிய தவசியமில்லை யென்றும் ரித்விக்குக் கிருந்தால் போருமென்றும் விரிவாக எழுதியிருக்கின்றார். ஸ்ம்ருதி முக்தாபலத்தில் மந்த்ரங்களில் ரிஷி முதலியவற்றின் க்ஞானம் யாகம் செய்விப்பதற்கங்கமாக சந்தோக ப்ராம்மணத்தில்

"यो ह वा अविदितार्षेयच्छन्दोदैवतब्राह्मणेन मन्त्रेण याजयति वा अध्यापयति वा स्थाणुं वर्च्छति गर्तं वापद्यते प्रवामीयते पापीयान् भवति यातयामान्यस्य छन्दांसि भवन्ति"

என்று சொல்லப்படுகின்றது என்றெழுதி இவ் வசனம் அறிவில்லாத யாகம் செய்விப்பவனுக்கு தோஷத்தைச் சொல்லுகிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ரிக்வேத பாஷ்யோபோத்காதத்திலும் இவ்விதமே பாடம் இருக்கிறது. பாவ ப்ரகாசிகையில் கீழ்ச் சொன்ன ச்ருதிக்கு பாவ வர்ணநம் செய்யும்போது याजयति वाध्यापयति वा என்றே ப்ரஸித்த ச்ருதியின் பாடமென்று ஸாதிக்கப்பட்டிருக்கிறது. यजति என்ற பாடம் இம் மூன்றிலும் கிடையாது. கூர்ம புராணத்தில் வேதாத்யயனத்துக்கு நித்யத்வம் சொல்லி பிறகு அர்த்தக்ஞானத்திற்கு நித்யத்வம் சொல்லியிருந்தாலும் ஸாயன ஸித்தாந்தப்படி அபூர்வம் பலமாகக் கொள்ள வேண்டும். அர்த்தக் ஞானமில்லாவிடில் அனுஷ்டானம் விபலமென்று தாத்பர்யம் கொள்ளக்கூடாது. மஹா பாஷ்ய ப்ரதீபங்களில் அர்த்த க்ஞானமில்லாவிடில் கர்மானுஷ்டானம் விபலமென்று சொல்லவில்லை. ஆகையால் ஸாயந ஸித்தாந்தத்துக்கு விரோதமில்லை. உத்யோதத்தில் வேதாத்யயனம் அர்த்த க்ஞானம் இரண்டும் சேர்ந்தே தர்மம் என்றும் அர்த்த க்ஞானத்துடன் கர்மானுஷ்டானம் வேதாத்யயனம் இவைகள் செய்தால் ஸ்வர்க்கம் பலமென்றும் அதில்லாமல் செய்தால் நரகம் என்றும் வ்யாஸ ஸ்மிருதியைக் கொண்டு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இது அர்த்த க்ஞானமில்லாத வேதாத்யயனம் ப்ரம்ஹ யஞ்ஞஜபம் வேத பாராயணம் முதலியவற்றிற்கு நான்குவித புருஷார்த்தங்களை பலமாகச் சொல்லும் சுருதி வாக்யங்களுக்கு விருத்தம். ஆகையால் வ்யாஸ ஸ்மிருதிக்கு அர்த்த ஞானமில்லாமல் போனால் அபூர்வமுண்டாவதில்லை என்றே தாத்பர்யம். இவ்விடத்தில் நாகேசரின் அபிப்ராயம் 'यागीयहिंसाया नहिंस्यादिति वचनेन दुष्टताबोधनाद् दुष्टत्वमेवेत्यन्यत्र विस्तर:' என்று யாகீயஹிம்ஸை துஷ்டையென்று மேலே எழுதியிருப்பது போல் எடுத்துக்கொள்ள கூடியதன்று. கர்மானுஷ்டான காலத்தில் அர்த்த க்ஞான நியமமில்லாமல் போனாலும் பூர்வகாலத்தில் வேதார்த்த க்ஞா

னத்தை ஸம்பாதிக்காதவன் கர்மானுஷ்டானம் செய்தால் பலஸித்தி இல்லை என்று ஸாயனருடைய பாவம் என்று சொல்லலாம். இது ஸரியில்லை. அர்த்தஜ்ஞானம் கர்மானுஷ்டானார்த்தம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அக்கர்மானுஷ்டானத்திற்கோ அர்த்தஜ்ஞான நியமமில்லையென்று ப்ரமாணங்களாலும் ஸாயனருடைய உக்தியாலும் நிரூபிக்கப்பட்டது. வேதாத்யயனத்திற்குச் சொல்லியிருக்கும் பலன்கள் கணக்கில்லை. அத்யயனம் நித்யமென்று பலப்ரமாணங்களால் ஏற்படுகின்றது. ஸாயனர் ஸித்தாந்தப்படி அர்த்தஜ்ஞான மில்லாவிடில் அபூர்வம் ஏற்படாதே யென்று கேழ்க்கலாம். அதனாலென்ன. இவனுடைய கர்மானுஷ்டானம் விபலமாக ஆகாது. பலத்தில் தாரதம்யம் அவர் ஸித்தாந்தப்படி யிருக்கட்டும். அர்த்தஜ்ஞான முள்ளவனுக்கு அந்த பலாதிசயம் ஏற்படட்டும். ஸித்தாந்தத்தில் கர்மானுஷ்டானத்துக்கு வெளிப்பட்டும் அர்த்தஜ்ஞானம் நித்யமன்று. கேவலாத்யயனத்திற்கு யாகானுஷ்டானத்தால் வரும் பலனைச் சொல்லும் **यं यं क्रतुमधीते तेन तेनास्येष्टं भवति** என்னும் வாக்யத்திற்கு வ்யாக்யானம் செய்யும்போது **यद्यध्येता अर्थमपि जानाति तत्राध्ययनकाले तदनुसन्धानान्मानसोऽपि निष्पद्यते** என்ற வாக்யத்தை ப்ரயோகித்திருக்கின்றார். இப்ப்ரச்னத்தில் ஸாயனரபிப்ராயப்படி இதிஹாஸம் புராணம், ஆறு அங்கங்கள் மன்வாதி தர்ம சாஸ்த்ரம் கர்மப்ரஹ்ம விசாரம் இவைகளுக்கு ப்ரஸக்தி இல்லையென்றும் அத்யயனமும் அதன் பலமுமே முக்கியமாகச் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், அர்த்தஜ்ஞானமும் அத்யயனமும் சேர்ந்தே தர்மமென்று சொல்வது வைதிக க்ரந்தங்களுக்கு விருத்தமென்றும், அனுஷ்டான காலத்தில் அர்த்த ஜ்ஞானத்திற்கு நியமமில்லை யென்றும், வேதாத்யயனத்துக்கு கணக்கில்லாத பலன்கள் உண்டென்றும் அத்யயனம் நித்யமென்றும் நிரூபித்திருக்கிறபடியால், இவ்வாக்யத்தில் யதிசப்தம் ‘**उच्चैर्गतिर्जगति सिध्यति धर्मतश्चेत्**’ ‘**धर्मात्मा सत्यसन्धश्च रामो दाशरथिर्यदि**’ என்கிற இடங்களில்போல் ப்ரயோகிக்கப்பட்டதென்றும் அதனால் அர்த்தஜ்ஞான நியமம் ஏற்பட்டுவிட்டதென்றும் விமர்சத்தில் எழுதினது ஸரியா? ச்ருதிக்கும் வ்யாக்யானத்திற்கும் அனுகுணமாயிருக்கின்றதா வென்பதை வித்வான்கள் கவனிக்கவேணும். யதிமுதலிய பதத்திற்கு ஸந்தேகத்தில் ப்ரயோகம் ஸ்வாரஸிகம். அதனால்தான் **शास्त्राणि चेत्प्रमाणं स्युः** என்ற இம்மாதிரி இடங்களில் வ்யாக்யாதாக்கள் **असन्दिग्धे सन्दिग्धवत्प्रयोगः** என்று ஸந்திக்ததில் **चेत्** முதலிய சப்தங்களின் ப்ரயோகத்தை த்ருஷ்டாந்தமாகக் காண்பித்திருக்கின்றார்கள். ஆகையால்

‘**तेन मैत्री भवतु ते यदि जीवितुमिच्छसि**’
‘**अपि चेत्सुदुराचारो भजते मामनन्यभाक्**’

இம்மாதிரி இடங்களில்போல் நிர்வகிப்பதே ஸ்வாரஸிகம். இல்லாவிடில் பல ப்ரமாணங்கள் விரோதிக்கும். காரீரீ முதலிய யாகங்களை அனுஷ்டித்தால் அதன் பலனை யடைகிறான் என்று சொன்னால் காரீர்யாதிகள் நித்யங்களென்று ஏற்பட்டுவிடாது. அதுபோலவே இங்கும் அத்யயனத்திற்கும் அர்த்த ஜ்ஞானத்திற்கும் விட்டுப் பிரியாமை ஏற்படாது. ஆக இவ்வளவால் கேவலாத்யயனமே ஸ்வாத்யாய ப்ராஹ்மணத்திற்கு முக்கிய விஷயமென்றும் கேவலாத்யேதாக்களே **यावतीर्वै देवताः** என்ற வாக்யத்திலிருக்கும் **वेदवित्** முதலிய பதங்களுக்கு அர்த்தமென்றும் அவர்களிடத்தில் எல்லா தேவதைகளும் வஸிப்பதால் தினந்தோறும் நமஸ்கரிக்க வேணுமென்றும் அவர்களை தூஷிப்பது எல்லா தேவதைகளையும் தூஷிப்பதாகுமென்றும் நிரூபிதமாயிற்று.

5. நம்மாழ்வார் திருவிருத்தம் (64)

இருக்கார்மொழியால் நெறியிழுக்காமை யுலகளந்த
திருத்தாளிணை நிலத்தேவர் வணங்குவர் யாமுமவா
யொருக்காவினையோடு மெம்மொடும் நொந்து கனியின்மையில்
கருக்காய் கடிப்பவர்போற்றிரு நாமச்சொல் கற்றனமே.

இதன் தாத்பர்யத்தை வேதவைபவத்தில் எழுதும்போது **वेदाक्षराणि** என்று கீழ்ச்சொன்ன ப்ரமாணத்தில் பகவன்னாமாவை யுபமானமாக வைத்து அதுபோல் வேதாக்ஷரங்கள் பலனைக் கொடுக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு ஆழ்வார் வேதமொழியைக் கனிஸ்தானத்திலும் பகவன்னாமாவைக் கருக்காய ஸ்தானத்திலும் வைத்து ஹரிநாமம் வேதாக்ஷரத்தைக் காட்டிலும் மிகவும் அஸாரமென்று அபிப்ராயப்படுகிறார் என்று எழுதப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் தூஷணம் மாதிரி ஏதேதோ எழுதி வ்யாக்யான விருத்தமென்றும் பகவன் நாமாவின் ப்ரபாவத்தை வெளிப்படுத்தும் ஆழ்வார்கள் ஸ்ரீஸூக்திகளுக்கு விருத்தமென்றும் எழுதப்பட்டிருக்கிறது. இதுஸரியன்று. இந்தப் பாட்டின் அர்த்தம் கொஞ்சம் வ்யுத்பத்தியுள்ளவர்களுக்கும் தெரியக் கூடியதாயிருப்பதால் இதன் தாத்பர்யமே எழுதப்படுகிறது. திருமாலாகிய திருமகளைச் சேரப்பெறாது பிரிந்து நிற்கிற நிலையில் அவனது திருநாமங்களை இடைவிடாது சொல்லிக்கொண்டு அதனால் ஒருவாறு தரித்திருக்கிற தலைவி தோழியை நோக்கிப் புண்யாத்மாக்களான ப்ராஹ்மணோத்தமர் வேதமந்த்ரங்களால் எப்பொழுதும் எம்பெருமானைத் தவறாமல் அடைந்து அனுபவிப்பர். யானோ அப்படிப்பட்ட நல்வினையில்லாமையால் எனது ஆசையை அடக்கமாட்டாமல் எனது தீவி

னையை நொந்துகொண்டு கனி கிடையாமற் காய்கடித்து உயிர் வாழ்பவர் போல் அவனது பூர்ணாநுபவம் பெறாமையால் நாமோச்சாரணம் செய்து உயிர்தரிக்கிறேன் என்று கூறினாள் என்று தாத்பர்யம் எழுதி இருக்கு. ஆர்மொழி-புருஷஸூக்தம் முதலியன என்று சப்தார்த்தம் எழுதி மிக முதிர்ந்து நுகர்வார்க்கு மிகவும் இனியதாயக்கனி புண்யாத்மாக்களான ப்ராம்மணோத்தமர் வேதமந்த்ரங்களால் எப்பொழுதும் எம்பெருமானைத் தவறாமல் அடைந்து அநுபவிப்பதால் ஏற்படும் இனிய ஆனந்தத்துக்கும் கட்டிளமைத்தாய் நுகரும் செவியதல்லாத காய் அவ்வளவினியதல்லாத நாமோச்சாரண மாத்திரத்துக்கும் உவமை. கருக்காய்க் கடிப்பவர்போல் என்ற உபமானத்தால் இதில் அதிருப்தி விளங்குமென்று வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ வைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபையில் வெளியிட்ட புஸ்தகத்தில் ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானத்திலும் அதன் வ்யாக்யானங்களிலும் இருக்கார் மொழி என்பதற்கு புருஷ ஸூக்தம் நாராயணாநுவாகம் முதலிய பகவானுக்கஸாதாரணமான வேதபாகங்கள் என்று அர்த்தம் எழுதி அதிகாரமில்லாமையால் பகவத் ஸமாராதனோபயோகியான வேத மந்த்ரம் அதனுடைய அர்த்தக்ஞானம் முதலிய உபகரணமில்லாத நான் கேவலம் பக்திபரவசனாய்க் கொண்டு அவனுடைய அர்த்தாநுஸந்தானமில்லாத திருநாமத்தைச் சொல்ல அதனை வ்யாஜமாகக் கொண்டு நம்மைக் கடாக்ஷித்தான் என்று தாத்பர்யம் என்று எழுதியிருக்கிறார்கள். இருக்கார் மொழியில் தனக்கனதிகாரத்தை நம்மாழ்வாரநுஸந்திப்பதாக வ்யாக்யாதாக்கள் எழுதுவதால் மூலமந்த்ரம் இருக்கார் மொழி பதத்துக்கு அர்த்தமானால் ஸ்வரம் ப்ரணவம் முதலியதில்லாத அம்மந்த்ரத்தில் அதிகாரமிருப்பதால் வ்யாக்யானங்கள் விரோதிக்கும். ஸ்வரம் முதலியதுள்ள மூலமந்த்ரம் அர்த்தமானால் வேதமாகிறது. அதற்கு நாமோச்சாரணத்தையபேக்ஷித்து உத்கர்ஷம் உசிதமே. ஆகவே பழத்தைக் காட்டிலும் பிஞ்சு எப்படி அஸாரமோ அப்படிப்போல் வேதாக்ஷரத்தை ஸாதனமாகக் கொண்ட பகவதநுபவத்தைக் காட்டிலும் பகவன் நாமோச்சாரணம் அஸாரமென்றேற்படுகிற படியால் பகவதநுபவ ஸாதனமான வேதாக்ஷரம் நாமோச்சாரணத்தைக் காட்டிலும் ஸாரபூதம் என்பது ஸித்தமே. இப்பாசுரத்துக்கு வ்யாக்யாதாக்கள் பல வ்யங்க்யார்த்தங்களை எழுதியிருந்தாலும் இதன் சப்தார்த்தத்திலும் இவ் வ்யங்க்யார்த்தத்திலும் யாருக்கும் விவாதமில்லை. இதனால் பகவந்நாமாவின் ப்ரபாவம் குறைந்து விடாது. சிறந்த வஸ்துவுக்குமாபேக்ஷிகமான அபகர்ஷம் சொல்லுவதுண்டு. முமுக்ஷுவை யபேக்ஷித்து ஸ்வர்க்காதி ஸாதநமான புண்யத்துக்கும் ஸ்ரீ [illegible] யபேக்ஷித்து ஸ்வர்க்காதிகளுக்கும் அபகர்ஷம் ப்ராமாணிக

இளங்குழந்தை முதல் கிழவரிறுக

சரீரம் திடமாகவும் புஷ்டியாகவும் இருக்க விரும்பினுல்

ஆயுஷ்ய ரஸாயனம்

ஒன்றே அவர்களுக்கு இன்றியமையாதது.

சுவையில் தேனினும் இனிது.

வைத்தியரத்தினம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,

ஆயுர்வேத பூஷணம் ஆயுர் வேதாசார்ய அவர்களால்
தயார்செய்யப்பட்டது.

சாஸ்த்திர தத்துவப்படி ஒவ்வொரு தாதுவின் போஷணைக்கும் இன்றியமையாத பொறுக்கி யெடுத்த சரக்குகளான அச்வகந்தி, பார்ங்கி, முஸலீகந்தம், அயக்காந்த பஸ்மம், சிலாஜது, பஞ்சமூலங்கள் முதலியவற்றின் ஸத்துவங்களைக்கொண்டு தயார் செய்யப்பட்டது.

நூற்றுக்கணக்கான வைத்தியர்களால் புகழ்பெற்றது. தவறாமல் குணம் செய்வது. இருபது வருஷங்களுக்கு மேலாக ஆயிரக்கணக்கான ரோகிகளுக்குக் கொடுத்து எவ்வித பலஹீனத்தையும் சொஸ்தம் செய்யக் கூடியதென்று விசேஷ அநுபவத்தின்பேரில் இவ்விதம் விளம்பரம் செய்யப்படுகிறது. ஆயுஷ்ய ரஸாயனம் இரத்த விருத்தி செய்யும். ஆகவே ஜ்வரம் முதலிய பல வியாதிகளாலுண்டாகும் இரத்தக்குறைவு, சர்ம வியாதிகள், கீல்வாயு, இளைப்பு முதலியவை இதனுல் தீரும். மூளையையும், நரம்புகளையும், தசைகளையும் பலப்படுத்தும். இருதயத்துக்கு வன்மையுண்டாக்கும். ஸகல தாதுக்களையும் புஷ்டியுள்ளதாகச் செய்யும். க்ஷயரோகத்தில் மிக்க உபயோகமானது. இளைத்துப்போயுள்ள குழந்தைகளுக்கு உண்மையில் இது அமுதம் போன்றது. சுமார் 48 வேளைக்குப் போதுமான புட்டிக்கு ரூ. 3-4-0.

வேறு ஔஷதங்களுக்கு ஜாபிதா தேவையானுல் அனுப்பப்படும்.
வியாபாரிகளுக்கும் வைத்தியர்களுக்கும் விசேஷ கமிஷன்.

சார்ங்கதர ஸம்ஹிதையிற் கூறியுள்ள பெரும்பான்மையான ஔஷதங்களும் ஆர்யன் பார்மஸியில் கிடைக்கும்.

ஆர்யன் பார்மஸி,
11, ஆதியப்ப முதலித் தெரு,
வேப்பேரி, மதராஸ்.

Registered No. M. 3778.

சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனுயிருப்பது

வைர நகையே.

சிமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्रैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥

"ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள் குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர்கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகுப் பிரசஸ்தமானது. அவ்வாறு உயர்குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்."



உத்தம குணம் பொருந்திய வைரங்களை அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்றாகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸூராஜ்மல் கம்பெனியாரே.



SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE. MADRAS.

Printed by S. Krishna at Kabeer Printing Works, 195, High Road, Triplicane, and Published by V. Ananthachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.

749

SRI VEDANTA DIPIKA

VOL. 27] MAY 1938 [PART 5

ஸ்ரீ வேதாந்த தீபிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
AUG 1938

வைகாசி மீ

பத்ராதிபர்கள் :

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

வி. அனந்தாசாரியர்

உப-பத்ராதிபர்கள் :

வேதாந்த சிரோமணி T. வேணுகோபாலாசாரியர்

ஏ. ஸ்ரீநிவாஸராகவன் M.A., [மகாராஜா காலேஜ், புதுக்கோட்டை.]

CONDUCTED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,

VANI VILAS 4—5, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS.

अमृतांजनम्

அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முது மொழி கூறுகிறது.

"अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् ।"
"अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः ।"

தலைவலி, ஜலதோஷம்,
சுளுக்கு முதலான சகல
நோய்களையும் தீர்க்கவல்ல
ப்ரஸித்தமான லேபனம்—

அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

1.	ஸ்ரீ ராமாநுஜ தயா பாத்ர மஹோத்ஸவம்	127
2.	ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தப் ப்ரசார ஸபை	130
3.	वरदराजाष्टोत्तरशतनामश्लोकाः	1
4.	𑌶𑍍𑌰𑍀𑌵𑌰𑌦𑌰𑌾𑌜𑌾𑌷𑍍𑌟𑍋𑌤𑍍𑌤𑌰𑌶𑌤𑌨𑌾𑌮𑌾𑌵𑌲𑌿𑌃	4
5.	தேவப் பெருமாளும் ஸ்ரீராமாநுஜ தர்சனமும் [ஸ்ரீ. உ. வே. தோட்டாலம் வேணுகோபாலாசார்யர்]	8
6.	ச்லோக பஞ்சகம் [ஸ்ரீ. உ. வே. தொட்டையாசார்ய விரசிதம்]	12
7.	பறவையேறு பரம்புருடன் [ஸ்ரீ. உ. வே. தி. ராமஸ்வாமி, மைலாப்பூர்]	16
8.	ஸ்ரீ தேவாதிராஜ நாமமுக்தாகலாபம்	20
9.	ஸ்ரீ தேவாதி ராஜனுடைய உத்ஸவமும் ஸ்ரீ தேசிகனுடைய அநுபவமும் [ஸ்ரீ. உ. வே. வி. அனந்தாசார்யர்]	22
10.	अभीतिस्तवः [ஸ்ரீ. உ. வே. எ. வி. கோபாலாசார்யர், M. A., B. L., அட்வகேட், திருச்சி.]	25—32
11.	ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தி	81—88
12.	வேதாந்த ஸாரம்	57—64
13.	வேத வைபவ பரிசிஷ்டம் [ஸ்ரீ. உ. வே. வி. ஆர். எஸ். நாதாசார்யர், திருவாதி]	17—28

श्रीः

श्रियै नमः

त्रिभुवनकमनं तमालवर्णं रविकरगौरवरांबरं दधाने ।
वपुरलककुलावृताननाब्जे विजयसखे रतिरस्तु मेऽनवद्या ॥

ஸ்ரீ வேதாந்த தீபிகை

ஸம். 27.	பகுதான்ய ஞு வைகாசி மீ	ஸஞ். 5

ஸ்ரீ ராமாநுஜ தயா பாத்திர மஹோத்ஸவம்

ஸ்ரீ பகவத் ராமாநுஜ தர்சனத்தைச் சார்ந்த ஆஸ்திகர்கள் எல்லோருக்கும் ஸப்ரணம விஞ்ஜாபனம்.

இப்பவும் நாளது பகுதான்ய வருஷம் ஆவணி மாதம் 12-ம் தேதி, ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய 28-8-38 தேதி நம்மவர்களுக்கு அஸாதாரணமாய் ஏற்பட்டிருக்கும் "ராமாநுஜ தயா பாத்ரம்" என்கிறமந்திரம் ஜனித்து 10 ஷஷ்ட்யப்த பூர்த்தி, அதாவது 600 வருடங்கள், அல்லது 6 நூற்றாண்டுகள் ஆகின்றன. அந்த விபவத்தைக் கொண்டாட வேண்டுவதற்காக ஒரு மஹோத்ஸவம் ஸ்ரீ தேசிகன் ஜன்ம பூமியான பெருமாள் கோயில் தூப்புலடிவாரத்தில் வெகு விமர்சையாயும் விபவமாயும் நடத்த வேண்டுமென்று அநேக ச்ரத்தாவான்களுடைய அபிப்பிராயத்தை ஒட்டி பகுதான்ய வருஷம் வைகாசி மாதம் 6வ ஸ்ரீ தேவாதி ராஜனுடைய ரதோத்ஸவ தினம் தூப்புல் க்ஷேத்திரத்தில் ஜடாப்ரும்மசாரி என்கிற புலிக்குன்னம் ஆராவமுதாசாரியரால் கட்டி நவீனமாய் ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிற ஸ்ரீ பரகால மட ஸ்ரீ ஹயக்ரீவ ஸன்னிதி மண்டபத்தில் கூடின ஸபையில் தீர்மானிக்கப்பட்டது. அச்சமயம் மேற்படி மஹோத்ஸவத்தை நடத்துவதற்கும் வேண்டிய ஏற்பாடுகளை செய்வதற்கும், அடியில் கண்டிருக்கும் உபஸபை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த சபையில் இன்னும் சேர்க்கக் கூடியவர்களை சேர்த்துக் கொள்ளவும் அதி

காரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அம் மஹோத்ஸவத்தில் மேல் குறித்த தினத்திற்கு 10 நாள் முன்னதாக திவ்ய ப்ரபந்த தேசிக ப்ரபந்த ஸேவா காலங்கள் ஆரம்பிக்கப்பட்டு அன்றைய தினம் சாத்துமுறை நடத்துவதாகவும் யோசிக்கப்பட்டிருக்கிறது. தத் காலம் மேற்படி மஹோத்ஸவத்தின் வைகரிகளும் விவரங்களும் பூர்ணமாய் நிர்ணயிக்கப்படாமல் இருப்பினும் மேற்படி மஹோத்ஸவம் நடப்பதென்பதையும் அதுவிஷயமாய் நம்முடைய ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் ச்ரத்தை எடுத்துக் கொண்டு யாவச்சக்யம் உபகரித்தும் நேரில் அன்வயித்தும், தத்வியாஜமாக நம்முடைய ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்த விஷயத்தில் ஒரு ஐகமத்தியமும், ச்ரத்தையும் உத்ஸாகமும் உண்டாகி விருத்தியடையவேண்டியதற்கு அவச்யமான பிரயத்னங்கள் செய்தும், செய்வித்தும், மேற்படி மஹோத்ஸவத்தை எல்லாவிதத்திலும் பரிமளிக்கச் செய்து ஸபலமாக்கும்படி ப்ரார்த்திக்கிறோம். அவ்விஷயத்தில் ஒவ்வொருவர்க்கும், அம் மஹோத்ஸவ ஸம்பந்தமாய் நடக்கவேண்டிய அம்சங்களில் ஏதாவது யோசனைகள் உண்டாகுமாயின் அவைகளையும் தெரிவிக்கவேண்டும் என்று ப்ரார்த்திக்கிறோம். மேற்படி மஹோத்ஸவ ஸபையின் நிர்வாக ஸபையை சேர்ந்து உபகரிக்க ஒத்துக் கொள்கிறவர்கள் ரூபாய் ஐந்துக்குக் குறையாமல் உபகரிக்கவேண்டும் என்றும், மற்றவர்கள் ரூபாய் ஒன்றுக்குக் குறையாமல் ஸமர்ப்பிக்கவேணும் என்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மற்ற விவரங்கள் பிறகு பதே பதே பத்ரிகைகள் மூலமாயும் விளம்பர மூலமாயும் விக்ஞாபிக்கப்படும். குறித்த காலத்துக்கு அவகாசம் அதிகம் இல்லையாகையால் ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் இருக்கும் நம்முடைய ஸித்தாந்தத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் மஹோத்ஸவம் வெகு விபவமாய் நடந்தேறுவதற்காக இயன்றவரை ச்ரமம் எடுத்துக் கொண்டு திரவ்யம் சேகரித்தும் ஆங்காங்கு உத்ஸாகத்தை உண்டாக்கி விருத்தி செய்தும் உபகரிக்கவேண்டுவது ஸ்வரூப லக்ஷணமாக மிகவும் பொருந்தும். மணியார்டர் மூலமாவது, தபால் மூலமாவது பணம் அனுப்புகிறவர்கள் அதற்குறிய சிலவை கழித்துக்கொண்டு கையொப்பமிட்டிருக்கிற காரியதர்சிகளுக்காவது, பொக்கிஷதாருக்காவது அனுப்பலாம் அல்லது பெரிய காஞ்சீபுரம் இண்டோ கம்மர்ஷியல் பாங்கிக்கு ராமாநுஜ தயா பாத்ரோத்ஸவக் கணக்கு என்று குறித்து அனுப்பலாம். இவை எல்லாமின்றி ஒவ்வொருவரும் தங்களுக்குத் தெரிந்தவரையில் அவ்வோ கிராமங்களிலும், நகரங்களிலும் எழுந்தருளி இருக்கும் நம்முடைய ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்த அனைவருடையவும், பண்டித, வைதிக, லௌகிகர்கள் யாவருடையவும் பெயர்களையும் மேல் விலாஸத்தையும் குறித்தனுப்புவதும் அவச்யமான கைங்கரியம் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.

श्रीः

वरदराजाष्टोत्तरशतनामश्लोकाः

ततो नत्वा देवमुनिं भृगुः पप्रच्छ सादरम् ।
श्रोतुमिच्छामि भगवन्नाम्नामष्टोत्तरं शतम् ॥ १ ॥

नारद उवाच—

पुरा पितामहेनोक्तं परमानुग्रहान्मयि ।
शतं वरदराजस्य नाम्नामष्टोत्तरं शृणु ॥ २ ॥

श्रीमद्वरदराजेन्द्रः श्रीवत्सांकश्शुभप्रदः ।
तुंडीरमण्डलोल्लासी तापत्रयनिवारकः ॥ ३ ॥

सत्यव्रत क्षेत्रवासी सत्यस्सज्जनपोषकः ।
सर्गस्थित्युपसंहारकारी सुगुण वारिधिः ॥ ४ ॥

हरिर्हस्तिगिरीशानो हृत प्रणतदुष्कृतः ।
तत्वरूपस्त्वष्टृकृतकांचीपुरवराश्रितः ॥ ५ ॥

ब्रह्मारब्धाश्वमेधाख्यमहामख सुपूजितः ।
वेदवेद्यो वेगवती वेगभीतात्मभूस्तुतः ॥ ६ ॥

विश्वसेतुर्वेगवतीसेतुर्विश्वाधिकोनघः ।
यथोक्तकारिनामाढ्योयज्ञभुग्यज्ञरक्षकः ॥ ७ ॥

ब्रह्मकुंडोत्पन्नदिव्यपुण्यकोटिविमानगः ।
वाणीपत्यर्पितहयवपासुरभिलाधरः ॥ ८ ॥

वरदाभयहस्ताब्जोवनमालाविराजितः ।
शंखचक्रलसत्पाणिश्शरणागतरक्षकः ॥ ९ ॥

नारायणोर्नीरजाक्षो नित्यसूरि समर्चितः ॥
नताज्ञान तमोहन्ता नित्योनरकनाशनः ॥ १० ॥

उदारधीरुत्सवैषी जित्वरो जगदीश्वरः ।
सूर्यप्रभांगदोद्भासी सदाराध्यस्सनातनः ॥ ११ ॥

सार्थीकृतस्रष्टृयज्ञस्सच्चिदानन्दविग्रहः ।
दिव्यपीताम्बरधरोदीप्यन्मकरकुण्डलः ॥ १२ ॥

देवेन्द्रादिस्तुति प्रीतोदहराकाशमध्यगः ।
अग्निमध्यलसन्मूर्तिरानन्दकरदर्शनः ॥ १३ ॥

अजप्रार्थितहस्तीन्द्रशैलवासस्सुधाप्रदः ।
ज्ञानिप्रियोज्ञानगम्योज्ञानदीप प्रकाशकः ॥ १४ ॥

प्रणवार्थः प्रसन्नेन्दु मुखः पतितपावनः ।
प्रतिचित्रापौर्णमासि परमेष्ठि कृतार्चनः ॥ १५ ॥

कलिध्वंसी कृतयुगकमलासन पूजितः ।
काननीभूतकाञ्चीस्थः करुणावरुणालयः ॥ १६ ॥

पुण्यक्षेत्राटनासक्तपीलु त्रेतायुगार्चितः ।
पुण्यश्लोकः परब्रह्म पुष्पवन्त विलोचनः ॥ १७ ॥

गम्भीरनाभिर्गोविन्दो गेयकीर्तिर्गदा धरः ।
दन्ति नित्यार्पितचतुर्दशसाहस्रपंकजः ॥ १८ ॥

दीनत्राता देवदेवोदनुजारिरधोक्षजः ।
चक्रदारितनक्रास्योग्राहग्रस्तगजार्तिहृत् ॥ १९ ॥

हस्तीन्द्रो पातकमलहर्षितो मुक्तिदायकः ।
सुधीज्ञेयस्सुराचार्यसुकृतद्वापरार्चनः ॥ २० ॥

सिद्धसेव्यपदस्सिद्धसंकल्पस्सुन्दराकृतिः ।
पुत्रेच्छावदयोध्येशकुशध्वजसुसेवितः ॥ २१ ॥

निजार्चामहिमोत्पन्न विश्वजित्कृतपत्तनः ।
अनन्तकृतकल्यर्चाप्रीतो नन्तावतारकृत् ॥ २२ ॥

एकाम्रेशप्रियसखो मुचुकुन्दादिसेवितः ।
लक्ष्म्याश्लिष्टभुजामध्यो लक्ष्मणार्योपदेशकृत् ॥ २३ ॥

रामाद्यष्टादशक्षेत्रराजितात्मनिवासभूः ।
रम्यतेजा राजसेव्योराजत्कांची विभूषणः ॥ २४ ॥

वृषार्कपूर्णिमाक्लृप्तगरुडोत्सवतोषितः ।
श्वेतातपत्रव्यजनश्री विराजद्दिगन्तरः ॥ २५ ॥

अनेकमण्टपास्थानकृतनित्योत्सवोऽव्ययः ।
महान्कल्याणकोटिस्थमहादेवीमनः प्रियः ॥ २६ ॥

भगवान्भूरिकल्याणदायको भक्तवत्सलः ।
इदं वरदराजस्य नाम्नामष्टोत्तरं शतम् ॥ २७ ॥

शुभं पवित्रं पापघ्नं पुरुषार्थप्रदायकं ।
पठतां शृण्वतां भक्त्या सर्वसिद्धिर्भवेद्ध्रुवं ॥ २८ ॥

इति ब्रह्माण्डपुराणे भृगुनारदसंवादे हस्तिगिरिमाहात्म्ये श्रीवरदराजाष्टोत्तरशतनाम श्लोकास्संपूर्णाः ॥

ஸ்ரீவரதராஜாஷ்டோத்தர ஶதநாமாவளி: ॥

ஓம் ஸ்ரீவரதராஜேந்த்ராய நம: ।
" ஸ்ரீவத்ஸாங்காய நம: ।
" ஶுபப்ரதாய நம: ।
" துண்டீரமண்டலோல்லாஸிநே நம: ।
" தாபத்ரய நிவாரகாய நம: ।
" ஸத்யவ்ரத க்ஷேத்ரவாஸிநே நம: ।
" ஸத்யாய நம: ।
" ஸஜ்ஜநபோஷகாய நம: ।
" ஸர்கஸ்தித்யுபஸம்ஹாரகாரிணே நம: ।
" ஸுகுணவாரிதயே நம: ॥
" ஹரயே நம: ।
" ஹஸ்திகிரீஶாய நம: ।
" ஹ்ருதப்ரணத துஷ்க்ருதாய நம: ।
" தக்ஷரூபாய நம: ।
" க்ஷுத்ரக்ருதகணேஷ்டி பூர்வாராதிதாய நம: ।
" ப்ரஹ்மாரப்தாஶ்வமேத மஹாவேதி ஸமுத்பூதாய நம: ।
" வேதவேத்யாய நம: ।
" வேகவதீ வேகபீதாக்நிஸம்ஸ்துதாய நம: ।
" விஶ்வஸேதவே நம: ।
" வேகவதீ ஸேதவே நம: ।
" விஶ்வாதிகாய நம: ।
" கநவாய நம: ।
" பயோதகாரி நாஸாத்யாய நம: ।
" யஜ்ஞபுஜே நம: ।
" யஜ்ஞரக்ஷகாய நம: ।
" ப்ரஹ்மகாமோத்தீர்ணதிவ்ய புண்யகோடி விமாநகாய நம: ।
" வாணீவக்த்ரவிநிர்கத மங்கள பாஸுரவிஶேஷாய நம: ।
" வரதாய ஹஸ்திராஜாய நம: ।
" வநமாலாவிராஜிதாய நம: ।
" ஶங்கசக்ரலஸத்பாணயே நம: ॥
" ஶரணாகதரக்ஷகாய நம: ।
" நாராயணாய நம: ।
" நீரஜாக்ஷாய நம: ।
" நித்யஸூரிஸம்ஸேவிதாய நம: ।
" அஜ்ஞாநதமோஹர்த்ரே நம: ।
" நித்யாய நம: ।
" நரகநாஶநாய நம: ।
" உதாரதியே நம: ।
" உத்தமவேஷிணே நம: ।
" ஜிதாராய நம: ॥
" ஜகதீஶ்வராய நம: ।
" ஸத்யஸ்ப்ருஹாஜ்ஞாதோஷாஸிநே நம: ।
" ஸதாராத்யாய நம: ।
" ஸநாதநாய நம: ।
" ஸார்த்தீக்ருத ஸ்ரஷ்ட்ரு யஜ்ஞாய நம: ।
" ஸச்சிதாநந்த விக்ரஹாய நம: ।
" திவ்யபீதாம்பரதராய நம: ।
" தீவ்யத்கரகாஞ்சநாய நம: ।
" தேவேந்த்ராதிஸுவந்திதாய நம: ।
" தஹராகாஶரம்யாய நம: ।
" க்ஷுத்ரஹ்ருத்ஸம்ஸ்துதயே நம: ।
" ஆநந்தகரதஶம்ஸிதாய நம: ।
" கஜேந்த்ரரக்ஷிதகஹஸ்திப்ரதேஶவாஸாய நம: ।
" ஸாத்யாப்ரதாய நம: ।
" ஜ்ஞாநிப்ரியாய நம: ।
" ஜ்ஞாநகம்யாய நம: ।
" ஜ்ஞாநதீப ப்ரகாஶகாய நம: ।

" ப்ரணவார்த்தாய நம: ।
" [illegible] நம: ।
" பதிதபாவநாய நம: ॥ 60

" ப்ரதிசித்ராபௌர்ணமாஸீ பாரமேஷ்டிக்ருதார்ச்சநாய நம: ।
" [illegible] நம: ।
" க்ருதயுக கமலாஸந பூஜிதாய நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம:
" புண்யஶ்லோகாய நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ॥ 70

" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" தேவதேவாய நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।

" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।

" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: । 90

" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।100

" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" [illegible] நம: ।
" ஸர்வகல்யாணதாயகாய நம: ।
" [illegible] நம: ॥ 108

இதி ஶ்ரீவரதராஜாஷ்டோத்தர ஶதநாமாவளிஸ்ஸம்பூர்ணா ॥

ஸ்ரீ:

தேவப் பெருமாளும் ஸ்ரீராமாநுஜ தர்சனமும்

[ஸ்ரீ. உப. வேதாந்த சிரோமணி தோட்டாலம் வேணுகோபாலாசார்யர்]

ஸ்ரீராமாநுஜ தர்சன மென்கிற நம்முடைய வேதாந்த தர்சனத்துக்கு ஸர்வேச்வரன் பரவ்யூஹவிபவாதி தசைகளில் ஸாக்ஷாத்தாயும் பரம்பரையாயும் பலவிதமான உபகாரங்களைச் செய்து இதை ப்ரவர்த்திப்பித்திருந்த போதிலும் இக்கலியுகத்தில் அர்ச்சாவதாரங்களில் ஸ்ரீதேவப் பெருமாள் இந்த ராமாநுஜ தர்சநத்திற்கு செய்தருளிய உபகாரத்தின் பெருமை ஸர்வோத்க்ருஷ்டமானது. “ஆசார்ய ரூபமாக எம்பெருமான் தானே அவதரிக்கிறு”னென்றும் “அப்படி அவதரித்த ஆசார்யர்களை நல்வழி நடத்தி அவர்களைக்கொண்டு சாஸ்த்ரார்த்தங்களை ப்ரவர்தனம் செய்வித்து தம் மனோரதத்தை ஸபலமாக்கிக் கொள்கிறு”னென்றும் சாஸ்த்ரம் கூறுகிற கணக்கிலே பரமதநிரஸந பூர்வகமாக ஸ்வமதத்தை ஸ்தாபித்து அதனால் தர்சனாசார்யனென்று பேறு பெற்று விளங்கிய நம்முடைய எம்பெருமானாரின் அவதாரம் முதல் அவருடைய ஸகல ச்ரேயஸ்ஸுக்கும் ப்ரதான காரணம் நம் தேவப்பெருமாள் என்பது ஸர்வலோக விதிதம். இவருடைய அவதாரஸ்தலம் ஸத்யவ்ரத க்ஷேத்ராந்தர்கதமான ஸ்ரீ பெரும்பூதூர். பின் வித்யாப்யாஸம் பெருமாள் கோவிலிலேயே.

ஒரு ஸமயம் தேவப் பெருமாளும் பெருந்தேவித் தாயாரும் யாதவப்ரகாசரின் சிஷ்யகோஷ்டியின் மூலம் நமது எம்பெருமானாருக்கு நேரக்கூடிய மஹத்தான ஆபத்தை நிவர்திப்பித்து மஹாரண்யத்தில் ஒரு வில்லியும் வில்லிச்சியுமாக வந்து வெகுதூரம் வழிநடத்தியபின் காஞ்சிபுரத்துக்கு ஸமீபத்தில் வந்தவாறே அவ்வில்லிச்சி ச்ரமத்தால் தாஹ சாந்திக்குத் தண்ணீரை யபேக்ஷிக்க வில்லியும் ஒரு கிணற்றைக் காட்ட உடனே எம்பெருமானார் நமக்கு பரமோபகாரிகளான இவர்களுக்குத் தண்ணீர் கொடுக்கவேணு மென்று பார்த்து அவ்வாறே எடுத்துக்கொடுக்க அவர்களும் அதை யருந்தி ‘அதோ புண்ய கோடிவிமானம் காணு’ மென்று சொல்லி மறைந்தார்கள். எம்பெருமானாரும் இவ்வாச்சர்யத்தைக் கண்டு திவ்ய தம்பதிகளின் பேரருளுக்கு வியந்து உள்ள முருகி பின் வெகுநாள் வரையில் அந்த சாலைக்கிணற்றிலிருந்து தீர்த்தம் கொண்டுவந்து ஸமர்பித்துக் கொண்டிருந்த வ்ருத்தாந்தத்தில் நம் ஸ்ரீதேசிகன் ஈடுபட்டு “கரிஶைலக்ருஷ்ணமேவம் காங்க்ஷிதவர்ஷிணம் பஹுவிதைஶ் ஶோபைஃ”

என்றும் “வீக்ஷா விஶாலம் வபுஃ காலே நஃ கரிஶைலக்ருஷ்ணஜலதஃ காமக்ஷாயிகம் வர்ஷிஷ்யதி” என்றும் ஸாதித்திருப்பதை இன்றைக்கும் ரஸிகர்கள் அநுபவித்து வருகிறார்கள். அப்படியே தேவப்பெருமாள் சாலைக் கிணற்று உத்ஸவம் கண்டருளுவதும் அக்கிணற்றிலிருந்து ப்ரதி தினமும் தீர்த்தம் கொண்டுவந்து உபயோகிப்பதையும் இன்றைக்கும் யாவரும் காணலாம்.

முன் ஒரு ஸமயம் ஸ்ரீ ஆளவந்தார் இந்த எம்பெருமானாருடைய விசேஷ ப்ரபாவத்தைச் செவியுற்று இனி இவர்தான் நம் தர்சநத்துக்கு ப்ரவர்த்தகராக வேண்டுமென்று திருவுள்ளம் பற்றி இவரை முற்றிலும் காத்தருளி இவர் தர்சந ப்ரவர்த்தகராக ஆகும்படி செய்தருள வேண்டுமென்று ப்ரபத்திபண்ணி ப்ரார்த்தித்ததும் இந்த தேவப் பெருமாள் திருவடிகளிலேயே யாகும்.

பின் நம்முடைய எம்பெருமானார் யாதவப்ரகாசருடைய கோஷ்டியில் வித்யாப்யாஸம் செய்கையில் அவர் சொல்லும் உபநிஷதர்த்தங்கள் இவர் மனதில் ஸ்வரஸமாகப் படாமல் அவர் வேதத்துக்கு அபார்த்தம் சொல்லுகிறாரென்றும் ஸத்ஸம்ப்ரதாயாகதமான அர்த்தம் வேறு இருக்கவேணுமென்றும் அந்த ஸமீசீந மார்கத்தை எங்காகிலும் ச்ரமப்பட்டு கண்டறியவேணுமென்றும் திருவுள்ளமாய் அவரிடமிருந்து, விலகி தேவபெருமாளுக்குத் தீர்த்த கைங்கர்யம் செய்துக் கொண்டிருக்க திருக்கச்சி நம்பிகள் என்றொரு பக்தர் பெருமாளுக்கு நிரந்தரமாகத் திருவாலவட்ட கைங்கர்யம் செய்து வரும் ரீதியையும் அவருடைய திவ்ய தேஜோ விசேஷம் முதலிய நற்குணங்களையும் கண்டு அவருடன் சில காலம் நெருங்கி வர்திக்க அவர் ஸ்ரீ ஆளவந்தார் திருவடிகளில் ப்ரதிபன்னர் என்பதையும் தேவப் பெருமாளுடன் நேரில் வார்த்தையாடும்படி அவ்வளவு அத்யந்தம் அந்தரங்கதையைப் பெற்றவர் என்னும்படி யிருக்கும் அவருடைய நிஷ்டா விசேஷத்தையும் திருவுள்ளம் பற்றி இவர் மூலம் தமக்கிருந்த சில ஸந்தேகங்களைப் பெருமாளிடம் விண்ணப்பம் செய்து பெருமாள் திருவுள்ளத்தையறியவேணுமென்று பார்த்து ஆறு விஷயங்களை விஜ்ஞாபிக்க, திருக்கச்சி நம்பிகளும் ஒரு ஸமயம் பெருமாளிடம் ஏகாந்தத்தில் இவைகளை விஜ்ஞாபிக்க தேவப் பெருமாளும் உகந்து ஸமாதாநமளித்த க்ரமத்தை ஆறு வார்த்தையென்று அவ்வார்த்தைகளை எல்லோரும் விசேஷமாக பகுமாநித்துவருவதுடன் இவ் வார்த்தைகள் நம் ஸம்ப்ரதாயத்துக்கு ப்ரதானமானபடியால் அம்முகத்தால் ஸ்ரீ தேவப் பெருமாள் தானே இந்த தர்சநத்திற்கு ப்ரதான ப்ரவர்த்தகன் என்றும் கொண்டாடி வருகிறார்கள். அவ்வார்த்தைகளாவன—“நாமே பரதத்வம், பேதமே தர்சநம், ப்ரபத்

தியே உபாயம், அந்திம ஸ்ம்ருதி அவச்யமில்லை. சரீராவஸாநத்தில் மோக்ஷம். பெரிய நம்பி திருவடிகளில் ஆச்ரயிப்பது" என்று.

பின் பெரிய நம்பி திருவடிகளிலாச்ரயிப்பதற்காக எம்பெருமானார் கோயிலுக்கு ப்ரயாணமாகப் புறப்பட்டு எழுந்தருள பெரிய நம்பிகளும் இவர் யாதவப்ரகாசரிடமிருந்து விலகிவிட்ட ஸங்கதியைக் கேட்டு இனி இவருக்கு நாம் ஸம்ப்ரதாயோபதேசம் செய்ய வடுக்கும் என்று ஸ்ரீ ஆளவந்தார் திருவுள்ளத்தையொட்டி தீர்மானித்துக் கொண்டு இவரைத்தேடி கோயிலிலிருந்து எழுந்தருள, வழியில் (ஸத்ய வ்ரத க்ஷேத்ராந்தர்கதமான) ஸ்ரீமதுராந்தகத்தில் இருவருக்கும் ஸமாகமம் ஏற்பட்டு அவர் திருவடிகளில் எம்பெருமானார் ஆச்ரயித்து பின் தேவப்பெருமாள் ஸந்நிதியிலேயே ஸகல உபநிஷதர்த்தங்களையும் பெரிய நம்பிகளிடமிருந்து க்ரஹித்து ஸ்ரீ பாஷ்யம் முதலிய க்ரந்தங்களையும் அருளிச் செய்து ஆளவந்தாரின் மனோரதத்தைத் தலைக்கட்டியதும் ஸ்ரீ தேவப் பெருமாளின் அநுக்ரஹத்தாலேயே யாகும்.

இப்படி நம் தர்சநத்துக்கு ப்ரதான ப்ரவர்த்தகராக விளங்கிய எம்பெருமானாரை முதலில் அவதரிப்பித்ததும் ஆபத்து வந்தபோது காத்தருளியதும், அபார்த்தங்கள் மனதில் நிலைக்க வொட்டாமல் ஸம்ரக்ஷணம் செய்ததும் ஸமயம் வாய்ந்தபோது ஸதாசார்ய கடாக்ஷம் பெரும்படி செய்ததும் அப்படி க்ரஹீதமான அர்த்த விசேஷங்கள் பின் காலத்தியவர்களுக்கு உபயோகப்படுமாறு மதாந்தர நிரஸநக்ஷமங்களான க்ரந்தாத்நங்களைச் செய்வித்தருளியதும் ஸ்ரீ தேவப்பெருமாளுக்கு நம் ராமாநுஜ தர்சநத்திலிருக்கும் பரிவைப் பரக்க ப்ரகாசிப்பிக்கின்றனவாகும். இப்படி தேவப் பெருமாளின் தாயபாகமாக அவதரித்து விளங்கிய எம்பெருமானாரை பின்னிட்டு பெரிய பெருமாள் தேவப் பெருமாளின் ஸம்மதியின் பேரில் புத்ர ஸ்வீகாரமாகப் பெற்றுக்கொண்டது என்பது ஸாம்பரதாயிக ஸம்மதம்.

இப்படி எம்பெருமானாரை வளர்த்து அவர் மூலம் தர்சந ப்ரவர்த்தநம் செய்வித்தது மாத்ரமில்லாமல் நம் தர்சநத்துக்கு ப்ரதான ப்ரவர்த்தகரான எம்பார், கூரத்தாழ்வான், கிடாம்பியாச்சான், நடாதூராழ்வான், நடாதூரம்மாள், ச்ருதப்ரகாசிகாசார்யர், கிடாம்பியப் புள்ளார், ஸ்ரீ வேதாந்த தேசிகன் நயினாராசார்யர், கடிகா சதகம் அம்மாள், ஸ்ரீ ஆதிவண் சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் முதலான ஆசார்ய ரத்நங்களையவதரிப்பித்ததும் அவர்களை நல்வழியில் நடப்பித்து ஸம்ரக்ஷித்ததும், அவர்கள் முகமாக ஸத்ஸம்ப்ரதாய ஸ்தாபநம் செய்ததும் ஸ்ரீ தேவப்

பெருமாளின் அநுக்ரஹ பரம்பரையின் கார்யமே யாகும் என்பது அவரவர்களின் அவதாரம் முதலிய வ்ருத்தாந்தங்களை யாராய்ந்தால் நன்கு புலனாகும். ப்ராயிகமாக கோயிலில் ப்ரவசநம் செய்துவந்த ஆசார்யர்களெல்லோரும் ஸ்ரீ தேவப்பெருமாளின் அநுக்ரஹ பாத்ரமாக அவதரித்து ப்ரதிஷ்டித ஜ்ஞானர்களான பின்பே பெரிய பெருமாள் ஸந்நிதியில் வாஸத்தை ஸங்கல்பித்துக் கொண்டவர்களாகிறார்கள். ஸ்ரீ தேசிகன் விஷயத்திலும் பின்புள்ளாரின் அநுஸந்தாநம்

" [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥"

என்றே உள்ளது. தென் தேசத்திலேயே வளர்ந்து தென்னாட்டிலேயே சிரகாலம் வஸித்துவந்த ஸ்ரீ மணவாளமாமுனிகளும் பகவத்விஷயம் என்று மிக ப்ரஸித்தமான ஈடு முப்பத்தாறாயிரப்படியை காஞ்சிபுரத்திலேயே யாகும் முதன் முதல் ப்ரவசநம் செய்யத்தொடங்கியது.

இப்படி பேராருளாளன் என்று அந்வர்த்த நாமம் பொருந்திய தேவப் பெருமாளுடைய இந்த வைகாசி மீ நடக்கின்ற உத்ஸவத்தை ஸேவிக்குமவர்கள் அதை கேவலம் ஒரு உத்ஸவமென்றோ அல்லது பெருமாள் உத்ஸவமென்றோ மாத்ரம் நினையாமல் பெருமாள் ஸாதித்த ஆறு வார்த்தைப் படியில் நம்முடைய தர்சநத்தின் ஸௌக்ஷ்மமான அர்த்த விசேஷங்களை எடுத்துக் காட்டக்கூடிய தர்சனோத்ஸவமெனக் கருதுவாராகில் பேராருளாளனின் மனோரதமும் பலித்து தாங்களும் க்ருதார்த்தர்களாகி விண்ணுளாரிலும் சீரியவர்களாக விளங்கும்படி யிருக்கும்.

ஸ்ரீ

ச்லோக பஞ்சகம்

[ஸ்ரீ தொட்டையாசார்ய விரசிதம்]

இந்த நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளில் மிகுந்த பக்தியுள்ளவரும், ஸ்ரீ சத தூஷணிக்கு சண்டமாருதம் என்ற வ்யாக்யானமிட்டவரும் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் விஷயமாய் வைபவ ப்ரகாசிகை அருளிச் செய்தவருமான தொட்டையாசாரிய ஸ்வாமி, தேவாதிராஜன் கருடோத்ஸவத்தில் மிகவும் ஈடுபட்டு அந்த அநுபவத்தை ஐந்து சுலோகங்களில் அருளிச் செய்திருக்கிறார். அவை கீழே இப்போது அச்சிடப்பட்டிருக்கின்றன.

சோளஸிம்ஹபுரம் என்கிற சோளங்கிபுரத்தில் எழுந்தருளி இருந்த ஸ்ரீ தொட்டையாசார்ய ஸ்வாமி ஒவ்வொரு ஸம்வத்ஸரமும் தவறாது ஸ்ரீ தேவாதிராஜன் பிரம்ஹோத்ஸவத்திற்கு மங்களாசாஸனம் செய்ய எழுந்தருளுவது வழக்கமாம். ஒரு ஸம்வத்ஸரம் சில காரண விசேஷங்களைக் கொண்டு எழுந்தருள முடியாமல் போனபோது மிகவும் க்லேசத்தை அடைந்து, மூன்றாவது மஹோத்ஸவதினம் காலையில் சோளஸிம்ஹபுரம் தக்கான் குளக்கரையில் இருந்தபடியே ஸ்ரீ தேவப் பெருமாள் மிகுந்த வைபவத்தோடு, அனைத்துலகும் தொழ மேற்கு கோபுரவாயிலில் ஸேவை ஸாதிக்கும் வைபவத்தை மனதால் த்யானித்து நின்றனராம். அப்போது வேண்டுவார் வேண்டுவனவெல்லாம் உகந்தளிக்கும் வள்ளலாகிய ஸ்ரீ வரதன் அங்கேயே அவருக்கு ஸேவை ஸாதித்தனராம். இந்த ஐதிஹ்யத்தை அநுஸரித்து இன்றைக்கும் ஸ்ரீ தேவாதிராஜன் கோபுரவாசலில் சற்று நேரம் நின்று ஸேவை ஸாதிப்பது வழக்கம். அந்த ஸேவைக்கு தொட்டையாசாரியர் ஸேவை என்று பெரியோர் பெயர் கூறுவதுண்டு. தக்கான் குளக்கரையில் ஒரு ஸன்னிதியில் கருடாரூடரான எம்பெருமானும் அவர் முன் ஸ்ரீ தொட்டையாசாரிய ஸ்வாமியும் அர்ச்சாரூபமாய் எழுந்தருளி இருப்பதும், இந்த ஐதிஹ்யத்தை வெளியிடுகிறது.

முதல் ச்லோகத்தில் புறப்பாட்டின் விமர்சையும், இரண்டாவது ச்லோகத்தில் திருமேனி சோபையும், மூன்றாவதில் ஸௌலப்யமும், நான்காவதில் எம்பெருமான் திருவடியே பாதத்வம், பரமஹிதம், பரமபுருஷார்த்தம் என்று பெரிய திருவடி காட்டுவதும், கடைசி ச்லோகத்தில் பக்தர்கள் அனைவரும் அவ்வெம்பெருமானை அநுபவிப்பதும் வெகு அழகாய் புகழப்பட்டன.

ச்லோகம் 1

प्रत्यूषे वरदः प्रसन्नवदनः प्राप्ताभिमुख्यान् जनान्
आबद्धाञ्जलिमस्तकान् अविरलान् आबालमानन्दयन् ।
मन्दोद्दामरचामरो मणिमयश्वेतातपत्रश्शनैः
अन्तर्गोपुरमाविरास भगवान् आरूढ पक्षीश्वरः ॥

ப்ரத்யூஷே வரதஃ ப்ரஸன்ன வதனஃ
ப்ராப்தாபி முக்யான் ஜனான்.
ஆபத்தாஞ்ஜலி மஸ்தகான் அவிரலான்
ஆபாலமானந்தயன் ।
மந்தோத்தாமர சாமரோ மணிமய
ச்வேதாதபத்ரச் சநைஃ
அந்தர் கோபுரமாவிரா ஸ பகவான்
ஆரூட பக்ஷீச்வரஃ ॥

விடியற்காலையில் சிரஸ்ஸில் அஞ்ஜலி பந்தத்தோடு ஸேவார்த்தமாக கூட்டமாய் எதிர் வந்து நிற்கும் சிறுவர் முதல் ஸகல ஜனங்களுக்கும் ஆனந்தத்தைக் கொடுத்துக் கொண்டு, பகவானாகிய ஸ்ரீவரதராஜன் ப்ரஸன்னமான திருமுக மண்டலத்தோடும், மெல்ல வீசப்பட்ட கம்பீரமான சாமரங்களோடும், மணிகளால் அலங்கரிக்கப்பட்ட வெண் குடைகளோடும், அடர்ப்புள்ளரசனாகிய கருடன் மேல் மெல்ல மெல்ல கோபுரத்தின் கீழ் எழுந்தருளித் தோன்றினர்.

ச்லோகம் 2

मुक्तातपत्रयुगलोभयचामरान्तर्विद्योतमान विनतातनयाधिरूढं ।
भक्ताभयप्रदकरांबुजमम्बुजाक्षं नित्यं नमामि वरदं रमणीय वेषं ॥

முக்தாத பத்ரயுகலோபய சாமராந்தர்வித்யோதமான
விநதாதனயாதிரூடம் ।
பக்தாபய ப்ரத கராம்புஜ மம்புஜாக்ஷம்
நித்யம் நமாமி வரதம் ரமணீய வேஷம் ॥

முத்துகளால் அலங்கரிக்கப்பட்ட இரண்டு குடைகளுக்கும் இரண்டு சாமரங்களுக்கும் மத்தியில் ப்ரகாசித்துக் கொண்டிருக்கிற கருடன் பேரில் ஆரோஹணித்து பக்தர்களுக்கு அபயத்தை அளிக்கும் திருக்கையோடும்,

ரமணீயமான அலங்காரத்தோடும் கூடி இருக்கிற ஸர்வாபீஷ்டங்களை கொடுக்கிற தாமரைக் கண்ணனை ஸர்வ காலமும் நமஸ்கரிக்கின்றேன்.

ச்லோகம் 3

यद्वेदमौलिगणवेद्यमवेद्यमन्यैः यद्ब्रह्मरुद्र सुरनायकमौलिवन्द्यं ।
तत्पद्मनाभ पदपद्मयुगं मनुष्यैः सेव्यं भवद्भिरिति दर्शयतीव ताक्ष्र्यः ॥

யத்வேத மௌளி கணவேத்யமவேத்யமன்யைஃ
யத்ப்ரம்ஹருத்ர ஸுரநாயகமௌளி வந்த்யம் ।
தத்பத்மநாப பதபத்மயுகம் மனுஷ்யைஃ ஸேவ்யம்
பவத் பிரிதி தர்சயதீவ தார்க்ஷ்யஃ ॥

கருடனுடைய திருக்கைகளை ஸேவிக்கிறார். எந்த பகவானுடைய திருவடித் தாமரைகள் உபநிஷத்துக்களால் மட்டும் அறியக் கூடியவையோ, மற்றவைகளால் அறியக் கூடாதனவோ, எவற்றை ப்ரம்ஹா, ருத்ரன், இந்த்ரன், இவர் தலையால் வணங்குகின்றனரோ, அந்த கழலிணைகள் மனுஷ்யர்களான உங்களுக்கும் ஸேவிக்க கிடைத்திருக்கின்றன என்று ஸ்ரீ கருடன் நேரில் காண்பிப்பதுபோல் தோன்றுகிறது.

ச்லோகம் 4

केचित्तत्वविशोधने पशुपतौ पारम्यमाहुः परे-
व्याजह्रुः कमलासने नयविदोप्यन्ये हरौ सादरम् ।
इत्येवं चलचेतसां तनुभृतां पादारविन्दं हरेः
तत्सन्दर्शयतीव संप्रति नृणां ताक्ष्र्यः श्रुतीनां निधिः ॥

கேசித்தத்வ விசோதனே பசுபதௌ பாரம்யமாஹுஃ
பரே வ்யாஜஹ்ருஃ கமலாஸனே
நய விதோப்யன்யே ஹரௌ ஸாதரம் ।
இத்யேவம் சலசேதஸாம் தனுப்ருதாம்
பாதாரவிந்தம் ஹரேஃ தத்
ஸந்தர்ச யதீவ ஸம்ப்ரதி
ந்ருணாம் தார்க்ஷ்யஃ ச்ருதீனாம் நிதிஃ ॥

எது பரதத்வம் என்று விசாரிக்கும்போது, சிலர் ருத்ரனே பரதத்வம் என்று எண்ணினார்கள். மற்றும் சிலர் சாஸ்திரங்களை அறிந்திருந்தும், நான்முகனையும் இந்திரனையும் பரதத்வமாக நிச்சயித்தார்கள். இம்மாதிரி மன

தில் கலக்கங்கொண்ட ஜனங்களுக்கு இப்போது வேத ஸ்வரூபியாயும் ஸர்வஜ்ஞனுமான கருடன் ஸ்ரீ தேவாதி ராஜனுடைய திருவடித் தாமரைகளே பரம ப்ராப்யம் என்று தெளிவாகக் காண்பித்துக் கொடுக்கிறார்போலும்.

ச்லோகம் 5

प्रत्यग्गोपुरसंमुखे दिनमुखे पक्षीन्द्रसंवाहितं
नृत्यच्चामरकोरकं निरुपमच्छत्रद्वयीभासुरं ।
सानन्दं द्विजमण्डलं विदधतं सन्नाहचिह्नारवैः
कान्तं पुण्यकृतो भजन्ति वरदं काञ्च्यां तृतीयोत्सवे ॥

ப்ரத்யக்கோபுரஸம்முகே தினமுகே
பக்ஷீந்த்ர ஸம்வாஹிதம்
ந்ருத்யச்சாமர கோரகம் நிருபமச்
சத்ரத்வயீ பாஸுரம் ।
ஸானந்தம் த்விஜ மண்டலம் வித்ததம்
ஸந்நாஹ சிந்ஹாரவை: காந்தம்
புண்யக்ருதோ பஜந்தி வரதம்
காஞ்ச்யாம் த்ருதியோத்ஸவே ॥

ஸ்ரீ காஞ்சி நகரத்தில் மூன்றாவது உத்ஸவ தினத்தில் மேற்கு கோபுர வாசலில் உதய வேளையில் வெகு அழகாக வீசப்பட்ட தாமரை மொக்கு போன்ற சாமரங்களோடும், ஒப்புயர்வில்லாத இரட்டைக் குடைகளோடும் கருட வாஹனத்தின்மேல் ஆரூடராய் புறப்பாட்டிற்காக முழங்குகின்ற வாத்ய-கோஷங்களால் அகில ஸேவார்த்திகளையும் ஆனந்தித்துக் கொண்டு எழுந்தருளுகிற ஸ்ரீ தேவப் பெருமாளை புண்யசாலிகள் ஸேவிக்கிறார்கள்.

ஸ்ரீ

பறவையேறு பரம்புருடன்

[கி. ராமஸ்வாமி, மைலாப்பூர்]

எம்பெருமானுக்கு ஸ்ரீய:பதித்வம் போலே அடற்புள்ளர சேறுவதும் பரத்வ ஸூசகமானதொரு அடையாளம். பறவையேறு பரம் புருடனென்ற விடத்து பறவையேறுவது பற்றி பரம புருஷத்வம் ஸித்திக்கிறதென்று த்வனி. தேவதையென்று பெயர் வைத்திருப்போரெல்லாம் ஒருவாஹனமும் ஒரு த்வஜமும் உடையராயிருப்பர். மூலப் பேரிட்டழைத்த யானை முன் தோன்றி அதன் துயரைத்துடைத்தது புள்ளூர்ந்து சென்ற ஆழியான் ஒருவனே. அந்த கஜேந்த்ர வ்ருத்தாந்தத்தில் உண்மையான பரதேவதை வெளி வந்தது போல், பர தேவதைக்குரிய வாஹனமும் ஐய மற விளங்கியது. ஒன்றேறி ஒன்றுயர்த்த தேவ தாந்தரங்களெல்லாம் ஓடி யொளித்த விடத்து, மூலமென ஓல மிட வல்ல தெய்வம் இதோ வென்று கஜேந்திரனுக்கும் அவர் மூலமாக அனைத்துலகுக்கும் விளக்கியது வேதாத்மாவான விஹகேச்வரனே. வேத புருஷனை வேதாத்மாவன்றி வேறு யாரால் காட்ட முடியும்.

வேத புருஷனுக்கு வேதாத்மா வாஹனமாயமைந்தது பொருத்தமென்றால், அதிலும் உயர்ந்த வேறொரு பொருத்தமுமுளது. விச்வாதிசாயி ஸுக ரூபனுடைய ஸ்யாமள வர்ணத்தை எடுத்துக் காட்ட ஒரு ஸ்வர்ண பர்வதம் போன்ற கருத்மானுடைய திருமேனி யல்லது பொருத்தமாகுமா? பரம ரஸிகனாகிய எம்பெருமான் தன்னடியாருடைய நேத்ரங்களுக்கு இன்பம் பயக்கத் தகுந்ததொரு வாஹனத்தை அமைத்துக்கொண்டான் என்றே சொல்லவேண்டி வருகிறது. இந்த சேர்த்தியை அனுபவித்த பூர்வர்களுடைய அநுஸந்தானங்களைக் கவனித்தால் இதிலுள்ள ரஸம் புலப்படும்.

“பொன் மலை மீமிசைக்கார்முகில்”

என்று வர்ணிக்கிறார் நம்மாழ்வார்.

“மஞ்சுயர் பொன்மலை மேலெழுந்த
மாமுகில் போன்றுளர் வந்து கானமே
அஞ்சிறைப் புள்ளு மொன்றேறி வந்தார்
அச்சோ ஒருவர் அழகிய வா!”

என்று இந்த வர்ணங்களுடைய கலப்பால் ஏற்படும் அழகில் ஈடுபடுகிறார் திருமங்கை மன்னன். இவர்களை படியொற்றிய கவிச்சக்ரவர்த்திகம்பரும்,

“கருமுகில் தாமரைக் காடுபூத்து நீடு
இருஞ்சுடர் இருபுறத்தேந்தி ஏடவிழ்
திருவொடும் பொலிய பொற் குன்றின்மேல்
வருவபோல் கலுழன் மேல் வந்து தோன்றினான்.”

என்று அழகுபடக் கவி பாடுகிறார். பிராட்டியின் சேர்த்தியால் ஆழி வண்ணனைக் கண்டோர் பொன்மேனி கண்டேன் என்று ப்ரமிப்பதுபோல், பெரிய திருவடியின் சேர்த்தியால் இக்கருமுகிலும் சிலருக்குப் புள்ளூரும் பொன்மலைபோல் காண்கிறது. புள்ளரசின் தேஜோராசி புட்கொடியானை வ்யாபித்தபடி. இப்படித் தம் மடியாரைப் பிச்சேற்றச் செய்வதால் எம்பெருமான் திருவுள்ளம் உகக்கும் ஸ்தானங்களில் முதன்மை அடற் புள்ளரசுக்கு அமைந்தபடி. அடற் புள்ளரசிலும் அந்தணர் மாட்டிலும், இன்னமுதக் கடற் பள்ளிதன்னிலும் என்றன்றோ நம் தேசிகோத்தமன் வரிசையிடுவது. பெண்ணமுதை யளித்த பரவையும் (கடலும்) இப் பறவைக்குத் தோற்றதோ?

அடியார்க்குப் பெரிய திருவடி செய்யும் உபகாரங்கள் பல. நாட்டார் படுவன படாமைக்காக எம்பெருமானைப் படாதன படுவித்து அவர்கள் முன் எழுந்தருளச் செய்வதே அவ்வுபகாரங்களில் முதன்மைத்து. எம்பெருமான் மறந்தாலும் அவனை மறக்கவொட்டாது அடியான்பால் எழுந்தருளுவிப்பது இவரேயாகையால் பெரியோர்கள் இவரது வருகையையே ப்ரதீக்ஷிப்பார்கள்.

“கண்களால் காண வருங்கோலென்னு மாசையால்
மண்கொண்டவாமனன் ஏற மகிழ்ந்து செல்
பண்கொண்ட புள்ளின் சிறகொலி பாவித்து
தின் கொள்ள ஓர்க்கும் கிடந்து என் செவிகளே”

என்பது நம்மாழ்வாருடைய நிலை. மாயவன் முதுகின் மேல் ஏறவும் பெரிய திருவடிக்கு மகிழ்ச்சியாம். அடியார் அல்லல் தவிர்ப்பது ஒரு புறம். அவன் அங்க்ரி ஸம்மர்த்தத்தால் (திருவடிகள் கசக்குவதால்) தாம் இன்புறுவது ஒரு புறம். இந்த பெரு மகிழ்ச்சியை வாய் விட்டுப் பேசுகின்றனவாம் இவரது சிறகொலி. எம்பெருமானுக்கு அன்பர்களிடத்துப் பெரியதொரு பக்ஷமுண்டு. அவர் வாஹனமாகிய இவ்வினதா ஸுதனுக்கு அது இரட்டித்தபடி. இரு பக்ஷம் (சிறகு) அன்றோ இவருக்கு? எம்பெருமானைப் பிரிந்து நோவுபட்டு முடியும் தருவாயில் வண்டைத் தூது விட்டு அந்த

அருள் மிகுந்த புள்ளரசு இத் தெருவே போதுமாகில் போன என்னு யிரும் மீளாதோ என்று பராங்குச நாயகி வேண்டுவதை கவனிக்க வேண்டும்.

" அருளாத நீரருளி அவரா விதுவராமுன்
அருளாழிப்புட் கடவீர் அவர் வீதி ஒரு நாளென்று
அருளாழியம்மானைக் கண்டக்கால் இது சொல்லி
அருள் ஆழிவரிவண்டே "

என்று இறைஞ்சுவதற்கு எவன் தான் இரங்கமாட்டான்? அன்று அம்ருதம் ஏந்தி வந்தது ஒரு புறம் நிற்க இன்று, ம்ருக ப்ராயனுப் அஞ் சேலென்பாரின்றித் தவிக்கும் என் விஷயத்தில் இரங்கி அந்த ஆராவ முதத்தைக் கொண்டு என்னிடம் சேர்ப்பித்து ம்ருதஸஞ்சீவனமாய் விளங்கவேண்டும் என்று ப்ரார்த்திப்பது போல் தோன்றுகிறது. இப் படி நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களுள் கருடன் ஸம்பந்தம் கலந்த பாசு ரங்கள் பல. அவையனைத்தையும் ஒருங்கே திரட்டி அனுபவிக்க வேண்டியது ரஸிக க்ருத்யம்.

மேற்குறித்த பெருமைகளையெல்லாம் ஏட்டுப் புறத்திலே மட்டும் வாசித்தும் கேட்டும் தெளிய வேண்டாதபடியும், ப்ரத்யக்ஷமாகக் கண்டு அனுபவித்தறியலாம் படியும் அமைந்துள்ளது நம் தேவாதி ராஜனுடைய கருடோத்ஸவ வைபவம். " ஸகவா ஸ ஸவாஹநோ ஹவடீளவ வாஹ்ய: " என்று ஸ்வாமி தேசிகன் மங்களாசாஸனம் செய்தருளிய பெருமையால் நித்ய விபூதியிலுள்ள எம்பெருமானுக்கும் அவர் வாஹனத்திற்கும், சற் றும் பின் வாங்காத மஹிமை இற்றைக்கும் நம் தேவப் பெருமாளுக்கும் அவர் ஏறியருளும் கருட வாஹனத்திற்கும் அர்ச்சாரூபத்தில் பொருந்தி யுள்ளது.

" காஞ்சீ ஸாணாஷ்ருதொ ஹஜஷி வாஷம் கார்ஷ்யாம் த்ருதீயோதஷ்வெ " என்று ஸ்ரீ தொட்டையாசாரியர் பாசுரமிட்டபடி ஸக்ருதம் மேவிட்ட வருக்கே அந்த திவ்ய காட்சி கிடைக்கும். " ய நம்ர: வச்யதி ஜ நாயம் " என்றாள் பிராட்டி. லக்ஷ்மீகாந்தனைத் தரிசிப்பவர் தந்யர்கள் என்று காட்டிக் கொடுக்கிறாள். அதே திருவுள்ளத்தில் ஸ்ரீ தொட்டையா சாரியர் ச்லோகமும் அமைந்தபடி. பல பிறவிகளில் புரிந்த பாக்கிய மனைத்தும் திரண்டு கருடாரூட வரதனைப் வடிவெடுத்துப் பலமளிக்கிற தென்று பல பெரியோர்களது திருவுள்ளம். பல புண்ணியங்களின் பலனு யிருப்பது மன்றி மேல்வரும் மோக்ஷத்திற்கும் அறிகுறியாய்க் களிப் பூட்டும் காட்சியிது. பகவதபி நிவேசம் குறைந்த இக்காலத்தும் கோபுர

வாசல் ஸேவைக்கும், கங்கைகொண்டான் மண்டபகாட்சிக்கும் பல்லாயிரம் ஜனங்கள் திரண்டு வருகின்றனரென்றால் இப்பெருமையை அளவிட்டு முடியுமோ? அனுபவைக வேத்யமே யன்றி சொல்லினால் சொல்லவொண் ணாது. இந்த அநவதிக விபூதியை இமைக்கும் இருகண்களால் வருஷத் திற் கொருமுறை கண்டு எங்ஙனே திருப்தியடைவது என்று நினைத்து இமையாத பல கண்கள்கொண்டு ஒவ்வொரு நாளும் காணக் கிடைக்க வேண்டும் என்று பாரிக்கிறார் நம் பரமாசாரியன், " ஸுநாஷீந ஜநிஜெஜெஷ ஜெஷ்ாவஜெநநிஷ்விஜெயம் " என்ற.

இந்த மஹோத்ஸவத்திற்கு வருவோர், சிற்றஞ்சிறு காலையில் ஆழ் வார் திருவீதியாகிய உட்பிராகாரத்தில் எழுந்தருளுவதையும், அங்கே நம் மாழ்வாருக்கும், பிறகு ஸ்ரீ பாஷ்யகாரருக்கும் திருமாலை ஸ்ரீ சடாரி அருளுவதையும், பின்பு ஒற்றைக் குடையால் சிறிது மறைக்கப்பட்ட திரு முகத்துடன் கோபுர வாயிலில் ஸேவை ஸாதிப்பதையும், பின்பு ஸ்ரீதொட் டையாசார் ஸேவையென்று சொல்லப்படும் கோபுர தரிசனத்தையும், அஞ்சலித்து ஆரவாரித்து இரு புறமும் குழுமிய அடியார்கள் கூட்டத் தையும், பின்பு பதினாறுகால் மண்டபத்தைக் கடந்ததும் இரண்டு திருப் பாற்கடலை அடுக்கு விரித்தாற்போல் பரந்த வெண்குடைகளிரண்டையும் சாற்றிக்கொண்டு எழுந்தருளுவதையும், பின்பு தூப்புலுக்கெழுந்தருளி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் ஸந்நிதிக்கபிமுகராய் எழுந்தருளி பெரிய திருமாலையையும் ஸ்ரீ சடாரியையும் ஒரு குடையை இறக்கி மரியாதை யளிக்கும் விபவத்தையும், பிறகு முறங்கம் என்று சொல்லப்படும் வீதி களெல்லாம் கடந்து ராஜ வீதியென்று வழங்கும் கச்சித்தெருவில் கண் கொடுக்கும் பெருமையையும், கங்கை கொண்டான் மண்டபத்தில் எழுந் தருளி திருவாராதனம் கண்டருளுவதையும், திரும்பி நடுப்பகலில் கொடிய வெயிலுறைப்ப வாடிய திருமாலைகளுடனும் வியர்த்த மேனியுடனும் திருக் கோயில் புகுவதையும், எல்லாவற்றையும் ஒன்று விடாது அனுபவிக்க வேண்டும் என்பதே அடியேனுடைய வேண்டுகோள்.

கழல் தொழுதும் வா நெஞ்சமே! கார்க்கடல் நீர்வேலைப்
பொழிலளந்த புள்ளூர்த்திச் செல்வன்—எழிலளந்தங்கு
எண்ணற்கரியானை எப் பொருட்கும் சேயானை
நண்ணற் கரியானை நாம்.

ஸ்ரீ தேவதாதிராஜ நாமமுக்தாகலாபம்.

முக்தி தரும் நகரேழில் முக்கியமாம் கச்சி என்றூர் நமது பரமாசாரியர். கச்சி தன்னில் கண் கொடுக்கும் பெருமாள் அருளாளப் பெருமாள் ஆவர். திருப்பதிகள் நிறைந்த நமது புண்ணிய பூமியில் திவ்யதேசங்கள் பலவாயினும் ஆழ்வார் ஆசார்யர்களால் ஸேவித்து வெகுமானிக்கப் பெற்ற ஸன்னிதிகள் பல இருப்பினும் நம்முடைய ஸித்தாந்த ஸ்தாபகர்களான பகவத் ராமாநுஜன், ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன், இவ்விசிஷ்டாத்வைத ஆசார்ய த்வயத்தால் அநிதர ஸாதாரணமாய் குடிகொண்டு கொண்டாடப்பட்டது தேவாதிராஜன் ஸன்னிதியே. மற்ற திவ்ய தேச தேவாலயங்களில் ஸான்னித்யம் கொண்டிருக்கும் பகவன் மூர்த்திகளுக்கு ஒன்றுக்கு மேலும் பல நாமங்கள் வாய்ந்து வழங்கிவரினும் ஸ்ரீ தேவாதிராஜனுக்கே அவ்வோ ஸ்தோத்திரங்களிலும் ப்ரபந்தங்களிலும் ஆசார்யர்களாலும் கவிகளாலும் பக்த கோடிகளாலும் அளிக்கப்பட்டு பரிமளித்து வருகின்றன. அவ்வித ஸ்தோத்திரங்கள் காவ்யங்கள், ப்ரபந்தங்கள் என்னும் புண்ய தீர்த்தங்களில் மூழ்கி மூழ்கி முத்து போன்ற திருநாமங்கள் தேடி எடுக்கப்பட்டு, இந்நாமகலாபத்தில் கோர்க்கப்பட்டிருக்கின்றன. இந்நாம முக்தாகலாபம் பக்தர் யாவரானும் சாற்றத்தகும். வி. வி. ஸ்ரீ.

1. வரதன்
2. ப்ரணதார்த்தி ஹரன்
3. அருளாளப் பெருமாள்
4. அத்திகிரி அருளாளன்
5. கரிகிரீச்வரன்
6. வாரணசைலநாதன்
7. கரீசன்
8. கரிசைலநாதன்
9. ஹஸ்திசைலேஶ்வரன்
10. வரதராஜன்
11. தேவராஜன்
12. தேவாதிராஜன்
13. தேவப்பெருமாள்
14. ஹஸ்தீசன்
15. த்விரதசைலபதி
16. நாகாசலேசன்
17. தயாளு
18. கரிசைலதாமன்
19. ஹஸ்திசைலாக்ரவஸ்து
20. சிந்துறவெற்பிறையவனூர்
21. நாகமலைநாயகனூர்
22. மதிட்கச்சி'நகர்க் கருணைநாதன்
23. அருள் வரதர்
24. கார்மேனி அருளாளர்
25. அயன்மகவேதியிலற்புதன்
26. வாரணவெற்பின் மழைமுகில்
27. தொல்லத்திகிரிச்சுடர்
28. அத்திமாமலைமேல் நின்ற புண்ணியன்
29. கரிகிரிமேல் நின்ற கற்பகம்
30. வரந்தந்திடுமன்னவன்
31. நான்முகவேதியனம்பான்
32. அத்திமாமலைமேல் நின்ற அச்சுதன்

33. தேனவேதியர் தெய்வம்
34. சிந்து ராசலச் சேகைன்
35. மதிளத்தியூரின் மரதகம்
36. திருவத்தியூரர்
37. கரிகிரிமேற் காவலன்
38. வாரணவேற் பிறையவன்
39. அத்திகிரித் திருமால்
40. திருவத்தியூரான்
41. வேழமலை மெய்யவன்
42. திருவத்திநகரான்
43. அத்திகிரி அம்புயத்தான் ஆரமுது
44. அத்திகிரி அருள் முகில்
45. அத்திகிரியான்
46. கரிகிரி மருவிய கரியவர்
47. கரிகிரி அரி
48. அளவில்லா அருளாழிப் பெருமாள்
49. அருளாழியம்மான்
50. பேரருளாளன்
51. உயர்விருத அருளாளப் பெருமாள்
52. வேழமலை நாயகனூர்
53. கரிசைல கிருஷ்ண ஜலதம்
54. கரிசைல கிருஷ்ண மேகம்
55. வரதப்ரபு
56. ப்ரணதார்த்திஹரப்ரபு
57. கருணாகரன்
58. அபீஷ்ட வரதன்
59. மாதங்காசல மௌளி மண்டன மணி
60. த்விரதசிகரிஸீம் நாஸத்மவாக்
61. ச்யாமளோ ஹவ்யவாஹ:
62. கலச ஜலதி கர்பா வல்லரீகல் பசாகி
63. காருண்ய ராசி:
64. கரிகிரிவிடங்க ஸ்தாயீ— கல்ப வ்ருக்ஷ:
65. அத்திகிரி அருளாளப் பெருமாள்
66. ஆனை பரிதேரின்மேல் அழகாய் வரும் பெருமாள்
67. முத்தி மழை பொழியும் முகில் வண்ணர்
68. பெருமையுடை அத்திகிரிப் பெருமாள்
69. போராத அருள் பொழியும் பெருமாள்
70. த்விர தாத்ரீசன்
71. த்விரதாத்ரி நாதன்
72. கச்சிதனில் கண் கொடுக்கும் பெருமாள்
73. கருத வரந்தரும் தெய்வப் பெருமாள்
74. ஹஸ்திசைல சிகரோஜ்வலபாரிஜாதன்
75. கச்சி அருளாளர்
76. கரிவாதன்
77. கஜேந்த்ரவரதன்
78. ஹஸ்திகிரி மஸ்த சேகரன்
79. அர்த்திதார்த்த பரிதான தீக்ஷிதன்
80. உத்தர வேதிக்குள்ளே உதித்தார்
81. வபாபரிமளோல்லாஸவாஸிதாதர பல்லவர்
82. ஹைரண்ய கர்ப்ப ஹயமேத ஹவிர்புக்
83. ஹஸ்தி க்ஷிதிதரபதி
84. ஹஸ்த்யத்ரி நாதன்
85. வரப்ரதன்
86. கருணம்ருதாப்தி

87. வாரணாத்ரீச்வரன்
88. விச்வாதிசாயி ஸ்வரூபன்
89. ஹஸ்திபூஷணன்
90. கரிநாதன்
91. ஹஸ்தி நாதன்
92. கரிகிரிநாதன்
93. ஹஸ்திகிரி நாதன்
94. வரதாதி ராஜன்
95. ஹஸ்திபதி
96. ஹஸ்தி சைலாதி வாஸீ
97. கரிகிரிபதி
98. சிதள ஹவ்யவாஹம்
99. கரைபுரண்ட கருணைக்கடல்
100. பெருந்தேவி வரதன்
101. தேவராஜ தயாஸிந்து
102. தேவதேவ ஜகத்பதி
103. அத்தியூரான்
104. புள்ளையூர்வான்
105. தென்னத்தியூரர்
106. ப்ரணதார்த்திஹர வரதன்
107. ப்ரணதார்த்திஹராச்சுதன்
108. தேசிக வரதன்

ஸ்ரீ தேவாதி ராஜனுடைய உத்ஸவமும் ஸ்ரீ தேசிகனுடைய அநுபவமும்.

வி. அனந்தாசார்யர்

பகவானுடைய பரரூபத்தில் போலே அர்ச்சாவிக்ரஹத்திலும் பரத்வம் குன்றாமல் ப்ரகாசிப்பதை மஹரிஷிகளும் ஆழ்வார்களும் பலவாறாய் பேசினார்கள். அர்ச்சா ரூபத்தில் மஹரிஷிகளுடைய அநுபவத்திற்கும் ஆழ்வார்களுடைய அநுபவத்திற்கும் நெடுவாசியுண்டு. அப்படியே ஆழ்வார்கள் அநுபவத்திற்கும் நமது ஸ்ரீ தேசிகன் அநுபவத்திற்கும் நெடுவாசி உண்டு என்று நிராக்ஷேபமாய் கூறலாம். ஸ்தோத்திரம் செய்ய இறங்கினவர் ஸ்துதிக்கத் தகுந்த மூர்த்தியில் விசேஷித்து மஹிமை இருக்குமானால் அதைவிட்டு பொதுவான ஆகாரங்களைப் பற்றிச் சொல்லமாட்டார்கள். ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ தேவாதி ராஜனை அநுபவிக்கும் போது பர வ்யூஹ விபவஹார்த்தா காரங்களில் உள்ள விசேஷங்களை அநுஸந்திப்பதோடு நிற்காமல், இந்த அர்க்சா மூர்த்தியின் ஸௌந்தர்யாநுபவத்தோடு நிற்காமலும், உத்ஸவ விமர்சையை அநுபவித்தது இங்கு விசேஷமாக குறிக்கத் தகுந்ததாகும். மாசிக்கடலாடி மகிழ்ந்து வருவதையும், ஆனை பரிதேரின் மேல் அழகர் வருவதையும் விசேஷித்து அநுஸந்தித்ததை ஆராய்ந்தால், இந்த இரண்டு திவ்ய தேசங்களிலேயே உத்ஸவ ஸம்ருத்தியை ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம் பற்றி இருப்பதாக விளங்குகிறது. அதிலும் ஸ்ரீ தேவ

நாயகன் விஷயத்தில் பொதுவாய் புறப்பாட்டின் காம்பீர்யம் மாத்திரம் அநுபவிக்கப்பட்டது. இங்கு ஸ்ரீ தேவாதி ராஜன் விஷயத்தில் வாஹனங்களை தனித்தனியே எடுத்துரைத்து ஒன்றைவிட ஒன்றுக்கு அதிக சோபை அநுஸந்திக்கப்பட்டது. துரகவிஹக ராஜ, என்ற ச்லோகமும், அத்திகிரி அருளாளப் பெருமாள் வந்தார் என்ற பாட்டும் உத்ஸவாநுபவத்துக்கு என்றே ஏற்பட்டவை. வாஹனங்கள் எல்லாவற்றையும் பேரைக் கூறி அநுபவிக்க இறங்கினவர், மேன்மேலும் ஒன்றைவிட ஒன்றுக்கு சோபை அதிகமானதை நினைத்து ஆதி சப்தத்தாலே மற்றதைச் சொல்லி அதிகமதிகம் என்று தன்னால் வர்ணிக்க இயலாது என்று தயங்கிற நிலைமையைக் காட்டினார். விஹகராஜனைவிட்டு துரகனை முன் சொன்னதற்குத் தாத்பர்யம் என்னவெனில் துரம் கச்சதீதி துரகஃ வேகமாய் செல்லுபவன் என்ற பொருளை முன்னிட்டு, பெரிய திருவடிக்கு இதை விசேஷணமாக்கி, வேகமாய் செல்லுகிற பெரிய திருவடி, என்று அநுபவிக்கிறார் என்று த்வந்யர்த்தம் தோன்றும்படி. "பெரிய திருவடி வாஹனத்தில் அநுபவிக்கக்கூடிய அநேக ஆகாரங்கள் இருந்தபோதிலும், பகவத ஸ்த்வராயைநம: என்பதை நினைப்பு மூட்டக் கூடிய அந்த வேகததியில் ஸ்ரீ தேசிகனுக்கு ஈடுபாடு அதிகம் என்று தோன்றுகிறது. இம்மாதிரி உத்ஸவ விமர்சை பரமபதத்தில் இல்லாதது பற்றியே ஸ்ரீ தேசிகன் பரமபதம் வேண்டாமென்று உபேக்ஷித்தது. இந்த வைசாகோத்ஸவாநுபவத்தை வருஷம் முடியவும் ப்ரதி தினமும் சேவிக்க ஆசைப்பட்டார் அநுதினம் என்று. விஷ்ணவாலய ஸாமாந்யத்தில் ஸகல எம்பெருமான்களுக்கும் மற்ற வாஹனங்களைக் காட்டிலும் கருட வாஹன ஸேவை விசேஷித்து ஸெவ்யமானபோதிலும் தேவப்பெருமாளுடைய இந்த ஸேவை அஸாதாரணமாய் கொண்டாடப்படுவதற்குக் காரணம், கஜேந்த்ரனை அநுக்ரஹித்த பாவநாவிசேஷத்தோடு இந்த திவ்ய தேசத்தில் எம்பெருமான் எழுந்தருளி இருக்கிறார். அப்படியே ப்ரஹ்மாவினுடைய ப்ரார்த்தனை. ஆசார்யர்களுடைய மங்களாசாஸனத்தின் அபிஸந்தியும் அப்படியே. இதை அடியொற்றியே ஸ்ரீ தேசிகன் "மூலமெனவோலமிட வல்லார் வந்தார்" என்று அநுபவித்தார். ஸ்ரீ வரதராஜாஷ்டோத்தர சதநாம ஸ்தோத்திரத்திலும், அநந்த கல்யாணகுணங்களில் வைத்து ஸ்ரீ கஜேந்திர மோக்ஷ வைபவம் விசேஷமாய் வர்ணிக்கப்பட்டிருப்பது கெவுனிக்கத்தக்கது. இவ்வூரிலேயே பெருமாள் எழுந்தருளும் வீதியின் காம்பீர்ய வைசால்யங்களும், வாஹனத்தின்மீது ஸேவை ஸாதிக்கும் பெருமையும், பொதுவான உத்ஸவ விமர்சைகளும், ஸ்ரீ தேசிகனுடைய மனதைக் கவர்ந்தனவென்று நிச்சயமாய் தோன்றும்.

तुरगविहगराजस्यन्दनान्दोळिकादिष्व धिकमधिकमन्या मात्मशोभां दधानम् ।
अनवधिकविभूतिं हस्तिशैलेश्वरं त्वामनुदिन मनिमेषैर्लोचनै र्निर्विशेयम् ॥

குதிரை நம்பிரான், கருடன், திருத்தேர், பல்லக்கு இவை முதலிய வாஹநங்களின் மீது ஏறி, ஒன்றின்மேல் ஒன்று அதிகமாயும், வெவ்வேறு விதமுமான தனது வடிவழகை போஷிப்பவரும், எல்லையில்லாத வைபவமுள்ளவருமான அத்திகிரிப் பெருமானை உன்னை ப்ரதி தினமும் இமைக் கொட்டில்லாத கண்களைக் கொண்டு அநுபவிக்கவேணும்.

இந்த ச்லோகத்தில் ப்ரதி உத்ஸவத்திலும் வரதனுடைய ஸௌந்தர்யம் அதிகமாய் வளர்ந்து வருவதும், வெவ்வேறு வாஹநத்தின் மீது வெவ்வேறு வரதன்போல் ஸேவைஸாதிப்பதும் மிகப் பெரிய திருவுருவம் கொண்ட வாஹநங்களின் காம்பீர்யத்தை தனது சோபையால் அடக்கி தன்னுடைய சோபை மேலிட்டுக் கிடக்கும்படி ஸேவைஸாதிப்பது முதலான பற்பல விசேஷார்த்தங்கள் தொனிக்கும்.

பரமைகாந்தி ஒருவர் ஒருக்கால் வஸித்தால் ஏற்படும் ரக்ஷையைக் கூறினார். அந்த ரக்ஷையும் ரங்கத்தில் நித்யவாஸம் செய்ய விரும்பும் எமக்கே ரக்ஷை. எம்மைக்காத்து எம் இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய உம்முடைய திவ்யகுணங்களே போதும் என்கிறார்.

'ஆர்த்தன் கைவல்யத்தை விரும்புமவன், அர்த்தத்தை விரும்புமவன், மோக்ஷத்திலாசையுள்ளவன் என்ற நால்வர் என்னைப் பஜிக்கிறார்கள்' என்றார் கீதையில். இவ்விடத்திற்கேற்ப இங்கே ஒருவகையான விபாகம்: (1) தர்மம் அர்த்தம் காமம் மூன்றையும் விரும்புகிறவர்கள்; (2) ப்ரக்ருதியை விலக்கி (ஜயித்து) கேவலாத்மாநுபவத்தை ஆசைப்படுகிறவர்கள்; (3) ப்ரக்ருதியைத் தாண்டி மோக்ஷம் செல்ல இச்சிப்பவர்கள்; (4) (பெருமாளுக்கு விரோதத்தைச் செய்வதால்) நமக்கு விரோதியானவர்களை நிரஸிக்கக் கோருமவர் நாம்.

பெருமாள் திருமேனிக்கு வரும் கெடுதியே நமக்கு ஆர்த்தி; அவர் திருமேனிக்கு சத்ருக்களே நமக்கு சத்ருக்கள்; அவர் திருமேனி தீங்கின்றி விளங்குவது நம் காமம். ப்ரக்ருதிவியுக்தமாகப் ப்ரக்ருதிஸம்பந்தமில்லாமல் கேவலாத்மாநுபவம் இருப்பதால், கைவல்யார்த்திகளையும் 'ப்ரக்ருதிலங்கநார்த்திநாம்' என்பதால் சேர்த்து ஸங்க்ரஹிக்கலாம்.

நீர் தூங்குகிறதுபோல் பாவனை செய்தாலும், உம் குணங்கள் விழித்துக் கொண்டே இருந்து எங்களைக் கைதூக்கி ரக்ஷிக்கும். ரக்ஷணைக தீக்ஷிதரான பெருமாள்போல, அவர் திவ்ய குணங்கள் காக்ஷணை தீக்ஷிதங்கள். தர்மார்த்த காமங்களும் கைவல்ய போகமும் மோக்ஷதசையில் அங்குரமான அநுபவமும் இந்த அரங்கத்தில் உம்மை பஜிப்பதால் உம் குணங்கள் கொடுக்கக் கிடைக்கின்றன. அப்படியே இதற்கு விரோதிகளை நிரஸிக்கவேண்டும் என்ற எங்கள் மனோரதமும் உம் குணங்களின் வலிமையினால் நிறைவேறி, நீர் கோயிலில் நித்யமாக எழுந்தருளியிருந்து ஸேவை ஸாதிக்கவேண்டும். (9)

बिभेति भवभृत् प्रभो! त्वदुपदेशतीव्रौषधात्
कदध्वरसदुर्विषे बडिशभक्षवत् प्रीयते ।
अपथ्यपरिहारधीविमुखं इत्थमाकस्मिकी
तमप्यवसरे क्रमादवति वत्सला त्वद्दया ॥ १० ॥

பிபேதி பவப்ருத் ப்ரபோ! த்வத்-உபதேச-தீவ்ரௌஷதாத்
கதத்வ-ரஸ-துர்விஷே படிச-பக்ஷ-வத் ப்ரீயதே ।
அபத்ய-பரிஹார-தீ-விமுகம் இத்தம் ஆகஸ்மிகீ
தம்-அப்யவஸரே க்ரமாத் அவதி வத்ஸலா த்வத்தயா (10)

ப்ரபோ—ப்ரபுவே!
பவப்ருத்—ஸம்ஸாரத்தையுடைய சேதனன்
த்வத் உபதேச தீவ்ர-ஔஷதாத்—உம்மால் உபதேசிக்கப்படும் தர்மம் என்னும் உக்ரமான மருந்திலிருந்து
பிபேதி—பயப்படுகிறான்.
கதத்வ ரஸ துர்விஷே—கெட்ட மார்க்கத்தில் ரஸமென்னும் கொடிய விஷத்தில்
படிமஶ பக்ஷவத்—தூண்டிமுள்ளை பக்ஷிப்பதில் (மீன் ரஸிப்பதுபோல)
ப்ரீயதே—ப்ரீதிபண்ணுகிறான்;

இத்தம்—இப்படி
அபத்ய பரிஹார தீ-விமுகம்—தனக்குக் கெடுதலைப் பரிஹரிப்பது என்னும் எண்ணத்தையே நோக்காதபடி
தமபி—அப்படிக் கெட்டவனையும்
அவஸரே—ஒரு கால விசேஷத்தில்
ஆகஸ்மிகி—காரணமின்னது என்று அறியக்கூடாத (எங்களுக்குத் தெரிந்தவரையில் நிர்ஹேதுகம் என்று நினைக்கப்படும்)
வத்ஸலா—ஸ்நேஹமயமான
த்வத்-தயா—உம்முடைய தயை
க்ரமாத்—படிப்படியாக (சன்ம சன்மாந்தரம் காத்து)
அவதி—ரக்ஷிக்கிறது.

அரங்கத்தில் பஜித்தால் பலன்களைக் கொடுத்துக் கைதூக்கிவிட பகவத் குணங்கள் கங்கணம்கட்டிக்கொண்டிருக்கின்றன என்றார். இதில் நாம் பஜிப்பதற்குப் பிரதியாக நமக்குத் தெரியாமலே நாம் ஸுக்ருதமென்று புத்திபூர்வகமாக இதற்கென்று செய்யாமலிருக்கையிலேயே பகவத் தயை தானாக அதிஸ்நேஹத்தால் நம்மை ஜாயமானதசையில் கடாக்ஷித்து, ஸாத்விகனாக்கி, மோக்ஷப்பொருளைச் சிந்திப்பவனாகச் செய்கிறது என்கிறார்.

உம்முடைய ஆஜ்ஞையாகிய சுருதியால் உபதேசிக்கப்படும் தர்மத்தை அநுஷ்டிக்க நடுங்கி, நிஷேதிக்கப்படும் கெட்ட மார்க்கத்தில் ப்ரீதிபண்ணுகிறோம். செய்த பாபத்திற்குப் பிராயச்சித்தத்தைத் தேடும் எண்ணத்தையே தூரவிலக்குகிறோம். இப்படி க்ருத்யாகரண-அக்ருத்யகரண தோஷங்களைப் பரிஹரிக்கக்கூடிய அநுதாபம் பிராயச்சித்தம் முதலிய வழிகளைக் கண்ணெடுத்தும் பாராமலிருக்கிறோம்.

இப்படியிருந்தும், அஜ்ஞாத-ப்ராஸங்கிக-யாத்ருச்சிக ஸுக்ருதம் என்று சிலவற்றை ஸுக்ருதக் கணக்கில் வைத்துக் கொண்டு, எங்கள் தோஷங்களைப் பாராட்டாமல் உம் தயை எங்களை ரக்ஷிக்கிறது. இப்படித் தானாக ரக்ஷிக்கும் உம்முடைய தயை உம் திருமேனியை ரக்ஷித்து அரங்கத்தில் நித்யமாக நீர் எழுந்தருளியிருக்கவேண்டும் என்ற எங்கள் மனோரதத்தைப் பூர்த்தி செய்யவேண்டாமோ? கேட்காமலே ரக்ஷிக்கும் தயை கதறிக் கேட்டும் ரக்ஷிக்கவேண்டாமோ?

பவப்ருத்—ஸம்ஸாரத்தை மங்களமென்று நினைத்து கிடையாதது கிடைத்ததென்று இருக்கிறான். 'பவம்' என்பது ஸம்ஸாரத்தையும் மங்களத்தையும் சொல்லும்.

'तस्य ज्ञानमुपदेशः' என்றார் ஜைமினி. உபதேசபதம் தர்மத்தைச் சொல்லுகிறது. ச்ருத்யுபதேசம்-சுருதி என்பது உம்முடைய ஆஜ்ஞை; அதை மீறினவன் உமக்குத் துரோஹி. 'செய்யாதனவற்றை' விரும்பிச் செய்கிறோம்.

அபத்ய-பரிஹார-தீ-விமுகம்—அபத்யத்தை விலக்கவேண்டும் என்று எண்ணுவதில் ஆபிமுக்யம் இருந்தாலும் போதும், எண்ணுவதில் கூட விமுகராயிருக்கிறோம்.

இருபதாவது இருபத்தொன்றாவது சுலோகங்களில் சரணாகதி செய்யப் போகிறபடியால் முன்புள்ள தயா-ப்ரஸர-க்ரமங்களை ஸங்க்ஷேபிக்கிறார். (10)

अपार्थ इति निश्चितः प्रहरणादियोगस्तव
स्वयं वहसि निर्भयस्तदपि *रङ्गपृथ्वीपते ! ।
स्वरक्षणमिवाभवत् प्रणतरक्षणं तावकं
यदात्थ परमात्मवित् नियतमन्तरात्मेति ते ॥ ११ ॥

அபார்த்த இதி நிஶ்சித: ப்ரஹரணாதி-யோகஸ்-தவ
ஸ்வயம் வஹஸி நிர்ப்பய: ததபி ரங்க-ப்ருத்வீபதே! ।
ஸ்வரக்ஷணம் இவ அபவத் ப்ரணத-ரக்ஷணம் தாவகம்
யத்ஆத்த பரமாத்மவித் நியதம் அந்தராத்மேதி தே ॥ (11)

ரங்கப்ருத்வீபதே—ரங்கராஜனே!
ப்ரஹரணாதியோக:—ஆயுதம் முதலியவை இருப்பது
அபார்த்த:—அநாவச்யம் (வீண்)
இதி—என்று
நிஶ்சித: —நிச்சயிக்கப்பட்டிருக்கிறது;
நிர்ப்பய:—பயமில்லாத நீர்
ததபி—ஆயினும் (அவற்றை)
ஸ்வயம் வஹஸி—நீரே தரிக்கிறீர் (சுமக்கிறீர்)
ப்ரணதரக்ஷணம்—ஆச்ரிதரக்ஷணம்

ஸ்வரக்ஷணமிவ—உம் ரக்ஷணம்போல
தாவகம்—உம் சொந்தப்பணியாக
அபவத்—ஏற்பட்டது;
யத்—ஏனெனில்,
பரமாத்ம வித்—பகவானே! தனக்கும் மற்ற எல்லா உயிர்களுக்கும் உயிர்' என்று அறிந்த ஞானி
தே அந்தராத்மா இதி — உம்முடைய அந்தராத்மா, உமக்கும் ஆந்தரமான (உள்ளான) உயிர் என்று
ஆத்த—நீர் (கீதையில்) சொன்னீரல்லவா?

* रङ्गपृथ्वीधर—पा.

[ஆகையால் உம் ரக்ஷணத்தைப்போல உம்முடைய உயிரான ஞானியின் ரக்ஷணமும் உம் சொந்த ரக்ஷணமாய் விட்டது. உம்மாத்மரக்ஷணம் உம்முயிரின் ரக்ஷணம் இரண்டும் உம் சொந்த ரக்ஷணம் தானே.]

ரங்கப்ருத்வீபதே- 'ரங்கராஜ' என்னுமல் 'ரங்கப்ருத்வீபதே' என்பதால் 'ப்ருத்வீக்கெல்லாம் (பூமிக்கெல்லாம்) பதியாயிருந்தும், பூமியில் ஏகதேசமான ஸ்ரீரங்கநகரத்திற்கு மட்டும் பதியாயில்லாமலிருக்க வேண்டுமோ ?' என்னும் அர்த்தம் த்வனிக்கிறது:

நிர்பய:—உமக்கு உம் நிமித்தம் பயமில்லை ; உம்மைக் காக்க உமக்கு ஆயுதமும் வேண்டாம். நரஸிம்ஹதசையில் உமக்கு ஆயுதங்களே இல்லையே

ததபி ஸ்வயம் வஹஸி—ஆயினும் ஆயுதங்களை நீரே எப்போதும் சுமக்கிறீர். **सदा पञ्चायुधीं बिभ्रत्** (ஸதா பஞ்சாயுதீம் பிப்ரத்). இப்படிச் சுமப்பது எங்களை ரக்ஷிக்கவல்லவோ ? இல்லாவிடில் நிஷ்ப்ரயோஜனமாம்.

பரமாத்மவித்: - **ज्ञानी त्वात्मैव मे मतम्** (ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்). ஞானியை பரமாத்மாவான உமக்கு அந்தராத்மா என்று நீர் சொல்லுவது உம்முடைய அபிமான மாத்ர ஸாரமான நினைப்பு (க்ருஷ்ண மதம்) என்று சந்த்ரிகை. ஆகையால் ஞானியை ரக்ஷிப்பதும் உம் ரக்ஷணம் போன்றது. ஆச்ரிதர் பயப்படாமலிருக்கவே நீர் ஆயுதம் தரிக்கிறீர். (11)

लघिष्ठसुखसङ्गदैः स्वकृतकर्मनिर्वर्तितैः
कलत्रसुतसोदरानुचरबन्धुसंबन्धिभिः ।
धनप्रभृतिकैरपि प्रचुरभीतिभेदोत्तरैः
न बिभ्रति धृतिं प्रभो ! त्वदनुभूतिभोगार्थिनः ॥ १२ ॥

லகிஷ்ட-ஸுக-ஸங்கதை: ஸ்வ-க்ருத-கர்ம-நிர்வர்த்திதை:
களத்ர-ஸுத-ஸோதராநுசர-பந்து-ஸம்பந்திபி: ॥
தந-ப்ரப்ருதிகைரபி ப்ரசுர-பீதி-பேதோத்தரை:
ந பிப்ரதி த்ருதிம் ப்ரபோ! த்வதநுபூதி-போகார்த்திந: ॥ (12)

ப்ரபோ—ஸர்வாந்தர்யாமியான ப்ரபுவே!

த்வத்-அநுபூதி-போக-அர்த்திந:—உம்மை அநுபவிப்பது என்னும் இன்பத்தையே ஆசைப்படுகிறவர்கள்

லகிஷ்ட-ஸுக-ஸங்கதை:—மிகவும் அல்பமான ஸுகத்தின் ஸ்பர்சத்தை (ஸங்கத்தைக்) கொடுப்பதும்,

ப்ரசுர-பீதி-பேதோத்தரை:—பெரிதான பலவித பயங்களை மேல் மேல் விளைவிப்பதும்,

ஸ்வ-க்ருத-கர்ம-நிர்வர்த்திதை:— தான் சிரமப்பட்டுச் செய்த (புண்ய) கர்மங்களால் ஸம்பாதிக்கப்பட்டதுமான

களத்ர-ஸுத-ஸோதர-அநுசர-பந்து-ஸம்பந்திபி:—கொண்ட பெண்டிர், மக்கள், உடன்பிறந்தார், வேலைக்காரர், பந்துக்கள், என்று நன்றாய் நம்மை பந்தப்படுத்தும் இவர்களாலும்

தந-ப்ரப்ருதிகை: அபி—செல்வம், ஆயுள் ஆரோக்கியம் முதலியவற்றாலும்

த்ருதிம்—சந்தோஷத்தை

ந பிப்ரதி—பெறுகிறதில்லை.

'நான் ஞானிக்கு அத்யந்தம் ப்ரியன் ; அவனும் எனக்கு அத்யந்தம் ப்ரியன் ; ஞானி எனக்கு அந்தராத்மா என்று நான் அவனை அபிமானிக்கிறேன்' என்ற கீதா சுலோகத்தைக் காட்டி நின்றீர் கிழ் ; அப்படியே நீரே எங்களுக்கு அத்யந்தம் பிரியமான வஸ்து ; மற்றவை எதுவும் பிரியமானதலல, ஸுகத்தைக் கொடுப்பதுமல்ல, அவை மேன்மேலும் பயத்தையே தருவன என்கிறார்.

அல்லது, 'முன்பே நீர் செய்த சரணாகதிக்குப் பலமாக இத்தேஹத்தின் முடிவில் உமக்கு மோக்ஷம் நிச்சயம் ; ஆகையால் இங்கே யுள்ளவரையில் "கொண்டபெண்டிர் மக்கள் உற்றார் சுற்றத்தவர் பிறரோடு" ஸுகமாயிருமே' என்றால், இவையெல்லாம் துக்கமும் பயமுமே என்று விவரிக்கிறார் என்னவுமாம்.

ப்ரபோ !—நீர் ஞானியை அந்தராத்மாவாகக் கருதினாலும், நாங்கள் நீரே ஸர்வாந்தர்யாமி, எங்கள் ப்ரபு என்று அறிவோம்.

லகிஷ்ட-ஸுக-ஸங்கதை :—உம்மை யனுபவிப்பதே பேரின்பம் மற்றவை சிற்றின்பம் என்பர் ; ஆனால் இவற்றை 'லகிஷ்டம்'—மிகவும் அல்பமான (அதைக்காட்டிலும் சிறியதில்லாத) இன்பம் என்ன வேண்டும். அதிலும் ஸுகத்தையும் கொடுப்பதில்லை ; அத்ருப்தியை, மேல்மேல் அனுபவிக்க ஆசை என்னும் ஸங்கத்தையே கொடுக்கிறது. **सुखसङ्गेन बध्नाति** (ஸுகஸங்கேந பத்நாதி) என்ற கீதா சுலோகத்தை ஸூசிப்பிக்கிறார். 'ஸுகத்தில் ஆசையைக் கொடுத்து (பாசங்களால்) கட்டுகிறது. இங்கு மேன்மேலும் பந்தம் உண்டாகிறது என்பதைக் காட்ட 'பந்து', 'ஸம்பந்தி' என்கிற பதங்களைச் சேர்க்கிறார்.

ஸ்வக்ருத-கர்ம-நிர்வர்த்திதை:—இப்படி அத்யல்பமான போகஇன்பத்தை அடைய எவ்வளவு பாடுபட்டு புண்யகர்மம் செய்திருக்க வேண்டும் ? ஓர் அஞ்ஜலிக்குக் கிங்கராகும் நீர் இருக்கையில், ஓர் சரண நினைப்புக்கு சாச்வதமான பேரின்பத்தை தாயக்கிரமமாக அளிக்க நீர் காத்துக்கொண்டிருக்கையில், அல்பால்ப ஸுகத்தைத் தேடுகிறோம்.

களத்ர—இது நிதம்பத்திற்கும் இல்லாளுக்கும் பெயர். பெரிய நிதம்பத்தையிட்டு ஸ்திரீயைக் கூறும். ஊன்றிப்பார்த்தால் இந்தப் பெயரே வெறுப்பைக் கொடுக்கவேண்டுமே ? ('சந்த்ரமூர்த்தியைப் போல அழகிய விலாஸத்தால் கவரும் குருகளத்ரத்தையுடையவன்' என்று காதம்பரியில் வர்ணனம். இங்கு 'குருகளத்ரம்' என்பதற்கு 'பெரும் நிதம்பம்' என்றும் 'குருபத்னியான தாரை' என்றும் பொருள்.)

ஸூத—கர்ப்பத்திலிருந்து வெளியே நழுவவிடப்பட்ட சிசு; எத்தனையோ ஸூதங்களான கர்மங்கள் செய்யவேண்டும் ஒரு ஸூதனைப் பெற. ‘தாரமென்னும் சுழல், மக்கள் ஸயுஜர் என்னும் முதலைகள், இவற்றோடு கூடிய ஸம்ஸாரம் என்னும் பயங்கரமான கடல்’ என்று முகுந்தமாலை.

ஸோதர—பங்காளிகள்; ‘ஞாதியிருந்தால் நெருப்பு வேறு வேண்டுமோ?

அநுசர—உமக்கு நாங்கள் அடிமை செய்யவேண்டியிருக்க, அடிமையான எங்களுக்கு அடிமைகளா? **कुरुष्व मामनुचरं** (குருஷ்வ மாமநுசரம்) என்பதன்றோ எங்கள் நிலை?

பந்து—பாசங்களால் கட்டுகிறவர்கள். ஸம்பந்திகள் என்பதால் இவர்கள் எல்லோருமே நன்றாய்க் கட்டுகிறவர்கள்.

தந-ப்ரப்ருதிகைரபி—தனம் முதலியவற்றாலும். ‘புத்ரனைக் காட்டிலும் ப்ரியம், வித்தத்தைக் காட்டிலும் ப்ரியம்’ என்றது உபநிஷத், புத்ரனைக் காட்டிலும் பணத்தில் ப்ரீதிவைப்பர்; அது ஆபத்தே. **महदपि धनं भूरि निधनं** (மஹதபி தநம் பூரி நிதநம்) என்று ப்ரபோதசந்த்ரோதயம். **ऐश्वर्यं शत्रुशालिता** (ஐஶ்வர்யம் ஶத்ரு ஶாலிதா) என்று பாரதம்.

ப்ரசுர—கொஞ்சம் ஸுகம் இருப்பதை மறுக்கவில்லை; ஆனால் பயமே அதிகம்.

பீதிபேதோத்தரா:—பலவகையான பயங்களில் மிகவும் அதிகமான பயங்கள்; மேலும் பயத்தை விளைவிப்பன.

த்வத்-அநுபூதி-போக-அர்த்திந:—**अभयं प्रतिष्ठां विन्दते** (அபயம் ப்ரதிஷ்டாம் விந்ததே) என்று உம்மிடமே அபயத்திற்கு நிஷ்டையை விரும்புமவர்கள்.

த்ருதிம்—ஸந்தோஷத்தை; அபயத்தை; தரிப்பை.

ந பிப்ரதி—தரிக்கிறதில்லை. ஸந்தோஷமில்லை யென்பது மட்டுமில்லை; தரிப்பதே அஸாத்யமாகிறது. (12)

न वक्तुमपि शक्यते नरकगर्भवासादिकं
वपुश्च बहुधातुकं निपुणचिन्तने तादृशम् ।
त्रिविष्टपमुखं तथा *तव पदस्य देदीपतः
किमत्र न भयास्पदं भवति रङ्गपृथ्वीपते ॥ १३ ॥

[* दिवि पदस्य ते दीव्यतः—पा.; दीप्यतः—पा.]

ந வக்துமபி ஶக்யதே நரக-கர்ப்ப-வாஸாதிகம்
வபுஶ்ச பஹு-தாதுகம் நிபுண-சிந்தநே தாத்ருஶம் ।
த்ரிவிஷ்டப-முகம் ததா தவ பதஸ்ய தேதீபத:
கிமத்ர ந பயாஸ்பதம் பவதி ரங்க-ப்ருத்வீ-பதே ! ॥ (13)

ரங்கப்ருத்வீபதே—ரங்கபூமிக்கு அரசனே!	த்ரிவிஷ்டபமுகம்—ஸ்வர்க்கம் முதலியதும்
நரக-கர்ப்பவாஸாதிகம்—நரகம் கர்ப்பவாஸம் முதலியது	தேதீபத:—ஜ்யோதிர்மயமாய் ப்ரகாசிக்கும்
வக்துமபி—(இவ்வளவு கஷ்டமென்று) சொல்வதற்குக்கூட	தவ பதஸ்ய—உம் ஸ்தாநத்தை (உம் சுடரடியை) (யிட்டுப் பார்த்தால்)
ந ஶக்யதே—சக்யமல்ல;	ததா—அப்படியே (நரக துல்யமாகும்);
வபு: ச—தேஹமும்	அத்ர—இங்கே (இப்புவியில்)
நிபுணசிந்தநே—உன்னி ஆலோசித்தால்,	கிம்—எதுதான்
தாத்ருஶம்—அப்படியே துஸ்ஸஹமானது;	பயாஸ்பதம் ந—பயத்திற்கிடமாவதில்லை?

தேஹ ஸம்பந்திகளான சுற்றத்தார் வேண்டாம்; தேஹத்தோடாவது ஸுகமாயிருக்கலாமோவென்னில், அதுவும் ஸாத்யமில்லை. **विपद्गेहं देहं** (விபத்-கேஹம் தேஹம்) ‘விபத்துக்களுக்கெல்லாம் இல்லம் சரீரம்’ என்று ப்ரபோத சந்த்ரோதயம். நரகம் பெருந்துக்க மயமானது; அதில் அடைபடுவதிலும் கர்ப்பப்பைக்குள் அடைபடுவது அதிகக் கஷ்டம் என்பதை அதற்குப் பிறகு கர்ப்பவாஸத்தைக் கூறுவதால் ஸூசிப்பிக்கிறார்.

ஆதிகம்—முதலியது. உள்ளேயிருக்கும் துன்பம் ஒரு புறமிருக்க, வெளியே வருவதற்கு எவ்வளவு கஷ்டம். **योनेः शरीरं** (யோநே: ஶரீரம்) என்று ஸூத்ரகாரர் வைராக்யபாதத்தை முடித்தார்; அதற்கு முன் ஸூத்ரத்தில் ரேதஸ்-ஸிக்-யோகத்தைப் பேசினார். கர்ப்பப்பையின் யோகம் கிடைக்க ரேதோயோகம் கிடைக்கவேண்டும் என்று ஜுகுப்ஸையைக் காட்டினார்.

வபுஶ்ச—‘நரகத்திலும் கொடியது தேஹம்’ என்றார் ப்ரஹ்லாதாழ்வான். **देहे चेत्प्रीतिमान् मूढो नरके भविता च सः** (தேஹே சேத் ப்ரீதிமாந் மூட: நரகே பவிதா ச ஸ:) தேஹமென்னும் நரகக்குழியில் ப்ரீதி வைப்பானாகில், அந்த மூடனுக்கு நரகத்திலும் ப்ரீதியே ஏற்படும். தேஹத்திலும் நரகம் கொடியதோ? அவனுக்கு நரகவாஸம் தண்டனையாகாது என்று கருத்து.

பஹு-தாதுகம்—**सप्तधातुमयं त्रिमलं** (ஸப்ததாதுமயம் த்ரிமலம்) என்பர்.

நிபுண சிந்தநே—ப்ரஹ்லாதன் நிரூபித்ததுபோல் ஆழ்ந்து யோசித்தால். தாத்ருஶம்—நரகாதிகள் போன்றதே.

தவ பதஸ்ய தேதீபத:—அத்யர்க்காநலதீப்தமாய் சுடர்ச்சோதியான பரமபதமென்னும் உம் ஸ்தாநம் ப்ரகாசிக்கையில், அதை உத்தேசித்து. 'உம் சுடரடியின் இன்பத்தை ஆலோசிக்குங்கால்' என்று அரங்கன் விஷயமுமாகலாம். அரங்கமென்பது மற்ற திவ்யதேசங்களுக்கு உபலக்ஷணம்.

த்ரிவிஷ்டப-முகம் ததா—ஸ்வர்க்கமும் மற்ற ஸத்யலோகமும் அப்படியேயாகும். **निरयो यस्त्वया विना** (நிரயோ யஸ்-த்வயா விநா)- உம்மை விட்டுப் பிரிவு நரகமே.

அத்ர கிம் ந பயாஸ்பதம்—இந்தப் பூமண்டலத்தில் எதுதான் பயத்திற்கு இடமில்லை ?

ரங்க-ப்ருத்வீ-பதே—தப்பிச் சொன்னேன். இந்தப் பூமண்டலத்தில் ரங்கமென்னும் ப்ருதிவீபாகம் ஸுகத்தைத் தருவதே; பயமற்றதே. இந்தப் பூமியில் இருந்தாலும், அரங்கமும் அரங்கம்போன்ற திவ்யதேசங்களும் அபயத்தையும் ஸுகத்தையும் தருபவையே. ஆகையால் ப்ருத்வீ பதியான நீர் அவற்றை ரக்ஷித்துத்தரவேண்டும்.

தேதீபத:—என்ற பாடம் சுத்தம். (13)

भवन्ति मुखभेदतो भयनिदानमेव प्रभो !
शुभाशुभविकल्पिताः जगति देशकालादयः ।
इति प्रथितसाध्वसे[1] मयि दयिष्यसे त्वं न चेत्
क इत्थमनुकम्पिता[2] त्वदनुकम्पनीयश्च कः ॥ १४ ॥

பவந்தி முக-பேததோ பய-நிதாநமேவ ப்ரபோ !
ஶுபாஶுப-விகல்பிதா: ஜகதி தேச-காலாதய: ।
இதி ப்ரதித-ஸாத்வஸே மயி தயிஷ்யஸே த்வம் ந சேத்
க இத்தம் அநுகம்பிதா த்வதநுகம்பநீயஶ்ச க: ॥ (14)

ப்ரபோ—என் ப்ரபுவே!
ஶுபாஶுப-விகல்பிதா:—'சுபம்' 'அசுபம்' என்று பிரித்துப் பேசப்படும்
தேஶகாலாதய:—தேசம் காலம் முதலியவை
முகபேதத:—ஒரொரு பர்யாயமாக
பயநிதாநமேவ—பயத்திற்கே காரணமாக
பவந்தி—ஆகின்றன
இதி—என்று (இப்படி)
ப்ரதிதஸாத்வஸே—மிகவும் பரந்த பயத்தையுடைய
மயி—என்னிடம்
த்வம்—நீர்
ந தயிஷ்யஸே சேத்—தயவு செய்யாமற் போனால்,
இத்தம்—இப்படி
க: அநுகம்பிதா—வேறு யார் தயை செய்வாருளர் ?
த்வதநுகம்பநீய: ச—உம் தயைக்குத்தக்க பாத்ரம்
க:—(என்னிலும்) யாருளர் ?

[१. प्रचुरसाध्वसे—पा. २. इत्थमनुकम्पते—पा.]

-ளையே உசிதமென்று தோன்றுகிறது. இங்கு க்ரந்த ப்ரசுரமென்கிற ஸம்ப்ரதாயமுமுண்டு. பரிக்ருச்யமான மட்டிலே விவரிக்கை உசிதமென்று கொண்டு அவ்வளவிலே இழிந்தோம்.

அவ—ஆனாலும் இப்படி ஸர்வேச்வரனே இந்த ஸம்ப்ரதாயத்திற்கும் பரமாசார்யன் என்றால் ஸகல சித்தாந்தங்களுக்கும் அவனே ப்ரவர்த்தகனாகையாலே இத்தனை அர்த்த பேதங்கள் உண்டாகைக்கு காரணமென்னென்ற வருளிச் செய்கிறார்.

மூ—ஸ்ரீபாஷ்யகாரருடைய சிஷ்ய ஸம்ப்ரதாயங்களில் ஒன்றிலும் அர்த்த விரோதமில்லை.

வ்யா—ஸர்வசித்தாந்தங்களுக்கும் எம்பெருமானே ப்ரவர்த்தகனானாலும் லீலார்த்தமாக ஜகத் ஸ்ருஷ்டியில் உறப்பட்டானாகையாலே, லீலா விபூதி பாழ்பட வொண்ணாதென்றெண்ணி பலபல மாய மயக்குகளால் இன்புறும் இவ்விளையாட்டுடையவனாய் ப்ரவர்த்திப்பித்த ஸம்ப்ரதாயங்களில் பரஸ்பரம் அர்த்த பேதம் இருந்தாலும் ஆழ்வார் நாதமுனிகள் ஆளவந்தார் மூலமாக ப்ரவர்த்திப்பித்த இந்த ஸம்ப்ரதாயமே ஸமீசீனமென்று ஞாய ப்ரஜ்வலித சேதஸ்ஸாயிருந்த எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யாதிகளான பல க்ரந்தங்களாலே பரவாதி மூலமாக வரும் மாசற நிர்ணயித்து, கோமாசியாண்டான், பிள்ளான், ஆச்சானும்பிள்ளை, எம்பார், மூலமாக ப்ரவர்த்திப்பித்த இந்த ஸம்ப்ரதாயத்திலே அர்த்த விரோதமொன்றுமில்லை என்றபடி. ஆகையாலேயிறே பிள்ளை தாமிட்டருளின ஸம்ப்ரதாய க்ரந்தங்களிலே எம்பார், பட்டர், நஞ்சீயரளவுமுள்ள வாசார்ய ஸ்ரீஸூக்திகளை ப்ரமாணமாகக் காட்டுகிறது. ஸ்ரீ பாஷ்யகார சிஷ்ய ஸம்ப்ரதாயங்களில் என் கையாலே சிலர் கத்யத்தையும் பாஷ்யத்தையும் தூஷித்து ரஹஸ்யத்ரயங்களில் ஸ்ரீபாஷ்யாதி விருத்தமாக அபார்த்த கல்பநம் பண்ணி இது பாஷ்யகார ஸம்ப்ரதாயமென்று ப்ரவர்த்திப்பியாநிற்கும் ஸம்ப்ரதாயம் ஸத்ஸம்ப்ரதாய மன்றாகையாலே அதிலுள்ள அர்த்த விரோதம் மதாந்தரங்களிலுள்ள அர்த்த விரோதங்கள் போலேயாகையாலே அதிங்கு விவக்ஷிதமாகாது. ஒன்றிலு மென்றது—ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்ய ரஹஸ்யத்ரய பகவத்விஷய ரூபமாயிருந்த ஸம்ப்ரதாயங்களாலிலே ஒன்றிலுமென்றபடி. அன்றிக்கே—பல சிஷ்யர்களைக் கொண்டு பஹுமுகமாக ப்ரவர்த்திப்பித்த ஸம்ப்ரதாயங்கள் ஒன்றிலும் என்றுமருளிச் செய்வதுண்டு. அர்த்த விரோதமில்லை என்றது—நாலு க்ரந்த ஸம்ப்ரதாயங்களிலும் அர்த்த விரோதமில்லை. பரஸ்பர விரோதமுமில்லை என்றபடி.

அவ—ஆனாலும் இப்படி அர்த்த விரோதமில்லை என்று சொல்லப் போமோ? திருமந்த்ரத்தில் ப்ரணவம் ஸகண்டமென்னும் அகண்டமென்னும், ஸகண்டமானபோது மத்யமாக்ஷரம் அவதாரணபரமென்னும், லக்ஷ்மீ வாசகமென்றும், அகாரம் ஸ்ரீவிசிஷ்டனைச் சொல்லுகிறதென்றும் எம்பெருமானை மாத்திரம் சொல்லுகிறதென்றும் மகாரம் ஜீவஸாமாந்ய வாசகமென்றும் அப்போது அஹம் சப்தாத்யாகாரம் வேணுமென்றும், அஸ்மச்சப்தத்தில் வ்யஞ்ஜந மாத்திரமாய் ச்ருங்க க்ராஹகமாய் அஹமர்த்தத்தைக் காட்டுகிறதென்றும், அப்படியே நமச்சப்த நாராயண சப்தங்களிலும் த்வயத்திலும் சரமச்லோகத்திலும் பல ப்ரகாரமாக அர்த்தபேதங்கள் ரஹஸ்ய க்ரந்தங்களிலே காணப்படயில்லையோ வென்ன வருளிச் செய்கிறார்.

மூ—வாக்ய யோஜநா பேதமே யுள்ளது.

வ்யா—ரஹஸ்ய சாஸ்திரங்களில் சொல்லுமர்த்தங்களெல்லாம் வாக்ய யோஜநா பேதத்தாலே விவக்ஷிதார்த்தங்களொழிய பரஸ்பரவிருத்தங்களாய் அவிவக்ஷிதார்த்தங்களென்ன வொண்ணாதென்று திருவுள்ளம். வாக்ய யோஜநா பேதமென்றது திருமந்த்ரம் ஏகவாக்யமென்றும் வாக்யத்வய மென்றும், வாக்யத்ரய மென்றும் கொண்டு ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களை இதில் சாப்தமாகவாதல் ஆர்த்தமாகவாதல் ப்ரதிபாதிக்கும்படி பத்துபடி யோஜநா பேதங்கள் ஸம்ப்ரதாய ஸித்தங்கள் என்கிற திருவுள்ளத்தாலே. இப்படி த்வயத்திலும் சரம ச்லோகத்திலும் யோஜநா பேதம் ஸம்ப்ரதாய ஸித்தம். இவையெல்லாம் பெரிய ரஹஸ்யத்திலே பதவாக்ய யோஜநா ப்ரகரணங்களிலே ஸத்ஸம்ப்ரதாய க்ரமத்தாலே கேழ்க்க ப்ராப்தம். "அர்த்த விரோதமில்லை, யோஜநா பேதமாத்திரமே உள்ளது" என்றவித்தாலே எம்பெருமானுக்கு [illegible] நிரபேக்ஷோபாயத்வமே ஸ்வ ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரதாந ப்ரதி தந்த்ரமாகக் கொண்டு நாயமாத்மேத்யாதியான ச்ருதிக்கு ஸ்ரீபாஷ்யகாரர் ப்ரதம ஸூத்திரத்தில் முக்த கண்டமாகவிடுத்து வ்யாக்யாநமிட்டருளின ஸ்ரீஸூக்திகளுக்கு விருத்தமாயும் ப்ரக்ருதாஸங்கதமாயு மிருந்த விநியோக ப்ருதக்த்வந்யாயாவலம்பநத்தாலே நிரபேக்ஷோபாயத்வ ஸாதகவுபபாதநம் பண்ணி அத்தை அவலம்பித்து வேதாந்த சாஸ்திர பின்ன சாஸ்திரமாய் ப்ரவ்ருத்தமான சாஸ்திரத்திலே வேதாந்த சாஸ்திரஸித்தங்களான பஹ்வர்த்தங்களுக்கு விரோதம் காண்கையாலே அது ஸ்ரீபாஷ்யகார சிஷ்ய ஸம்ப்ரதாயத்தை அடியொத்தி ப்ரவ்ருத்தமானதென்ன வழியில்லை. யோஜநாபேதேந அர்த்த பேதம் கொள்ளும்போதும் யோஜநாந்தரங்களில் சொல்லுமர்த்தங்களும் விவக்ஷிதங்களாகையாலே அநுஷ்டாந விரோதமில்லை என்று திருவுள்ளம்.

அவ—ஆனாலும் இப்படி அநுஷ்டான விரோதமில்லை என்னப் போமோ? இந்த ஸம்ப்ரதாயத்திலே தானே வர்ண பேதேந ஆச்ரம பேதேந, அநுஷ்டாந வைஷம்யம் காணப்படவில்லையோ? ஒரு வர்ணத்திலே ஓராச்ரமத்திலே தானே சிலர் அக்நிஹோத்ர தர்ச பூர்ணமாஸேஷ்ட்யாதிகளும் சிலர் ஔபாஸந தர்ச பூர்ணமாஸ ஸ்தாலீபாகம் மாத்திரமும், சிலர் ஸஹஸ்ர வ்ருத்தி காயத்ரீ ஜபமும் சிலர் யதா சக்தியும், புத்தி பூர்வக பாபத்தில் சிலர் ப்ரதிபதோக்த ப்ராயச்சித்தமும், சிலர் ப்ராயச்சித்த ப்ரபத்தியுமாய் இப்படி நாநா ப்ரகாரமாக அநுஷ்டாநபேதம் காணப்படவில்லையோ என்ன வருளிச் செய்கிறார்.

மூ—தேச காலாவஸ்தா விசேஷங்களாலே வரும் அநுஷ்டாந வைஷம்யம் சாஸ்திராநுமதம்.

வ்யா—[illegible] என்று வர்ணபேதேந கர்மங்கள் பிந்நங்கள் என்றும் "[illegible]" என்று தனக்கடைத்த வர்ணாச்ரமாசாரங்களைக் கொண்டே பகவத் ஸமாராதநம் பண்ணவேணுமென்றும் இது விஷமாநுஷ்டாநமாகாதாகையாலே அது பண்ணுமிடத்தில் முக்கியாநுஷ்டாநத்துக்கு அசக்யமாயிருந்த தேச காலா வஸ்தைகளிலே "[illegible]" என்று அநுகல்பம் சாஸ்திராநுமதமாகையாலே விரோதமில்லை. அநுஷ்டாநவைஷம்யம் காம காரிதமாகில்றே விரோதம் வருவது. தேச காலாவஸ்தா விசேஷங்களாகிறது— ஸுபிக்ஷ துர்பிக்ஷ தேசங்கள், சீதோஷ்ண காலங்கள், பால்ய யௌவநாதிகளாயும், ஸகிஞ்சநத்வாகிஞ்சநத்வாதிகளுமான அவஸ்தைகள். வருமநுஷ்டாந வைஷம்யம் என்று ஸித்தாநுவாதத்தாலே இதுகளிலே அநுஷ்டான வைஷம்யம் ஒருவருக்கும் தப்பாதென்று தோற்றுகிறது. சாஸ்திராநுமதம்—இப்படி விஷமாநுஷ்டாநமும் சாஸ்திர ஸித்தமாகையாலே அநநுஷ்டாநமில்லையாய்

[illegible] ।
[illegible] ॥

என்கிறபடிக்கு அளிய நம்பையல் என்னுதபடிக்கு ஆகான் என்று திருவுள்ளம்.

அவ—ஆனாலும் இப்படி ஆதேஹபாதம் சாஸ்திர வச்யனாயே இருக்கவேண்டுமென்று ஸம்ப்ரதாயமென்னப் போமோ, "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்று த்யாகம் விஹிதமாகையாலே யதேஷ்டாசார பக்ஷமும் "த்யஜ தர்ம மதர்மஞ்ச" என்கையாலே விஹித நிஷித்த த்யாக பக்ஷமும், வர்ணாச்ரம தர்மங்கள் ஔபாதிகங்களாகையாலே ஸ்வரூப

ஞாகம் பிறந்தவனுக்கு த்யாஜ்யங்கள் என்கிற பக்ஷமும், இவை செய்யவுமாம் தவிரவுமாம் என்கிற பக்ஷமும், இவை தவிர்ந்தால் உகப்பிழக்குமத்தனையே, வேறொரு ப்ரத்யவாயமில்லை என்கிற பக்ஷமும் இவை யநுஷ்டியாதபோது லோக விரோத மாத்திரமே ப்ரத்யவாயமென்கிற பக்ஷமும் மற்றுமிப்புடைகளில் சொல்லுமவை எல்லாம் ஸ்ரீ பாஷ்யகாரர் திருவுள்ளமன்றே? என்ன வருளிச் செய்கிறார்.

மூ—சோராபராதத்தை மாண்டவ்யன் பக்கல் ஆரோபித்தாப் போலே ஸ்வேச்சைக்கநுகுணமாக அநிபுணர் சொல்லுமது வக்தாக்களுக்கே தோஷமாம் என்று.

வ்யா—சோராபராதத்தை மாண்டவ்யன் பக்கல் ஆரோபித்தாப் போலே இதி—மாண்டவ்யன் என்பாரொரு ப்ராஹ்மணன் தீர்த்த யாத்ரா பரனாயிருந்து க்ராமங்களுக்கு ஸமீபத்திலுள்ள தீர்த்த தீரத்திலே ஆச்ரம கல்பநம் பண்ணி தபோநிஷ்டனாயிருக்க, கள்ளர் திரவ்யங்களை அபஹரித்து வந்து இவராச்ரமத்திலே ஒளித்திருக்க, ராஜப்ருத்யரும் இவர் ஆச்ரமத்தில் இருப்பதாக அறிந்து, தபோநிஷ்டரான இவரை விசாரிக்க, இவரும் தபோநுஷ்டாந ஸக்தியாலே இவர்கள் வார்த்தையை செவிப்படுத்தாதே இருக்க ப்ருத்யரும் இவராச்ரமத்திலே தானே ஒளித்துக் கிடந்த கள்ளர்களை தேடிப் பிடித்து தபோநிஷ்ணாதனான மாண்டவ்யனையும் கள்ளனாக நினைத்து ராஜாவுக்கு அறிவிக்க அவனும் வாஸ்தவார்த்த மறியாதே ப்ருத்யவாக்யத்தாலே தானே எல்லாரையும் வதத்துக்கு நியமிக்க, ப்ருத்யரும் மற்ற கள்ளரோப்பந்தமே இவனையும் வதத்துக்காக சூலாரோபணம் பண்ண, தபோபலத்தாலே இவன் மாத்திரம் ஜீவித்திருந்தான் என்று, பாரத கதை. மாண்டவ்யன் பக்கல் இதி—மாண்டவ்யனென்கிறார்—ஆணி மாண்டவ்யன். இவன் ஆணி மாண்டவ்யன் ஆனபடி—இவன் சூலாக்ரத்திலே தானே தபோநுஷ்டாநம் பண்ணிக் கொண்டிருக்க,

ஸஞ்சாவம்வாஸம் ஜந்து: ஏதந்யோய வாஸவ ॥

என்கிறபடியே ரிஷிகள் போரநொந்து “தேநாஜ்ஞாத ஶகுநாஸ்ரமா” என்கிறபடியே பக்ஷிகளாக வந்து, “ஸமவநு கேநதோஷேண மஹாவிஷ ஜஸஜ்ஜ: । ஶ்ராந்தோஷ்ஜாத்ரேஹ ஸுவஜ்ஜ ஸுமோவொவஸிய த: ॥ என்கிறபடியே தர்மாநுஷ்டாநத்தாலே பாபகந்தமில்லாதே கிடந்த உனக்கு யாருடைய தோஷத்தாலே இந்த துக்காநுபவம் உண்டாயிற்றென்று கேட்க, இவனும் “தோஷத: கம் மஹிஷ்யாமி நஹிமேந்யோபராத்யதி” என்று எவன் தோஷத்தாலே என்று சொல்லுவேன்? எனக்கபராதிகள் ஒருத்தருமில்லை என்ன; அருகிலிருந்த ராஜ ப்ருத்யர் இதைக்கேட்டு ராஜாவுக்கு அறிவிக்க, ராஜாவும் மந்திரிகளோடு விசாரித்து,

“பூர்வ பாதந்ய க்ருதம் பாபஜ்ஞாநாத்ப்ரஷி ஸத்தம ।

ப்ரஸாதயே த்வாம் ந க்ரோத்தும் அர்ஹஸி ॥

என்கிறபடியே தான் செய்த அநீதிக்கு க்ஷாபணம் பண்ணி க்ரோதமாகாதென்று ப்ரஸாதநம் பண்ண,

மஹர்ஷிர் ஜ்ஞாத ராஜஜ்ஞ ப்ரஸாத மகரோந்முநி: ॥

என்கிறபடியே மாண்டவ்யனும் அவன் பக்கல் ப்ரஸந்நனாயிருக்க ராஜாவும் சூலத்தை எடுத்துவிடும்படி ஆக்ஞாபிக்க “அஶக்நுவந்தோ நிஷ்க்ரஷ்டும் ஶூலம் ஸ்கந்தாந்திகே” என்கிறபடியே ராஜஸேவகர் அதை பிழுத்தெடுக்க அசக்தராய் சூலத்தை மூலத்தில் அறுத்துவிட “ஸத யாதந்தகதே நைவ ஶூலேந வ்யசரந்முநி:” என்கிறபடியே இவன் அச்சின்னமாயிருந்த சூலத்தோடே ஸஞ்சரியா நிற்க, “தேநாணிமாண்டவ்ய இதி ப்ரதிதம் நாம ஜஜ்ஞிரே” என்கிறபடியே தர்மிஷ்டராயிருந்த இவருக்கு அன்று முதல் ஆணி மாண்டவ்யர் என்று பேராயிற்று. இது ஸ்ரீவிதுரோத்பத்தி மூலகதை. மாண்டவ்யர் பக்கல் சோராபராதத்தை ஆரோபித்தாப்போலே என்றந்வயம். இவன் நிரபராதியாய் சோர வ்ருத்தாந்தங்கள் ஒன்றுமறியாதே தபோநுஷ்டாந பரனாயிருக்கச் செய்தேயாயிற்று கள்ளரைப்போலே இவனை அபராதியாக்கினது. ஆரோபணமாகிறது—இல்லாததை உண்டென்று சொல்லுமது, ஆரோபித்தாப் போலே என்றது. அநிபுணர் சொல்லுமதுக்கு திருஷ்டாந்தம். ஸ்வேச்சைக் கநுகுணமாக என்றது—சாஸ்திர ஸித்தமன்றிக்கே ஸ்ரீ பாஷ்யகாரரும் தச்சிஷ்யரும் இப்படி சொல்லாதிருக்க காமசாரவாத பக்ஷணங்கள் ஸ்வேஷ்டங்களாகையாலே தத்விஷயகமான ஸ்வேச்சைக் கநுகுணமாக என்றபடி. அநிபுணர் சொல்லுமது என்றது. ந்யாய வித்துக்களன்றிக்கே பண்டிதம் மந்யராயிருந்து ஸ்ரீ பாஷ்யகாரர் பக்கல் த்வேஷத்தாலே ஆரோபணம் பண்ணிச் சொல்லுமதென்றபடி, இவர்கள் நிபுணராயிருந்தால் ஸ்ரீ பாஷ்யகார தச்சிஷ்ய ஸ்ரீ ஸூக்திகளுக்கு விருத்தமாக இப்படிச் சொல்வார்கள். ஹவிர்நிவேதநத்திலே ஸ்ரீ பாஷ்யகாரர் “சாஸ்த்ரா விருத்தாநி ஸம்ப்ருத்ய” என்றருளிச் செய்கையாலே சாஸ்த்ரோக்த தர்மத்யாகம் ஆகாதென்றதாகிறது. ஆழ்வாரும் பட்டரும் தாங்கள் அருளிச்செய்த திவ்யங்களிலே,

ஶ்ருதி ஸ்ம்ருத்யுதிதம் கர்ம யாவஜ்ஜீவமதந்த்ரித: ।

குர்யாந்நைவ நாவஜ்ஞேயோ வர்ணாஶ்ரம தவர்மபேக்ஷ ॥

என்று யாவஜ்ஜீவ யநுஷ்டாநத்தை அருளிச் செய்தார்கள். வங்கி புரத்து நம்பிகளும்

“ ஶாயதீ ஜவவாயஷ்ஜம் ஐ்ர்ஷமாவஜுந வாலாவஷ்கம் ।
ஸாஙுாம் கஜஷ்ஜாவிஷம் ஸாயம ஸஜவா்ய யபாவியி ॥
ஸதிஷாஜஹ்யாஷிஹிகூஷ்வெ்யா: ஜவெஜ ரவி யவெயாஷிவெகஃ ।
ஹவுகவாதீ நதீவெஹாதாஷள உஜங்காஷு ஜவிகஷிவாநு ॥

என்றும்

தவெதாஜாயு்ஷிநம் கஜஷ்வெலாஷிதம் ஶ்ருதிவெவாஷிதம் ।
ஷூாநாஷி ஜுவஜுயஜ்ஞாஜம் கூகவாவிஜுஜதஷி் தஃ ॥

என்றும்

வெஹாஜம் விதகீயாஂவெஙூாஜ கநுயாஶாஷி கஂவயஜ ॥

என்றும் தர்மாநுஷ்டாநத்தை அருளிச்செய்தார். நஞ்சீயரும் “ ஸ்ரீவாஶ ஶாஙாயஷ் உாணள ஸஂஶ்ருவெ ஜஹி ” என்று, ஸ்வாசார்ய நமஸ்காரம் பண்ணி,

ஹஶவஜாணாவெஹாஜவஶி வயஷ்ஜவியி கூஜம் ॥
வஙகாஷிஷிஶநவெஷ்யம் நிதூம் ஸஜஹிஷ்ஷவெஹ ॥

என்று தொடங்கி,

ஶுவெவாஷீதூாஷிஹிஜஷ்வெதூ வஷ்ஜவவெகஃ வாஜாதநஃ ।
ஸஂவெபூாககூ ஜஂதூாவஜநம் ஜவெஜஷூஜ வூதிவாஷிவெகஃ ॥
ஶுஷிதூாஜஷூதஸூாவஷ்யம் விதீயஷ் வாஜாதநஃ ।
வூதிவாஷிகயா விவெஷூாஃ ஸாவிதூ் தஂஜவெஙஶிஂ ॥
யூாயநு ஜவெஷூாவகிவெஷ்த தவெஜவ வாஶவெஷாஜஜஜ ।
நாஶாயணாதீகாநு வெஷவாநு ஜஷீநு ஸஜவஷ் வெயதீதூநு ॥

என்றருளிச் செய்தார்.

ஸ்ரீ பாஷ்யகாரரும் “ வெஷவாநூஷீநு விதூநு ஹஶவாகாநு யூாகவா ஸஜவஷ்ூ ” என்றருளிச் செய்தார். இப்படி ஸ்ரீ [redacted] பாஷ்யகார தச்சிஷ்ய ப்ரசிஷ்யர்கள் தர்மாநுஷ்டாநத்தை சொல்லாநிற்க இதுக்கு விருத்தமாக, இரண்டொத்தொரு பரம்பரைக்கு மவகாசமில்லாதே த்யாக விதி சொல்லுவாரை அநிபுணரென்னத் தட்டில்லை. சில ப்ரபந்நர் அர்த்த காமங்களடியாக இவர்களை நலியப்புக்கால் இது பரபந்ந தர்மமென்றுகக்க வேண்டும்படியான ஸ்வாநர்த்தத்தைக் கணிசியாதே இப்படிச் சொல்லு வாரை அநிபுணர் என்கிறது என்னவுமாம். வக்தாக்களுக்கே தோஷமாம் என்றது இவர்கள் சொல்லும் ஸ்வரூபத்யாகம் பகவத் பாஷ்யகார தச்சிஷ்ய ப்ரசிஷ்ய ஸ்ரீ ஸூக்திகளுக்கு விருத்தமாகையாலே விப்ரலம்பகராய்

வெஜாதிஷம் வூவஹாஶஂவ வூாயஷீஜம் ஜிகிதீகம் ॥
விநாஶாவெஷூண யொஜு மொஜ தஜாஹாஜுஷ்வஜவாதஜம் ॥

என்கிற ந்யாயத்தாலே ப்ரஹ்மஹத்யாதுல்ய தோஷமிவர்களுக்குண்டென்னபடி, வக்தாக்களுக்கே என்றவவதாரணத்தாலே ஸ்ரீ பாஷ்யகார சிஷ்ய ப்ரசிஷ்யர்கள் பக்கல் தோஷமில்லை என்று ஜ்ஞாபிதமாகிறது.

அவ—ஆனாலும் திருமந்த்ரம் மூன்று பதமாய் மூன்றர்த்தங்களாலே மூன்று வாக்ய மென்றன்றோ ஸம்ப்ரதாயம்.

“ அகாரார்த்தாயைவஸூஜஹஜஜஹூம் நதிவஹா
நராணாம் நிதூாநாஜயநதிதி நாராயணவஜம் ।
யஜாஹாவெஷ கா்ஜம் ஸகஜுஜவி ஸவஷ்தூ
ஸகஜுாஜுவஹூாஜுாவிஷீூஜஷ்ஜ ஸஹஜ வெகஜுயஷ் வியயஃ ॥

என்று மூன்று வாக்யமாகவன்றோ பட்டர் அருளிச் செய்தது. இப்படி இருக்க, இதுக்கநேக ப்ரகார வாக்யார்த்த வர்ணநம் தங்களிஷ்டப்படி கல்பிதங்களன்றோ என்னவருளிச் செய்கிறார்.

மூ—திருமந்திரத்தில் பதார்த்த வாக்யார்த்தங்கள் எல்லாம் மூலபூத நிருக்தாதி வாக்ய விசேஷங்களாலே வந்தவை என்று.

வ்யா—பதார்த்த வாக்யார்த்தங்களெல்லாம் ஸ்தூலதிருஷ்டியிலே திருமந்திரத்திலே பதம் மூன்றானாலும் ப்ரதமபதமாயிருந்த ப்ரணவம் அகண்டமென்றும் ஸகண்டமென்றும் ஸகண்டமானபோது மூன்றக்ஷரமாய் மூன்று பதமாயும் நமஸ்ஸும் அப்படியே அகண்டமாயும் ஸகண்டமாயும் ஸகண்டமானபோது இரண்டக்ஷரமும் இரண்டு பதமாயும் நாராயணபதம் தத் புருஷ பஹுவ்ரீஹி ஸமாஸங்களாலே இரண்டு படியாயும் இப்படி பதவிபாகமானபோது, பதார்த்தங்களும் பேதித்து, ததநுகுணமாக வாக்யார்த்தங்களிலுள்ள பேதங்களெல்லாம் மூலபூத நிருக்தாதி வாக்ய விசேஷங்களாலே வந்தவை. இந்த பதார்த்த வாக்யார்த்தங்கள் கேவல ஸ்வகபோல கல்பிதங்களன்றிக்கே இதுக்கு மூலங்களாக நிருக்தங்கள் உண்டாகையாலே அவைபடியாக வந்த ஸம்ப்ரதாய ஸித்தங்களாகையாலே தோஷமில்லை. மூலபூத நிருக்தங்கள் ச்ரௌதஸ்மார்த்த பாஞ்சராத்திரங்களிலே உள்ள நிருக்தங்கள். ஆதிசப்தத்தாலே மூலமாகிய ஓற்றையெழுத்தை கண்ணபுற மொன்றுடையானுக்கு அடியேன் இத்யாதிகளான ஆழ்வாரருளிச் செயல்களும் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளும் விவக்ஷிதங்கள். இவையெல்லாம் பெரிய ரஹஸ்யத்திலே பதவாக்யயோஜனையிலே விசதமாக அநுஸந்தேயம்.

அவ—இப்படி அநேக ப்ரகாரங்களான பதார்த்த வாக்யார்த்தங்களாலே திருமந்திரம் முழுக்க ஸ்வரூபோபாய புருஷார்த்த ப்ரகாசகமாயிருக்க, இதில் பதங்களில் அடைவேயோ, சில பதங்களிலேயோ, அர்த்த பஞ்சகாநுஸந்தாநம் பண்ணுமது விருத்தமன்றோ? இது வாக்யார்த்தத்திலே சேராதே என்ன வருளிச் செய்கிறார்.

மூ—இதில் பதத்திரயத்திலுமாகவாதல், ப்ரதம பதத்திலே யாதல் ப்ரதமாக்ஷரத்திலே யாதல் ஸம்க்ஷேபவிஸ்தர க்ரமத்தாலே சப்தார்த்த ஸ்வபாவங்களைக் கொண்டு அர்த்த பஞ்சகாநு ஸந்தாநம் பண்ணுமதுவும் அந்யோந்ய விருத்தமன்று என்று.

வ்யா—இதில் திருமந்திரத்தில் அர்த்த பஞ்சகமாகிறது—ப்ராப்யமான ப்ரஹ்ம ஸ்வரூபமும், ப்ராப்தாவான ஜீவ ஸ்வரூபமும், இவனுக்கு ப்ரஹ்மத்தை ப்ராபிக்கு முபாயமும், ப்ராப்த்யநந்தர பாவி ஃபலமும், ப்ராப்தி விரோதியும் இவ்வைந்தும் ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களையும் தது பயுக்தங்களையும் விசதமாகக் காட்டி, பதார்த்த வாக்யார்த்தங்களிலே தானே அந்வயிக்கிறதாகையாலே விரோதமில்லை. பதத்ரயத்திலுமாக வாதல் இதி—ப்ரணவத்தில் அகாரத்திலும் நமச் சப்தத்திலும் நா சப்தத்திலும், நாராயண சப்தத்திலும் ப்ராப்யமான ப்ரஹ்ம ஸ்வரூபமும், ப்ரணவ நமச் சப்தங்களிலுள்ள மகாரங்களிலும் நர சப்தத்திலும், நார சப்தத்திலும், ப்ராப்தாவான ஜீவ ஸ்வரூபத்தையும், உபாயம் நமச் சப்தத்திலும், அயந சப்தத்திலும், ஃபலஸ்வரூபம்—அகாரத்தின் மேலேறி லோபித்த சதுர்த்தியிலும், நாராயண சப்தத்தின் மேலே கிடக்கிற சதுர்த்தியிலும், விரோதி ஸ்வரூபம் நமஸ்ஸில் மகாரத்தின் மேலே கிடக்கிற ஷஷ்டியினும், இந்த ரஹஸ்யத்தில் விதிக்கப்படுகிற அர்த்தங்களுடைய வ்யவச்சேத சக்தியாலும், பதத்ரயத்திலும் அர்த்த பஞ்சகம் தோற்றும். இதில் விதிக்கிற வர்த்தங்களாவது—மகாரத்திலே ஜீவனுக்கு ஞாநாநந்தாமலத்வாதிகளும், அகாரத்தில் லுப்த சதுர்த்தியில் சேஷத்வமும், நர சப்தத்தில் நிர்விகாரத்வமும், நார சப்தத்தில் ஜீவாநந்த்யமும், விதிக்கப்படுகிறது. இவ்வர்த்தங்களுக்கு வ்யவச்சேத்யங்களாக ஜடத்வ ஸ்வதந்த்ரத்வ விகாரித்வ ஏகத்வங்கள் தோற்றுகையாலே தேஹாத்ம ஸ்வதந்த்ராத்ம ப்ரமாதி ரூபா வித்யாதிகள் விரோதிகள். இதுகள் வ்யவச்சேத சக்த்யா ஸித்தித்தவர்த்தங்கள். இப் பக்ஷத்திலே நாலர்த்தம் சாப்தமாய் விரோதி வர்க்கம் அர்த்த ஸ்வ பாவத்தாலே ஸித்திக்கிறது. ப்ரதம பதத்திலுமாகவாதல் இதி—அக்ஷரத்ரயாத்மகமான ப்ரணவத்திலே என்றபடி. ப்ரதமாக்ஷரத்திலே ப்ராப்தி ஸ்வரூபமும் த்ருதீயாக்ஷரத்திலே ப்ராப்த்ரு ஸ்வ ரூபமும், ப்ரதமாக்ஷரத்தில் லுப்த சதுர்த்தியில் ப்ரதிபந்நமான சேஷ சேஷி பாவ ஸம்பந்தத்தாலே, ஆக்ஷிப்தமாய் ஆர்த்திகயாக

முன்சொன்ன ப்ரகரணத்தில் ஜீவாத்மாவின் அடையாளங்களும் முக்ய ப்ராணன் என்னும் வாயுவின் அடையாளங்களும் காணப்படுவதால் பரமாத்மாவினுடைய அடையாளங்களே பல உண்டு என்று சொல்லுவது எப்படி பொருந்தும். விச்வரூபனைக் கொன்றேன் என்றதும், இந்த சரீரத்தில் ப்ராணன் வஸிக்கும் வரை ஆயுஸ் என்றும், சொல்லப்பட்டிருப்பதால் இந்திரனையும் முக்கிய ப்ராணனையுமே இந்திர ப்ராண சப்தங்களுக்குப் பொருளாகக் கொள்ள வேண்டுமல்லவா என்றால் அப்படி சொன்னதிற்கு அபிப்பிராயம் வேறு. பரமாத்மாவை மூன்று விதமாக உபாஸிப்பதுண்டு. அதில் ஜீவனை சரீரமாக உடையவன் என்ற நிலைமையிலும் அசேதனமான வஸ்துக்களை சரீரமாக உடையவன் என்ற நிலைமையிலும், அந்த பரமாத்மாவினுடைய நிஜமான ஸ்வரூப நிலைமையிலும் என்று மூன்று விதத்திலும் உபாஸனையை உபநிஷத்துக்களில் சொல்லி இருப்பதால், இங்கே அவற்றில் இரண்டு விதமான உபாஸனைகளைக் கொள்வது உசிதம்.

“त्रिशोर्षाणं त्वाष्ट्रमहनम् , यावध्यस्मिन् शरोरे प्राणो वसति-तावदायुः” इत्यादिजीवलिङ्गं, मुख्यप्राणलिङ्गं चास्मिन् दृश्यत इति नैवमिति चेन्न, उपासात्रैविध्यात् हेतोः जीवशब्देन प्राणशब्देन च परमात्मनोभिधानम् ॥

மூன்று தலைகளையுடைய த்வஷ்டாவின் குமாரனைக் கொன்றேன். எவ்வளவு காலம் இச்சரீரத்தில் ப்ராணன் இருக்கிறதோ அவ்வளவே இவனுக்கு ஆயுஸ் இது முதலிய ஜீவனைச் சொல்லும் லிங்கமும், முக்கிய ப்ராணனைச் சொல்லும் லிங்கமும் இங்கு காணப்படுவதால் அடி முதல் நுனி வரை பரமாத்மாவை சொல்லுகிற சப்தங்கள் பல உண்டு என்று சொன்னது எப்படி பொருந்தும் என்றால் மூன்று விதமான உபாஸனங்கள் இருப்பது காரணமாக இங்கு ஜீவனைச் சொல்லும் சப்தத்தாலும் ப்ராண சப்தத்தாலும் பரமாத்மாவைச் சொன்னது யுக்தமாகும்.

अन्यत्रापि परमात्मनः स्वरूपेणोपासनं भोक्तृशरोरकत्वेन भोग्यभोगोपकरण शरोरकत्वेन इति त्रिविधं परमात्मोपासनमाश्रितम् ॥ यथा “सत्यं ज्ञानमनन्तं ब्रह्म” इति स्वरूपेण “तदनुप्रविश्य सच्च-त्यच्चाभवत्” इत्यादि “सत्यञ्चानृतञ्च सत्यमभवत्” इति भोक्तृ-

शरीरकत्वेन भोग्यभोगोपकरणशरीरकत्वेन च ; इहापि तत्संभवादेव-मुपदेशः ॥

வேறு விடங்களிலும் பரமாத்மாவை நிஜமான ஸ்வரூபத்தைக்கொண்டு உபாஸிப்பதும் ஸுகதுக்கங்களை அனுபவிப்பதால் போக்தா என்று பெயர் பெற்ற ஜீவனை சரீரமாக உடையவன் என்ற ரூபத்திலும் போக்யம் போகோபகரணம் என்ற அசேதனமான வஸ்துக்களை சரீரமாக வுடையவன் என்ற ரூபத்திலும் உபாஸிப்பது என்று, இப்படி மூன்று விதமான பரமாத்மோபாஸனம் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதை ஸத்யம் ஞானம் முதலிய ச்ருதி வாக்யங்களில் காண்க. இவ்விடத்திலும் அவ்வித உபாஸனம் ஸம்பவிக்குமாதலால் இப்படி உபதேசித்தது.

" जन्माद्यस्य यतः " इत्यादिषु सद्ब्रह्मात्मेति सामान्य शब्दैर्हि जगत्कारणं प्रकृति पुरुषाभ्यामर्थान्तरभूतमिति साधितम् ॥ " ज्योतिश्चरणाभिधानात् " इत्यस्मिन् सूत्रे पुरुषसूक्तोदितो महापुरुषो जगत्कारणमिति विशेषतो निर्णीतम् ॥ स एव प्रज्ञातजीववाचिभिरिन्द्रादिशब्दैरपि क्वचित्क्वचिच्छास्त्रदृष्टया तत्तच्छरीरकतया चोपास्यत्वायोपदिश्यत इति " शास्त्रदृष्टया तूपदेशो वामदेववत् " इति " उपासात्रैविध्यात् " इति साधितम् ॥

ஜன்மாத்யஸ்ய முதலிய விடங்களில் ஸத், ப்ரஹ்மா, ஆத்மா, முதலிய பொதுவான சப்தங்களைக் கொண்டு, ஜகத்காரணமான வஸ்து ப்ரக்ருதி புருஷன் இவற்றில் காட்டிலும் வேறு என்று ஸாதிக்கப்பட்டது. ஜ்யோதிரதிகரணத்தில் புருஷ ஸூக்தத்தில் சொல்லப்பட்ட மஹா புருஷனே ஜகத்காரணம் என்று, அதை இன்னான் என்று சுட்டிக் காட்டி நிரூபிக்கப்பட்டது. அந்த மஹா புருஷனே ப்ரஸித்தமான ஜீவனைச் சொல்லும் இந்திராதி சப்தங்களாலும் சிற்சில விடங்களில் சாஸ்திர மரியாதையை ஒட்டி அந்தந்த பொருளை சரீரமாக வைத்து உபாஸிப்பதின் பொருட்டு உபதேசிக்கப்படுகிறான் என்று இந்த அதிகாணத்தால் நிர்ணயிக்கப்பட்டது.

இந்திர ப்ராணாதிகரணம் முற்றிற்று.

முதல் அத்யாயத்தில் முதல் பாதமும் முடிவு பெற்றது.

सर्वत्रप्रसिध्यधिकरणम्

सू—सर्वत्रप्रसिद्धोपदेशात् (१. २. १)

ஸர்வத்ர= எல்லா உபநிஷத்துக்களிலும், ப்ரஸித்தோபதேசாத்= இவ்வுலகங்களுடைய ஸ்ருஷ்டி ஸ்திதிலயங்களுக்குக் காரணமாக பரமாத்மாவையே சொல்லி இருப்பதால், ப்ரக்ருதத்திலும் ஸர்வ ஜகத் ரூபமாக சொல்லப்பட்டது பரமாத்மாவே. ஜீவனல்ல.

सर्वं खल्विदमिति निर्दिष्टेन सामानाधिकरण्येन निर्दिष्टं ब्रह्म परमात्मा । कुतः ? प्रसिद्धोपदेशात् । तज्जलानिति हेतुतः सर्वात्मकत्वोपदेशादित्यर्थः ॥

சாந்தோக்யோபநிஷத்தில், இவ்வுலக மனைத்தும் ப்ராஹ்மமே என்று, ஒரே வேற்றுமையில் உலகத்தையும் ப்ராஹ்மத்தையும் குறித்திருக்கிறது. இந்த விடத்தில் ப்ராஹ்மம் எனப்படுவது பரமாத்மாவே. ஏனெனில் அந்த ப்ராஹ்மத்தாலே ஸ்ருஷ்டிக்கப்படுகிறது. ப்ராஹ்மத்தில் லயிக்கிறது அந்த ப்ராஹ்மத்தால் ஜீவிக்கிறது என்ற ப்ரசித்தமான காரணங்களைக்கொண்டு உபதேசம் செய்திருப்பதால்.

प्रसिद्धं हि हेतुतया व्यपदिश्यते । सकलोपनिषत्सु ब्रह्मैवहि जगज्जन्मलय जीवनहेतुतया प्रसिद्धम् , " यतोवाइमानीत्यादिषु ।

உலகத்தில் ப்ரசித்தமான பொருளையே காரணமாகக் கூறுவது வழக்கம். "யதோவா இமாநி" முதலான உபநிஷத்துக்கள் எல்லாவற்றிலும் ப்ராஹ்மத்தையே ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி லயங்களுக்கு காரணமாகக் கூறியிருக்கிறது. ஆகையால் இவ்வுலக வடிவமானது ப்ராஹ்மமே.

सू—विवक्षितगुणोपपत्तेश्च (१. २. २)

மேலே சொல்லப் போகும் குணங்கள் எல்லாம் பரமாத்மாவுக்கே உண்டு.

मनोमयत्वसत्यसंकल्पत्वादयो विवक्षितगुणाः ब्रह्मण्येवोपपद्यन्ते ।

அதே உபநிஷத்தில் மேல் வாக்யத்தில் மநோமயத்வம் ஸத்ய ஸங்கல்பத்வம் முதலான குணங்கள் சொல்லப் படப் போகின்றன. நம்மால் உபாஸிக்கப்படவேண்டிய வஸ்துவுக்கு இந்த குணங்கள் உண்டு என்று அந்த குணங்கள் பரமாத்மாவுக்கு உரியதே ஒழிய ஜீவனுக்கில்லை.

सू—अनुपपत्तेस्तु नशारीरः (१. २. ३)

மற்றோரிடத்தில் அந்த குணங்கள் இருக்கக் கூடாதாகையால், அவன் ஜீவனல்லன்.

दुःखमिश्रपरिमितसुखलव भागिनि शारीरे तु एषां गुणानाम् अनुपपत्तेः न शारीरोयम् ।

துக்கம் கலந்த, மிகக் கொஞ்சமான இன்பத்துளியை அநுபவிக்கும் ஜீவனிடத்தில் மேற் சொன்ன குணங்கள் கூடாதது கொண்டு, ஸர்வாத்மா வென்று கூறப்பட்டவன் ஜீவனில்லை.

सू—कर्मकर्तृव्यपदेशाच्च (१. २. ४)

"ஏதமிதஃ" என்னும் வாக்கியத்தில், ஜீவன் அடைபவன் என்னும், பரமாத்மா அடையப்படுமவன் என்னும் கர்மமாகவும் கர்த்தாவாகவும் சொல்லி இருப்பதும் காரணமாகும்.

एतमितः प्रेत्याभिसंभवितास्मि इत्यभिसंभाव्याभिसंभवितृत्वेन प्रस्तुतब्रह्मजीवयोः व्यपदेशात् अभिसंभाव्यं ब्रह्म जीवादर्थान्तरम् ।

இத:ப்ரேத்ய= இந்த சரீரத்திலிருந்து புறப்பட்டு, ஏதம்=அந்த பரமாத்மாவை, அபிஸம்பவிதாஸ்மி=அடையப்போகிறேன் என்று ப்ரக்ருதமான ஜீவனையும் ப்ரஹ்மத்தையும், அடைபவனாகவும், அடையப்படுமவனாகவும் சொல்லி இருப்பதால் அடையத் தகுந்த ப்ரஹ்மம் ஜீவனிற் காட்டில் வேறு.

सू—शब्दविशेषात् (१. २. ५)

एषम आत्मान्तर्हृदये इति षष्ठ्या प्रथमयाच जीवोब्रह्मच व्यपदिश्यते । ततश्चार्थान्तरम् ।

ஏஷமே ஆத்மா என்று ஜீவனை மே என்று ஷஷ்டீ விபக்தியாலும் ப்ரஹ்மத்தை ஆத்மா என்று ப்ரதமா விபக்தியாலும் குறித்துச் சொல்லியிருக்கிறது. ஆகையால் ப்ரஹ்மம் ஜீவனிற் காட்டில் வேறு.

सू—स्मृतेश्च (१. २. ६)

अत्रापि प्रथमया निर्दिष्टः पुरुषोत्तमः इति निश्चीयते । "सर्वस्य चाहं हृदि संनिविष्टः" इति हि स्मृतिः ॥

ஸ்ரீபகவத் கீதையில் ஸர்வ பூதங்களுடைய ஹ்ருதயத்தில் நான் வஸிக்கிறேன் என்று சொல்லியிருப்பதைக் கொண்டு ப்ரதமா விபக்தியாலே புருஷோத்தமனே குறிக்கப்படுகிறான் என்று நிச்சயிக்கப் படுகிறது.

सू—अर्भकौकस्त्वात् तद्व्यपदेशाच्च नेति चेन्न निचाय्यत्वादेवं व्योमवच्च (१. २. ७)

एषम आत्मान्तर्हृदये अणीयान् व्रीहेः इत्यादिना अल्पायतनत्वात्, स्वरूपाल्पत्वस्य व्यपदेशाच्च, नायं परइति चेन्न । उपास्यत्वाद्धेतोस्तथाव्यपदेशः ॥ नतु स्वरूपाल्पत्वेन । व्योमवत्—स्वरूपमहत्त्वं चात्रैव व्यपदिश्यते । ज्यायान् पृथिव्याः ज्यायानन्तरिक्षात् इत्यादिना ।

நமது ஹ்ருதயம் என்னும் மிகவும் சிறிதான இடத்தில் வசிப்பதாலும், வ்ரீஹியின் நுனியைக்காட்டிலும் மிகச்சிறிய ரூபமுள்ளவன் என்று உபநிஷத்தில் சொல்லியிருப்பதாலும், பரமாத்மாவினுடைய ரூபம் மிகப் பெரியது என்று உபதேசிக்கப் பட்டிருப்பதாலும் இங்கு ஸர்வாத்மா என்பது பரமாத்மாவல்ல என்று ஆக்ஷேபித்துக்கொண்டு அதற்கு ஸமாதானம் அருளிச் செய்கிறார். பரமாத்மாவை சிற்றுருவம் கொண்டவனாகச் சொன்னது, அவனுடைய ஸ்வரூபத்தைச் சொன்னபடியன்று. அவ்விதம் உபாஸிக்க வேணும் என்று நமக்கு உபதேசித்தபடி. அதே வாக்கியத்தில் பூமியிற் காட்டிலும் பெரியவன் ஆகாசத்திற்காட்டிலும் பெரியவன் என்று சொல்லியிருக்கிறது. எல்லாப் பொருளிலும் பெரிதான ஆகாசத்தை ஒரு

சிறிய வஸ்துவில் அடைத்து சிறியதாக வ்யவகரிப்பது போல் பரமாத்மாவுக்கும் இப்படி வ்யவகாரம் ஏற்கும்.

सू—संभोगप्राप्तिरितिचेन्न वैशेष्यात् (१. २. ८)

परोप्यन्तश्शरीरे वसतिचेत्—जीववत् सुखदुःखोपभोगप्राप्तिः स्यादिति चेन्न । हेतुवैशेष्यात् । परस्य हि छन्दतो जीवरक्षायै शरीरान्तर्वासः ॥

பரமாத்மாவும் நமது சரீரத்தினுள்ளே வசிக்கிறுன் என்றால், ஜீவனைப் போலவே அவனுக்கும் சுக துக்கங்களின் அநுபவம் ப்ராப்தமாகுமே என்று ஆக்ஷேபம். அதற்கு ஸமாதானம்—ஜீவன் வசிப்பதற்கும் பரமாத்மா வசிப்பதற்கும் வித்யாஸமுண்டு. பரமாத்மா தனது ஸங்கல்பத்தால், ஜீவனை ரக்ஷிப்பதற்காக சரீரத்தின் உள்ளில் வசிக்கிறுன். ஜீவன் அப்படியில்லை.

॥ अत्त्रधिकरणम् ॥

सू—अत्ता चराचरग्रहणात् (१. २. ९)

यस्य ब्रह्मच क्षत्रञ्चो मे भवत ओदनः ।
मृत्युर्यस्योपसेचनं क इत्थावेद यत्र सः ॥

इत्यत्र ओदनोपसेचन सूचितोत्ता परमपुरुषः । ब्रह्मक्षत्रोपलक्षितस्य चराचरस्य कृत्स्नस्य मृत्यूपसेचनत्वेन अदनीयतया ग्रहणात् ।

கடோபநிஷத்தில், இவ்வுகமெல்லாம் எவனொருவனுக்கு ஆஹாரமாகிறதோ அவனிருக்கும்படியை யார் அறிவன் என்று கூறப்பட்டது. இங்கு உலகத்தை ஆஹாரமாகக்கொண்டவன் என்றால் இதை ஸம்ஹரிக்கிறவன் எனப் பொருள். சாப்பிடுகிறவன் என்று ஸூத்திரக்காரர் சொல்லுகிறுர். இப்படி உலகமென்னும் ஆஹாரத்தை சாப்பிடுகிறவன் ஜீவனா? பரமாத்மாவா? என்று ஸம்சயித்து, பரமாத்மா வென்று நிர்ணயிக்கப்படுகிறது. ஏனெனில், உபநிஷத்தில் ப்ராம்மண ஜாதி,

க்ஷத்திரிய ஜாதி, இவ்விரண்டும் ஆஹாரம் என்னும் மிருத்யு உபஸேசனம் உபதம்சம் என்னும் சொல்லப்பட்டிருப்பதால், இங்கு ஜங்கமஸ்தாவர ரூபமான உலகமெல்லாம் பொருளாகக் கொள்ளப் பட வேண்டும். மிருத்யு உள்பட எல்லாவற்றையும் ஸம்ஹரிப்பவன் பரமாத்மாவே.

सू—प्रकरणाच्च (१. २. १०)

“ महान्तं विभुमात्मानं मत्वा धीरो नशोचति ” “ नायमात्माप्रवचनेन लभ्यः ” इत्यादिना परस्यैव प्रकृतत्वात् सएवायम् ।

இதே ஸந்தர்ப்பத்தில் கீழ்வாக்கியத்தில், மஹா வைபவசாலியான இந்த பரமாத்மாவை மநநம் செய்து எந்த தீரனும் துக்கப்படமாட்டான் என்னும் இந்த பரமாத்மாவை ப்ரவசநம் மநநம் முதலான உபாயங்களால் லபிக்க ஸாத்யமாகாது. இது முதலான விடங்களில் பரமாத்மாவையே சொல்ல வந்திருப்பதால் இங்கும் அந்த பரமாத்மாவையே பொருளாகக் கொள்வது யுக்தம்.

सू—गुहां प्रविष्टावात्मानौ हि तद्दर्शनात् (१. २. ११)

अनन्तरम् “ ऋतं पिबन्तौ सुकृतस्य लोके गुहां प्रविष्टौ परमेपरार्ध्ये ॥ ” इत्यादिना जीवपरमात्मानावेव प्रयोज्यप्रयोजकभावेन कर्मफलाशने अन्वयात् उपदिष्टौ ।

மேலே காணப்படுகிற ஒரு ருக்கில், ருதம் என்னும் பதத்தால் அவச்யம் அநுபவிக்கப் படவேண்டியதான கர்மபலங்களைச் சொல்லி அப்படிப்பட்ட கர்மபலங்களை அநுபவிப்பவர் இருவர். அவர் மிகவும் உத்க்ருஷ்டமான ஹ்ருதய குஹையில் ப்ரவேசித்திருப்பவர் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அவ்விருவரை புத்தியும் ஜீவனும் என்று சிலரும், ப்ராணனும் ஜீவனும் என்று சிலரும் நிரூபித்தார்கள். அவ்விருவித நிரூபணமும் ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல. ஜீவனும் பரமாத்மாவுமே அவ்விருவர். அவர்களில் ஒருவன் கர்மபலங்களை அநுபவிக்கத் தூண்டுகிறவன். மற்றவன் தூண்டப்படுகிறவன். இந்த வ்யாபாரத்தையிட்டு ஜீவ பரமாத்மாக்கள் இருவருக்கும் கர்மபலாநுபவத்தில் சேர்க்கை உண்டு என்று உபதேசிக்கப்பட்டது.

तयोरेवास्मिन् प्रकरणे गुहाप्रवेशदर्शनात् । “तं दुर्दर्शं गूढमनुप्रविष्टं गुहाहितम्” इति परस्य । “या प्राणेन संभवत्यदितिः देवतामयी । गुहां प्रविश्य तिष्ठन्ती” इति जीवस्य । कर्मफलादनाददिति-जीवः ।

உபநிஷத்தில் இந்த ப்ரகரணத்திலேயே அந்த பரமாத்மா ஜீவாத்மா இவர்களை ஹ்ருதய குஹைக்குள் ப்ரவேசித்திருப்பதாக சொல்லி இருப்பதைக் காணலாம். “தம் துர்தர்சம்” அந்த பரமாத்மா கண்ணுக்குப் புலப்படாதவன், நமது கர்மம் என்னும் அவித்யையால் மறைக்கப்பட்டவன். ஸர்வ பூதங்களின் உள்ளில் ஹ்ருதய குகையில் வசிப்பவன் என்று பரமாத்மாவையும், “யா ப்ராணேந”. ப்ராணனோடுகூடவே இந்த சரீரத்தில் வசிப்பவன். கர்ம பலங்களை அநுபவிப்பதால் அதிதி எனப் பெயர் பெற்றவன். ஹ்ருதய குகையில் ப்ரவேசித்து ப்ருதிவ்யாதி பூதங்களோடு தேவமனுஷ்யாதி ரூபமாய் ஜநிப்பவன் என்று ஜீவனையும் சொல்லிற்று.

सू—विशेषणाच्च (१. २. १२)

जीवपरावेव हि सर्वत्रास्मिन्प्रकरणे विशेष्येते “न जायते म्रियते वा विपश्चित्” इत्यादौ जीवः, “अणोरणीयान् महतो महीयान्” “महान्तं विभुमात्मानम्”, “नायमात्मा प्रवचनेन” विज्ञानसारथिर्यस्तु मनः प्रग्रहवान्नरः । सोध्वनः पारमाप्नोति तद्विष्णोः परमं पदम्” इत्यादिषु परः ॥

இந்த ப்ரகரணத்தில் எல்லா ஸந்தர்பங்களிலும் அனேக விசேஷங்களால் ஜீவாத்ம பரமாத்மாக்களே, சுட்டிக் காட்டப்படுகிறார்கள் பிறப்பு இறப்பு இல்லாதவன் ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் பல விதமாய் பரிணமிக்கக் கூடியவன் என்று முதலிய விசேஷங்களால் ஜீவன் குறிக்கப்படுகிறான். அணுவைக்காட்டிலும் அணு, பெரிய வஸ்துவைக்காட்டிலும் பெரியவன், எங்கும் நிறைந்த பெரிய ஆத்மா, இவனை மனனம் முதலிய உபாயங்களால் பெறமுடியாது விசேஷமான அறிவோடு கூடினவனும் தன்னுடைய மனதை அடக்கி ஆளும் திறமை உடைய மனிதன் இந்த ஸம்ஸாரம் என்னும் தூரமார்க்கத்தைக் கடந்து, போகவேண்டிய இடம் சேருகிறான். அந்த இடம் விஷ்ணுவினுடைய பரமபதம் என்று இது முதலிய விடங்களில் பரமாத்மாவைச் சொல்லிற்று.

மானாலும் ஸ்வர்க்கம் முதலிய பலாகாங்க்ஷிகளை யுத்தேசித்து உத்கர்ஷம் ஸம்ப்ரதிபன்னமே. இதே மாதிரி வேதத்தினுத்கர்ஷம் பல பாசுரங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. திருவாய்மொழி 4-ம் பத்து 6-ம் திரு 8வது பாட்டு—

வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்
பாதம் பணிந்திவனை யிது தீர்த்துக் கொள்ளாது போய்
வேதம் பரைந்தலல்லல் செய்து கள்ளுடிகலாய்த்தூய்
கீத முழவிட்டு நீரணங்காடுதல் கீழ்மையே.

7-ம் பத்து 3-ம் திருவாய்மொழி 1-ம் பாட்டு; வேத ஒலியும் விழா ஒலியும் என்றிருக்கிறது. இம்மாதிரி பல இடங்கள் உண்டு. ஆழ்வார்களுக்கு வேத விஷயத்தில் ப்ரதிபத்தி அளவற்றதென்று அவர்கள் திவ்ய ஸூக்திகளால் வெளியாகிறது. வேதத்துக்கதிகாரிகளும் உஜ்ஜீவிக்கவேணுமென்கிற திருவுள்ளத்தால் வேதத்தின் ஸாரார்த்தத்தை ப்ரபந்தங்களால் வெளியிட்டதாக ப்ரமாணங்கள் தெரிவிக்கின்றன. வேத மூலகமாக இருப்பதாலேயே அவைகள் ப்ரமாணங்களென்று ஆசார்ய க்ரந்தங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இது நம்மாழ்வார் வைபவத்தில் ஸ்பஷ்டம். ஆகவே வேத வைபவத்தில் ஆழ்வார்களுக்கு விவாதத்திற்கவகாசமில்லை.

(6) **ब्राह्मणेन निष्कारणो धर्मः** என்ற வாக்யம் அதிப்ராசீன க்ரந்தங்களிலிருக்கிறதென்பதை தெரிவிக்கிறதற்காக மகாபாஷ்யம் என்று ஸ்தலம் நிர்தேசிக்கப்பட்டது. நமது ஸித்தாந்தத்தை யநுஸரித்து அர்த்தக்ஞானத்தை யனுவதிக்கிறதென்று எழுதப்பட்டது. இந்த ஞானம் நிச்சயரூபமாக விவக்ஷிதமேயன்றி ஆபாதப்ரதீதி ரூபமன்று. பாவப்ரகாசிகாகாரருடைய திருவுள்ளப்படி "ஞானம் விதேயமாகாததால் 'யத்' ப்ரத்யயத்தை கோடியில் உடைய 'க்ஞா,' தாதுவினால் அதற்கு அநுவாதம் ஸ்வரஸமன்று என்றால் விசாரரூப க்ஞானமாகவே கொண்டு அதுவும் ராகப்ராப்தமாவதால் அநுவாதம் என்பதில் விரோதமில்லை. மஹா பாஷ்யத்திலும் இதற்கு வ்யாக்யானமான கையடர் செய்த ப்ரதீபத்திலும் '**ज्ञेयश्च**' என்பதற்கு வ்யாக்யானமில்லாததால் அவர்களுக்கு நமது ஸித்தாந்தத்துக்கு விருத்தமான அர்த்தம் அபிமதம் என்பதற்கு ஞாபகம் ஒன்றுமில்லை. ப்ரதீப வ்யாக்யானமான நாகேசன் செய்த உத்யோதத்திலேயே அதற்கு விவரணமிருக்கிறது. அதில் ஞானம் விதேயமாகாதே என்கிற ஆக்ஷேபத்தை பரிஹரிப்பதற்காக ஞானனுகூல வ்யாபார விசேஷம் விதேயம் என்று எழுதப்பட்டிருக்கிறது. அதில்

स्वेष्टनिश्चयहेतुत्वमन्वयव्यतिरेकतः ।
सिद्धमेव विचारस्य तत्रापि ह्यफलो विधिः ॥

(விசாரம் தனக்கிஷ்டமான நிச்சயத்திற்கு காரணமென்பது அந்வய வ்யதிரேகங்களால் ஸித்தமே. அவ்விஷயத்திலும் விதி வ்யர்த்தமன்றோ) என்று தத்வடீகையில் ஸாதித்தபடி விசாரமும் அதற்கு அநுகூலமான மானஸவ்யாபார விசேஷமும் அர்த்த நிச்சய ஸாதனமென்பது லோகத்தால் தெரிவதால் மானஸவ்யாபாரத்திற்கு விதி என்பது உசிதமா என்பதை விவேகிகள் சிந்திக்கவேணும். சிவார்க்கமணி தீபிகையில் "षडङ्गो-वेदोऽध्येयः" என்கிறவரையிலேயே உதாஹரிக்கப்பட்டு

'ननु षडङ्गो वेदोऽध्येयः इत्यादिस्मृतिषु व्याकरणादेरध्ययनमात्रं विधीयते न तु तदर्थावगमपर्यन्तमध्ययनम् अतो नदृष्टद्वारलाभ इति चेन्न, प्रकृतिप्रत्ययविभागादिज्ञानफलकस्य व्याकरणादेरङ्गत्वान्यथानुपपत्त्यैव तदध्ययनस्य अर्थज्ञान-पर्यन्तत्वसिद्धेः अन्यथा तस्यादृष्टार्थाङ्गत्वप्रसङ्गात्'।

(இது ப்ரக்ருதி இது ப்ரத்யயம் என்கிற பிரிவு முதலியதின் ஞானத்தை ப்ரயோஜனமாகக் கொண்ட வ்யாகரணாதிகள் அங்கமாக இருப்பதினாலேயே அதனத்யயனம் அர்த்தஞான பர்யந்தமென்று ஸித்திக்கிறது. அப்படி இல்லாவிடில் வ்யாகரணாதிகள் அத்ருஷ்டார்த்தமான அங்கமாக ஆய்விடுகிறது. ஆகையினால் "षडङ्गो वेदोऽध्येयः இது முதலிய ஸ்ம்ருதிகளில் வ்யாகரணாதிகளின் அத்யயனமே விதிக்கப்படுகிறது. அவைகளின் அர்த்த ஞானத்தை முடிவாகக் கொண்ட அத்யயனம் விதிக்கப்படவில்லை. ஆகையால் த்ருஷ்ட ப்ரயோஜனம் த்வாரமாகக் கிடைக்கவில்லை" யென்று சொல்லக்கூடாது.) என்று செய்திருக்கும் ஆக்ஷேப ஸமாதானங்களைக் கவனித்தால் ज्ञेयश्च என்ற பாடமில்லை யென்று ஸ்பஷ்டமாகிறது. ச்ருத ப்ரகாசிகா, சண்டமாருதம் இவைகளின் பாடமும் இப்படியே. இதனால் வேறு விதமாகக் கிடைக்கும் அர்த்தத்தையே ज्ञेयश्च என்று பாடமிருக்குமிடத்திலும் அது அனுவதிக்கிறது என்பது மிகவும் பொருத்தமானதென்று ஏற்படுகிறது.

(7) வேத வைபவத்தை விசதமாக்குவதற்காக பிராம்மணாகள் எல்லோரும் வேதத்தை அத்யயனம் செய்ய வேணுமென்கிற விதியென்ன அதற்காக உபநயனம் செய்து கொள்ளவேணும் என்கிற விதியென்ன இவைகளுக்குள்பட்டவர்கள் என்பதை நிரூபிக்க வேணுமென்கிற நோக்கத்துடன் 'अष्टवर्षं ब्राह्मणं' என்கிற விடத்தில் ஏகவசனமிருந்தபோதிலும் பிராம்மணர்கள் எல்லோரையும் அந்தப் பதம் குறிப்பிடுகிறது என்று நிரூ-

பணம் செய்யப்பட்டது. அதில் ஏகவசனத்தினால் ஒரு பிராம்மண வ்யக்தி என்று தோன்றினபோதிலும் ग्रहैकत्वाधिकरण ந்யாயத்தால் ஏகத்வம் அவிவக்ஷிதமாகையால் பிராம்மணர்கள் எல்லோரையும் அதுபாமர்சிக்கிறது என்று மீமாம்ஸாந்யாயத்தை அனுஸரித்துச் சொல்வதில் க்லேசமிருக்கிறது. ஏனென்றால் அந்த ந்யாயத்தால் உத்தேச்ய விசேஷணமான 'अष्ट-वर्षं' என்பதற்கும் அவிவக்ஷை சொல்லவேண்டியதாக வருகிறது. அதற்கு ஏதோ ஒருவிதமாக விவக்ஷைசொன்னால் இதற்கும் துல்ய ந்யாயத்தால் ஏன் விவக்ஷை கூடாதென்கிற ப்ரபலமான சங்கை உதிக்கிறது. உண்மையில் 'अष्टवर्षं' என்பதற்குப்போல் இந்த ஏகத்வத்திற்கும் விவக்ஷை வரலாம். ஆகிலும் 'अष्टवर्षो ब्राह्मण उपेयात्' என்கிற தாத்பர்யகதியினால் ஸித்திக்கிற வாக்யத்தில் ஏகத்வம் உபாதேயத்திற்கு விசேஷணமாகையினாலே அம்மாதிரி விவக்ஷை உபபன்னையானாலும் 'स्वर्गकामः' என்பது முதலிய ந்யாயத்தால் 'अक्षरराशिग्रहण कामः' என்பது முதலியதான உத்தேச்யத்தைத் தெரிவிக்கிற பதத்தில் உள்ள ஏகத்வாதிகளுக்கு அவிவக்ஷை சொல்லி எல்லோரும் இதற்கு விஷயம் என்று நிர்வகிக்க வேண்டியதாயிருக்கிறது என்பது சுருக்கம். ஆகையால் மிகவும் உபபாதனத்தை அபேக்ஷிக்கிற அந்த ந்யாயங்களை இங்கு ஸஞ்சரிப்பிக்காமல் வையாகரணர்கள் அவலம்பித்த மார்க்கத்தை அநுஸரித்து பிராம்மணர்கள் எல்லோரும் இதற்கு விஷயம் என்று நிரூபிக்கப்பட்டது. அதில் ஜாதி பக்ஷத்தில் எல்லா வ்யக்திகளும் விஷயமாக ஸித்திக்கின்றன என்பது அடியிற்கண்ட பரிபாஷேந்து சேகர வாக்யங்களால் ஸ்பஷ்டம்—

'न ब्राह्मणं हन्यादित्यादौ जात्याश्रय सकल व्यक्तिविषयत्वार्थमेव जातिप-क्षाश्रयणस्य भाष्ये दर्शनात् । अत एव सरूपसूत्रे भाष्ये जातौ पदार्थेऽनवयवेन साकल्ये-न विधेः प्रवृत्तेर्गौरनुबन्ध्य इत्यादौ सकलगवानुबन्धनासंभवात्कर्मणो वैगुण्यमुक्तं । द्रव्यवादे चासर्वद्रव्यावगते गौरनुबन्ध्य इत्यादावेकदेशशास्त्रोक्तोऽपरोऽशास्त्रोक्त इत्युक्तम् ।'

न ब्राह्मणं हन्यात् இது முதலிய ஸ்தலங்களில் ப்ராம்மண்ய ஜாதிக்கு ஆதாரமான ஸகல வ்யக்திகளும் விஷயமாவதற்காகவே பாஷ்யத்தில் ஜாதி பதார்த்தம் என்னும் பக்ஷத்தை ஆச்ரயித்திருப்பதால் (வ்யக்தி பதார்த்தம் என்னும் பக்ஷத்தில் சாஸ்திரம் ஸர்வ லக்ஷ்யத்தையும் வ்யாபிக்கிறது ஜாதி பக்ஷத்தில் வ்யாபிக்கிறதில்லை என்கிற வாதம் ஸரியன்று) ஆகையால் தான் ஸரூப ஸூத்ர பாஷ்யத்தில் ஜாதி சப்தார்த்தமாகும் பொழுது எல்லா வ்யக்திகளிலும் சாஸ்திரம் பிரவ்ருத்திக்கிறபடியால் गौरनुबन्ध्यः இது முதலிய இடங்களில் எல்லா கோக்களையும் அனுபந்தனம் பண்ண முடியா

தாகையால் கர்மாவ்யர்த்தமென்று சொல்லப்பட்டது. வ்யக்தி பதார்த்தம் என்கிற வாதத்தில் எல்லா வ்யக்திகளும் தோன்றுதபடியினால் गौरनुबन्ध्यः இது முதலிய இடங்களில் ஒரு வ்யக்தி சாஸ்திரத்தில் சொல்லப்பட்டது, மற்றொன்று சாஸ்திரத்தில் சொல்லப்படாதது என்று சொல்லப்பட்டது)

அந்த ஸித்தாந்தத்தில் வ்யக்தியில் லக்ஷணை உண்டு என்பது பூஷணஸாரத்தில் நாமார்த்தநிர்ணயத்தில்...जातिरेव वाच्येति युक्तम् व्यक्तिबोधस्तु लक्षणया (ஜாதியே சொல்லத்தக்கது என்பது உசிதமானது. வ்யக்தியினறிவு லக்ஷணையினுல் ஏற்படுகிறது) என்பதால் ஸ்பஷ்டம்.

விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் பதங்கள் பரமாத்ம பர்யந்தமான விசிஷ்டார்த்தத்திற்கு வாசகங்கள் என்பது இந்த ஸித்தாந்தத்தில் அல்ப பரிசயமுள்ளவர்களுக்கும் தெரியாமலிருக்கமுடியாது. அஸ்தானத்தில் ஸ்வஸித்தாந்த ஸித்தமான அர்த்தத்தை ஒருவர் கண்டிக்க ப்ரவ்ருத்திப்பர் என்பதுமஸம்பாவிதம். ஆகையால் அவ்விதமான ப்ரஸங்கங்களை இவ்விதம் செய்வது எப்படியாவது தூஷிக்கவேண்டும் என்ற ஸம்ப்ரமத்தால் ஏற்பட்டதென்று நினைக்கவேண்டியிருக்கிறது. न ब्राह्मणं हन्यात् என்ற இடத்தில் ப்ராம்மண சப்தம், பூமாதிகரணத்தில் ப்ராணசப்தம் ஹிம்ஸையில் கர்மாவாகச் சொல்லப்பட்டிருப்பதால் பரமாத்மாவைச் சொல்லாதென்று பூர்வ பக்ஷத்திலும் ஸித்தாந்தத்திலும் நிஷ்கர்ஷித்தபடி பரமாத்ம வாசியாக முடியாதாகையால் பரமாத்மாவை முடிவாகக்கொண்ட விசிஷ்டார்த்தத்திற்குவாசகமாக இவ்விடத்தில் அவலம்பிப்பதற்கில்லை. ஜீவபர்யந்தத்திற்கு வாசகமாக அங்கீகரிக்கலாமாயினும் கீழ்ச்சொன்னபடி ஸர்வ விஷயகமாக நிரூபிப்பதில் க்லேச மிருப்பதை உத்தேசித்து இந்த மார்க்கத்தையும் நையாயிகர்களின் ப்ரக்ரியையும் இங்கு அவலம்பிக்காமலிருந்தது. ‘ஆக்ருதி (வாசி) சப்தங்கள் விசிஷ்ட வாசிகள். குணவாசி சப்தங்கள் த்ரவ்ய பாயந்தாபிதாயிகள்’ என்று பொதுவாகச் சொல்வது யுக்தமன்று.

ஆக்ருதி ஜாதி முதலிய சப்தங்கள் விசிஷ்டத்தையும் मधुरवान् द्रव्यविशेषः, शुक्लवान् पटः, இது முதலிய ஸ்தலங்களில் குணவாசி சப்தங்கள் த்ரவ்ய பர்யந்தமான அர்த்தத்தையும் சொல்லமாட்டா.

(8) இவ்வளவால் நமது ஸித்தாந்தத்தில் நாம் தூஷணம் சொல்வதற்கு ப்ரஸக்தியே இல்லை என்பது வ்யக்தம். ஆகையால் அதில் தூஷணம் சொல்லப்பட்டதாகக் கொண்டு அதை பராமர்சிப்பதாகக் காண்பிக்கும் ஸம்ரம்பம் எவ்வளவு தூரம் உசிதம் என்பதை தடஸ்தர்கள் சிந்திக்க வேண்டும். ஜாதி பக்ஷம், வ்யக்தி பக்ஷம், விசிஷ்டபக்ஷம் என்ற 3 பக்ஷங்

களில் வ்யக்தி பக்ஷத்தில் மட்டும் ‘ஒரு வ்யக்தி வாச்யமென்றல் வ்யக்த்யந்தரங்களில் வ்யபிசாரம். எல்லா வ்யக்திகளும் வாச்யமென்றல் அனந்தமான சக்திகள் ப்ரஸங்கிக்கும்’ என்று சாஸ்த்ரகாரர்கள் ஆங்காங்கு சொன்னும் தூஷணம் ஸம்பந்தப்படுமேயன்றி விசிஷ்ட வாசித்வத்தை அவலம்பிக்கும் எந்த ஸித்தாந்தத்திலும் அதற்கு ப்ரஸக்தியே இல்லை. ஆகையால் இந்த ப்ரகரணத்தில் சொல்லும் எல்லா அம்சமும் அநுக்தோபாலம்பம். ஆகிலும் விமர்சகாரர் சொல்லியிருக்கும் சில அம்சங்களை நாம் அவசியம் பராமர்சிக்க வேண்டியிருக்கிறது.

‘இவர் பக்ஷ ரீதியில் ‘ब्राह्मणम्’ என்ற இடத்தில் ஜாதி அர்த்தமானல் க்ஷத்ரியன் முதலியோருக்கு உபநயனம் அத்யயநம் இல்லாமல் போய் விடுமே’ என்றொரு பராமர்சம். வ்யக்தி வாச்யம் என்ற பக்ஷத்தில் க்ஷத்ரியன் முதலிய வ்யக்திகளும் ப்ராம்மண சப்தவாச்யம் என்று இவர் அபிமானம் போலும். ‘एकादशवर्षे राजन्यम्’ இது முதலிய வசனாந்தரங்களினால் ப்ராப்தி என்பது உண்மை. ‘न ब्राह्मणं हन्यात्’, என்ற இடத்தில் இப்படியே அர்த்தம் சொல்லவேண்டியிருப்பதால் ப்ராம்மண ஜாதியைக் கொல்லக்கூடாது க்ஷத்ரிய ஜாதியைக் கொல்லலாம் என்று அர்த்தமாகுமே. இதற்கு என்ன பரிஹாரம், என்பது மற்றொரு பராமர்சம். இவருக்கு ஸம்மதமான ப்ராம்மண்ய ஜாதியுள்ள வ்யக்தி வாச்யம் என்ற பக்ஷத்தில் மாத்ரம் அந்த அர்த்தம் ஏன் ஆகாது என்பதை பராமர்சகாரர் கவனிக்கவேண்டும். இவ்விதமே முன் பராமர்சத்திலும் அவர் கொடுக்கும் தூஷணம் அவருக்கே வரும் என்பதைக் கவனிக்கவேணும். உண்மையென்னவென்றல் ‘न ब्राह्मणं हन्यात्’ என்ற இடத்தில் எதற்கு நிஷேதம் பண்ணியிருக்கிறதோ அதன் நிஷேதம் மாத்ரம் ஸித்திக்குமே தவிர மற்றொரு கார்யத்திற்கு அநுமதி அதிலிருந்து ஸித்திக்குமென்று வாக்யந்யாயவித்துக்கள் சொல்லத் துணியார்கள். ‘न कलञ्जं भक्षयेत्’ என்ற நிஷேதத்தைக் கொண்டு ஒருவர் உள்ளிப்பூண்டை சாப்பிடலாம் என்று சொல்வதற்கில்லை. “வ்யக்தி லக்ஷணையாலும் ப்ராம்மணம் என்கிற இடத்தில் ஒரு வ்யக்தியைக் குறிப்பிடும் பக்ஷத்தில் மற்ற வ்யக்திகளுக்கு உபநயனம் அத்யயநமில்லாமல் போய்விடுமே. அதற்காக எல்லா வ்யக்திகளும் லக்ஷணையினுலர்த்தம் என்று சொல்லும் பக்ஷத்தில் ஒவ்வொரு வ்யக்திக்கும் சப்தத்திற்கும் லக்ஷணை என்னும் ஸம்பந்தம் ஒப்புக்கொண்டால் கௌரவம் வருகிறது” என்று மற்றுமோர் பாமர்சம். இதில் முதல் பாக மங்கீகரியாமையால் நிரஸ்தம். சக்தியைக் காட்டிலும் லக்ஷணை மிகவும் லாகவமுள்ளது என்பது 2-வது பாகத்திற்கு ஸமாதானம். ஆகையால் தான் ‘गङ्गायां घोषः’ என்கிற இடத்தில் கங்கா பதத்திற்கு தீரத்

தில் சக்தியை விட்டு லக்ஷணையை அங்கீகரிப்பது. लक्षणापि हि लौकिकी इतोऽप्रसिद्धकल्पना (லக்ஷணையும் உலக ப்ரஸித்தமன்றோ சக்தி அதீந்த்ரிய மான தால் அதைக் கல்பிப்பது ஸரியன்று) என்று வாக்யவித்துக்கள் "न ब्राह्मणम् ...स्वर्गकाम: இது முதலிய ஸ்தலங்களில் ப்ராதிபதிகார்த்த ஸ்வாரஸ்யத்தை விட்டு பும்ஸ்த்வமும் ஏகத்வமும் விவக்ஷிதமில்லை என்று மீமாம்ஸகர்கள் ஒப்புக்கொண்டார்கள்" என்கிறார். வாக்ய பேதம் முதலிய தோஷ ப்ரஸங்கம் இவ்விடங்களில் மீமாம்ஸகர்கள் காட்டின ந்யாயம். "सावित्री पतितावात्या:" என்றும் 'न हिंस्यात्सर्वाभूतानि' என்றும் இப்படிகளிலே ப்ரமாணங்கள் ஜாகரூகங்களாக இருக்க ஒரு வ்யக்தியில் சக்தியை ஒப்புக்கொண்டாலும் மற்ற வ்யக்திகளுக்கு உபநயநம் அத்யயநமில்லாமல் போய் விடுமோ. பல ப்ராம்மணர்களைக் கொல்லலாமென்ற அர்த்தமாகுமோ" என்ற பராமர்சமும் ஸரியன்று. सावित्रीपतितावात्या: இது முதலிய வசனங்கள் ஒரு வ்யக்தி தவிர மற்றெல்லா வ்யக்திகளுக்கும் உபநயனாதிகளுக்கு ப்ராபகமாவது போல் இந்த ஒரு வ்யக்திக்கும் ப்ராபகமாகலாம். ஆகையால் 'अष्टवर्षं ब्राह्मणम्' என்கிற வசனம் வ்யர்த்தமாகும். 'अष्टवर्षं ब्राह्मणम्' என்ற வசனத்தால் எல்லோருக்கும் ப்ராப்தமான உபநயனத்தை 'सावित्रीपतितावात्या:' என்கிற வசனம் நித்யமாக போதிக்கிறது என்பது உண்மை. 'न हिंस्यात् सर्वाभूतानि' என்று ஸர்வ ஸாதாரணமாக ஹிம்ஸை நிஷித்தமாயிருக்க 'न ब्राह्मणं हन्यात्,' 'नात्रेयं हन्यात्' என்று இவ்விதம் விசேஷித்து ப்ரவ்ருத்தித்த நிஷேதங்கள் भूतान्तर ஹிம்ஸையைக் காட்டிலும் ப்ராம்மணாதி ஹிம்ஸை அதிக பாபஹேது என்று போதிக்கின்றன என்று நிஷேதத்தின் உண்மையை அறிந்தவர்கள் செம்மையாய் அறிந்ததே.

அப்படியிருக்க ஒரு ப்ராம்மண வ்யக்தி தவிர மற்ற ப்ராம்மண வ்யக்திகளுக்கு ஹநந நிஷேதம் 'न हिंस्यात्' என்ற ஸாமான்ய வசனத்தால் ஸித்தமென்றால் வெகு ப்ராம்மண ஹிம்ஸைக்கும் பூதாந்தர ஹிம்ஸைக்கும் ஸமமான பாபம் பலம் என்று ஏற்படும் என்பதைக் கவனிக்கவேணும்.

(ஒ) மநு ஸ்ம்ருதியில் 'षट्त्रिंशदाब्दिकं चर्यं गुरौ त्रैवेदिकं व्रतम्' என்று 3 வேதங்களை அத்யயனம் செய்வதற்காக குருகுலத்தில் 36 வருஷம் அல்லது அதற்கு குறைந்த காலம் வஸிக்கவேண்டும் என்று முதலில் விதித்து இதனால் 3 வேதங்களை அவச்யம் அத்யயநம் செய்யவேண்டுமென்று நியம மேற்பட அதை வ்யாவ்ருத்தி செய்வதற்காக

वेदानधीत्य वेदौ वा वेदं वापि यथाक्रमम् ।
अविप्लुतब्रह्मचर्यो गृहस्थाश्रममावसेत् ॥

(ப்ரம்மசர்யம் கெடாமல் தன் சக்தியை யநுஸரித்து தன் சாகையுடன் வேறு வேதங்களின் சாகைகள் மூன்று இரண்டு அல்லது ஒன்றை முதலில்

மந்த்ரம் பிறகு ப்ராம்மணம் என்ற க்ரமமாக அத்யயநம் செய்து விவாஹம் செய்துகொண்டு க்ரஹஸ்தனுக்குச் சொல்லப்பட்ட கர்மாவை அநுஷ்டிக்க வேண்டும்) என்று ஸ்மரிக்கப்பட்டது. இதற்கு ருக்வேத பாஷ்ய பூமிகையில்

"तेषां च वेदानां सर्वेषामन्यतमस्य वा स्वप्रज्ञानुसारेणाध्ययनमुपनीतेन कर्तव्यम् । तथा च याज्ञवल्क्यः स्मरति......वेदानधीत्य वेदौ वा वेदं वापि यथाक्रमम् इति । एकवेदपक्षे पितृपितामहादि परंपराप्राप्त एव वेदोऽध्येतव्य इत्यभिप्रेत्य स्वाध्यायोऽध्येतव्य इति स्वशब्द आम्नातः"

(கீழ்சொன்ன எல்லா வேதங்களையோ அல்லது அவைகளில் ஒன்றையோ உபநயனமானவன் தன் புத்தியை யநுஸரித்து அத்யயனம் செய்யவேண்டும். அப்படியே யாக்ஞவல்க்யரும் 'वेदानधीत्य' என்று ஸ்ம்ருதி செய்திருக்கிறார். ஒரு வேதத்தை அத்யயனம் செய்வது என்ற பக்ஷத்தில் பிதா, பிதாமஹன் முதலியோரின் பரம்பரையாக வந்த வேதமே அத்யயனம் செய்யத்தக்கது என்று அபிப்ராயப்பட்டு 'स्वाध्यायोऽध्येतव्य:' என்ற இடத்தில் (ஸ்வ) என்னும் பதம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது.) என்று ஸ்வாரஸமான அர்த்தம் சொல்லப்பட்டிருந்தபோதிலும் காடகத்தில்

'भरद्वाजो ह त्रिभिरायुर्भिर्ब्रह्मचर्यमुवास'

என்று ஆரம்பித்துச் சொல்லப்பட்ட பாத்வாஜ கதா ந்யாயத்தால் சக்தி இருந்தால் எல்லாவற்றையும் அத்யயனம் பண்ணும்படி அவ்வளவு கௌரவம் வாய்ந்தவை வேதங்கள். அவ்வளவு சக்தி இல்லாவிட்டாலும் ஸ்வசாகையையாவது அத்யயனம் செய்ய வேணும் என்று நிரூபிப்பதற்கநுகுணமாக

"वेदशब्दोऽयं भिन्नवेदशाखापरः । स्वशाखाध्ययनपूर्वकं वेदशाखात्रयं द्वयमेकां वा शाखां मन्त्रब्राह्मण क्रमेणाधीत्य"

என்ற குல்லூகபட்டீயத்தை அநுஸரித்து அர்த்தம் எழுதப்பட்டது. இங்கு வேதசப்தம் சாகாந்தரபரமானாலும் वेदत्वम् ஒவ்வொரு சாகையிலும் பர்யாப்தமாகிற படியாலும் ப்ராம்மண பரிவ்ராஜகாதி ஸ்தலங்களில் சொல்லப்பட்ட, விசேஷங்களைக் காட்டிலும் வேறுபட்ட அர்த்தங்களைத் தெரிவிக்கும் ஸாமாந்ய சப்த ந்யாயத்தாலும் லக்ஷணையில்லாமலேயே விவக்ஷிதார்த்தத்தைச் சொல்லும். இப்பக்ஷத்தில் ஸ்வசாகாத்யயனத்திற்கு ப்ராப்தி स्वाध्यायोऽध्येतव्य: என்கிற வசனத்தாலேயே வருவதால் இந்த வசனத்தில் அது ஸித்திக்கவில்லை என்பது தூஷணமாகாது.

"पुरुषशक्त्यपेक्षयायमेकद्वित्रिशाखाध्ययनविकल्प:" (தன் சாகையுடன் வேறு வேதங்களின் சாகைகள் மூன்றையோ இரண்டையோ அல்லது

ஒன்றையோ அத்யயனம் செய்யவேண்டுமென்றிந்த விகல்பம் புருஷன் சக்தியை யபேக்ஷிக்கிறது) என்று குல்லூகர் வ்யாக்யானப்படி ஒரு சாகாந்தரத்தை அத்யயனம் செய்வது என்ற பக்ஷமும் விகல்பிதமாகிற படியால் ஸ்வ சாகாத்யயனத்தோடு மாத்ரம் நின்றவர்களுக்கும் சாஸ்த்ராதிலங்கன தோஷமில்லை. இவ்வர்த்தத்தை நாம் தன் சக்தியை யநுஸரித்து என்று நம்முடைய லேகனத்தில் ஸ்பஷ்டமாய்ச் சொல்லியிருக்க அதை விட்டு அநுவாதம் செய்து தூஷணம் செய்வது அழகன்று. 'ப்ரம்மசர்யம் கெடாமல் அத்யயனம் செய்து விவாகம் செய்துகொண்டு' என்று நாம் அத்யயன காலத்தில் ப்ரம்மசர்யம் கெடாமலிருக்கவேண்டுமென்று சொல்லியிருக்க 'இதர சாகாத்யயனமன்றியில் ஸ்வசாகையை மாத்திரம் அத்யயனம் செய்து விட்டு விவாஹம் செய்து கொண்டால் ப்ரம்மசர்யம் கெட்டுப் போகுமன்றோ' என்றிவ்வாறு பல பல தடவை பராமர்சிப்பது ஏன்? ஒவ்வொரு வேதத்தில் பல சாகைகளிருந்த போதிலும் ஒவ்வொரு சாகையை அத்யயனம் பண்ணுவதாலேயே 'वेदानधीत्य' என்ற விதிக்கு சாரிதார்த்யம் வருவதால் அந்த வேதத்தின் சாகாந்தரங்களைப் பற்றி இந்த விதி உதாஸீனம். ஆகையால் இதைக் கவனிக்காமல் செய்த ப்ரஸங்கங்களும் நிராலம்பனங்கள். இவ்விடத்தில் க்ருஷ்ண யஜுர்வேதிகள் தம் தைத்திரீய சாகையுடன் கட சாகையான காடகத்தையும் அத்யயனம் செய்து வருவதாகச் சொல்லுகிறார்கள் என்று நாம் வேத வைபவத்தில் எழுதினோம். விமர்சத்தில் இப்படியே அநுவாதம் செய்யப்பட்டிருக்கிறது. இது நமது அபிப்ராயமில்லை என்பதைத் தெரிவிப்பதற்காகவே சொல்லுகிறார்கள் என்று எழுதினது. ப்ரம்ம விசாராதிகாரத்தில் தன் வேதத்தில் சாகாந்தராத்யயனம் கூடாது என்று எழுதினதே நமது ஸித்தாந்தம். ஆகவே ஸ்வோக்தி விரோதமிருப்பதாக விமர்சம் முதலியவைகளில் எழுதியது ஸரியன்று.

(10) உபஸம்ஹார ப்ரகரணத்தில் 'ஆக இவ்வளவால் ப்ரம்மவிசார வ்யாஸத்திலுள்ள தோஷங்களை ஸ்தாலீபுலாகந்யாயத்தால் எடுத்துக்காட்டினேன்' என்று காணப்படுகின்றது. இதில் வேதவைபவ வ்யாஸத்தில் என்று நமது வ்யாஸத்தை நிர்தேசிக்கவேண்டிய இடத்தில் ப்ரம்மவிசார வ்யாஸத்தில் என்று விமர்சகருடைய வ்யாஸத்தையே நிர்தேசித்திருக்கிறது என்பதை ஸ்ரீ வேதாந்த தீபிகாபிமானிகள் கவனித்திருக்கலாம். இதெல்லாம்மனிதர்கள் தங்களுக்குத் தோன்றியபடி விஷய கௌரவத்தைக் கவனிக்காமல் சொன்னபோதிலும் ஸர்வவேத வேத்யனாய் ஸர்வாந்தர்யாமியாயிருக்கும் எம்பெருமான் தத்வார்த்தத்தை ஒருவிதமாய் ப்ரகாசிப்பிக்கிற மார்க்கம்.

ஒரு விஷயம் மட்டும் இப்பொழுது குறிப்பிட... ऽध्येतव्यः' என்கிற விதி ப்ரம்மயக்ஞாத்யயனத்தைப்பற்றி... ...ஞாத்யயனத்தைப் பற்றியதல்ல என்று ஸித்தாந்திகளின் பக்ஷம்.' என்கிறார். ஸ்ரீபாஷ்யாரம்பத்திலேயே "प्रथमं तावत् स्वाध्यायोऽध्येतव्य इत्यध्ययनेनैव स्वाध्याय शब्दवाच्यवेदाख्याक्षरराशेर्ग्रहणं विधीयते' என்கிற ஸ்ரீஸூக்தி என்ன சொல்லுகிறதென்பதை வித்வான்களுக்கு விவரிக்க வேண்டியதவசியமில்லை. இந்தக் காலத்தில்

'पूर्वं चतुष्पाद्धर्म आसीत्। ततस्तनूयमानेतपसि त्रिपात्। ततोम्लायति ज्ञाने द्विपात्। संप्रति जीर्यति यज्ञेदानैकपात्। सोऽपिपादो दुरागतादि विपादिकाशतदुःस्थोऽश्रद्धामलकलङ्कितः कामक्रोधादि कण्टकशतजर्जरः प्रत्यहमपचीयमानवीर्यतया इतस्ततस्स्खलन्निवोपलभ्यते'

(முன்காலத்தில் தர்மம் நான்கு கால்களுள்ளதாக இருந்தது. பிறகு தபஸ் குறைந்தவுடன் மூன்று கால்கள் உள்ளதாகவும் பிறகு ஞானம் குறைந்தவுடன் இரண்டு கால்களுள்ளதாகவு மாயிற்று. இப்பொழுது யாகாநுஷ்டானம் குறைந்தவுடன் தானமென்ற ஒரே காலுள்ளதாக இருக்கிறது. அந்தக் காலும் நிஷித்த ப்ரதிக்ரஹாதிகளாகிற பல பிளவுகளால் கெட்டும் அச்ரத்தையாகிற அழுக்கடைந்தும் காமக்ரோதாதிகளாகிற அநேக முட்களால் தளர்ந்தும் தினந்தோறும் சக்தி குறைவதால் இங்குமங்கும் தடுமாறுவதுபோல் காணப்படுகிறது) என்று ந்யாயாசார்யர் சொன்னப்ரகாரம் ஸர்வ தர்மங்களுக்கும் லோபம்வரும்படி ஸர்வதர்மங்களுக்கும் மூலப்ரமாணமான வேதவிஷயத்தில் எங்கெங்கும் அவ்வளவு அச்ரத்தை ஏற்பட்டு அதன்மூலம் வெகு அநர்த்தங்கள் உண்டாயிருக்க லோகஹிதைஷிகளான தார்மிகர்களும் அபிக்ஞர்களும், எல்லோருக்கும் வேதவிஷயத்தில் அபிருசி உண்டாக்க யத்நம் செய்யவேண்டிய தவசியமென்கிற ஒரு விஷயத்தைத் தெரிவிப்பதைத் தவிற மற்ற யாதொரு நோக்கமும் வேதவைபவத்தைப் பற்றிச் சிறிதெழுதிய நமக்கில்லை. அவ்விஷயத்தில் நம்மவர்களுக்குள்ளேயே இவ்விதம் ப்ரதிவசன ஸம்ரம்பம் ஏற்பட்டதைப்பற்றி வருந்தாமலிருப்பதற்கில்லை. ஆனால் எல்லாம் பகவததீனம். இப்படி மிகவும் ப்ரதானமான அர்த்தங்களை மாத்திரம் உண்மையை விளக்குவதற்காக நிரூபித்தோம். இந்த விமர்சத்திலும் ப்ரம்ம விசாராதிகார நிர்ணயத்திலும் ஆங்காங்கு பலபல தோஷங்களிருக்கின்றன. உதாஹரணமாக (1) தாது.பங்குனியீ ஸ்ரீவேதாந்த தீபிகையில் ப்ரம்ம விசாராதிகார நிர்ணயத்தில் முதலில் 'विप्युत्थायाधीत्य वेदान्' என்று முன் உதாஹரிக்கப்பட்ட அதிகரண ஸாராவளி ஸ்ரீஸூக்தியில் "'कतिचन कृतिनः शीघ्रमस्ते रमन्ते' என்று ப்ரம்ம விசாரத்திற்கு உபயோகியான பாகமாத்தி

ய்ஸமு அத்யயனம் செய்து ப்ரம்ம விசாரம் செய்யும் மஹான்களும் பாக்ய வான்களாக ஸ்ரீதேசிகனால் கொண்டாடப் பட்டார்கள்" என்றும் கொஞ்சம் மேலே "ह्रीयम् என்பதால் ப்ரம்மவிசாரோபயோகி பாகமாத் ராத்யயனத்தைக் கொண்டு என்று விவக்ஷிக்கையும் உசிதமே" என்றுமிருக் கிறது. தத்வ ப்ரகாசத்திலாரம்பத்தில் 'ஆகிலும் கர்மவிசாரமன்றியிலும் ஸாங்கவேதாத்யயன மாத்ரத்தால் ப்ரம்மவிசாரத்தை 'विद्युत्त्याधीत्य... ...रमते' என்று அதிகரண ஸாராவளியில் ஸ்ரீ தேசிகன் அப்யுபகமம் செய்திருக்கிறார், என்றும் கொஞ்சம் மேலே 'ஏகதேசாத்யயனமும் தாவன் மாத்ரத்தால் ப்ரம்ம விசாரமும்......மீமாம்ஸா பாதுகா ஸ்ரீ ஸூக்தியாலும் தத்வ்யாக்யான பரித்ராணத்திலும் அநுமதிக்கப்பட்டி ருக்கிறது என்றுமிருக்கிறது. இவ்விடத்தில் ஸ்வோக்தி விரோதம் கண்டு கொள்வது.

(2) ஈச்வராஹு ஆடிபீ ஸ்ரீ வேதாந்த தீபிகையில் 69ம் பக்கத்தில் 'மீமாம்ஸகர் பித்ருபிதாமஹக்ரமப்ராப்த वेदत्रयगतैकैकशाखाध्ययनं அவச்யமென்றார்கள்' என்றிருக்கிறது. பித்ரு பிதா மஹ பரம்பரையில் வருவது ஒரு வேதத்தின் ஒரு சாகையே. மீமாம்ஸகர்களுக்கு மிவ்வர்த் தமே ஸ்வாத்யாய விதி வாக்யத்தில் அபிமதம். ப்ரமாணாந்தரத்தால் வேதாந்தரசாகாத்யயனமபிமதம். वेदत्रयगतैकैकशाखाध्ययनं ஆவச்யகம் என்ற மீமாம்ஸா க்ரந்தங்களுக்கு விரும்புவோர்களுக்கு அவச்யமென்றே தாத்பர்யம் சாஸ்த்ர பரிச்ரமசாலிகளும் ப்ரமாணசரணர்களுமான வித்வான்களுக்கு ஸம்மதம். எல்லா தோஷங்களையும் விஸ்தர பயத்தால் உபேக்ஷிக்கிறோம்.

கடைசியாக ஓர் விக்ஞாபனம்

वेदानधीत्य என்கிற வசனத்துக்கு ஸாயனர் எழுதியிருக்கு மர்த்தத்தை 9-வது விஷய விசாரத்தில் நிரூபித்தோம். அதிலிருந்து இவ்வசனம் அப்ய நுக்ஞாவிதி என்றும் 'स्वाध्यायोऽध्येतव्यः' என்கிற வாக்யத்தில் தன் ஒரு சாகையின் அத்யயனமே விதிக்கப்படுகிறதென்றும் ஏற்படுகிறது. वेदानधीत्य என்பது விதி யென்று எழுதுவோர்களுக்கும் அப்யநுக்ஞாவிதி யென்றே அபிப்ராயம். ஆகவே மூன்று வேதங்களில் ஒவ்வொரு சாகையை அத்ய யனம் செய்யவேண்டியது நித்யமன்று. 'ऋग्यजुस्सामसंज्ञेयम्' இது முத லிய வசனம் ஸ்வாத்யாயாத்யயன விதிஸித்தமான அந்தந்த சாகாத்யய னத்தை நித்யமாகபோதிக்கிறது. தன் ஒரு சாகையைக்கொண்டு அவ ரவர்களுக்குக் கர்மாநுஷ்டானம் சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ப்ரஹ்ம யக்ஞத்தில் மற்ற வேதங்களின் ஆரம்பம் விதியினால் வரு கிறது. 'स्वाध्यायोऽध्येतव्यः' என்கிற வாக்யத்திற்கு மூன்று வேதங்களில்

ஒவ்வொரு சாகையையும் அத்யயனம் செய்யவேண்டுமென்று அர்த்தம் சொன்னால் यः स्वशाखां परित्यज्य परशाखां निषेवते என்றிம்மாதிரியான பல வசனங்களின் விரோதம் தடுக்க முடியாது. 'உபநிஷந்மாத்ராத்ய யனம் போதும். அது சாஸ்த்ரார்த்தம் என்பது ஒரு வேதாந்தி மதத்துக் கும் ஸம்மதமன்று. மூன்று மதங்களிலும் உபநிஷத்தோடு கூடின பூர்ண மான தன் ஒரு சாகையின் அத்யயனம் இரண்டு மீமாம்ஸைகளுக்கும் பூர்வ வ்ருத்த' மென்று மதத்ரய வித்வான்கள் எழுதியிருக்கிறார்கள். अध्येतव्यो ऽन्येवेदाः என்பது அப்யநுக்ஞாவிதியென்று மாதவரே சொல்லியிருக் கிறார். ராகத்தால் ஏகதேசாத்யயன விசாரங்கள் செய்வதில் விரோத மில்லையென்று ப்ரஹ்ம விசாராதிகாரத்தில் நிரூபிக்கப்பட்டது. ப்ராம் மணர்கள் எல்லோரும் ஸம்பூர்ணமான ஸ்வசாகையின் அத்யயனம், செய்ய வேண்டியவர்கள் என்பதற்கு சில அடையாளங்கள் இப்பொழுதும் இருந்து கொண்டிருக்கின்றன. அதாவது—உபநயநம், அபிவாதந வாக்யம், உபா கர்மம், உபாகர்மத்தில் கர்ம காண்டத்தை யாரம்பிப்பது, இப்பொழுதும் சிலர் ஸ்வசாகாத்யயனம் செய்து ப்ருஹ்ம யக்ஞத்தில் தன் சாகையைச் சொல்லுதல், கர்ம பாகத்தால் ஸாத்யமான கர்மாநுஷ்டானம் முதலியன. உபநயனம் உபாகர்மம் ஸ்வசாகாத்யயனத்துக்கு அங்கமாகச் சொல்லப்படு கின்றன. ஸாமசாகாதீசனான செவ்வாயின் அஸ்தமயத்தில் ஸாமவேதி களும், ருக்சாகாதீசனான குருவின் அஸ்தமயத்தில் ருக்வேதிகளும், யஜுஸ் சாகாதீசனான சுக்ரனின் அஸ்தமயத்தில் யஜுர்வேதிகளும், உபநயநமும் முதல் உபாகர்மமும் செய்யக்கூடாதென்று சாஸ்த்ரம் சொல்லுகிறது. இதிலிருந்து ஸ்வசாகாத்யயனத்திற்காக உபநயநம் உபாகர்மம் இவைகள் என்று ஏற்படுகிறது. இப்படி ஸர்வ ப்ரமாண ஸம்பிரதிபன்னமாயும் நித்யமாயும் சிஷ்டாநுஷ்டானத்தில் இருப்பதுமான தன் ஒரு சாகாத்ய யனம்மட்டும் அவசியமன்று என்றால் உபநயநம் உபாகர்மம் அவசிய மன்று என்று ஏற்படும். சாகை யென்பது கர்மபாகம் பிரஹ்மபாகம் இவ்விரண்டையுமே குறிக்கும். ஏகதேசத்தைக் குறிக்காது. நித்ய ஸ்வ சாகாத்யயனம் செய்தவர்கள் கர்மப்ரஹ்ம விசாரா பேக்ஷயிருந்தால் விஷய வாக்யங்களைத் தனியாக அத்யயனம் செய்வதாலேயோ அந்தந்த க்ரந்தங்களை ஆசார்யஸகாசத்தில் க்ரஹிக்கும்போது ஆசாரியன் வேதவாக் யத்தை யுச்சரித்தபிறகு அநுச்சாரணம் செய்வதாலேயோ மீமாம்ஸா ச்ரவணம் செய்யலாம். இக்காலத்தை யநுஸரித்துப் பார்த்தால் இக்காலத் தின் அசாஸ்த்ரீய நிர்ணயப்படி உபநிஷந் மாத்ராத்யயனமும் முடியாத காரி யமே. ஏனென்றால் பிரஹ்ம விசாரோப யுக்தமாக 15 உபநிஷத்துக்கள் முத்ரணம் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகள் நான்கு வேதங்களைச் சேர்ந்தவைகள். அவைகளை ஆசாரியனிடமிருந்து ஸ்வரத்துடன் அத்யயனம்

28 158716

செய்தவர்கள் [illegible] குறைவு என்பது மாத்திரமல்ல, இனி எல்லோரும் [illegible] செய்வதும் அசக்யம். கர்ம பாகத்தில் உபயுக்தாத்யயனம் [illegible] கர்மானுஷ்டானத்தையும் ப்ரஹ்ம பாகத்தில் விஷய வாக்யங்களை அத்யயனம் செய்து பிரஹ்ம விசாரத்தையும் செய்யலாம். இதிலும சக்தர்கள் அந்தந்த காலங்களில் வேத வாக்யங்களின் உபதேசம் பெற்று அவைகளைச் செய்யலாம். தனியாக அத்யயனம் வேண்டியதில்லை என்றிம்மாதிரி நிர்ணயமே இக் காலத்துக்கு அனுகுணமானது. 'வேத வைபவம்' 'ப்ரஹ்ம விசாராதிகாரம்', என்ற வ்யாஸங்களை வ்யக்தி விஷயமாக பர்யவஸானம் செய்து பண்ணின ஸம்பாவனைகள் கணக்கற்றவைகள். ஆகிலும் தைத்திரீய ப்ராஹ்மணம் 2-வது அஷ்டகம் 8-வது ப்ரச்னத்தில் ஒன்பதாவது அநுவாகத்தில் என்னை நிந்திக்கிறார்களோ? என்னுடைய பாபத்தை நாசம் செய்கிறார்களோ? என்று சொல்லுகிறபடி பரமோபகாரிகளான தூஷகர்கள் பக்கலில் க்ருதக்ஞதை வகிக்க ப்ராப்தம். வேதாத்யயனம் எங்கும் லுப்தமாயிருப்பதே இவ்வித ஸம்பாவனைக்குக் காரணம். இப்பொழுது வேத வைபவ விசாரத்தை இத்துடன் நிறுத்திக் கொள்ளுகிறேன். இவ் விசாரத்தால் ஏற்பட்ட அபராதத்தை க்ஷமித்தருளும்படி மஹான்கள் திருவடித் தாமரைகளில் ப்ரார்த்திக்கிறேன்.

वाचकमनादिनिधनं वाच्यमपि तथाविधं तस्य ।
शमयतु मोहमशेषं मयि वा मम सुहृदि वा स यत्रास्ति ॥

பிழைத் திருத்தம்

பக்கம்	வரி	அசுத்தம்	சுத்தம்
1	17	ஸ்நமி	நைமி
3	19	என்றும்	என்று
5	8	स्वता	देवता
,,	9-10	येस्ता एव स्वताः,	येदेता एव देवताः
,,	33	वदे	विदे
6	32	என்ற-வது	என்ற 9-வது
8	20	यी ते का	यीतै का
8	26	கிய, புரு	கியபுரு
9	6	फले:	फलैः
,,	10	ब्राह्मणाना,	ब्राह्मणानी
,,	11	तृस	तृप्ता
10	28	नेद	वेद
12	31	शारवा	शाखा
14	31	வ்யாக்யதா	வ்யாக்யாதா
15	21	காய	காய்

அதிர்ஷ்டம்! **எப்படி?**

L. N. பெப்பர்மெண்டையே வாங்கவேண்டும்.

குழந்தைகளின் சிநேகிதர்கள்! பெற்றோர்களின் களிப்பு!!

விலை மலிவு! சுவை பெரிது!

நன்மை தரும்!

இந்திய முதல்—இந்திய தொழிலாளிகள்.

வாங்க முந்துங்கள்! **கொடுக்கும் பணத்திற்கு நல்ல பெப்பர்மெண்டு!!**

For Delicious and wholesome Confectionery made of selected Fruit Essence and healthy glucose, apply to:—

SRI L. N. SHIYALI CONFECTIONARY, LTD.,

MADRAS OFFICE:—**Phone No. 3658 : Res. No. 4258**

304, Thambu Chetty St., G. T. Madras.

L காயம்—பெருங்காயம் G

இதை ஹிங்கு—हिङ्गु என்று ஏனைய பாஷைகளிலும் வழங்குகிறார்கள். இது தன் குணத்தினாலும் நறு மணத்தினாலும் ஜீர்ணகாரியான மற்றச் சரக்குகள் பலவற்றையும் வென்றது என்பதை இப்பெயர் குறிக்கிறது. அதனாலேயே இதற்கு "ஸஹஸ்ரவேதி" என்றும் மற்றொரு பெயரும் வடமொழியில் வழங்கப்படுகிறது. "வயிற்றில் வாயு சேருவதையும், நெஞ்சில் கபம் சேருவதையும் தடுத்து விலக்கும்; வயிற்றுவலி முதலிய அஜீர்ணக் கோளாறுகளை அகற்றும்; பித்தஹரம்; சுவையில் காரமாயிருப்பதால், உணவை நன்கு ஜீர்ண செய்யும்; அரோசகத்தையும் போக்கும்; பசி தீபநம் செய்யும்" என்று ஆசார்ய வாக்படர் ஆயிரங் காலத்திற்கு முன் உயர்ந்த பெருங்காய குணங்களை உவந்து மொழிந்திருக்கிறார்.

" हिङ्गु वातकफानाहशूलघ्नं पित्तनाशनम् ।
कटुपाकरसं रुच्यं दीपनं पाचनं लघु ॥ "

இக்குணங்களையெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிர உண்மையில் வேறெதுவுமன்று. இதைக் கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

லால்ஜி கோது & கம்பெனி

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்

Registered No. M. 3778.

சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனாயிருப்பது

வைர நகையே.

சீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्त्रैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥



“ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள் குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர்கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகும் பிரசஸ்தமானது. அவ்வாறு உயர்குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்.”



உத்தம குணம் பொருந்திய வைரங்களை அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்றாகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸூராஜ்மல் கம்பெனியாரே.

SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.

Printed by S. Krishna at Kabeer Printing Works, 195, High Road, Triplicane, and Published by V. Ananthachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.

50

SRI VEDANTA DIPIKA

VOL. 27] JUNE 1938 [PART 6

ஸ்ரீ வேதாந்த தீபிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1945
MADRAS

பகுதான்ய ஸ்ரீ

ஆனி மீ

பத்ராதிபர்கள் :

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

வி. அனந்தாசாரியர்

உப-பத்ராதிபர்கள் :

வேதாந்த சிரோமணி T. வேணுகோபாலாசாரியர்

ஏ. ஸ்ரீநிவாஸராகவன் M.A., [மகாராஜா காலேஜ், புதுக்கோட்டை.]

CONDUCTED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,

VANI VILAS 4–5, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

1.	அர்ச்சாவிக்ரஹ புண்ட்ரவிசாரம் [திருப்பாபுலியூர் ஸ்ரீ உ.ப. தி. ஈ. சடகோபாசாரியார்]	217
2.	பகவதர்ச்சா மூர்த்திக்கு ஊர்த்வ புண்ட்ரம் தகுமா ? [ஸ்ரீ. உ.ப. வினாகம். ரா. நரஸிம்ஹாசார்யர் மயிலாப்பூர்]	131
3.	தேவாலயங்களில் ஊர்த்வபுண்ட்ரம் [ஸ்ரீ. மதுராந்தகம். தி. ஈ. வீரராகவாசார்யர் ந்யாய வேதாந்த சிரோமணி திருவாதி]	134
4.	இரஸாயந முறை அல்லது காயகல்பம் [வைத்திய ரத்ன பண்டித மே. துரைஸ்வாமி ஐயங்கார்]	136
5.	ப்ரபந்த ஸாரம் [ஸ்ரீ மதுராந்தகம், ஸ்ரீ. உ.ப. வே. தி. ஈ. வீரராகவாசாரியர்]	144
6.	பிஷ்டபசு [ஸ்ரீ. உ.ப. வெங்கடாத்திரியகரம். தி. ஈ. ச. கிருஷ்ணமாசாரியார், பிரஸிடென்ஸி காலேஜ், சென்னை.]	146
7.	வித்வான் திருக்கள்ளம் நல்லான் சக்ரவர்த்தி, திருவேங்கடாசார்ய ஸ்வாமீ [ஸ்ரீ. உ. வே. டி. வி. வேதாந்தாசாரியர், திருவள்ளூர்]	148
8.	காலாநுகுண ஆஹ்நிகம்	149
9.	अभीतिस्तवः [ஸ்ரீ. உ. வே. எ. வி. கோபாலாசார்யர், M. A., B. L., அட்வகேட், திருச்சி.]	33—40
10.	ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தி	89—96
11.	வேதாந்த ஸாரம்	65—72

अमृतांजनम्

அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முதுமொழி கூறுகிறது.

“ अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् । ”
“ अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः । ”

தலைவலி, ஜலதோஷம்,
சுளுக்கு முதலான சகல
நோய்களையும் தீர்க்கவல்ல
ப்ரஸித்தமான லேபனம்—

அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

அதிர்ஷ்டம்! எப்படி?

L. N. பெப்பர்மெண்டையே வாங்கவேண்டும்.

குழந்தைகளின் சிநேகிதர்கள்! பெற்றோர்களின் களிப்பு!!

விலை மலிவு! சுவை பெரிது!

நன்மை தரும்!

இந்திய முதல்—இந்திய தொழிலாளிகள்.

வாங்க முந்துங்கள்! கொடுக்கும் பணத்திற்கு நல்ல பெப்பர்மெண்டு!!

For Delicious and wholesome Confectionery made of selected Fruit Essence and healthy glucose, apply to:—

SRI L. N. SHIYALI CONFECTIONARY, LTD.,
MADRAS OFFICE:—**Phone No. 3658 : Res. No. 4258**
304, Thambu Chetty St., G. T. Madras.

L காயம்—பெருங்காயம் **G**

இதை ஹிங்கு—हिङ्गु என்று ஏனைய பாஷைகளிலும் வழங்குகிறார்கள். இது தன் குணத்தினாலும் நறு மணத்தினாலும் ஜீர்ணகாரியான மற்றச் சரக்குகள் பலவற்றையும் வென்றது என்பதை இப்பெயர் குறிக்கிறது. அதனாலேயே இதற்கு "ஸஹஸ்ரவேதி" என்றும் மற்றொரு பெயரும் வடமொழியில் வழங்கப்படுகிறது. "வயிற்றில் வாயு சேருவதையும், நெஞ்சில் கபம் சேருவதையும் தடுத்து 'விலக்கும்; வயிற்றுவலி முதலிய அஜீர்ணக் கோளாறுகளை அகற்றும்; பித்தஹரம்; சுவையில் காரமாயிருப்பதால், உணவை நன்கு ஜீர்ண செய்யும்; அரோசகத்தையும் போக்கும்; பசி தீபநம் செய்யும்" என்று ஆசார்ய வாக்படர் ஆயிரங் காலத்திற்கு முன் உயர்ந்த பெருங்காய குணங்களை உவந்து மொழிந்திருக்கிறார்.

" हिङ्गु वातकफानाहशूलघ्नं पित्तनाशनम् ।
कटुपाकरसं रुच्यं दीपनं पाचनं लघु ॥ "

இக்குணங்களை யெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிர உண்மையில் வேறெதுவுமன்று. இதைக் கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

லால்ஜி கோது & கம்பெனி

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்

MADRAS

श्रीः

श्रियै नमः

त्रिभुवनकमनं तमालवर्णं रविकरगौरवरांबरं दधाने ।
वपुरलककुलावृताननाब्जे विजयसखे रतिरस्तु मेऽनवद्या ॥

ஸ்ரீ வேதாந்த தீபிகை

ஸம். 27. | பகுதான்ய ௵ ஆனி ௴ | ஸஞ். 6

அர்சாவிக்ரஹ புண்ட்ரவிசாரம்

[திருப்பாபுலியூர் ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசாரியார்]

தீபிகை சென்ற சித்திரை௴ ஸஞ்சிகையில் ஆலயங்களில் பகவதர்சா விக்ரஹங்களுக்கு ஊர்தவ புண்டரம் ஸமர்ப்பிப்பதின் ஔசித்யத்தைப் பற்றி பத்ராதிபர் சங்கை செய்திருந்தார். அவ்விதம் ஸம்சயிப்பது மிகவும் உபபந்நமென்றே தோன்றுகிறது. ஸ்ரீ வைஷ்ணவர்கள் விஷ்ணுதாஸ்யைகரஸர்களாகையால் அத்தாஸ்யத்துக்கு ஸூசகமாக அவர்கள் தம் ஸ்வாமியின் ஸ்ரீ பாதாகாரமாகத் தங்கள் லலாடங்களில் ஊர்தவ புண்ட்ரம் தரிப்பது அத்யந்தம் யுக்தமாகும். ஆனால் பகவானுக்கு இந்த ந்யாயம் ஒவ்வாதாகையால் ஸ்வபாதாகாரமான புண்ட்ரத்தையவனுக்கு தரிப்பிப்பது அநுசிதமாயிருப்பதோடில்லாமல் மஹாபசாரஹேதுவாகாதா வென்றும் கேட்க இடங்கொடுக்கிறது. ஆனால் இது சிரகாலம் அநுஷ்டிக்கப்பட்டிருப்பதால் இது விஷயமாய் இப்போது சங்கிப்பது யுக்த மல்லவென்று ஆக்ஷேபம் பிறக்கக்கூடுமானாலும் சாஸ்த்ரத்துக்கும் யுக்திக்கும் விரோதமாய் ஆசாரம் ஏற்பட்டிருந்தால் அது தெரியவந்தவுடன் மாத்திக்கொள்ள வேண்டியதே ந்யாயமாகும். மேலும் இவ்வாசாரம் வெகு காலமாய் அநுஷ்டிக்கப்பட்டு வருவதாகச் சொல்வதும் சரியல்லவென்றேற்படுகிறது. அஸ்மதாசார்ய வரிஷ்டராகிய ஸ்ரீ மங்களமாந்த மஹாதேசிகன் ஸச்சரித்ர ரக்ஷையில் ஊர்த்வ புண்ட்ரதாரண க்ரமத்தைப்பற்றி விசாரிக்கும் ஸந்தர்ப்பத்தில் த்ரைவர்ணிகர்களுக்கு ஊர்தவ புண்ட்ரம் ஸாதாரணமாய் விதிக்கப்பட்டிருக்கிறதென்றும் தத்ராபி

ப்ராஹ்மணர்களுக்கு அதவசியமென்றும் அதிலும் ஊர்த்வ பக்தியை விரும்புமவர்களுக்கு அது அத்யந்தாபேக்ஷிதமென்றும் கூறி முமுக்ஷுக்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் அதை ஹரிபாதாகாரமாக தரிக்க வேண்டும் என்று ஹரே: பாதாக்ருதிமாத்மநோ ஹிதாய மத்யே ச்சித்ரமூர்த்வபுண்ட்ரம் யோ தாரயதி ஸ பரஸ்ய ப்ரியோ பவதி ஸ புண்யவான் பவதி ஸ முக்திமான் பவதி என்ற ஆதர்வண ச்ருதி பலத்தால் நிர்ணயம் செய்தருளுகிறார். இவ்விசார ப்ரகாணத்தில் பின் வருமாறு சங்கித்து அதற்கு ஸமாதானம் செய்தருளுகிறார்.

“ பகவதர்ச்சாவதாரேஷு தீபஶிகாகாரோர்த்வபுண்ட்ரஸ்ய தர்ஶநாத் யதா ஸ்வாமீ கரோதி ததைவ ப்ருத்யேநாபி கர்தவ்யமிதி ந்யாயேந பாகவதைரபி ததைவ தாரணீயமிதி சேந்ந; ஶாஸ்த்ராவிரோதே ந்யாயஸ்யாவதாராத். அந்யதா பகவதநுஷ்டித கோபீகந்யாபஹரண ஸ்வகுலவிநாஶந பௌத்தமதப்ரவர்தநாதீநாமபி ஸேவ்யத்வம் ஸ்யாத். அதோ ந ஸ்வாமிக்ருதம் ஸர்வம் ப்ருத்யேநாநுஷ்டேயம். லோகேऽபி ததைவ த்ருஷ்டத்வாத். ந ச தீபஶிகாகார ஏவோர்த்வபுண்ட்ரம் ஆசார்யவிக்ரஹேஷு கார்யமிதி விதிர்த்ருஷ்ட:; யேந ஸம்ஸ்தாநாந்தராணி பரித்யஜேரந். யதி வசநம் த்ருஷ்டம் ததாபி தத்ரைவ பர்யவஸ்யதி நாஸ்மாஸு ப்ரஸஜ்யேத. கிஞ்சாலங்காரார்த்தம் ஹி பகவத்ஸமர்ப்பணம். தத்ர ஶோபைவ ப்ரயோஜிகா யதா ஶோபா ததா ஸமர்ப்யேத கிம் விரோத்யதே. அத: ஶ்ருத்யாதிவிஹித ஹரிபாதாக்ருதிஸம்ஸ்தாநமேவ பாகவதைருபாதேயமிதி ஸித்தாந்த: ”

அதாவது “பகவானுடைய அர்சா விக்ரஹங்களுக்கு தீபசிகாகாரமாக ஊர்தவ புண்ட்ரம் ஸமர்ப்பிக்கப்பட்டிருப்பதை நாம் காண்பதால் ஸ்வாமி எவ்விதமோ அவ்விதமே ப்ருத்யனும் அநுசரிக்க வேண்டுமென்கிற ந்யாயத்தை அநுஸரித்து பாகவதர்களும் அதையே (தீபசிகாகார புண்ட்ரத்தையே) தறிக்க வேண்டுமென்று ஆக்ஷேபம் ஏர்ப்பட்டால் அது ஸரியல்ல. சாஸ்த்ர வாக்யத்துக்கு விரோதமாக லோக ந்யாயம் ப்ரஸரிக்க மாட்டாது. இல்லாவிட்டால் பகவான் அநுஷ்டித்தபடி கோபிகைகளைக் கவருவது, தன் குல நாசம் செய்வது, பௌத்த மதத்தை ப்ரவர்த்திப்பது, முதலியதைச் செய்ய நேரிடும். ஆகையால் யஜமானன் செய்யும் எல்லாவற்றையும் பருத்யன் செய்வதென்பதொவ்வாது. உலகத்திலும் இப்படியேதான் காணப்படுகிறது. மேலும் ஆசார்ய விக்ரஹங்களுக்கு தீபசிகாகாரமாகவேதான் புண்ட்ரம் ஸமர்ப்பிக்க வேண்டுமென்கிற விதி யொன்று மிருப்பதாகத் தெரியவில்லை. அப்படிக்கிருந்தாலல்லவோ மற்ற ஆகாரங்களை விட நேரிடும். ஒருக்கால் அப்படி வசநம் காணப்படாமலும் அதை அவ்வளவுடனே (அதாவது ஆர்சா விக்ரகத்துக்கு மாத்ரம்) நிறுத்திக் கொள்ளவேண்டியதே தவிர நாமதை அநுஷ்டிக்கத்தகாது. தவிரவும் பகவானுக்கு அது (புண்ட்ரம்) அலங்கார மென்றல்லவோ ஸமர்ப்பிக்கப் படுகிறது. ஆகையாலங்கு அழகு தருவதே முக்யோத்தேச்ய மாகையால் எவ்விதம் நன்கு அழகு தருமென்று தோன்றுகிறதோ அவ்விதம் ஸமர்ப்பிக்கிறபடியால் விரோதமேது. ஆகையால் பாகவதர்கள் வேதம் முதலியதில் விதிக்கப்பட்டபடி ஹரிபாதாகாரத்தையே பரிக்ரஹிக்க வேண்டும் என்பது ஸித்தாந்தம்”. இந்த நிர்ணயமானது ஸ்ரீ தேசிகனது மற்றெல்லா நிர்ணயங்களைப் போலவே அப்ரகம்ப்ய மென்பது உபபாதக க்ரமத்தாலும் உதாஹரிக்கப்பட்ட ப்ரமாண பலத்தாலும் ஸ்பஷ்டமாகிறது. இங்கு தீப சிகாகாரமான ஊர்தவ புண்ட்ரம் அர்சா விக்ரஹங்களுக்கு ஸமர்ப்பிக்கும் வழக்கத்தை அவலம்பித்து அவ்விதமே நாமும் தீபசிகாகாரமாகவே புண்ட்ரதாரணம்பண்ண வேணும் என்று சொல்வது யுக்த மல்லவென்று ஸாதிக்கப்பட்டிருப்பதால் அர்சா விக்ரஹங்களுக்கு ஊர்தவ புண்ட்ரம் தீபசிகாகாரமாகவே அக்காலத்தில் வழங்கி வந்ததென்பது வ்யக்தமாய் ஏர்ப்படுகிறது. ஆகையால் ஹரிபாதாகாரமாய் நாம் தரிப்பதுபோல் அர்சா விக்ரஹங்களுக்கு புண்ட்ரம் ஸமர்ப்பிப்பது ஸ்ரீ தேசிகன் காலத்துக்குப் பிறகு ஏற்பட்டதென்றே நிச்சயிக்க வேண்டியதாயிருக்கிறது. மேலும் அர்சா விக்ரஹங்களுக்கு புண்ட்ரம் ஸமர்ப்பிப்பது அலங்காரார்தமே தவிர அதற்கு சாஸ்த்ர நியமமொன்றுமில்லை யென்றும் யதாருசி அதை திலக ஸ்தானத்தில் ஸந்தர்பாநுகுணமாக சோபாவஹமான ஸம்ஸ்தான யுக்தமாய் ஸமர்ப்பிக்கலாமென்றும் ஏர்ப்படுகிறது.

ஆகையால் தடஸ்தமாய் பர்யாலோசித்தால் பகவத் விக்ரஹங்கள் விஷயத்தில் ஹரிபாதாக்ருதி என்கிற ப்ரஸ்தாவமே ப்ரத்யவாயாவஹமென்று ஏற்படுவதால் இப்போது நாம் தரிப்பதை அநுசரித்து திவ்ய தேசங்களில் பெருமாள் திருமுக மண்டலத்தில் ஸமர்ப்பிக்கப்படும் புண்டரங்கள் கேவலம் அலங்காரார்தமாக ஏற்பட்ட விச்சித்தி விசேஷம் என்றே க்லேசத்துடன் ஸமர்த்திக்கவேண்டியது யுக்தமாகும்.

இப்படி நிர்ணயம் ஏற்பட்டால் பகவதாலயங்களில் இது விஷயமாயுண்டாகும் கலகங்கள் நீங்கி ஸ்ரீ வைஷ்ணவ ஸ்முதாயத்தில் ஸௌமநஸ்யமும் ஐக மத்யமும் உண்டாகுமென்று பத்ராதிபர் ஆசை கொள்வதானது ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தரனைவரும் அபிநந்திக்கத்தக்கது. ஆனால் அவ்வாசையை கலிபுருஷன் நிறைவேறச் செய்வனாவென்கிற விஷயத்தில் மனஸ் அதிகமான சங்கையை வஹிக்கிறது. வஸ்துஸ்திதியை நிஷ்பக்ஷபாதமாய் பராமர்சித்தால் புண்ட்ர விஷயமாய் இப்போது நடைபெறும் அஸூயா வைஷம்யாதிகளுக்கு ந்யாயமான ஹேதுக்களொன்றுமில்லை

யென்றே தோன்றுகிறது. ஸச்சரித்ர ரக்ஷையில் புண்ட்ர விஷயமாய் பஹுப்ரகாரமான விசாரங்கள் செய்யப்பட்டிருந்தும் அவை யெல்லாம் ஊர்தவ புண்ட்ரத்தின் க்ராஹ்யதையைப் பற்றியும், திர்யக்புண்ட்ரத்தின் பரித்யாஜ்யதையைப் பற்றியும், ஊர்தவ புண்ட்ரத்தை பகவத் பக்தர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஹரிபாதாக்ருதியாக தரிப்ப துசிதமே தவிர மற்றப்படி தீபசிகாகாரமாகவாவது வேணுபத்ராத்யாகாரமாகவாவது தரிப்பது யுக்தமல்லவென்றும் புண்ட்ரத்துக்கு ச்வேதம்ருத்திகையே ப்ரசஸ்தத்ரவ்யமென்றும் இன்னும் புண்ட்ர ஸங்க்யை பரிமாணம், முதலிய விவகாரங்களைப் பற்றியும் ப்ரஸக்தமாயிருக்கின்றனவேயல்லாமல் ஹரிபாதாகாரமென்பது எவ்விதமென்று ஸம்சயம் இருந்ததாகவாவது ஸ்ரீவைஷ்ணவர்களுக்குள் அவ்வாகாரத்தைப்பற்றி அது ஊர்தவ ப்ரஸ்ருதமா யிருக்கவேண்டுமா, அல்லது அத:ப்ரஸ்ருதமாயிருக்க வேண்டுமா, அல்லது உபயத: ப்ரஸ்ருதமாயிருக்க வேண்டுமா, அது லலாட மாத்ரவர்த்தியாயிருக்க வேண்டுமா அல்லது நாஸாக்ராந்தமாகவு மிருக்க வேண்டுமா வென்பதைப்பற்றி யாதொரு விவாதமுமிருந்ததாகத் தெரிய வில்லை. அப்படி ஏதாவது மதிபேதம் ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டிக்குள் இருந்திருக்கும் பக்ஷத்தில் ஸ்ரீ தேசிகன் அவைப்பற்றி கூலங்கஷமாய் விசாரித்து தத்வ நிர்தாரணம் செய்யாமலிருந்திருக்கமாட்டார். ப்ரபத்தி விஷயத்தில் ஏற்பட்ட சில விப்ரதிபத்திகளை ஸ்ரீமத்ரஹஸ்ய த்ரயஸாரத்தில் ஸ்திரீகரணபாகத்தில் விஸ்தாரமாக விசாரித்து ஸர்வ ஸம்சயங்களையும் அபுநஸ்ஸம்பவமாக சமிப்பித்திருப்பதே இதற்கு நிதர்சநமாகும். ஆகையால் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு புண்டராகார விஷயமான கலாபேதம் ஸ்ரீ தேசிகன் காலத்துக்கு வெகு காலம் பிறகுதான் வந்திருக்க வேணுமென்றேற்படுகிறது. மேலும் இந்த பேதத்துக்கு சாஸ்த்ராநுஸாரியான நியாமக மிருக்கக்கூடுமென்றும் தோன்றவில்லை. தனக்கிடங் கொடாமல் விலக்கி வைத்த பரிக்ஷித் மஹாராஜாவுக்குத் தீங்கு விளைவிக்க ஸமய ப்ரதீக்ஷனாயிருந்த கலி புருஷன் ஒருக்காலவருக்கு பாபிசத்வத்தை யுண்டாக்கி மஹர்ஷியின் கழுத்தில் செத்த பாம்பைப் போடும்படி செய்து அதனால் அவரை ரிஷி புத்ரன் சாபத்துக்குள்ளாக்கி ஏழு தினத்தில் அவருக்கு மரணம் நேரிடும்படி செய்ததுபோல தேசிகபரிஷ்க்ருதமான ஸ்ரீ பகவத்ராமாநுஜ ஸித்தாந்தம் அதிதேஜிஷ்டமாய் லோகத்தில் பரவி ஸர்வதத்ர அஜ்ஞாந தமஸ்ஸைப் போக்கி பூலோகத்தை ஸ்ரீ வைகுண்டத்துக்கு ஸமாநமாக்கி விடுமோ என்கிற பயத்தினால் அதே கலிபுருஷன் ஸ்ரீ பகவத்ராமாநுஜ ஸம்ப்ரதாயிகளுக்கு அந்த:சித்ரத்தை யுண்டாக்கி அதன் வழியாயுட்புகுந்து அஸூயாமாத்ஸர்ய கலஹாதிகளை மேன்மேலும் வ்ருத்தி செய்வதுபோல் தோன்றுகிறது. ஆகையால் புண்ட்ராகாராதிகள்

இக் கலகங்களுக்கு வ்யாஜமே தவிர அவைகள் யதார்த்த ஹேதுக்களாக மாட்டா. கலாபேதமாவது ஆசாரபேதமாவதில்லை. ஏகரூபமாயிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டிகளிலும் ஸ்தலங்களிலுங்கூட ஓயாச் சண்டை குடி கொண்டிருப்பதே இதற்கு நிதர்சநமாகும். ஆகையால் இந்த துஸ்திதிக்கு ஸரியான காரணம் ஸ்ரீ தேசிகன்

“க்ஷுவாத ஶாஸ்த்ரயோகாநு வர்த்திநாஶ்யாநநேத்ராந்யவேஶ ஜநநீ விஜ்ஞாநகாமயா” என்று ஸாதித்தபடி க்ஷாந்திகாமஶிஷ்யாத்ருஷ்டத்ரண ராஹித்யமும் க்ஷமயா ஶம்ஸநாதி ஶாஸ்த்ரணஸம்ப்ரஷியும் தஶநா ஸம்பந்நராஜஸதாமஸ வ்யாபாரவிசேஷங்களுமே. ஆகையாலேதான் புத்திமான்களாகவும் வாக்மிகளாகவும் க்ராந்திகர்களாகவுமிருக்கும் சிலர் திறத்தில்

‘யத்யப்யேதே நவைஜாநாத் ஸாத்யம் ஶாஸ்த்ரஸம்மதம் ।
ஸாத்யம் ஸாதோரபேக்ஷ்யஸ்து ஶக்த ஸாத்வி வாரிதா ॥’

என்ற திருவடி வாக்ய ரீதியாய் ஸாதுக்கள் மிகவும் அநுதபிக்க நேரிடுகிறது ஆகையால் இம்மாதிரியான ஸந்நிவேசத்தில் அத்யந்தம் சீர்மையான ஸ்ரீ பகவத்ராமாநுஜ ஸம்ப்ரதாயஸ்தர்களனைவரையும் ரஜஸ்தமோரஹிதர்களாகவும் ஸத்வோத்தரர்களாகவும் செய்விக்க வேணுமென்று ஸமஸ்தாஸ்திக ஜனங்களும் ஶ்ரிய: பதியை ஏகாக்ரமநஸ்ஸுடன் ப்ரார்த்திப்பதே உத்தமோத்தமமான லோகோபகாரமாகும் என்பதற்கு ஸந்தேஹமில்லை.

பகவதர்ச்சா மூர்த்திக்கு ஊர்த்வ புண்ட்ரம் தகுமா?

[ஸ்ரீ உப. விளாகம். ரா. நரஸிம்ஹாசார்யர் மயிலாப்பூர்.]

பரமகௌரவாஸ்பதமான வைலக்ஷண்யம் பொருந்திய ஸ்ரீவைஷ்ணவ கொள்கைக்கு தென்கலையார் வடகலையாரின், கோர்ட்டு வழக்குகளாகும் பெரும் பரிபவ ஹேதுக்களை கூடினமட்டும் விலக்குவதில் நோக்குடையவராய், ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹங்களின் விஷயத்தில் மிக்க ஹிதைஷி யென்ற ப்ரஸித்தியையுடைய வருமான உ. வே. ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்காரால், கோயில்களில் பெருமாளுடைய மூலவிக்ரஹங்களுக்கு புண்ட்ர தாரணமிருக்கும்படி இடங்கொடுப்பது அநுசித மென்று ஓர் வாதம் சென்றமாதத்திய வேதாந்ததீபிகையில் கிளப்பப்பட்டிருக்கிறது.

அர்ச்சா விக்ரஹங்களின் நெற்றி முதலான இடங்களில் புண்ட்ரங்கள் தரிக்கும்படி இடங்கொடுப்பது அநுசித மென்பதற்கு முக்கிய காரணங்களாக ஷை தீபிகையில் சொல்லப்பட்டவைகள் இரண்டு. அவையாவன—.

(1) நெற்றி முதலான இடங்களில் தரிக்கப்படும் ஊர்த்வபுண்ட்ரத்தை பெருமாளுடைய திருவடியின் குறியாக வெகு ஜனங்கள் சொல்வதுடன், புண்ட்ரமிடுவதை ஹரிபாதாக்ருதியாக இடவேண்டுமென்கிற விதிவாக்யத்தையுங்கொண்டு, ஊர்த்வபுண்ட்ர மென்பது பெருமாள் திருவடிக் குறியே யென்று ஊஹிக்க இடமிருப்பதாலும், இப்படி பெருமாள் திருவடிக்குறியான புண்ட்ரத்தை அடியார்களின் நெற்றி முதலான இடங்களில் இடுவது உசிதமானாலும், தம்திருவடிக்குறியைத் தன் நெற்றியிலேயே பெருமாள் தரிக்கும்படி செய்வது அநுசிதம்.

(2) நெற்றியில் இடப்பட்ட புண்ட்ரம் தென்கலை புண்ட்ரம் வடகலை புண்ட்ர மென்று வழங்கப்பட்டுவரும் இரண்டிலொன்றாக இருப்பதாலும், பகவதர்ச்சா விக்ரஹங்களுக்கு இவ்விருவகைப் புண்ட்ரங்களிலொன்றையும் இடாமலிருந்து விட்டால், ஸர்வபரிஹரணீயங்களான கோர்ட்டு வழக்குகள் மிகவும் குறைந்து விடும்.

இவ்விரண்டுக்கும் ப்ரத்யுத்தரம்

(1) ஸ்ரீவைஷ்ணவரல்லாத வேறு பற்பல வைஷ்ணவ ஸமூஹத்தார் தரிக்கும் புண்ட்ர ரூபங்களுக்கு மூலங்களான அந்தந்த விதிவசநங்களின் படி, எள்ளைப்போல், தாமரைப் பூவைப்போல், மூங்கிலிலையைப்போல், விளக்கொளியைப்போல், அல்லது ஸ்ரீபஞ்சாயுதங்களி லொன்றைப்போல் என்றிப்படி பற்பல வஸ்துக்களின் உருவங்களை ஊர்த்வ புண்ட்ர உருவத்துக்கு உபமானங்களாய் எடுத்திருக்கும் மாதிரி, ஸ்ரீவைஷ்ணவ சின்னமான புண்ட்ரத்தினுருவத்திற்கு சாஸ்த்ர விஹிதோபமானம் ஹரி பதம். இதர புண்ட்ர ரூபங்களுக்கு உபமானங்களாய் ஸௌம்ய ரூபங்களுமான திலபத்ம வேணுபத்ர தீபசிகாதிகளைப்போல், ஹரிபாதத்தின் ஆக்ருதியும் ஓர் வகைப் புண்ட்ரத்துக்கு உபமான வஸ்துவாயிற்று. எள்ளுருவம், மூங்கிலிலையுருவம், விளக்கொளியுருவம், தாமரைப்பூவுருவம் இவைகள் போன்ற புண்ட்ரங்களைத் தரித்தவர்கள் ஸாக்ஷாத் எள்ளையே, மூங்கிலிலையையே, விவக்கொளியையே, தாமரைப் பூவையே தரித்தவர்களகார். எள்ளைப் போலவோ, மூங்கிலிலையைப் போலவோ ஓர் புண்ட்ரத்தை எம்பெருமான் திருநெற்றியில் கேவலம் அலங்காரார்த்தமாக தரிக்கும்படி செய்தால் ஆக்ஷேபமொன்றும் சொல்லாத நம்மவர்கள், அதிப்ராக்ருத வஸ்துக்களான எள்ளு மூங்கிலிலை முதலியவைகளையும், இன்னும் மற்ற அப்ராக்ருத சுத்த ஸத்வ மயங்களான எவ்வித வஸ்துக்களையுங் காட்டிலும் அதிவிலக்ஷணமாய் நிஸ்ஸமாப்யதிகமான இருப்பையுடையதும், பரமம் என்கிற உரிச்சொல்லை அநிதர ஸாதாரணமாகத் தனக்கே விசேஷணமாவுடையதுமான ஹரிபதத்தின் வளைப்பையுடைய ஓர் புண்ட்ர ரூபாலங்காரத்தை தம் திருநெற்றியில் தரித்திருக்கும்படி செய்வதினால், எம்பெருமான் அவமதிக்கப்பட்டதாகச் சொல்வது ரஸிக்கவில்லை.

மேலும், எம்பெருமானுருடைய விபவதசையில், தில்லைத்திருச்சித்ர கூடத்தில், சைவபக்ஷ பாதிகளான அதிகாரிகளின் நிர்ப்பந்தத்தால் ஸ்ரீ கோவிந்தராஜன் ஸன்னிதிக்கு, க்ஷோபங்களுண்டாக, கீழைத்திருப்பதியில் நேரில் எம்பெருமானாரால் திருப்ரதிஷ்டை செய்விக்கப்பட்ட ஸ்ரீகோவிந்தராஜன் மூலமூர்த்தியின் திருநெற்றியில் ஸ்தாவரமாய் நிலைகொண்டிருக்கும் சாஸ்த்ர விஹிதஹரி பாதாக்ருதி ஸ்ரீவைஷ்ணவோர்த்வ புண்ட்ரத்தை, சமீபத்தில் ஸர்கார் அதிகாரி முதலியப்ரமுகர்கள் சோதித்துப்பார்த்து விட்டதின் காரணத்தால், திருப்பதியில் வெகுநாளாய் முடிவுக்கு வராத தென்கலை வடகலை வழக்கு முடிவுக்கு வரும்படியாயிற்றென்று எல்லோருக்கும் தெரிந்திருக்கும். எம்பெருமான் திருவடி வளைப்பைப் போன்ற வளைப்பையுடைய புண்ட்ரத்தை எம்பெருமான் திருநெற்றியிலே தரிக்கும்படி செய்த்ப்ரஸித்தியையுடைய எம்பெருமானர் செய்தருளின அதி விலக்ஷணமான ஓர் கார்யத்தை யல்லவோ நாம் நிந்தித்தபடியாகும், பெருமாள் நெற்றியில் தத்பாதாக்ருதியான புண்ட்ரதாரணம் அநுசிதம் என்று நாமிப்போ சொல்லப்புகுவது ?

தவிர, ஸ்ரீமந்நிக மாந்தமஹா தேசிக விரசிதமான ஸ்ரீதேவநாயக பஞ்சாசத்தின் இருபதாவது ச்லோகத்தில்,

"ஓாவண்யவஷி-ணீ ஸஓாட-தடெ வ நாலெஹ ஸிஹ் குதுதிூ-ணவிஶெஷிவொவொஜு-வாஷு ு। விஜஸு கிஜ-ரவெ தீ தஒஸா வூ-தஸு ஒ நூ விஸாவயஸி ஊஜுஸிகவூ தீவழு"

என்றபடி பரமப்ராமாணிக ஸார்வபௌம ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸூக்திப்படி லளிதோர்த்வ புண்ட்ரோஜ்வலலலாடராய் இன்றைக்கும் ஸேவை தந்தருளிக் கொண்டுவரும் திருவஹீந்த்ரபுரத் தெம்பெருமான் திருநெற்றியின் ஒளியழகை இப்போது நாம் அழிக்க முயன்று ஸ்ரீதேசிகன் திருவுள்ளம் கசக்கும்படி செய்யவேண்டாம்.

இப்படி ஸ்ரீபாஷ்யகார தேசிகர்களின் ப்ராமாண்ய வலிமையே போதுமானது, பகவதர்ச்சா மூர்த்திகளுக்கு ஊர்த்வபுண்ட்ர தாரணரூபாலங்காரமைர்ப்பணம் சாஸ்த்ரவிஹிதமே என்றறிய.

(2) வீண் கோர்ட்டு வழக்கு மூலமான அஹங்காரமமகாரங்களுக்கு தென்கலை வடகலைப் புண்ட்ரக்குறிகள் மாத்திரம் போஷகங்களாகா. திருவஹீந்த்ரபுரத் திருப்பதியில் வெகுகாலம் நிரந்தரமாய் உபத்ரவித்து வந்த அத்யாபக வேத பாராயண கோஷ்டி வைஷம்யங்களையும், அதேமாதிரி

வெகுகாலம் மற்றும் திவ்ய தேசங்களில் நடந்துவரும் கலஹங்களுக்கும் அஹங்காரமமகாரங்களே முக்யகாரணங்களாகும். ஆகையால் ஊர்த்வ புண்ட்ர ரூபங்களின்மேல் பழியைச்சுமத்த முயல்வது வீணான கார்யம்.

ச்ரமஸாத்யங்களான கர்மாநுஷ்டாநங்களொன்றுமில்லா விட்டாலும், பரம மங்களங்களுக்கெல்லாம் மூலக்குறியாய்,

"[illegible]" —

என்கிற முதற்றிருநாமத்தின் ஏற்றத்தைப் பொய்யாக்க முயலாமல், என்னுடையதென்று நான் அபிமாநித்திருக்கும் இல்லீலாவிபூத்யேக தேசக்ஷேத்ரமான இந்த என் சரீரத்தைத் தன் கோயிலாகக் கொண்டு தத்க்ஷேத்ராதிஷ்டாத்ரு க்ஷேத்ரஜ்ஞனை என்னையும் தன் தாஸனுக்கிக் கொண்டிருக்கும் சரண்யதிவ்யமிதுநத்தின் கோயில் கண்டீர் இது; கேவல சேதனனை என்னுடைய சரீரமல்ல; என்று ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனும் தானறிந்தோ அறியாமலோ பிறரறியத் தோற்றுவிக்கும் திவ்யதம்பதிகளின் ஸததஸாந்நித்ய ஸூசகக் குறியான இந்த திவ்ய லலிதோர்த்வ புண்ட்ர தாரணத்தின் பேரில் ஓர் குறையைச் சொல்ல நாமே துணிந்து விட்டால், வீட்டிலுள்ள பெரியோர்களின் நிர்ப்பந்தத்தினுல் நெற்றியில் புண்ட்ரத்தை இட்டுக் கொண்டு, "பாச்சாத்ய நாகரிகமார்க ரஸிகரான நமக்கு இப்புண்ட்ரம் தகாதென்று எண்ணி வீட்டைவிட்டு வெளிப்புறப்படும் போதெல்லாம் நெற்றிக்குறியை அழித்து விட்டு வெளிக்கிளம்பும் நம் சிறியோர்கள், உலகத்தை புண்ட்ரஹீநமாகவே ஆக்கி விடுவார்கள்.

தேவாலயங்களில் ஊர்த்வபுண்ட்ரம்

(ஸ்ரீ மதுராந்தகம். தி. ஈ. வீரராகவாசார்யர்
ந்யாய வேதாந்த சிரோமணி திருவாதி)

தேவாலயங்களில் மூல பகவத் விக்ரஹங்களுக்கு திருமண் காப்பு ஸமர்ப்பிப்பதைப் பற்றி விசாரம் என்கிற தலப்பின் கீழ் பத்ராதிபர் ஸ்ரீ. உ. வே. வி. வி. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் ஸ்வாமி சென்ற மாஸ தீபிகையில் பிரசுரித்துள்ள ஸமசயத்துக்கு ஸமாதானத்தை விஜ்ஞாபனம் பண்ணிக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீ தேசிகன் ஸச்சரித்ர ரக்ஷையில் ஊர்த்தவபுண்ட்ரதாரணவிதியில் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு பகவத் பாதாகாரபுண்ட்ரம் அவச்யம் என்று ஸ்மர்த்தித்து மேலே ஸாதிப்பதாவது.

ननु भगवदर्चावतारेषु दीपशिखाकारोर्ध्वपुण्ड्रस्य दर्शनात् यच्छीलस्स्वामीति न्यायेन भागवतैरपि तथैवानुष्ठानमितिचेन्न । वचनविरोधे न्यायस्यानवतारात् । अन्यथा भगवदनुष्ठित गोपकन्योन्मादन स्वकुलविनाशन बुद्धसमयप्रवर्तनादेरपि प्रसङ्गात् । अतो न स्वामिकृतं सर्वं भृत्येनाप्याचरणीयं । लोके चैतदेवन्द्रष्टव्यं । न च दीपशिखाकारमेवार्चावतारेषूर्ध्वपुण्ड्रं कुर्वीतेति विधिरस्ति । येन संस्थानान्तराणि परित्यजेरन् । यदि वचनं दृष्टं तदापि तन्मात्रविषयमिति नास्माभिरनुष्ठेयं । किञ्चालङ्करणरूपतया हि भगवतस्तद्धारणं । तत्र शोभैव प्रधानभूतेति यथाशोभाभिमानः तथैव कुर्वन्तीति किं विरुध्यते । अतश्श्रुत्यादि विहित हरिपादादि संस्थान मेव भागवतै रुपादेयमिति स्थितं ॥

என்று. இதன் கருத்து—

பகவானுடைய அர்ச்சாவதாரங்களில் தீபத்தின் சிகை போன்ற ஆகாரமுள்ளதான ஊர்த்த்வபுண்ட்ரம் காண்கையால் யஜமானன் எந்த ஆசாரமுள்ளவனோ தாஸனும் அம்மாதிரி ஆசாரமுடையவன் என்கிற ந்யாயத்தினுலே பாகவதர்களாலும் தீப சிகாகார ஊர்த்தவபுண்ட்ரமே தரிக்கப்படவேண்டும் என்பதில்லை, வசன விரோதமுள்ளபோது ந்யாய ஸஞ்சாரங்கூடாது, அன்றோ? அப்படியில்லையாகில் பகவான் அனுஷ்டித்தவைகளான, கோபகன்யைகளைப் பிச்சேறப் பண்ணுதல், ஸ்வகுல நாசம் செய்தல், புத்த ஸித்தாந்தத்தைப் ப்ரவர்த்திப்பித்தல், என்றிவை போன்றவைகளையும் பாகவதர்கள் அனுஷ்டிக்கப் ப்ரஸங்கிக்கும்.

ஆகையால் ஸ்வாமியினுல் செய்யப்படுவதெல்லாம் ப்ருத்யனுல் செய்யப்படவேண்டும் என்று நியமம் இல்லை. உலகத்திலும் இவ் விஷயம் இப்படியே காணக்கூடியது. தீபசிகாகாரமாகவே ஊர்த்த்வபுண்ட்ரத்தை அர்ச்சாவதாரங்களில் ஏற்படுத்தவேண்டும் என்று விதியுமில்லை; எதற்காக மற்ற ஆகாரங்களை விலக்கவேண்டும்? வசனம் காணப்படுமாகிலும் அது பகவானைப் பற்றியே ஆகையால் நம்மால் அனுஷ்டிக்கப்படவேண்டியதில்லை. மேலும் அலங்கார ரூபமாகவன்றோ பகவானுக்கு அதை ஸமர்பிப்பது. அதில் சோபையே ப்ரதானமாகையால் எப்படி சோபை உண்டாகிறதாக எண்ணமோ அப்படியே செய்கிறார்கள் என்று என்ன விரோதம்? ஆகையால் ச்ருதி முதலியவைகளில் விஹிதங்களான ஹரிபாதாகார புண்ட்ரமே பாகவதர்களால் உபாதேயம், என்பது.

இதனுல் பகவத் பாதாகாரமாகவே ஊர்த்த்வபுண்ட்ரம் பகவத் விக்ரஹங்களுக்கு ஸமர்ப்பிக்கப்படவேண்டியது என்று நிர்பந்தமில்லை என்று ஏற்படுகிறது.

அப்படி ஸமர்ப்பிப்பதும் சோபார்த்தமாகையாலும் அதில் ஹரிபாதம் என்கிற அத்யவஸாயம் இல்லாமையாலும் அதுவும் ஸமஞ்ஜஸமே. பகவத் விக்ரஹங்களுக்கு ஹரிபாதாக்ருதி புண்ட்ரம் என்று நியதி யில்லையே யாகிலும் பக்த விக்ரஹங்களுக்கு அது அவச்யமே யாகையால் கலா வைஷம்யம் பகவத் புண்ட்ரங்களை மாற்றுவதால் குறைந்துவிடும் என்பதற்கில்லை.

ஸ்வல்பம் ஆகாரபேதம் உண்டேயாகிலும் இரு கலையாராலும் அங்கீகரிக்கப் பட்டு வருவது பகவத் பாதாக்ருதியே யாகையால் சிறிது வித்யாஸத்தைப் பாராட்டாமல் விசால நோக்கத்துடன் ஐகமத்யம் கொள்ள வழி தேடுவது மிகவும் ரஸமானது. என்று அடியேன் சிற்றறிவுக்குத் தோன்றியதை விண்ணப்பஞ் செய்து கொண்டேன்.

இரஸாயந முறை அல்லது காயகல்பம்

(வைத்திய ரத்ன பண்டித மே. துரை ஸ்வாமி ஐயங்கார், ஆயுர்வேத பூஷணம், ஆயுர் வேதாசார்ய. புரசவாக்கம்.)

முன்னுரை.

வைதிகக் கொள்கைகளில் விச்வாஸமும் சிரத்தையுமுள்ள விவேகிகளுக்கே இரஸாயநம் என்னும் இஹபர ஸாதகமான அஸாதாரண சிகித்ஸை குறிப்பிட்ட குணங்களைத் தருமென்று இரு ஷீச்வரர்கள் கசடறச் கூறியிருக்கிறார்கள். முற்றிலும் இக் கருத்தடங்கிய கட்டுரையொன்று ஸமீபத்திற் சுதேசமித்திரனில் அடியேனால் வெளியிடப்பட்டதைக் கண்ட இத் தீபிகா சிரியர்கள், இப்பத்திரிகைக்கும் அத்தகைய நிரூபமொன்று அவசியமென நியமித்தார்கள். ஆகவே இவ் வியாஸம் ஸ்ரீ தீபிகையில் இடம் பெறுவது உசிதமென்று அதன் வாசக நேயர் இனிது விரும்புவர் என்பது அடியேன் கருத்து.

கற்றறிந்த ஆயுர்வேத சாஸ்திரஜ்ஞருக்கன்றி மற்றெவருக்கும் 'இரஸாயநமுறை' இன்னதென்றே இதுவரையில் விளங்காதிருந்தது. பண்டித மாளவியாஜியைப் போன்ற பெரியோர் இதை முறைப்படி செய்துகொள்ளத் துணிந்ததிலிருந்து, இச்சிகித்ஸாமுறையே அதற்குப் புத்துயிர் அளிக்கப்பட்டதுபோல் நாடெங்கும் மிகப் பிரஸித்தியடைந்து பிரபலமாகப் பிரஸ்தாபிக்கப்படுகிறது.

இப்பொழுது இந்த இரஸாயந முறைக்கு ஏற்பட்ட இப் பிரஸித்தியைக் கீழ்நாட்டு மேல்நாட்டு வைத்தியர்களில் பலர் தொழில் முறையில்

திரவ்யந் தேடுங் கருவியாகவும், பொது ஜனங்களில் அநேகர் ஆயுளபிவ்ருத்திக்கும், ஆரோக்கியப் பெருக்குக்கும், கிழத்தனத்தாலான சீர்கேட்டைக் குறைப்பதற்கும், உத்ஸாஹமான உயிர் வாழ்க்கைக்கும் உற்றதோர் உபாயமாக உபயோகித்துக் கொள்ளவும் ஊக்கமுள்ளவராயிருக்கின்றனர்.

அரிய ஆயுர்வேத சாஸ்திரத்தில் அவிச்வாஸம் பாராட்டிய அநேகம் பேர்வழிகள்கூட, அச் சாஸ்திரத்திலும் அருமருந்துகள் உண்டென்கிற உண்மையை உணர்ந்து அதைத் தமக்கும் உபயோகித்துக்கொள்ள முன் வருவதைக் கண்டு, மனிதருக்கு உயிர் வாழ்க்கையில் அத்ருஷ்டமும் துரத்ருஷ்டமும் அவ்வக் காலத்திற்கேற்ப மாறி மாறிச் சுழன்று நிகழ்வது போல், நம் நாட்டுப் பிரபல சாஸ்திர தத்துவங்களின் உண்மைகளுக்குங் கூட இவ்வாறு எளிய தசையும் உயர் தசையும் மாறி மாறித் தாழ்ந்தும் உயர்ந்தும் வருவதாகக் கூறவேண்டியிருக்கிறது.

காயகல்பம் என்கிற மாபெரும் சிகித்ஸை எத்தகையது? மாளவியாஜியைப் போன்றவர் அதற்கு உட்பட்டு அதை நிறைவேற்றிக்கொண்டதேன்? மஹாத்மாஜியைப் போன்றவர்க்கு அதை ஏன் செய்யக்கூடாது? என்கிற பல வேறு வகையான கேள்விகளை நானறிந்து பலர் கேட்டு வருகிறார்கள். இவ்வித வினாக்கள் அனைத்துக்கும் இவ் வியாஸமே விளக்கமான விடையாகும்.

காய கல்பமா-இரஸாயநமா?

முறைப்படி யுபயோகிப்பதால் குறிப்பிட்ட எந்த வியாதியையும் குணப்படுத்தி முற்றிலும் சுகந்தரக் கூடிய மருந்துகளைச் "சித்தௌஷதங்கள்" என்று கூறுவர். அவ்வித மருந்துகளுக்குத் தான் "கல்பௌஷதங்கள்" அல்லது "கல்பங்கள்" என்று பாரிபாஷிகப் பெயர். ஆகையால் ஆதிகாலந்தொட்டு ஆயுர்வேத ஸம்ஹிதாக் கிரந்தங்களாகிய "சரக ஸம்ஹிதை", "ஸுச்ருத ஸம்ஹிதை", "காச்யப் ஸம்ஹிதை" "அஷ்டாங்க ஹ்ருதயம்" முதலிய பிரபல வைத்தியக் கிரந்தங்களில் கல்ப ஸ்தாநம் என்று தனியாக ஒரு பெரிய பாகம் அமைக்கப்பட்டு, அதில் குறிப்பிட்ட நோய்களை நிச்சயமாய் நிவ்ருத்திக்கும் "கல்பங்கள்" என்கிற ஸித்தௌஷத முறைகள் பல விஸ்தாரமாகத் தொகுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. கல்ப ஸ்த்தாநங்களில் விவரிக்கப்பட்டுள்ள ஔஷத முறைகள் யாவும் வமந- விரேசநாதி சிகித்ஸைகளுக்கும், பல வேறு வகையான பிணிகளைப் பரிஹரிப்பதற்கும் ஏற்ற ஸித்தௌஷதங்களா யிருக்கின்றனவே யன்றி, ஆரோக்கியத்தை அபிவ்ருத்தி செய்து ஆயுளை நீடிக்கச் செய்வதற்கென்றே ஏற்பட்ட இரஸாய ஔஷதங்களென்று சொல்லக் கூடியவையல்ல. முனீச்வரர்களும் யோகிகளும் முற் காலத்தில் விரும்

பிய காய ஸித்தி யென்கிற யோக ஸித்திக்கு உபயோகமான உபாயமாய் அமைந்தது "இரஸாயநம்" என்னும் முறையே. ஆகிலும் இப்பொழுது, அதிலும் முக்கியமாய் மாளவியாஜி இச் சிகித்ஸையைச் செய்துகொள்ளத் துவக்கியது முதல் இதற்குக் "காய கல்பம்" என்கிற பெயர் எங்கும் சரியாகவோ தவறுதலாகவோ பிரபலமாய் வழங்கப்பட்டு வருகிறது. முன் குறிப்பிட்ட விதமாய் எந்த குறிப்பிட்ட வியாதியையும் நிச்சயமாய் நிவ்ருத்திக்கும் இயல்புள்ள எச் சிகித்ஸையும் அல்லது எந்த மருந்தும் "கல்பம்" என்கிற பெயரால் வழங்கப்படுவது சாஸ்திர ப்ரஸித்தமான விஷயம். ஆயுளாரோக்கியத்தையும, மனோதார்ட்யத்தையும் அளித்து, மானிடருக்கு மூப்பினாலான நரை திரை முதலியதைத் தடுத்துப்போடும் ஔஷதம் அல்லது சிகித்ஸை சாஸ்திரப்படி "இரஸாயநம்" என்கிற பெயரால் அழைக்கப்படும். இவ்வுண்மையைத்தான் அடியிற் குறிக்கப்படும் பிரமாணம் விளங்க நிரூபிக்கின்றது.

प्रयोगैर्बहुधा दृष्टफलानां भिषगुत्तमैः ।
औषधानां हि सिद्धानां कल्पः सिद्धौषधम् स्मृतम् ॥

இரஸாயந விவரணம்.

பண்டித மாளவியாஜி செய்து கொண்ட சிகித்ஸாமுறைக்கு "இரஸாயநம்" என்பதுதான் சாஸ்த்ரீயப் பெயர். ஆயுர்வேத ஸம்ஹிதாக்கிரந்தங்களின் 'கல்ப.ஸ்த்தாநங்களில்' விவஹரிக்கப்படுகிற மதந கல்பம், ஜீமூத கல்பம், தாமார்கவ கல்பம் முதலிய ஸித்தௌஷதங்களுக்கும் தற்பொழுது எங்ஙனமோ காய கல்பம் என்று வழங்கப்படுகிற இரஸாயநமுறைக்கும் எவரேனும் ஸம்பந்தமொன்றைக் கற்பித்தாலும் கற்பனை செய்யட்டும். அஃதெப்படியாயினும் முனிவர்களும் விரும்பி யேற்கக் கூடிய முக்கியப் பிரயோசனம் இதற்கு எவ்விதம் ஏற்படுகிறது? இம் முறைக்கு இரஸாயநம் என்னும் பெயர் வந்ததன் காரணம் என்ன? இதை நிறைவேற்றும் வகையாது? என்கிற விவரங்களை வைதிக லௌகிகர்களிற் பலர் அறிய ஆவலுள்ளவரா யிருக்கிறார்கள். ஆகையினால் சாஸ்திரப் பிரமாணங்களை ஆதாரமாகக் கொண்டே இவ்வியாஸத்தில் விஷயங்களை விசதப்படுத்துகிறேன்.

நாம் அருந்தும் ஆஹாரம் அனைத்தும் ஆமாசயம் என்கிற இரைப்பையிலும், ஆந்த்ரம் என்கிற குடலிலும் பக்குவமாய், பிறகு இரத்தத்திற் சேருவதற்கு முன்பு ஒருவகையான வெண்ணிறக் குழம்பு நிலைமையைப் பெறும். அவ்விதப் பாற்குழம்பை ஆயுர்வேதமறிந்தவர் பிரதம தாதுவென்றும், இரஸ தாதுவென்று விசேஷமாகவும் கூறுவர். இத் தாதுரூபமான இரஸம் என்றும் ஸத்து இரஸாயனிகள் என்கிற ஸ்ரோதோ முகங்களில்

(ஆங்கிலத்தில் இவற்றை லாக்டியல்ஸ் என்கிறார்கள்) பாய்ந்து, இரத்தத்துடன் கலந்து, இரஞ்ஜகபித்தம் என்கிற உஷ்ண ஸஹிதமான நிறப்பொருள் முதலியவற்றின் சேர்க்கையால் இரத்த தாதுவாகப் பரிணமித்து அப்பால் கிரமமாக மற்ற மாம்ஸாதி தாதுக்களையும், பாஹ்யாப்யந்தர அவயவங்களையும் நிரந்தரமாகப் போஷித்து வருகிறது. போஷணை என்பது தேஹத்திற்கு இலாபகரமான செய்கை. அதே ஸமயத்தில் மலம்-மூத்திரம்-வியர்வை-நிச்வாஸம் முதலியவ கையில் நிமிஷந்தோறும் வெளியாகும் கழிவானது சரீரத்திற்குச் செலவு அல்லது நஷ்டந்தரும் செய்கை. நாம் உண்ணும் உணவானது பால்யம் முதல் கிழத்தன மீறாக முற் கூறிய வகையில் நம் தேஹத்தில் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்து, ஒரு சிறிது போஷணைக்கு மாத்திரம் உபயோகப்படுகிறது. நிரந்தரமாயுண்டாகும் மலாதிரூபமான கழிவு என்னும் நஷ்டத்தை ஈடு செய்யவே நாம் உண்ணும் உணவு (இரஸ-ரத்தாதி தாதுபோஷண ரூபமான காரியத்தைச் செய்ய) உதவுகிறது. கிழத்தனம் கிட்டக் கிட்ட, அவ்விதம் கழிவு ரூபமான நஷ்டத்தைச் சரிப்படுத்த மாத்திரம் நாம் உபயோகிக்கும் உணவு ரூபமான போஷணை உடலுக்குப் போதாது. வாலியப் பருவத்திற்குப் பின்புகூட இரஸ-இரத்தாதி தாதுக்களின் சிதைவைச் சரிக்கட்டவும், மேன்மேலும் அவற்றிற்கு விசேஷ செழுமையை விருத்தி செய்யவும், ஓகஸ் என்னும் உயிருக்கு இன்றியமையாத உத்தமதாதுவை அபிவ்ருத்தி செய்து உத்ஸாஹ-பலங்களை உயர் நிலைமைக்குக் கொண்டு வரவும் விசேஷ போஷணைக்கு வகை தேடினாலன்றி வயோதிகத் தன்மையில் உடல் வாடி, வலிமை குன்றி, ஊக்கமிழந்து, உயிர் வாழும் காலமும் ஒடுங்கிக் குறுகிவிடும். அவ்விதம் இரஸாதி ஸகல தாதுக்களுக்கும் விசேஷ போஷணையையும், வன்மையையும், ஆயுளாரோக்கிய அபிவ்ருத்தியையும் அளிக்கும் உபாயமாகத்தான் இரஸாயநம் என்கிற முறையை முற்காலத்திய முனிவர்கள் கண்டறிந்து வெளியிட்டிருக்கிறார்கள். அதாவது வயது ஏற ஏற தேஹ தாதுக்களில் சிரழிவு என்னும் நஷ்டம் அதிகரிப்பதும், அவற்றிற்கு அவசியமான போஷணை என்னும் இலாபாம்சம் கிரமமாகக் குறைவதும் இயல்பு. ஆகவே அவ்விதம் அதிகரித்துவரும் சிரழிவு என்னும் நஷ்டத்திற்கு ஈடு செய்யும் ஸாமானிய போஷிப்போடு விசேஷ போஷிப்பான அதிக இலாபகரமான உபாயத்தைத் தேடினாலன்றி தேஹ பலமும், உத்ஸாஹமும், உயிர் வாழ்க்கையும் மனிதருக்கு நீடிக்கமாட்டாதென்கிற தத்துவத்தைக் கண்டறிந்து நமது முன்னோர் அதற்கு "இரஸாயநம்" என்கிற அரியதோர் பெயரைத் தந்தனர். இத் தத்துவத்தை ஒரு சிறு ஸூத்திர ரூபமான அரை ச்லோகத்தினால் சரகர் लाभोपायो हि · शस्तानां रसादीनां रसायनम् என்று விளக்கி யிருக்கிறார்.

பிராணிகளின் ஜீவதாதுக்களுக்குச் சீரழிவு இருவகையிற் காணும்; ஒன்று வயது செல்லச் செல்ல இயற்கையிலேற்படும் மூப்புச் சிதைவு; மற்றொன்று மனோ தேஹ வியாதிகளாலாகும் சீரழிவு. ஆயுர்வேதத்திற் கூறிய அஷ்டாங்கங்கள் என்கிற எண் வகைச் சிகித்ஸைகளுள் ஏழு வித மான சிகித்ஸா முறைகளும் நோய்களால் அல்லது செயற்கைக் கோளாறு களால் உண்டாகும் சீரழிவு என்னும் நஷ்டத்தை ஈடுபடுத்து முபாயங் களாம். கிழத்தனத்தாலாகும் சீரழிவையும் நித்தியபடி ஏற்படும் நியதமான சீரழிவையும் ஈடு செய்து தேஹ தாதுக்களுக்கு அதிக இலாபகரமான போஷணையைத் தந்து, வியாதிகளையும் வயோதிகத் தீமைகளையும் வரவிடா மல் வன்மையையும், ஆரோக்கியத்தையும் அபிவ்ருத்தி செய்யும் சிகித்ஸை அல்லது ஔஷதமே "இரஸாயநம்" என்று சாஸ்திர ஜ்ஞரால் வழங்கப் படுகிறது. இதைத் தான் சார்ங்கதரன் என்பவர் रसायनं तु तत् ज्ञेयं यज्जराव्याधि नाशनम् முதலிய வாக்கியங்களால் விவரித்திருக்கிறார். இரஸம் முதல் சுக்ராந்தமான ஏழு தாதுக்களுடையவும் ஸத்வரூபமான "ஓகஸ்" என்னும் தாது ஒன்றுண்டு. உயிர் வளர்ச்சிக்கும், உத்ஸாஹ விருத்திக்கும் ஊக்கங்குன்றாது உழைக்கும் சக்திக்கும் உற்றதோர் ஸாதநம் அதுவென்று ஆயுர்வேதஜ்ஞர் கூறுவர். (ஆங்கிலத்தில் அதைத்தான் அல்ப்யூமின் என் கிறார்கள் எனக்கருதப்படுகிறது). ஆரோக்கிய நிலைமையில்கூட அந்த எட் டாம் தாதுவுக்கு அபிவ்ருத்தியைத்தரும் ஔஷதம் அல்லது சிகித்ஸை இர ஸாயநமாகவும், வ்ருஷ்யமாகவும் (சுக்ரார்த்தவங்களை விருத்தி செய்து ஆண்மை முதலியதைச் செழுப்பிப்பது வ்ருஷயம்) உபயோகப்படு மென் பதாக स्वस्थस्यौजस्करं यत्तु तद्वृष्यं तद्रसायनम् என்று அக்னிவேசாதி முனி வர்கள் கூறுகிறார்கள்.

வ்ருஷ்யமும் இரஸாயநமும்

தேஹதாதுக்களுக்கு இலாபகரமான போஷணையைத்தரும் வ்ருஷ்யம் இரஸாயநம் என்கிற இருவகை சிகித்ஸைகளுள் முந்தியது ஐஹிகஸுகத் தில் ஈடுபட்டு ஸந்தாந வ்ருத்தியை விரும்புபவருக்கு அவசியமானது. குதிரையைப் போல் உடலுக்கு விசேஷ உரந்தருவதால் அது "வாஜீகர ணம்" என்றும் வழங்கப்படும். இரஸாயந முறையோ ஓஜோவ்ருத்தியை யுண்டுபண்ணி தேஹமனோ பலத்தையும் ஆயுளையும் அபிவ்ருத்தி செய்வ தோடு, ஞானேந்த்ரிய-கர்மேந்த்ரியங்களை வலுப்படுத்தி, அவற்றை முறை தவறாகப் பிரவ்ருத்திக்காம லிருக்குமாறு கட்டிக் காக்கும் திறமையைத் தரக்கூடியவென்றும், யோகாப்யாஸாதி ஆத்மார்த்த காரியங்களுக்கும் இன்றியமையாச் சாதநமென்றும் ஆயுர்வேதப் பிரவர்த்தகர்களான ஆசாரி யர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

"முன்பு ச்யவநாதி மாமுனிவர்கள் வயது சென்றமையால் வலிவற்றுப் போயினர்; நீண்ட தவம்புரியக் கருதி நீடித்த ஆயுளை விரும்பி, மிகச் சிறப் பான இந்த இரஸாயந முறைகளைச் சேவித்து அளவற்ற ஆயுளைப் பெற்ற னர்; அதன் பயனாக அறிவையும், தவத்தையும், பிரஹ்மசர்ய மேன்மை யையும், அத்யாத்ம ஸாதநமான தியாநசக்தியையும் அடைந்து, நீண்டா யுள்படைத்து ஐஹிகச்ரேயஸ்ஸுக்களில் ஈடுபட்டுவிட்டு, தமதிஷ்டப்படி விண்ணுலகு சேர்ந்தனர்." என்று இரண்டாவது இரஸாயநபாதாத்யா யத்தில் சரகர் பின்வரும் ச்லோகங்களில் மொழிந்திருக்கிறார் :—

प्राणकामाः पुराजीर्णाश्च्यवनाद्या महर्षयः ।
रसायनैः शिवैरेतैर्बभूवुरमितायुषः ॥

ज्ञानं तपो ब्रह्मचर्यमध्यात्मं ध्यानमेव च ।
दीर्घायुषो यथाकामं संभुज्य त्रिदिवं गताः ॥

"இரஸாயந முறைகள் ஒழுங்காக உபயோகிக்கப்பட்டால் ஆயுள் அபி வ்ருத்தியடைவதோடு, உடலில் உள்ளும் புறமுமுள்ள தாதுக்களில் வியாதி கள் அணுகமாட்டா; கிழத்தனத்தாலாகும் நரை திரை முதலியவை கிட்ட நெருங்குவதில்லை; தேஹமும் மனமும் சுத்தியடைந்து நிர்மலமாகும்; இரஸாயநத்தினால் ஏற்படக்கூடிய இக்குணங்களெல்லாம் இம்மை மறுமை களுக்கு அவசியமான ஆத்மார்த்த தத்துவங்களில் ஈடுபடும் நோக்கமுள்ள வருக்கே குறிப்பிட்டபலனைக் கொடுக்கக் கூடியது" என்கிறார் முதல் இரஸாயநபாதத்தில் சரகர் :—

योगा ह्यायुःप्रकर्षार्था जरारोगनिबर्हणाः ।
मनश्शरीरशुद्धानां सिध्यन्ति प्रयतात्मनाम् ॥

ஆகவே உடலும் உள்ளமும் சுத்தமில்லாதவருக்கும், ஆத்மார்த்தங்களில் அவிச்வாஸமுள்ள வருக்கும் இரஸாயநத்தினாலான ஆனுகூல்யம் ஏற்படா தென்று ஆயுர் வேதம விளங்கக் கூறுகிறது.

இரஸாயந முறைகள் இரண்டு விதம்

இருஷீச்வரர்கள் ஸேவித்த இரஸாயந முறைகளை ஒழுங்காக உபயோ கிப்பது அவ்வளவு எளிதல்ல. அதில் அநேக வகைப் பிரயோகங்கள் இருந்த போதிலும் சரகாதிமுனிகள் மொழிந்துள்ள மிகவும் முக்கியமான இருவகை முறைகளை இங்கு விவரிப்பது உசிதமாகும்.

रसायनानां द्विविधं प्रयोगमृषयो विदुः ।
कुटीप्रावेशिकं चैव वातातपिकमेव च ॥ (चर. पि. अ. १)

“இரஸாயநப்பிரயோக முறையை குடீப்ராவேசிகம் என்றும், வாதாதபிகம் என்றும் இருஷிகள் இருவகையாகப் பிரித்து வழங்குகிறார்கள்” என்று முன் ச்லோகம் மொழிகிறது. குடி என்றால் குடிசை அல்லது சிறு வீடு; அவ்வீட்டினுள் இருந்து கொண்டு செய்து கொள்ளும் ஒருவகை சிகித்ஸையை ‘குடீப்ராவேசிகம்’ எனக் கூறுவர். இது அனைவரும் எளிதிற் செய்துகொள்ளக்கூடிய சிகித்ஸையாக மாட்டாது. நல்ல வாயுவும் நல்ல வெளிச்சமும் உள்ள திறந்த வெளிகளில் இருந்து கொண்டு தாது போஷணைக்கான சில ஔஷதாஹாராதிகளை உபயோகித்தவாறு நிறைவேற்றப்படும் சிகித்ஸா கிரமம் ‘வாதாதபிகம்’ எனப்படுகிறது. க்ஷயம் முதலிய ரோகங்களால் •பீடிக்கப்படுபவர்களுக்கு இக்காலத்தில் வெகு சிலாக்யமான தென்று நிறைவேற்றிவரும் திறந்த வெளிகளிற் செய்யும் (ஓபன் ஏர் ட்ரீட்மெண்டு) சிகித்ஸா முறையானது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆயுர்வேதாசார்யர்களால் ஆரோக்கியமும் ஆயுளும அபிவ்ருத்தியடையக் கருதி நிறைவேற்றப்பட்ட தென்றும், நம் தேசத்துச் சாஸ்திரஜ்ஞருக்கு இம்முறை நூதனமல்ல வென்றும் “வாதாதபிகம்” என்கிற இரஸாயநவிதி விளக்குகிறது. வாதாதபிக ரஸாயநம் அனைவருக்கும் ஏற்ற சிகித்ஸை; ஆனால் வீர்யத்தினாலும், குணவிசேஷத்தினாலும் குடீப்ரவேச முறையே மற்றதினும் மிகச் சிறந்ததாகக் கருதி तयोः श्रेष्ठतरः पूर्वोविधिः स तु सुदुष्करः என்று மொழிந்து, ஆகிலும் அது மிகவும் கஷ்டஸாத்யமான முறையென்று ஸ்பஷ்டமாகக் கூறிவிட்டு, அப்பால் இஷ்டமுள்ள பேர் ஸாத்யமானால் அதைச் செய்து கொள்வது நயமென்றெண்ணி, குடீப்ராவேசிக முறையைச் சரகாதிகள் விவரித்திருக்கிறார்கள்.

குடீப்ரவேச விதி

குடீப்ராவேசிக முறைக்கு முக்கியமாக ஏற்ற இடத்தைத் தேடி, குடியென்கிற சிறு வீட்டை அமைப்பது தான் முதற் காரியம். ஸாது ஜனங்களும், வஸிக்கும் இரமணீயமான இடமொன்றைத் தேடிக் கொள்ள வேண்டும். வியாதி முதலியவை பரவாமல் பிரசஸ்தமானதாய், சிகித்ஸைக்கு அவசியமான அகில பதார்த்தங்களும் கிடைக்கக் கூடியதாய், பரிசுத்தமாய் உள்ள பிரதேசத்தில் சாரீர-மாநஸிக விகாரங்களுக்கு இடந்தராத வகையில் உயரமான இடத்தில் சிறு வீடு ஒன்று அமைக்கவேண்டும். அது நகரத்திற்குச் சமீபத்திலும் அமைக்கப்படலாம். உள்ளுக்குள் உள்ளாக மூன்று பெரிய அறைகளுள்ளதாய், ஒவ்வோர் அறையும் சிறிய சாளரங்களடங்கியதாய், உன்னதமானதாய் அது கட்டப்படவேண்டும். கேட்க வழங்காத அல்லது வேதனையுண்டுபண்ணுவதான சப்தமும் அக்கம் பக்கங்களில் உண்டாகாத விதமான இடத்தில் அவ்வீடு அமைக்கப்படுவதோடு, அதன் உள்ளும் புறமும் உள்ளத்தைக் கவரக் கூடியதாய் அமைந்திருக்கப் பார்க்க

வேண்டும். சிகித்ஸைக்குத் தேவையான ஔஷதங்களும், வைத்தியர்கள் கையாளும் ஸகல கருவிகளும், பத்தியாஹாரத்திற்கு அவசியமான பதார்த்தங்களும் சிறிதும் குறைவின்றி அங்கு ஸித்தமா யிருக்கவேண்டும். ஸ்த்ரீகள் அவ்விடத்தில் எக்காரணத்திலும் பிரவேசிக்கலாகாது. கற்றறிந்த வைத்தியர்களும், உபசரிப்பதிற் கைதேர்ந்த பரிசாரகர்களும் எந்த நிமிஷத்திலும் அவசியமானவற்றைச் செய்ய அங்கு ஆயத்தமா யிருந்துவரவேண்டும். இவ்வித குடியென்னும் சிறு வீட்டைக் கட்டிக்கொள்ள முடியாதவர் முற்கூறிய முறையில் பெரும்பான்மையான ஸௌகரியங்களுக்கும் வஸதியான வேறு கிருஹம் (குடி) கிடைத்தால், அதிலும் இந்த இரஸாயந சிகித்ஸையைச் செய்து கொள்ளலாம். சுபதினத்தில், சிறந்த முகூர்த்தத்தில் அதிற் பிரவேசித்துச் சிகித்ஸைக்கு ஆரம்பிக்க வேண்டும். இம்முறையில் முழு நம்பிக்கையும், மனோதைர்யமும், வேறு காரியங்களிற் கவலை யின்மையும், கோபதாபாதிகள் நீங்கி குளிர்ந்துள்ள மனோ நிலைமையும் பெற்றிருந்தாலன்றி இந்த இரஸாயநப் பிரயோகத்தினால் பிரயோஜனமேற்படாது. அக்குடியிற் பிரவேசித்ததும் க்ஷௌர ஸ்நானாதிகளால் வெளி தேஹத்தையும், வமந-விரேசந-வஸ்திப்பிரயோகாதி சோதநசிகித்ஸைகளால் உடலின் உட்புறத்தையும் (குடல் முதலியவற்றை) முற்றிலும் சுத்தம் செய்து கொண்டு, வைத்தியரிடமும் கடவுளிடமும் விசேஷ பக்தி சிரத்தையோடு இரஸாயந கித்ஸையைச் செய்து கொள்ள ஆரம்பிக்கவேண்டும்.’’ இக்கடினமான சிகித்ஸையைத் தாங்கி மிகப்பொறுமையுடன் நிறைவேற்றிக் கொள்ளும் திறமை யுள்ளவருக்கே இதைச் செய்வது முறை. நோயற்ற தேஹமும், விவேகமும், ஆத்மார்த்தமான ஆமுஷ்மிக விஷயங்களில் விச்வாஸமும் சிரத்தையும் உள்ளவனா யிருக்க வேண்டும் அம்மனிதன்; வேறு எக்காரியத்திலும் முயற்சியோ கவலையோ அவனுக்கு இருத்தலாகாது; இவற்றோடு பரிவுள்ள பணியாளரும், உபயோகிப்பதற்கு அவச்யமான உபகரணங்களும், செலவுக்குப் போதிய திரவ்யமும் ஸித்தமாயிருக்க வேண்டும். இவ்வித மனிதனே குடீப்ரவேசசிகித்ஸை யென்னும் இரஸாயந முறைக்கு அதிகாரியாவான்” என்று அடியில் வரும் சரகவாக்கியம் கூறுகிறது:—

समर्थानामरोगाणां धीमतां नियतात्मनाम् ।
कुटीप्रवेशः क्षणिनां परिच्छदवतां हितः ॥

ஸ்ரீ:

ப்ரபந்த ஸாரம்

[ஸ்ரீ மதுராந்தகம். ஸ்ரீ. உப. வே. தி. ஈ. வீரராகவாசாரியர்
ந்யாய வேதாந்த சிரோமணி திருவாதி]

இத்திருநாமத்தைப்பற்றி இரண்டு வித்வான்கள் இரண்டு விதமான அபிப்ராயங்களை தீபிகை வாயிலாக வெளியிட்டிருப்பதை வாசகர் அறிந்திருப்பார்கள். ப்ரபந்தங்களின் ஸாராம்சம் ப்ரதிபாதிக்கப் படுவதால் ப்ரபந்த ஸாரம் எனத் திருநாமம் என்பதே இவ்விரண்டு நிர்வாஹங்களைக் காட்டிலும் ஸ்வரஸமானது.

இப்ப்ரபந்த ஸாரத்தின் உபஸம்ஹாரத்தில் "அந்தமிலா வாரணங்கள் நாலாகி நின்றவதன் கருத்தை யாழ்வார்களாய்த் தெடுத்துச், செந்தமிழா லருள் செய்த வகைதுகையும் சிந்தாமலுலகங்கள் வாழவென்று சந்தமிகு தமிழ் மறையோன் தூப்புற்றேன்றும் வேதாந்த குரு மொழிந்த ப்ரபந்தஸாரம்" என்றுள்ள பாட்டினால் ஆசார்யன் தாமே அவ்வோ ப்ரபந்தங்களின் ஸாரார்த்தமிதில் ப்ரதிபாதிக்கப்படுவதாக அருளிச் செய்தார். ஆழ்வார்கள் சதுர்வேதங்களினுடையவும் ஸர்வார்த்தங்களையும் நிஷ்கர்ஷித்தருளி த்ரமிட பாஷையாலே அருளிச் செய்ததான திவ்ய ப்ரபந்தங்களின் வகை (அவ்வோ அர்த்தங்களை ப்ரதிபாதிக்கும் ப்ரகாரம்)யை ஸாத்விகர் கற்று அநுஸந்தித்துஜ்ஜீவிக்க வேணுமென்று வேதாந்த குருவினால் மொழியப்பட்ட ப்ரபந்த ஸாரம் என்றதனால் இந்த நிர்வாகமே ஆசார்யாபிமதமெனத் தெரிகின்றது. உபக்ரமத்திலும் "மற்றுமெல்லாம்" என்பதனால் அவ்வோ ப்ரபந்த ஸாரார்த்த ப்ரதி பாதனம் விவக்ஷிதமென்பது உபஸம்ஹாரத்துக்கும் பொருத்தமானது. இப்ப்ரபந்தத்தில் ஒவ்வொரு ப்ரபந்தங்களினுடையவும் ஸாரார்த்தம் ப்ரதிபாதிக்கப் படுவதையும் நன்கு காண்கிறோம். எங்ஙனே யென்னில்? "திருவிளக்கா மெனவையந்தகளிநூறும்" (2 பா) விளக்குப்போல அவனுடைய ஸ்வரூபகுண விபூதி சேஷ்டிதங்களுக்கு நேரே ப்ரகாசமானது வையந்தகளி 100. "நந்தாஞானச் சுடர் விளக்கேற்றிய வன்பேதகளியான தொடை நூறும்" (3 பா) ஒருநாளும் ஸங்கோசமன்றிக்கே யிருக்கிற நிரவதிக தேஜோ ரூபமான திருவிளக்கை "ஞானச்சுடர் விளக்கேற்றினேன்" என்று ப்ரகாசமாக தேவரீர் ஏத்தின ப்ரகாரத்தை வெளியிடா நிற்பது அன்பே தகளி 100. "சேமமுடன் நெடுமாலைக் காணப்புக்குத் திருக்கண்டேனென வுரைத்ததேவே" (4 பா) பகவானை பிராட்டியார் முன்பாகக் கண்ணாரக்

காணப்புக்கு அப்படி அனுபவிக்கையால் அதுக்குப் போக்கு விடாக "திருக்கண்டேன்" என்று அருளிச் செய்த கவிராஜனே. "மாயோனல்லால் தெய்வம் மற்றில்லையென உரைத்த வேதச் செழும் பொருள் நான்முகன் தொண்ணூற்றொரு பாட்டும்" (5 பா.) பரதேவதா நிஷ்கர்ஷம் பண்ணுகிற நான்முகத் திருவந்தாதி 96 பாட்டை. "முன்னுரைத்த திருவிருத்தம் நூறு பாட்டும்" (6 பா) வ்ருத்தாந்தத்தை ப்ரதிபாதிப்பதால் திருவிருத்தமென வழங்கப்படும் நூறு பாட்டையும். "மாறனை யல்லாலென்று மறந்தும் தேவு மற்றறியேன் எனு மதுரகவியே நீ முன் கூறிய கண்ணிநுண் சிறுத்தாம்பு" (7 பா) நம் ஆழ்வாரை யல்லது மறந்துந் தேவு மற்றறியேன் எனுமபிஸந்தியை வெளியிடுமதான கண்ணிநுண் சிறுத்தாம்பு. "அன்புடனே நம் பெருமாள் செப்பொற்கோயில் அனைத்துலகின் பெருவாழ்வு மடியார் தங்கள், இன்பமிகு பெருங்குழூஉ காணமண்மேலிருளிய வென்றெடுத்த விசையிற் சொன்ன" (8 பா) திருவரங்க பெருநகரிலே வாஸமாகிய மஹா ஸம்பத்தையும் பகவானிலும் உத்தேச்யரான, ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய பெருங்கோஷ்டியையும் காணவேணுமென்று சொன்ன இருளிரிய என்று 105 பாட்டு. "வானின்மேல் கருடவாஹனைத் தோன்ற வாழ்த்தும் ஏறணிபல்லாண்டு முதற்பாட்டு நானூற்றெழுபத்தொன்றிரண்டும்" (9 பா) ஸ்ரீய:பதி கருட வாஹனனைய் ஆகாசத்திலே ஸன்நிஹிதனாக அவனை ஸாக்ஷாத்கரித்து மங்களாசாஸனம் செய்தருளினமைக்கு ப்ரகாசகமான பல்லாண்டு 473. "அரங்கனார்க்குத்துழாய் மாலை முடிசூடிக் கொடுத்த மாதே நேயமுடன் திருப்பாவை பாட்டாரைந்தும் நீ யுரைத்த தையொரு திங்கட்பாமாலை" (10 பா) அழகிய மணவாளன் விரும்பி யருளும்படி சூடிக்கொடுத்த நாச்சியாரே அப்படிப்பட்ட ப்ரேமாதிசயத்தால் மார்கழி நோன்பு நோற்றமைக்கும் அவனோடே ஸம்ச்லேஷித்தமைக்கும் ப்ரகாசகமாம்படி "மார்கழித்திங்கள்" தையொரு திங்கள் எனும் ப்ரவர்திப்பித்த ப்ரபந்தங்களை. "தென்னரங்க மணவாளர்க்கன்பு மிக்குச் செப்பிய நற்றிருமாலை நாற்பத்தைந்தும், பன்னிய நற்றிருப்பள்ளியெழுச்சிப்பத்தும்" (11 பா) அழகிய மனவாளனிடத்தில் பக்தி பரீவாஹமாய் அவன் விஷயமாகச் செய்த திருமாலை 45. திருப்பள்ளியெழுச்சி 10. "பலமறையின் பொருளாற்பாண் பெருமாளே நீ பாதாதிகேசமதாய் பாடித்தந்த, சொல்லமலனாதிபிரான் பத்துப்பாட்டும்" (12 பா) பாதாதிகேசாந்தஸ்துதிரூபமான அமலனாதிபிரான் 10 பாட்டும்.

"அறிவு தரும் பெரிய திருமொழிதப்பாமல் ஆயிரத் தொன்பூத்தினா பாட்டும்" (13 பா) "அத்தனுபர் வேங்கட மாற்காயிரத்தோடான விருநூற்றேரைம்பத்து மூன்றும் (16 பா) என்று மேலே அருளிச் செய்யும்படியிலே ஸ்ரீனிவாஸன் விஷயமாக, தத்வஜ்ஞானத்தைத் தரும் பெரிய

திருமொழி முதலிய 1253 பாட்டுள்ள ப்ரபந்தங்கள். " பூசுரர்கோன் திருவரங்கத் தமுதனாருன் பொன்னடி மேலந்தாதியாக போற்றிப் பேசிய கற்கலித்துறை நூற்றெட்டுப்பாட்டும் (14 பா) எம்பெருமானாருடைய திருவடிகள் விஷயமான இராமாநுஜ நூற்றந்தாதி 108 பாட்டும் என்பதாக அந்தந்த திவ்ய ப்ரபந்தங்களின் ஸாரார்த்தம் இப்ரபந்த ஸாரத்தில் ஒவ்வொரு பாட்டுகளிலும் நன்கு விளக்கப்படுகின்றது.

இப்ரபந்தஸாரத்தில் ஆழ்வார்களவதரித்த நாளுர் திங்கள் அடைவு திருநாமங்கள் அவர் தாம் செய்த வாழ்வான திருமொழிகளவற்றுட் பாட்டின் வகையாகத் தொகை யிலக்க மற்றுமெல்லாம்" உபபாதிக்கச் செய்தேயும் அவ்வோ ப்ரதிபாதனத்தையிட்டே இத்திருநாமம் வழங்குவதால் இதில் தாத்பர்யாதிசயந் தோற்றுகிறது.

"ஸூத்ராதிகரண வரணாத்யாய ஸாராவளி:" என்கிறபடியே ஸூத்ரம் அதிகரணம் பாதம் அத்யாயம் இவைகளின் ஸாரம் ப்ரதிபாதிக்கப்படச் செய்தேயும் அதிகரண ஸாராவளி என்று வழங்கப்படுவதுபோலவே இத் திருநாமமும் ப்ரபந்தஸாரமென்றாயிற்று என்பதாக ஸங்க்ரஹமாக விஜ்ஞாபித்துக்கொண்டேன்.

பிஷ்ட பசு

[ஸ்ரீ. உப. வெங்கடாத்திரியகரம். தி. ந. ச. கிருஷ்ணமாசாரியார்
பிரஸிடென்ஸி காலேஜ் சென்னை.]

பிஷ்டபசுவைப்பற்றி ஸ்ரீ உப. சேட்லூர் ராஜகோபாலாசார்ய ஸ்வாமி எழுதிய ஒரு வ்யாஸம் சென்ற மாதத்திய தீபிகையில் வெளிவந்தது. அதில் ஸ்ரீ உப. அக்னிஹோத்ரம் ராமாநுஜதாதாசார்ய ஸ்வாமியின் அபிப்பிராயங்களை மறுப்பதாக எண்ணி சில விஷயங்கள் எழுதப்பட்டன. அவ்விஷயங்களை மத்யஸ்தர்கள் அவசியம் விசாரிக்கவேணும். அவற்றுள் முதலாவது. கிரதயுகத்தில் உபரிசரன் செய்த பிஷ்டபசு யாகம் த்ரயீதர்மத்திற்கு வெளிப்பட்டதென்றால் பூமவித்யாவாக்ய விரோதம் வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பூமவித்யாவாக்யத்தில் ருக்யஜுஸ் ஸாமாதர்வணங்களைச் சொல்லி பிறகு ஏகாயநத்தைச் சொல்லியிருப்பதால் ஏகயாநம் த்ரயீயைவிட வேறு என்றுதான் ஏற்படுகிறது. மேலும் ஏகாயநத்தின் வரலாற்றைக் கவனித்தால் அது த்ரயீயைவிட வேறானது என்று நன்கு விளங்கும். மகாபாரதம் சாந்திபர்வம் 349 வது அத்தியாயத்தில் 80, 81, 82 வதுச் சுலோகங்களைப் பார்த்தால் க்ருதயுகத்தில் ஏகாயநமும் த்ரேதாயுகத்தில் த்ரயீயும் அநுஷ்டாநத்திலிருக்கும் என்று ஏற்படுகிறது. சாந்தி

பர்வம் 343 வது அத்தியாயம் 52 வது ச்லோகத்தில் ஏகாயநசாகை உபரிசரனுடன் மறைந்து விடும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் பிஷ்டபசு யாகம் ஏகாயநகல்பத்தைச் சார்ந்ததால் த்ரயீகல்பத்திற்கு வெளிப்பட்டதென்று தான் சொல்ல வேண்டும். ஆனால் ஆதாரமற்றதென்றாவது நாஸ்திகாசாரமென்றாவது அவைதிகமென்றாவது சொல்லமுடியாது. ஏகாயநமும் வேதத்தின் ஒரு கிளையானதால் அதைச் சார்ந்த பிஷ்டபசுயாகமும் ஆதாரமுள்ளதே, ஆஸ்திகாசாரமே, வைதிகமே. ஏகாயநம் த்ரயீபஹிர்பூதமென்ற விஷயம் கீழ்ச்சொன்ன ப்ரமாணங்களாலும் காலோத்தர ஸம்ஹிதாதி வசனத்தாலும் ஏற்படுகிறது.

இரண்டாவது:—ஏகாயநம் வேதபஹிர்பூதமென்றால் பூமவித்யா வாக்யத்திலுள்ள ஏகாயந பதத்திற்கு என்ன அர்த்தம் சொல்வார் என்று கேட்கப்பட்டிருக்கிறது. த்ரயீயைத்தவிர்த்து மற்றொரு வேதபாகமான ஏகாயநம் என்று அர்த்தம் சொல்ல என்னதடை.

மூன்றாவது:—ஸ்ரீ உப. ராமாநுஜாசாரியருடைய வ்யாஸத்திலிருந்து பாஞ்சராத்திர கர்மங்களை நடத்தக் கூடாதென்றே ஸ்ரீபாஷ்யகாரருடைய திருவுள்ளமென ஏற்படுகிறது, என்று கூறப்பட்டிருக்கிறது. பிஷ்டபசு த்ரயீதர்மபஹிர்பூதமென்றதால் பாஞ்சராத்ரதர்மங்களை நடத்தக் கூடாதென்பது எப்படி ஏற்பட்டது. பிஷ்டபசு யாகத்திற்கும் அபிகமனம் முதலான தர்மங்களுக்கும் மிக்க வாசியுண்டு. த்ரயியில்போல் ஏகாயநத்திலும் கர்மகாண்டம ஞானகாண்டம் என்ற பிறிவு உண்டு. (சாந்திபர்வம் 343 அத். 64 ச்லோகம்) காமகாண்டத்திற்கு ஆபஸ்தம்பீயாதிகளைப்போல் தனிப்பட்ட கல்பஸூத்ரமும் உள்ளது. (பாஞ்சராத்ராதி காணச்ருத ப்ரகாசிகையில் கண்டு கொள்ளவும்). ஜ்ஞானகாண்டத்திற்கு பாஞ்சராத்ரம் உபப்ரஹ்மணம். பாஞ்சராத்திர தர்மங்கள் முக்கியமாக பகவதாராதநமும் அதற்கு வேண்டியவைகளுமே. இவைகள் ஏகாயந சாகிகளுக்கு மாத்திரமல்ல, மற்ற சாகிக்களுக்கும் அவரவர்கள் சூத்திரங்களில் விதிக்கப்பட்ட கர்மகலாபங்களுடன் சேர்த்து அநுஷ்டிக்கத் தக்கவை யென்றும் பூர்வகாண்டத்தில் சொல்லப்பட்ட க்ருஹயச்ரௌத கர்மங்கள் ஏகாயந சாகிகளுக்கே உபாதேயஙகளே யல்லாமல் மற்றவர்களுக்கு உபாதேயங்களல்லவென்று ஆகம ப்ராமாண்யவசன பலத்தால் ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷையில் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஏகாயந சாகையில் விதித்த பிஷ்டபசு மற்ற சாகையைச் சார்ந்தவர்களுக்கு உபாதேயமல்ல. மனுஸ்ம்ருதியில் சொல்லியிருக்கும் பிஷ்டபசு கேவலமாம்ஸ போஜந விஷயமென்று வ்யாக்யாதாக்கள் சொல்லியிருக்கிறார்கள். மேலும் மனுஸ்ம்ருதி ஸர்வவேதத்திற்கும் உபப்ரும்ஹணமானதால் ஏகாயநசாகை விஷயத்தில் பிஷ்டபசுவையும்

த்ரயீவிஷயத்தில் ப்ரத்யக்ஷ பசுவையும் விதிக்கிறதென்று பொருள் கூறுவதும் மிக்கப்பொருத்த முள்ளது.

நான்காவது :—உபரிசரவசு அவைதிகரானல் எப்படி தேவஸபையினராகக்கூடும் என்று வினவப்பட்டிருக்கிறது. கீழ்ச் சொன்னபடி ஏகாயநமும் வேதமானதாலும், அதிலும் மற்ற வேதங்களுக்கு மூலவேதமானதாலும், அஹிம்ஸாதர்மத்தை மேற்கொண்ட கிருதயுக தர்மத்திற்கு முலப்ரமாணமானதாலும் ச்வேதத்வீப வாஸிகளான பரமைகாந்திகள் மேற்கொண்ட வேதமானதாலும் அதைச்சார்ந்து அதன்படி கர்மங்களை நடத்தும் உபரிசரவசுவைத்தவிற யார் தேவஸபையினராகயிருப்பதற்குச் சிறந்த யோக்யதையுடயவர். த்ரயீதர்மவிநிர்கதர் என்ற அபிப்பிராயத்துடன் அவரை அவைதிகர் என்று சொன்னல் அது அவருக்குப் புகழே யல்லாமல் இகழ்ச்சியாகாது.

ஸ்ரீ:

வித்வான் திருக்கள்ளம் நல்லான் சக்ரவர்த்தி, திருவேங்கடாசார்யர் ஸ்வாமி

[உ. வே. டி. வி. வேதாந்தாசாரியர் திருவள்ளூர்]

நாளது சித்திரைமீ 5வ இந்த ஸ்ரீ வைஷ்ணவ மஹான் பரம பதமடைந்த விஷயத்தைப் பற்றி நாம் கேட்டு ரொம்ப ஶோசிக்கவேண்டியிருக்கிறது. இந்த ஸ்வாமியின்—வைராக்ய சீலத்தைப் பற்றி புகழ நம்மால் இயலாது. இந்த மஹானிடத்தில் விலக்ஷணமான குணங்கள் பல உண்டு. பரமபதமடையும் முன் தினம் வரையில் தன்னுடைய நித்ய கர்மானுஷ்டானங்களைத் தானே நடத்தி வந்து அரோகத்ருடகாத்ரராகவே எழுந்தருளியிருந்தார். இவ்வளவு சீக்கிரத்தில் பரமபதமடைவரென்று ஒருவரும் நினைக்க இடமில்லாமலிருந்தது. உருப்பட்டூர் நல்லான் சக்ரவர்த்தி யக்ஞ நாராயண தீக்ஷிதருடைய திருவம்சத்தில் விக்ரம ஆடிமீ புனர்வஸு நக்ஷத்ரத்தில், அவதரித்து ஜாதகர்மாதி கர்மங்களால் ஸம்ஸ்க்ருதராய், நாரணமங்கலத்தில் எழுந்தருளியிருந்த, கோயில் ஆச்சி, வங்கீபுரம், ஸிம்ம குட்டியாசார்யர் ஸ்வாமி யிடத்தில் வித்யாப்யாஸத்தை ஆரம்பித்து காலத்தில் உப நயனம் ஆன பிறகு திருப்பதியில் மஹாமஹோபாத்யாய, கபிஸ்தலம் தேசிகாசார்யர் ஸ்வாமியிடத்தில் காவ்ய நாடகங்களை அதிகரித்து, ஸ்ரீவண் சடகோபஸ்ரீ வீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகனிடத்தில் பஞ்ச ஸம்ஸ்காரம், மந்த்ரோபதேசம் முதலானதுகளைப் பெற்று, பெருமாள் கோவிலில் (காஞ்சீபுரம்) எழுந்தருளியிருந்த பெருங்கட்டூர் கண்டாவதாராச்சார்யர் ஸ்வாமியிடத்தில் வ்யாகரணம் மஹாபாஷ்யாந்தம், இப்போது எழுந்தருளியிருக்கும், பரமஹம் ஸேத்யாதி, ஸ்ரீ கோழியாலம் ஸ்வாமியுடன் ஸஹாத்யாயியாய் நன்கு அப்யஸித்து பூர்ணபாண்டித்யம் வஹித்தார்.

இந்த ஸ்வாமி ஸம்ப்ரதாய காலக்ஷேபங்களையும் உபாயானுஷ்டானத்தையும் நடத்திக்கொள்ள வேணுமென்று ஷை பெருங்கட்டூர் ஸ்வாமியால் ப்ரேரிதராய், அச்சமயம் ஸ்ரீ ரங்கத்தில் தசாவதார ஸன்னிதியில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ம ராமானுஜ யதீந்த்ர மஹா தேசிகனிடத்தில் குருகுல வாஸம் பண்ணி, அந்த ஸ்வாமியினுடைய திருவடியில் ஸ்ரீபாஷ்யம் பகவத் விஷயம் முதலிய க்ரந்தசதுஷ்டயங்களையும் ஸாங்கமாக காலக்ஷேபம் செய்து, ஸ்ரீரங்கநாதன்ஸன்னிதியில் ஷை மஹா தேசிகனுடைய அநுக்ரஹத்தால் ந்யாஸவித்யையை அனுஷ்டித்து, விரக்தாக்ரேஸரராய் பிரதி தினம் ஸ்ரீ ஹயக்ரீவ ஆராதனத்துடன் எழுந்தருளியிருக்குமளவில், ஞான அனுஷ்டான வைராக்யாதி குணங்களைக் கண்டு ப்ரதிபன்னர்களான அநேகர்களால் ப்ரார்த்திக்கப்பட்டு, பஞ்ச ஸம்ஸ்காரம் முதலிய வேதாந்த காலக்ஷேபங்களை அவர்களுக்கு அனுக்ரஹித்துக் கொண்டு 27 வருஷ காலம் ஸ்ரீ மதுராந்தகத்தில் எழுந்தருளியிருந்தார்.

பிறகு ஸ்ரீ வீரராகவனுடைய நியமனத்தால் இரண்டு ஸம்வத்ஸரம் திருவள்ளூரில் ஸ்ரீ வீரராகவனை மங்களாசாஸனம் செய்துக்கொண்டு க்ரந்த காலக்ஷேபங்களைப் பண்ணிக் கொண்டு-58-வது திரு நக்ஷத்ரத்தில் தனது மாதாமஹன் க்ருஹத்தில் பரமபதமடைந்தார். இந்த ஸ்வாமி தமது ஜீவித காலத்தில் ரயில் யாத்திரை செய்ததே இல்லை. இக் காலத்திலும் இப்படிப்பட்ட ஆசார சீலர் இருக்கிறார்கள் என்பது வியக்கத் தக்கதே.

காலாநுகுண ஆஹ்நிகம்

வாய் கொப்பளித்தல்

இவ்வாசாரம், ஆசாரமாக இப்பூலோகத்தில் இன்னும் எந்த தேசத்திலாவது உண்டோ என்று நினைக்க இடமிருக்கிறது. எங்காவது ஒரு வேளை இருப்பினும் இது ஆசாதாரணமாய் நம்முடைய மதத்தைச் சார்ந்தவர்களுக்கே ஒரு விசேஷமான ஆசாரமாக சொல்லலாம். இது நியதமாய் செய்யப்படவேண்டுமென்று நியமிக்கப்பட்ட காலங்கள்

சில உண்டு. அவையாவன:—ஜலமல விஸர்ஜனங்களுக்குப் போய் சௌசம் பண்ணிக்கொண்டு வந்ததும் வாய் கொப்பளிப்பது அத்யாவச்யமென்று ப்ராசீன விதியும் அநுதியான ஆசாரமும் உண்டு. பன்னிரண்டு தரம் வாய் கொப்பளிக்க வேண்டும். மல விஸர்ஜனத்திற்குப் பிறகு பன்னிரண்டு தரமும், ஜல விஸர்ஜனத்திற்குப் பிறகு ஆறுதரமும் வாய் கொப்பளிப்பது நியமம். இவ்விதம் வாய்கொப்பளிப்பது ஒரு பிள்ளைக்கு உபநயனமாகி, அல்லது ஒரு பெண்ணுக்கு விவாகம் ஆனபிறகே அவச்யம் அனுஷ்டிக்கவேண்டியது என்று ஏற்பட்டிருப்பதால், தத்காலத்தில் ப்ரகஸ்பதிகள் என்று சொல்லப்படும் உபாத்தியாயர்கள் அத்தனை தடவை கொப்பளிக்கச் சொன்னால், தத்கால சிறுவர்கள் செய்யமாட்டார்களென்ற நம்பிக்கையினாலோ, குறைத்து சொன்னாலாவது விடாமல் செய்வார்கள் என்ற ஆசையினாலோ, தன்னுடைய சொந்த அநுஷ்டானத்திற்கு அதிகமாய் சொல்லுவது சரியல்லவென்ற தர்மபுத்தியினாலோ, ஆறுதரமும், மூன்று தரமும் முறையே வாய் கொப்பளித்தால் போதுமென்று தெரிவிக்கிறார்கள். இக்காலங்களில் வாய் கொப்பளிக்க வேண்டியது அவசியம் என்பதற்கு காரணம் விசதம். தேடி அறிய வேண்டியது மன்று. ஜலமலங்கள் விஸர்ஜனம் செய்யும்பொழுது ப்ரதேசம் சுத்தமாயிருந்தபோதிலும், ஒருவிதமான ஆவியும் துர்கந்தமும் வெளிப்பட்டு வருவதால், தத்சம்பந்தப்பட்ட இரண்டு த்வாரம் விலக்கி மனுஷ்யனுடைய சிரஸ்ஸில் ஏற்பட்டிருக்கும் ஏழு த்வாரங்களிலும் இவ்வசுசியான ஆவியுடையவும் துர்கந்தத்தினுடையவும் சம்பந்தம் நேரிடுவது நிச்சயமாகையால் அந்த அசுசியினுடையவும் துர்கந்தத்துடையவும் தோஷத்தை போக்குவதற்கு முகத்தை அலம்பி அல்லது கண், மூக்கு, செவிகள் இருக்குமிடங்களை மாத்திரம் துடைத்து வாய்கொப்பளிப்பது அத்யாவச்யகம். வாயால் நாம் சாப்பிடுவதும் பாநம் செய்வதுமேயன்றி வாயிலூறும் எச்சிலையும் சதா உட்கொண்டே இருக்கிறோமாதலாலும் கொஞ்சம் அசுத்தமாயினும் துர்க்கந்தமாயினும் இக்காலங்களில் வாய்க்குள் நமக்குத் தெரியாமலே புகுரக் கூடுமாகையாலும் வாய் கொப்பளிப்பது என்பது தேக சுத்திக்கே ஆஸ்பதமாகிறது. இதுவும் தவிர முகத்தை, வாயை துடைத்தோ, அலம்பியோ, வாய்கொப்பளிப்பது ஒரு ஸ்நானம் என்றே சொல்லலாம். சிலருக்கு ஜலமலவிஸர்ஜனம் செய்தால் முழு ஸ்நானமே செய்யவேண்டியதாய் நியமிக்கப்பட்டிருக்கிறது. அவ்வித ஸ்நானம் லௌகிகர்களுக்கு அஸாத்யமாகையால், கை, கால்களை, அலம்பிக்கொண்டு முகத்தை துடைத்து வாய் கொப்பளிப்பது ஸ்நான துல்யமாகவே கொண்டாடலாம். போஜனம் செய்த பிறகு பதினாறு தடவை வாய்கொப்பளிக்க வேண்டுமென்பது விதி: இவை எல்லாம் மத ஸம்பந்தமென்றும் மதத்தில் தத்

காலம் ஏற்பட்டிருக்கும் த்வேஷ புத்தியினால் ஆரோக்கியத்திற்கும் சரீர சுத்திக்குமென்றே முக்கியமாய் ஏற்பட்டிருக்கும் ஆசாரங்களைக் கூட ஆசாரம் என்கிற நாம மாத்திர அஸஹனத்தினாலே, அனுஷ்டிக்காமல் விடுகிறார்கள். புஜித்தபின் வாயில் எந்த மூலையிலாவது சந்தியிலாவது, புஜித்ததின் லேசமாவது அணுவாவது ஒட்டிக்கொண்டிருக்குமாயின் அது அவ்விடத்தில் சுகோஷ்ணமும் ஈரமும் உள்ளவாய் ப்ரதேசத்தில் அதிசீக்கிரத்தில் அசுத்தங்களும், கிருமிகளுங்கூட உண்டாவதற்கு காரணமாகின்றன. அதனால் வாயில் புண்களும் உண்டாவதேயன்றி முக்கியமாய் பல்களுக்கு கெடுதியையும் உண்டாக்குகிறது. வாயை கொப்பளிப்பதே தெரியாத பாச்சாத்யர்களுக்கு பல் நோயும் சிறு வயதிலேயே பல் விழுந்து விடுவதற்கும் இதுதான் முக்கிய காரணம். காலை தூக்கத்திலிருந்து எழும்போது வாய் அசுத்தமாய் இருக்குமாதலால் அப்பொழுது வாய் கொப்பளிப்பது மிகவும் உசிதம். அதுவும் தவிர வயிற்றிலிருந்து எதிர்ப்பினாலாவது மூக்கிலிருந்து ச்வாஸத்தினாலாவது கோழையினாலாவது வாயில் ஏதாவது தோஷம் ஏற்பட்டால் அப்பொழுது வாய் கொப்பளித்தலும் அத்யாவச்யகம். வாய் கொப்பளிக்கும் ரீதியும் சரியாய் அனுஷ்டிக்கப்படவேண்டும். அனேகர் வாய் நுனி அதாவது வாயின் முன்பாகத்தில் மாத்திரம் உட்கொண்டு உமிழ்ந்து விடுகிறார்கள். அவ்விதம் செய்வது போதாது. உத்தேசிக்கும் பலனையும் கொடுக்கத் தக்கதன்று. வாய் நிரம்ப ஜலம் கொண்டாலும் கார்யகரமாகாது. வாயை முக்கால் வாசி ஜலத்தால் நிறப்பி வாயினுடைய மேல்கீழ் பக்கங்களினாலும் நாக்கினாலும் அந்த ஜலத்தை வேகமாய் ஒவ்வொரு சந்தில் புகாச் செய்து ஆங்காங்கு இருக்கும் அழுக்குகளையும் பதார்த்த லேசங்களையும் ஜலத்தில் சேரச்செய்து வெளிப்படுத்துவதுதான் சரியான மார்க்கம். ஆறு, பன்னிரண்டு, பதினாறு என்று நியமிக்கப்பப்பட்டிருப்பதற்கும் காரணம். அந்தந்த கார்யங்களினால் நேரிடக்கூடிய அசுத்தத்தை இத்தனை தரம் கொப்பளித்தால் போக்கலாமென்று அனுபவத்தால் அறிந்து நிர்ணயிக்கப்பட்டதாகும். ஏற்படுத்தப்பட்டிருக்கும் சங்க்யைகள் குறையக் கூடாது. சங்க்யைகளும் குறித்த தடவைகள் கொப்பளித்தும் அசுத்த ஆசங்கை இருக்குமேயானால் அதற்குமேலும் சந்தேகம் தீர்ந்து த்ருப்தியாகும் வரைக்கும் கொப்பளிப்பதே உசிதம். இவை எல்லாம் தீர்க்கமாய் யோசித்து தத்காலத்தவர்கள் ஸ்திரீ புருஷர்கள் யாவரும் வாய்கொப்பளிக்கும் விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் நியமங்கள் வைதிக பிச்சுத்தனம் என்று அவமதிக்காமல் அதனால் ஏற்படக் கூடிய தேகாரோக்யத்தையாவது யோசித்து இவ்விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் ப்ராசீன அனுஷ்டானத்தைகைவிடாமல் அனுஷ்டிப்பார்களாக. வாய் கொப்பளிப்பதற்கு ஸம்ஸ்கிருதத்தில் கண்

டூஷம் எனப்பெயர். இந்த விஷயத்தை தர்ம சாஸ்திரிகளும் ஆயுர்வேத சாஸ்திரிகளும் வெகுவாய் விவரித்திருக்கிறார்கள், அதன் சுருக்கத்தை இங்கு காட்டுகிறோம். மூன்று ஸந்தர்ப்பங்களில் கண்டூஷம் விதிக்கப்பட்டிருக்கிறது (1) மலவிஸர்ஜநம் (2) மூத்திரவிஸர்ஜநம் (3) போஜநம். இதில் மூன்றாவது சொன்னதை முக்கியமான அந்நாஹார ஸமயத்தில் மாத்திரம் என்று எண்ணுவது சரியல்ல; நாம் எந்த சிற்றுணவு உட்கொண்டாலும்அந்தந்த ஸமயத்திலும் கண்டூஷம் செய்யவேண்டியது அவச்யமாகிறது. இவ்விஷயத்தை ஸ்ரீபராசரர் मूत्रे पुरीषे भुक्त्यन्ते तथैवान्यस्य भक्षणे " என்று தெளிவாய் பேசியிருக்கிறார். ஓரிடத்தில் உட்கார்ந்தே கண்டூஷம் செய்யவேணும், தனது இடது பாகத்தில் கண்டூஷத்தை கொப்பிளிக்கவேணும், கொப்பிளிக்கும் போது ஆள்காட்டி விரலாலோ, மற்ற விரல்களாலோ வாயைத்துவக்கவும்; அதனால் முகத்தை சலிப்பிக்கவும் கூடாது. சிவஸ்மிருதிகளில் மூத்திரவிஸர்ஜநத்தில் கண்டூஷம் 4 தடவை, மலவிஸர் ஜநத்தில் 8 தடவை, ஆஹாரம் சாப்பிட்டபிறகு 12 தடவை தந்ததாவநம் செய்தபிறகு 16 தடவை என்றும் நியமம் கூறப்பட்டிருக்கிறது. வைத்திய சாஸ்திரத்தில் தினசரியில் கண்டூஷம் விதித்திருப்பதுமன்றி, சிற்சில வியாதிகளுக்கு சிகித்ஸையாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அது இங்கு நமக்கு ப்ரகிருதமல்ல. ஆனாலும் வைத்தியசாஸ்திரத்தில் சொன்ன பொதுவான விதியைமாத்திரம் இங்கு உரைக்கிறோம். கண்டூஷம் செய்வதற்கு ஶீதோஷ்ணமான ஜலமே நன்று. சீதோஷ்ணமான ஜலத்திற்கே வாயை சுத்தி செய்யும் சக்தி உண்டு. கண்டூஷம் செய்ய தொடங்கும் போது கழுத்தை காற்றுபடாமல் துணியில் மூடி (கழுத்தில் வியர்வை உண்டாவது நல்லது) வாய் நிறைய ஜலத்தைவிட்டு, நிமிர்ந்து ஆகாசத்தை நோக்கி அசையாமல் வைத்துக்கொண்டு சிறிது நேரம்இருக்கவும். சிறிது நேரத்தில்வாயில் உள்ள ஜலத்தில் நெஞ்சிலிருந்து கோழைகள் வந்து கலக்கும். அல்லது மூக்கிலும் கண்ணிலும் நீர்வடிய ஆரம்பிக்கும். அப்போது கொப்பளித்து விடவேண்டும். இதற்கே கண்டூஷம் எனப்பெயர் வைத்திய சாஸ்தித்த்தில் வழங்கப்படுகிறது. வாயில் கொஞ்சம் கொஞ்சம் குறைய குறைய ஜலத்தை ஊற்றி பல தடவைகள் கொப்பளிப்பதினால் அடியில் கண்டவியாதிகள் நீங்கும். கழுத்து வலி, தலைநோய், காதில் வேதனை, நேத்திர வியாதி, மூக்கிலிருந்து நீர்வடிதல், நாக்கு உலர்ந்து போவது ஹ்ருதய துடிப்பு, சோம்பல். அருசி முதலியவைகள்.

20-வது சுலோகத்தில் தன் சரணாகதிக்குப் பலத்தைக் குறிப்பிட்டுப் பிரார்த்திக்கிறார். அதற்குமுன் பெருமாளுக்கு தயை உண்டாகி வளரும்படி தம் பயத்தையும் கோயில் முதலிய திவ்ய தேசங்களில் திவ்யமங்கள விக்ரஹங்களை ஸதா ஸேவித்துக் கொண்டிருப்பதே தனக்கு ஸுகத்தைத்தரும் என்பதையும், அதை அளிக்க பெருமாளைத் தவிர வேறு கதி இல்லை என்பதையும் சொல்லி வருகையில் இதில் ஆளவந்தாருடைய ஸ்தோத்ரரத்நத்தின் பதங்களையே அமைத்துப் பிரார்த்திக்கிறார். பெரியோர்கள் பாசுரத்தை அநுஸரித்துப் பிரார்த்தித்தால், பெருமாள் திருவுள்ளம் சீக்கிரம் உகக்கலாம் என்று ஆசை. ஆளவந்தார், यदि मे न दयिष्यसे ततो दयनीयस्तव नाथ दुर्लभः। (யதி மே ந தயிஷ்யஸே ததோ தயநீய: தவ' நாத துர்லப:) என் விஷயத்தில் நீர் தயை செய்யாவிடில், உமக்கு தயை செய்யத் தக்கவனே கிடைக்க மாட்டான். உம்மலால் நான் நாதசூன்யன்; என்னலால் நீர் தயாபாத்ர சூன்யர், தைவத்தால் ஏற்பட்டிருக்கும் இந்த ஸம்பந்தத்தை நீர் காப்பாற்ற வேணும்; मा स्म जीहपः (மா ஸ்ம ஜீஹப:)—நழுவ விடக்கூடாது' என்றார். இவரும் பதினெட்டாவது சுலோகத்தில் 'மாஸ்ம தஜ்ஜீஹபத்' என்று அதையே கூறுகிறார்.

உலகத்தில் தேசம் காலம் முதலியவற்றில் சிலவற்றை சுபமென்றும், சிலவற்றை அசுபமென்றும் பிரிப்பது வீணே. எல்லாம் பயத்தையும் துக்கத்தையும்தருவதால், உண்மையில் எல்லாம் அசுபமே. ஸ்வர்க்கம் சென்றால், தேவர்கள் இவனை 'பசு' என்று எண்ணுகிறார்கள். அங்கு ஏறவிட்ட கர்மம்விசையற்றவளவிலே கீழே விழுந்து விடுவோம் என்ற பயமுமுண்டு. (14)

सकृत्प्रपदनस्पृशामभयदाननित्यव्रती
न च द्विरभिभाषसे त्वमिति विश्रुतः स्वोक्तितः ।
यथोक्तकरणं विदुस्तव तु यातुधानादयः
कथं[1] वितथमस्तु तत् कृपणसार्वभौमे मयि ॥ १५ ॥

ஸக்ருத்-ப்ரபதந-ஸ்ப்ருஶாம் அபய-தாந-நித்ய-வ்ரதீ
ந ச த்வி: அபிபாஷஸே த்வம் இதி விஶ்ருத: ஸ்வோக்தித: ।
யதோக்தகரணம் விது: தவ து யாதுதாநாதய:
கதம் விததம் அஸ்து தத் க்ருபண-ஸார்வபௌமே மயி ॥ (15)

[१. तथावितथमस्तु—पा.]

ஸக்ருத்-ப்ரபதந-ஸ்ப்ருஶாம்—ஒருதரம் ப்ரபத்தி என்னும் உபாயத்தைத் தொட்டவருக்கும்,
த்வம்—நீர்
அபயதாந-நித்ய வ்ரதீ—அபயமளிப்பதை நித்ய வ்ரதமாக உடையவர் (என்று நீர் உத்கோஷித்திருக்கிறீர்;)
த்வி:—இரண்டாம் தடவை
ந ச அபிபாஷஸே—பேசமாட்டீர்
இதி—என்று
ஸ்வோக்தித:—உம்முடைய உறுதியான பேச்சாலேயே
விச்ருத:—(நீர்) ப்ரஸித்தர்
யாதுதாநாதய:—ராக்ஷஸர் முதலியவரும்
தவ—உம்முடைய
யதோக்த-காணம்—சொன்னவண்ணம் செய்வதை
விது:—அநுபவித்துளர்;
தத்—அந்தகுணம்
க்ருபண-ஸார்வபௌமே—கார்ப்பண்ய பூர்த்தியுள்ள அகிஞ்சகரில் முதன்மையான
மயி—என் விஷயத்தில்
கதம்—எப்படி
விததம் அஸ்து—பொய்யாக ஆகலாம்?

பெருமானைத்தவிர தனக்கு வேறுகதியில்லை என்று கூறிவிட்டு, இதில் தன்னிலும் க்ருபணனில்லை என்கிறார். தனக்கு வேறுகதியில்லாதது போலவே பெருமாளுடைய தயைக்கும் தன்னைத்தவிர வேறு கதியில்லை; அதாவது தயையைக்காட்ட தானே உத்தமமான பாத்ரம். முலைக்கடுப் பாலே கன்றுக்குப் பாலைக் கொடுத்தல்லது பசு நிற்கவொண்ணாதாற்போலே ரக்ஷ்யனை ரக்ஷித்தல்லது தரிக்கமுடியாது பெருமாளுடைய தயையினால். உம் அபயப்ரதான வ்ரதம் நித்யம்; ஒருதடவை உபாயஸ்பர்சம் ஒருவனுக்கு ஏற்பட்டால் அவனைக் காப்பாற்றும் வரையில் நீர் கடனாளியாய் ஸஜ்வரராய் இருக்கிறீர். மனோரதத்தைப் பூர்த்திசெய்த பிறகே விஜ்வரராய் ப்ரமோதத்தை (ஆநந்தத்தை) அடைகிறீர்.

ஸேதுக்கரையில் வந்து सकृदेव प्रपन्नाय (ஸக்ருதேவ ப்ரபந்நாய) "ஒருக்காலே சரணாக அடைகின்றார்க்கும்" என்று தன் விரதத்தை உத்கோஷித்தார். அதையே இங்கு ஸக்ருத்-ப்ரபதந-ஸ்ப்ருஶாம் என்று அநுவதிக்கிறார். सर्वभूतेभ्यः अभयं ददामि, एतत् मम व्रतम् (ஸர்வபூதேப்ய. அபயம் ததாமி, ஏதத் மம வ்ரதம்) என்றதையும் இங்கு அநுஸரிக்கிறார்: 'ததாமி' என்பதில் 'லட்' (நிகழ்காலத்தைக் குறிப்பது) ஸார்வகாலிகம்; ஆகையால் மூன்று காலங்களையும் சொல்லுகிறது. இந்த விரதத்தை ஸ்வபாவமாக உடையவர். रामो द्विर्नाभिभाषते (ராம: த்வி: ந அபிபாஷதே) என்று உமது வார்த்தை. உம்முடையது வெறும் பேச்சல்ல ராக்ஷஸருக்கும் அவர்களுக்குத் தலைவனான விபீஷணனுக்கும் மெய்யானீர். 'அவர் ஸார்வபௌமன்' என்றால், நானும் அப்படியே. அடியேன் க்ருபணஸார்வபௌமன். நீர் 'யதோக்தகாரீ' என்று ப்ரஸித்தரல்லவா? 'யதோக்தகாரணம்' என்று தம்பெருமாள் திருநாமத்தையும் நினைப்பூட்டுகிறார். என்னை

ரக்ஷியாவிட்டால் திருநாமமே பொய்யாய்விடும். 'தாஸேஷு ஸத்யன்' 'அடியவர்க்கு மெய்யன்' என்னும் திருநாமத்தைத் தரிக்கச் செய்யும்' என்று தேவநாயகன் துதி.

ஸ்ப்ருஶாம்:—ப்ரபத்தியில் ஸம்பந்தப்படும் க்ஷணத்திலேயே அபயதாநம் ஸங்கல்பிக்கப்படுகிறது. உபாயஸ்வரூபம் க்ஷணஸ்பர்சமாயுள்ளது. செய்யும் ப்ரபதநத்தில் தொட்டுக் கொள்ளும் அநுபந்திகளும் ரக்ஷிக்கப்படுகிறார்கள். விபீஷணாழ்வானோடு கூடவந்த நாலுராக்ஷஸர்களும் ரக்ஷிக்கப்பட்டார்கள். அதற்கு இவர் செய்த ப்ரபத்தியில் அவர்களுக்கும் ஸ்பர்ஶம் ஏற்பட்டதே காரணம். (15)

अनुक्षणसमुत्थिते दुरितवारिधौ दुस्तरे
यदि क्वचन निष्कृतिर्भवति साऽपि दोषाविला ।
तदित्थमगतौ मयि प्रतिविधानमाधीयतां
स्वबुद्धिपरिकल्पितं सपदि रङ्गधुर्य त्वया ॥ १६ ॥

அநுக்ஷண-ஸமுத்திதே துரித-வாரிதௌ துஸ்தரே
யதி க்வசந நிஷ்க்ருதி: பவதி ஸாபி தோஷாவிலா ।
ததித்தம் அகதௌ மயி ப்ரதி-விதாநம் ஆதீயதாம்
ஸ்வபுத்தி-பரிகல்பிதம் ஸபதி ரங்க-துர்ய த்வயா ॥ (16)

ரங்க துர்ய—ரங்கநாத!
அநுக்ஷண ஸமுத்திதே—ப்ரதிக்ஷணமும் பெருகுகிறதும்,
துஸ்தரே—தாண்டுவதற்கு அரிதானதுமான
துரிதவாரிதௌ—பாபமாகிற கடல் விஷயத்தில்
க்வசந — (பிராயச்சித்தகாண்டங்களில்) எங்கேயாவது
நிஷ்க்ருதி:—பிராயச்சித்த விதி
யதி—இருந்தாலும்,
ஸா அபி—அந்தப் பிராயச்சித்தமும்
தோஷாவிலா—(ப்ரதிக்ஷணமும் பயங்கள் உத்பத்தியாகின்றன என்று முன் சொன்ன காரணத்தாலேயே) அசுத்தமாகவே
பவதி—ஆகிறது,
தத்—ஆகையால்,
இத்தம்—இப்படி
அகதௌ—வேறு கதியே யில்லாத
மயி—என் விஷயத்தில்
த்வயா—உம்மால்
ஸ்வபுத்திரிகல்பிதம்—உம் புத்தியாலேயே ஆலோசிக்கப்பட்ட
ப்ரதிவிதாநம்—ப்ராயச்சித்தம்
ஆதீயதாம்—செய்யப்படவேண்டும்.

'ப்ரபத்தியை ஒருக்கால் அநுஷ்டித்தவனுக்கு நான் அபயப்ரதானம் செய்கிறேன்' என்றும் 'நீ ஒரு கை முதலற்றவன்' என்றும் சொல்லுகிறாய். ஆனால் நீ ஸகலபாபங்களுக்கும் ப்ராயச்சித்தமான ப்ரபதனமென்னும் ந்யாஸவித்யையை அநுஷ்டித்தாலல்லவோ நான் உன்னை ரக்ஷிக்கலாம்? என்றால், இந்த ச்லோகத்தால் தான் அவனன்றி ஒன்றும் செய்யமுடியாத அகதி என்கிறார்.

ப்ரபத்தி என்னும் ப்ராயச்சித்தத்தை அநுஷ்டிப்பதில் எவ்வளவோ தோஷங்கள் வரக்கூடும். உலகத்தில் ஒரு பாபத்திற்காக ஒரு ப்ராயச்சித்தத்தை ஆரம்பித்தால், இடையில் நேரும் தோஷங்களுக்காக வேறு ப்ராயச்சித்தங்கள்; இப்படி ப்ராயச்சித்தங்களின் தொடர்ச்சி எல்லையில்லாமல் போய்க்கொண்டேயிருக்கும். ஸமுத்ரம் ஓய்ந்தவன்று தான் எங்கள் பாபங்களும் ஓய்வது. ஆகையால் நான் செய்யப்போகும் ப்ரபத்தி என்னும் உபாயத்தையும் உம்முடைய சுபமான ஸங்கல்பத்தால் நீர்தோஷமாயும் பூர்ணமாகவும் செய்து, நீர் காரயிதாவாய் (செய்விப்பவராய்) என்முகமாய் நடத்திவைக்க வேணும். நாங்கள் செய்வது கிலமாயும் அபூர்ணமாயுமிருக்கும். (खिल) கிலமில்லாமல் பூர்ணமாகச் செய்வதில் நீர்தான் நிபுணர். निदानं तत्रापि स्वयमखिलनिर्माणनिपुणः (நிதாநம் தத்ராபி ஸ்வயமகில-நிர்மாண-நிபுண:). ப்ரபத்தி முதலிய உபாயங்களில் எங்களுக்கு அந்வயம் உம்மால்தான் ஏற்படவேண்டும். ஆகையால் அவ்வுபாயத்தைக் குறைவற நீரே செய்து வைக்கவேண்டும்.

ரங்கதுர்ய—ரங்கத்தின் ரக்ஷணபாரத்தை வஹிப்பவர் நீரல்லவா? அந்த ரக்ஷணப் பொறுப்பை நீர் ஏற்றுக்கொண்டு எங்கள் பயத்தைத் தீர்க்கவேண்டும் என்று தானே இப்போது செய்யும் ப்ரபதனம். (16)

विषादबहुलादहं विषयवर्गतो दुर्जयात्
विभेमि वृजिनोत्तरः त्वदनुभूतिविच्छेदतः ।
मया नियतनाथवानयमिति त्वमर्थापयन्
दयाधन ! जगत्पते ! दयितरङ्ग ! संरक्ष माम् ॥ १७ ॥

விஷாத-பஹுளாத் அஹம் விஷய-வர்கதோ துர்ஜயாத்
பிபேமி வ்ருஜிநோத்தர: த்வதநுபூதி-விச்சேதத: ।
மயா நியத-நாதவாந் அயம் இதி த்வம் அர்த்தாபயந்
தயாதந! ஜகத்பதே! தயித-ரங்க! ஸம்ரக்ஷ மாம் ॥ (17)

வ்ருஜிநோத்தர:—அதிக பாபமுடைய (நான்)
விஷாத-பஹுளாத்—துக்கமே அதிகமாயுள்ளதும்
துர்ஜயாத்—ஜயிக்கமுடியாததுமான
விஷயவர்கத:—(சிற்றின்ப) விஷயங்களின் கூட்டத்தின் வலிமையினால்
த்வதநுபூதி-விச்சேதத:—உம்மை அநுபவிப்பதற்குத் தடை ஏற்பட்டுவிடுமோ என்று
பிபேமி—பயப்படுகிறேன்.
தயாதந—தயைச் செல்வம் நிறைந்தவரே!
ஜகத்பதே—லோகத்திற்கு ஸ்வாமியே!
தயிதரங்க—ரங்கத்தில் ப்ரீதியுடையவரே!
மயா—' என்னால்
அயம்—இவன்
நியத-நாதவாந்—கைவிடாத நாதனையுடையவன் '
இதி—என்று
த்வம்—நீர்
அர்த்தாபயந்—சொல்லிக்கொண்டு
மாம்—என்னை
ஸம்ரக்ஷ—நன்றாக ரக்ஷித்தருளவேணும்.

இந்த சரீரத்தின் முடிவில் மோக்ஷம்கிடைப்பது நிச்சயமாயிருந்தாலும், இங்கிருந்த நாள் உன் திருவடிகளில் பக்தி விச்சேதமின்றி இருக்கவேணும். பக்தியாவது இடைவிடாமல் ப்ரீதியுடன் உன் திவ்யமங்கள விக்ரஹத்தை தியானிப்பது. 'அப்படி அனுபவிக்கும் பேரின்பம் கிடைக்குமானால் வைகுண்டவாஸத்திலும் ஆசையில்லை' என்றல்லவோ எங்கள் துணிபு. ஆனால் அந்தபக்திக்கு விஷயங்கள் என்னும் ரூபரஸாதிகள் விரோதிகள். எங்கள் தியானத்திற்கு விஷயமான (ஆலம்பநமான) உம் திவ்யமங்கள விக்ரஹத்திற்கு ஆபத்துவந்தால் அதுவும் தியானத்திற்கு விரோதி ஆகையால் விஷயங்களை அடியோடு விலக்கவேண்டும்; இந்த விஷயமான உம்விக்ரஹத்தோடு நித்யயோகம் வேணும். உம்மைத் தியானிப்பதில் விச்சேதம் வந்தால் அதுவே எங்களுக்குப் பயம் "உண்ணிலாவிய ஐவரால் குமைதீற்றி என்னை உன் பாதபங்கயம் நண்ணிலாவகையே." அநாதி காலமெல்லாம் விஷயப்ரவணமாய் பகவதநுபவவிரோதியாகையாலும், "என்னுடைய சரீரே வர்த்தமானமாய் அத ஏவ அவர்ஜநீயமுமாய் ம்ருத்யு-ஸத்ருசமுமாய் பயங்கரமுமாயிருந்த பஞ்சேந்திரியங்களாலும் விஷயங்களிலே என்னை ஆகர்ஷிப்பித்து" என்று பிள்ளான் பணித்தார்

விஷாத-பஹுளாத்—துக்கமயமான; பகவான் ஆநந்தமயமாயிருப்பதற்கு எதிராக இவை துக்கப்ரசுரம்.

துர்ஜயாத்—பெருமானையும் வசப்படுத்தலாம் போலிருக்கிறது. விஷயங்களை ஜயித்து இந்திரியங்களை வசப்படுத்துவது அரிதாயிருக்கிறது.

வ்ருஜிநோத்தர:—நான் உத்தரன் (உயர்ந்தவன்) ஆவது வ்ருஜினத்தாலேயே; 'க்ருபணஸார்வபௌமன்,' 'அபராத சக்ரவர்த்தி' என்றல்லவோ நான் பெருமையடைவது.

ஜகத்பதே—நீர் ஸ்வாமியாய், எல்லாம் உம்முடைய தன்றோ? உம்மொத்தைக் கள்ளர் கொண்டுபோக விடலாமோ?

निसर्गनिरनिष्टता तव निरंहसः श्रूयते
ततस्त्रियुग सृष्टिवत् भवति संहृतिः क्रीडितम् ।
तथाऽपि शरणागतप्रणयभङ्गभीतो भवान्
मदिष्टमिह यद्भवेत् किमपि मा स्म तज्जीहपत् ॥ १८ ॥

நிஸர்க-நிரநிஷ்டதா தவ நிரம்ஹஸ: ஶ்ரூயதே
ததஃ த்ரியுக ஸ்ருஷ்டி-வத் பவதி ஸம்ஹ்ருதி: க்ரீடிதம் ।
ததாபி ஶரணாகத-ப்ரணய-பங்க-பீதோ பவாந்
மதிஷ்டமிஹ யத் பவேத் கிமபி மாஸ்ம தஜ்ஜீஹபத் ॥ (18)

த்ரியுக—(கலியுகம் தவிர மற்ற) மூன்று யுகங்களில் விபவாவதாரம் செய்பவரே. ஷாட்குண்யபூர்ணரே;
நிரம்ஹஸ:—பாபமற்றவரான
தவ—உமக்கு
நிஸர்க-நிரநிஷ்டதா—எப்பொருளும் அநிஷ்டமாகக் கூடாத ஸ்வபாவமானது
ஶ்ரூயதே—சுருதியில் கூறப்பட்டிருக்கிறது
தத:—ஆகையால்
ஸ்ருஷ்டிவத்—ஸ்ருஷ்டியைப்போல
ஸம்ஹ்ருதி:—ஸம்ஹாரமும்
(தவ—உமக்கு)
க்ரீடிதம்—விளையாட்டாக
பவதி—இருக்கிறது.
ததாபி—அப்படியிருந்தும்
பவாந்—நீர்
ஶரணாகத ப்ரணய பங்க பீத:—சரணாகதனுடைய உம் விஷயமான பரிவைத்திரஸ்கரிக்கப் பயப்படுகிறவர்,
இஹ—(ஆகையால்) இவ்வுலகில்
யத்கிமபி—எது ஒன்று
மதிஷ்டம்—எனக்கு இஷ்டமாகுமோ
தத்—அதை
மாஸ்ம ஜீஹபத்:—நழுவவிடக்கூடாது.

‘என் விக்ரஹத்தை ரக்ஷித்துக் கொள்ளவேண்டும் என்று’ நீர் ப்ரார்த்திக்கிறீர் என்று தெரிகிறது. ஆனால் என்னுடையதை நான் ரக்ஷித்துக் கொள்ளாமல் விடுவேனோ? வராஹ-நாரஸிம்ம-ராமாத்யவதாரங்களில் சத்ருக்கள் என் விக்ரஹத்தை ஹிம்ஸிக்கும்படி விட்டேனோ? ஆதலால் நீர் பிரார்த்திப்பானேன்’? என்று பெருமாள் சங்கை ஸூசிதமாக, அந்த ஆக்ஷேபத்தை அழகாகப் பரிஹரிக்கிறார். ‘உமக்கு ஸ்ருஷ்டியைப் போல ஸம்ஹாரமும் விளையாட்டே. தன்னுடையதைத் தான் அழிப்பானோ என்று உம்விஷயத்தில் கேட்க முடியாது. நீர் ஸம்ஹாரம் செய்வதும் உம்முடையதைத்தானே. உமக்கு அநிஷ்டத்தை நீர்தடுப்பீர். விரோதிகள் உம் விக்ரஹத்தை உதைத்தாலும் அது உமக்கு அநிஷ்டமாகாது. உம்மைப் பற்றி निरनिष्टो निरवद्यः (நிரநிஷ்டோ நிரவத்ய:) என்று வைதிக சுருதி

கூறுகிறது. निरनिष्टो निरंहसः (நிரநிஷ்டோ நிரம்ஹஸ:) என்றும் சுருதி. ஒரு பொருள் அநிஷ்டமாவதற்கு பாபமே காரணம்; காரணமான பாபமில்லாத முக்தனுக்கு ஒரு வஸ்துவும் அநிஷ்டமில்லை, எல்லாம் ஸுகரூபமே. இது முக்தனுக்கு நீர் கொடுக்க வந்தது. உமக்கு இது ஸ்வபாவம். உலகத்தில் பயமேயில்லாத உமக்கு ஆச்ரிதனுடைய இஷ்டத்திற்குப் பங்கம் வந்துவிடுமோ என்று ஒரு பயமுண்டு. உம்முடைய திருமேனிரக்ஷை என் இஷ்டம் (மதிஷ்டம்). உம்திருமேனியின் லயம் எனக்கு அநிஷ்டம். உமக்கு ஸ்வயம் இஷ்டாநிஷ்டங்கள் இல்லாத போனாலும், ஆச்ரிதனான எனக்கு இஷ்டபங்கம் வராதபடி உம்மை ஸதா ஸேவித்துக்கொண்டிருக்கும்படி உம்திருமேனியை ரக்ஷித்தருளவேண்டும். அதனால் ஆச்ரிதர்களுடைய ப்ரணயபங்கம் வந்துவிடுமோ என்கிற பயம் உமக்கும் ஏற்படாது.

இங்கும் ஆளவந்தார் ஸ்தோத்ரத்தின் வார்த்தையையே அநுஸரிக்கிறார்.

कयाधुसुत - वायस - द्विरदपुङ्गव - द्रौपदी -
विभीषण - भुजङ्गम - व्रजगणाम्बरीषादयः ।
भवत्पदसमाश्रिता भयविमुक्तिमापुर्यथा
लभेमहि तथा वयं सपदि रङ्गनाथ! त्वया ॥ १९ ॥

கயாது ஸுத-வாயஸ-த்விரதபுங்கவ-த்ரௌபதீ-
விபீஷண-புஜங்கம-வ்ரஜகண-அம்பரீஷாதய:
பவத்-பத-ஸமாஶ்ரிதா பய-விமுக்திம் ஆபுர்-யதா
லபேமஹி ததா வயம் ஸபதி ரங்கநாத! த்வயா ॥ (19)

ரங்கநாத—ரங்கநாதனே!
யதா—எப்படி
கயாதுஸுத—கயாது தேவியின் புத்ரனான ப்ரஹ்லாதன்,
வாயஸ—(ஜயந்தன் என்னும்) காகம்),
த்விரதபுங்கவ—கஜேந்த்ரன்,
த்ரௌபதி, விபீஷணன்,
புஜங்கம—ஸுமுகன் என்னும் நாகம்,
வ்ரஜகண—கோபஜனங்கள்,
அம்பரீஷாதய: —அம்பரீஷன் முதலியவர்கள்
பவத்பதஸ்மாஶ்ரிதா :—உம் திருவடிகளை நன்றாக ஆச்ரயித்து
பயவிமுக்திம்—பயத்திலிருந்து விமோசனத்தை
ஆபு :—அடைந்தார்களோ,
ததா—அப்படியே
வயம்—நாங்களும்
ஸபதி—உடனே
த்வயா—உம்மாலே
லபேமஹி—(பயவிமோசனத்தை) அடைவோமாக.

[१ व्रजजन - पा.]

பெருமாள் தம் அபயப்ரதாநவ்ரதத்தை உத்கோஷித்ததைப் பேசினார். உத்கோஷணம் இருக்கட்டும் கோடிக்கணக்கான உம் அநுஷ்டாநங்களை நீர் அநுஸரிக்கவேண்டாவோ என்கிறார்.

கயாதுஸூத—முதலில் அஸுரசிசுவான ப்ரஹ்லாதாழ்வான். கயாது என்றதாயின்பெயரையிட்டு அவரையே காயாதவர் என்பர். அவர் ஸாதுக்களில் தலைவர் வைஷ்ணவர்களுக்கு முதலானவர். பகவானுடைய அகடிதகடநா-ஶக்தியை வெளிபடுத்துகிறது என்பதற்காக ந்ருஸிஹ்மாவதாரத்தை எடுக்கிறார். மஹாஸுரன் வீட்டுத் தூண்தான் வேண்டுமோ? இங்கோர் மண்டபத்தில் ஆயிரம் தூண்களில் ஒன்றும் நீர் அவதரிக்க உதவாததோ? அஸுரனின் சிறுவனுக்காகத்தான் அவதரிக்க வேண்டுமோ? தலைநிரைத்த கிழவனால் அடியேனுக்காக ஆகாதோ என்று திருவுள்ளம்.

வாயஸ—ஜகன் மாதாவான பிராட்டியிடம் அபசாரப்பட்ட இந்த்ர புத்ரனான ஜயந்தன். இந்த்ரன் 'ஹவிர்புக்'; அவன் பிள்ளை 'பலிபுக்' (பலியைச் சாப்பிடும் காக) ரூபத்துடன் வந்தான். நீர் கிருபை செய்வதற்கு ஒரு வாயஸமாயே இருக்கவேண்டுமோ? (பரம) ஹம்ஸர்களித்தனை பேர் கதறுகிறார்களே.

த்விரத-புங்கவ—கஜேந்த்ரன் ஒரு நீர்ப் புழுகல்ல, परमापद्मापन्नः (பரமாபதம் ஆபந்ந:) என்று ஆர்த்தியின் காஷ்டையில் இருந்தவன். "நீர் உண்டு; வேக ஸம்ரம்பத்திற்குக் கருடனுண்டு; கூர் நேமி யுண்டு; ரக்ஷிக்க நானுண்டு. அத்திகிரியரசே! நீர் எல்லா ஜந்துக்களுக்கும் பொதுவாயிருக்க, யானை யென்றும் மனிதன் என்றும் பேதம் கூடுமோ?" என்று பேருராளனைக் கேட்டார். ब्राह्मणे गवि हस्तिनि......पण्डिताः समदर्शिनः (ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி......பண்டிதா: ஸமதர்ஶிந:) என்று பாடவில்லையோ? 'விபஶ்சித்'தான நீர் பண்டிதராய், ப்ராஹ்மணனான உம் வேதாந்தாசிரியனையும் ஒரு பசுவையும் ஒரு யானையையும் ஸமமாகப் பார்க்கவேண்டாமோ? புங்கவ என்று ச்ரேஷ்டத்தைச் சொல்லும் பதம் மாடு ஜாதியையும் சொல்லுமாதலால் அதையும் எடுப்பது போல் அமைந்திருக்கிறது.

த்ரேளபல—'நிர்தீஜ்ஜர் ஸபைநடுவே லஜ்ஜையைத் துறந்து சரணாகதி சாஸ்த்ரத்தை மூதலிப்பித்துப் பெற்ற மஹாபாக்யவதி' என்று ஸ்ரீலோக தேசிகன் புகழ்ந்தார். ரங்கமத்யத்தில் எங்கள் உயிரான உம்திருமேனியின் நித்யஸேவையைத் தந்தருளவேணும்.

உபாயமும் ஃபலமும் விரோதிவர்கமும் தோற்றும். ப்ரதமாக்ஷரத்திலேயாதல் இதி—அவ ரக்ஷணே என்கிற தாது ஸாமர்த்யத்தாலும் லுப்த சதுர்த்தீப்ரதிபந்ந ஸம்பந்த விசேஷத்தாலும் ரக்ஷகத்வ சேஷித்வாதி விசிஷ்டனாக ப்ராப்யமும் ரக்ஷண ரூபஃபலமும் சாப்தமாகத்தோற்றி ரக்ஷகத்வம் ரக்ஷ்யஸாபேக்ஷமாகையாலும் ஸர்வரக்ஷாப்ர ஸங்கபரிஹாரார்த்தமாக உபாயஸாபேக்ஷமாகையாலும் ஆர்த்திகமாக ப்ராப்தாவும் உபாயமும் இத்தனை நாள் ரக்ஷியாமைக்கு நிபந்தநமாக விரோதிவர்க்கமும் தோற்றும். ஸம்க்ஷேப விஸ்தரக்ர மத்தாலே.—இந்த அர்த்த பஞ்சகத்தை திருமந்த்ரத்திலே பதத்ரயத்திலேயாதல், ப்ரதமபதமான ப்ரணவத்திலேயாதல், அநுஸந்திக்கும் போது, ப்ராப்யமான ப்ரஹ்மஸ்வரூபமும், ப்ராப்தாவான ஜீவஸ்வரூபமும், விஸ்த்ருதமாய் மற்றது ஸம்க்ஷிப்தமாயும் ப்ரதமாக்ஷரத்திலே அநுஸந்திக்கும் போது ப்ராப்யஸ்வரூபம் விஸ்த்ருதமாய் மற்றது ஸம்க்ஷிப்தமாயிருக்கும்.

சப்தார்த்தஸ்வபாவங்களைக்கொண்டு—சப்தஸ்வபாவங்களையும் அர்த்தஸ்வபாவங்களையும் கொண்டு. சப்தஸ்வபாவமாகிறது—அவ ரக்ஷணே என்கிற தாதுவில் நிஷ்பந்நமான, அசப்தமென்ன, மந ஜ்ஞாநே என்கிற தாதுவிலே நிஷ்பந்நமான மசப்தமென்ன, அஹிர்புத்ந்யோக்த ஸ்தூல ஸூக்ஷ்ம பரரூபங்களான யோஜனைகளிலே நிஷ்பந்நார்த்தபோதக நமச்சப்தமென்ன, ணீங் க்ஷயே என்கிறதாதுவிலே நிஷ்பந்நமான ரசப்தத்தோடே நஸமாஸத்தாலே ஸித்தமான நரசப்தமென்ன, நாரசப்தமென்ன அயநசப்தமென்ன, நாராயண சப்தமென்ன, இதுகளின் ஸ்வபாவமென்னபடி. அர்த்தஸ்வபாவமாவது—கீழ்ச் சொன்ன வ்யவச்சேதசக்த்யாதிகள். அர்த்த பஞ்சகாநுஸந்தாநம் பண்ணுமதுவும் இதி.

> 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌰𑍂𑌪𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍁𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
> 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌂 𑌫𑌲𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇𑌃 𑌤𑌥𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌵𑌿𑌰𑍋𑌧𑌿 𑌚 ।
> 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌸𑌕𑌲𑌾 𑌵𑍇𑌦𑌾𑌃 𑌸𑍇𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌕𑌾𑌃 ॥

இத்யாதிகளிலே ஸங்க்ருஹீதமான ஐந்தர்த்தங்களையும்

> [illegible] ।
> [illegible] ।
> [illegible] ॥

என்கிறபடியே திருமந்திரத்திலே அநுஸந்திப்பது மென்றபடி. உம் என்றது, நிருக்தாதி வாக்யவிசேஷஸித்தங்களான பதார்த்த வாக்யார்த்தங்களை ஸமுச்சிக்கிறது. அந்யோந்ய விருத்த மன்று. பதார்த்த வாக்யார்த்

தங்களெல்லாம் அர்த்தபஞ்சகத்தை விட்டிரா தாகையாலே இவ்வநுஸந்தாநத்துக்கும் நிருக்தாதி ஸித்தார்த்தாநு ஸந்தாநத்துக்கும் ஒன்றுக்கொன்று விரோதம் சொல்லவொண்ணு தென்று திருவுள்ளம். இப்படி "ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்தம்" என்கிறபடியே திருமந்திரத்திலே தானே அர்த்த பஞ்சகங்களும் அநுஸந்திக்கலாமாயிருக்க இப்படி அநுஸந்திக்காதே ஸம்ஸாரியான சேதநனுக்கு தத்துவ ஞாநம் பிறந்து உஜ்ஜீவிக்கும்போது அர்த்த பஞ்சகஞ்ஞான முண்டாகவேணு மென்று தொடங்கி தனியே நிரூபிப்பது ஸத்ஸம் ப்ரதாயமன்று, ரஹஸ்யத்ரயத்திலே சேர்த்தநுஸந்திப்பதே ஸம்ப்ரதாயம் என்றாயிற்று.

அவ—ஆனாலும் ப்ரதமத்விதீயாக்ஷரங்கள் இரண்டிலும் பிராட்டியும் அநுஸந்தேய மென்று சொல்லுகிறது விருத்தமன்றோ? ப்ரதமாக்ஷரம் பகவத்வாசகமாயிருக்கு மொழிய லக்ஷ்மீ வாசகமென்று ஒரு நிகண்டு இல்லையே. ஆர்த்தமாக அநுஸந்தேய மென்றாலும் உகாரத்தில் லக்ஷ்மி சாப்தமாகாநிற்க, புநருக்தியாகாதோ; அப்பக்ஷத்தில் உகாரம் அவதாரணபர மென்றில் இப்படி லக்ஷ்மீ ப்ரதிபாதநம் வேண்டு மென்று தான் ஒரு வாக்ய முண்டோ?. கிஞ்ச—உகாரம் லக்ஷ்மீ வாசகமானபோது, அவதாரணவாசகமாக ஒன்றும் காணாமையாலே, அது ஸித்தியாதொழியாதோ? இப்பக்ஷத்தில் 'ஸர்வம் வாக்யம் ஸாவதாரணம்' என்கிற ந்யாயத்தாலே அவதாரணம் ஸித்திக்கும் என்னில் இந்தவவதாரணத்துக்கு பலம் எது? அகாரத்திலே தானே லக்ஷ்மீ ஸம்பந்தம் அநுஸந்தேய மென்னும்போது உகாரம் அவதாரணார்த்தம் என்று கொண்டால் அகாரத்திலே ஆர்த்தாவதாரணத்துக்கும், இந்த சாப்தாவதாரணத்துக்கும் பலம் ஒன்றோ? வேறேயோ? இத்யாதி சங்கைகளுக்கு மூன்று வாக்யங்களாலே பரிஹாரம் அருளிச்செய்கிறார்.

மூ—இப்ப்டி ப்ரதம த்விதீயாக்ஷரங்களாலே ஆர்த்தமாகவாதல் சாப்தமாகவாதல் சரண்ய ஸஹதர்ம சாரிணீ ப்ரதிபாதநம் பண்ணுமதுவும், அவ்வோவாக்ய விசேஷமூலம். மத்யமாக்ஷரம் பத்நீபரமென்னும் நிர்வாஹத்தில் விசேஷோ பாதாநபலத்தாலே அவதாரணம் அர்த்த ஸித்தம். இந்த அவதாரணத்தாலே ஆத்ம சரீரபாவம் ஸித்திக்கிறதென்பார்க்கு சேஷத்வாயோக வ்யவச்சேதத்திலே தாத்பர்யம் கொள்ளலாம்.

வ்யா—இப்படி என்றது அர்த்தபஞ்சகாநுஸந்தாநம் பண்ணுமாப்போலே என்றபடி. ப்ரதமத்விதீயாக்ஷரங்களாலே—ப்ரணவத்தில் அகார உகாரங்களாலே. ஆர்த்தமாகவாதல் சாப்தமாகவாதல் இதி. ப்ரதமாக்ஷரமான அகாரம்,

"அகாரோ விஷ்ணுவாசக:
ஸமஸ்தஜகதேககாரணஸ்ய ஸூசக: ।
ஸ்வஸ்வாம்ய ஸம்பந்தஸ்ய ரக்ஷணஸ்யாபி ஸூசக: ॥
வாச்யவாசக ஸம்பந்தயோகாதர்த: ப்ரதீயதே"

என்றும்,

"அ இதி பகவதோ நாராயணஸ்ய ப்ரதமாபிதாநம்" என்று நிவண்டுக்களிலும் நிருக்தங்களிலும், ப்ரயோகங்களிலும் பகவந்மாத்திரவாசகமாகத் தோற்றினாலும், ரக்ஷணார்த்த தாதுவிலே நிஷ்பந்நமான பதமாகையாலே ரக்ஷகத்துவம் தோற்றவேண்டுகையால் அது தோற்றும்போது,

"லக்ஷ்ம்யாஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்யரூபயா ।
ரக்ஷகஸ்ஸர்வஸித்தாந்தே வேதாந்தேபி ச கீயதே ॥

என்கிறபடியே, லக்ஷ்மீ விசிஷ்டனுக்கே ரக்ஷகத்துவம் ப்ரமாண ப்ரதிபந்நமாகையாலே பிராட்டியை அநுஸந்திக்கும் போது எம்பெருமானைச் சொல்லுமிடமெங்கும் பிராட்டியைச் சொல்லித்தாமென்று உடையவர் அருளிச்செய்ததை ஆச்சான் பக்கலிலே கேட்டு நஞ்சீயர் ஸங்க்ரஹித்தாரென்று பெரிய ரஹஸ்யத்திலே பிள்ளை அருளிச்செய்த ஸம்ப்ரதாயத்தாலும் "த்வம் தஸ்யாபிவாசகம் நவ்யமாஹுஸ்ஸந்த: ப்ரஸ்துதிர் வா" என்கிற பட்டர் ஸ்ரீஸூக்தியாலும், லக்ஷ்மீ ஆர்த்தமாக ப்ரதிபாதிதை ஆகிறாள். சாப்தமாகவாதல் இதி. கடச்ருதி, ப்ரணவ விவரணமாம்போது, அகாரேணோச்யதே விஷ்ணு: । ஸர்வலோகேச்வரோ ஹரி: ॥

உத்ருதா விஷ்ணுநா லக்ஷ்மீ: உகாரேணோச்யதே ததா ।
மகாரஸ்து தயோர்தாஸ: இதி ப்ரணவலக்ஷணம் ॥",

என்று லக்ஷ்மி உகாரவாச்யை என்று ஓதுகையாலே சாப்தமென்றபடி. சரண்யஸஹதர்மசாரிணீ ப்ரதிபாதநம் பண்ணுமதுவும் இதி—ஸஹ

தர்மசாரிணீ என்றது ஹேதுகர்ப்பவிசேஷணம். ஸஹதர்ம சாரிணீத்வாத் தத்ப்ரதிபாதநம் பண்ணுமதுவும். "ஸஹதர்மசரீதவ" என்று சரண்ய தர்மமான சரணாகதர க்ஷணத்திலே கூடவிருந்தனுஷ்டிக்க வேண்டியவ ளாகையாலே இவள் ப்ரதிபாதநம் ஆவச்யகம் என்றபடி. அவ்வேவாவாக்ய விசேஷமூலம்—கீழுதாஹரித்த ப்ரமாணஸம்ப்ரதாயச்ருதிவாக்ய மூலம்; மத்திய மாக்ஷரமான உகாரம் "தஸ்யைவாஹ்ம் ஸதாஸ்மி ... வஷட்கார:" என்கிற ச்ருதியில் ஸ்தாந ப்ரமாணத்தாலே ச்ரௌதப்ரக்ரியை யாலே அவதாரணபரமென்றும் கடச்ருதிபராமர்சத்தாலே லக்ஷ்மீபர மென்றும் இரண்டு நிர்வாஹமும் ஸம்ப்ரதாய ஸித்தமாகையாலே லக்ஷ்மீ பரமென்கிற நிர்வாஹத்திலே அவதாரணஸித்தியை அருளிச் செய்கிறார். "மத்தியமாக்ஷரம்" இத்யாதியால். நிர்வாஹத்தில் இதி—இது ச்ரௌத மான நிர்வாஹமாகையாலே மறுக்கவொண்ணாதென்று திருவுள்ளம். விசே ஷோபாதாந பலத்தாலே இதி. இரண்டு விவக்ஷையுமாவச்யக மாயிருக் கையாலும் இரண்டர்த்தங்களுக்கும் போதகமாயிருந்த ஓரக்ஷரத்தை விசேஷோபாதாநம் பண்ணி, கடச்ருதி வ்யாக்யா நிக்கையாலும் விசேஷோ பாதாநம் பண்ணினது சாப்தமாய், அபேக்ஷித மாயிருந்தவவதாரணம் 'ஸர்வம் வாக்யம்' என்கிற ந்யாயத்தாலே ஆர்த்தமாக ஸித்திக்கு மென்ற படி. இப்படி உகாரம் லக்ஷ்மீவாசகம் என்கிற யோஜநாவிசேஷத்திலே, ஏவோ: என்றுதல் ஒப்யாம் என்றுதல் கிடக்க வேண்டி ஷஷ்டீ ... த்விவசநங்கள் லுப்தங்களாய் மகாரஸ்து தயோர்தாஸ: என்கிறபடியே இருவரையும் பற்ற இவ்வாத்மா சேஷமானபோது அவதாரணம் ஆர்த்த மாய் இத்தம்பதிகளை ஒழிந்தார்க்கு சேஷமன்றென்னுமிடம் ந்யாய ஸித்த மாகையாலே இதுக்காக ச்ரௌதயோஜநையை அஸ்வரஸ மாக்கி ஸ்தா நப்ரமாணத்தாலே உகாரம் அவதாரணார்த்தம், இத்தால் பிறர்க்கு சேஷ மன்றென்கிறது பெரியபிராட்டியாருக்கு சேஷமென்கிறது என்றும் சொல்லுவர்கள். அதிலும் அந்யசேஷத்வம் கழிகையே ப்ரதாநம் என்கிற வாக்யத்துக்கு அதிலும் பிராட்டி உகாரவாச்யை என்று கீழ்சொன்ன பக்ஷத்திலும் ந்யாயலப்தாவ தாரணத்தாலே அந்யசேஷத்வம் கழிகையே ப்ரதாநம் என்று கொண்டால் ஒரு விரோதமில்லை. இப்படியன்றிக்கே பெரிய பிராட்டி யாருக்கு சேஷமென்கிற இந்த நிர்வாஹத்தைக் காட்டி டிலும் அவதாரணபரமான பூர்வ யோஜனையே முக்கியமென்று மத்தை

யருளிச்செய்கிறார். அதிலும் அந்யசேஷத்வம் கழிகையே ப்ராதாந மென்ற. அதாவது—பெரிய பிராட்டியாருக்கு சேஷமென்கிறவதிலும் காட்டில் கீழ்ச் சொன்ன பகவச்சேஷத் துவத்துக்கு விரோதியான அந்ய சேஷத்வம் கழிகையே ப்ரதாநாபேக்ஷித மென்று வ்யாக்யாதா எழுதுகை யாலே அஸம்ப்ரதாய மென்ற வேண்டித்து. வ்யாக்யாதா இப்படி எழுதிய தற்கு மூலம் பெரிய பிராட்டியாருக்கு சேஷமென்கிறது என்றும் சொல்லு வர்கள் என்று, அஸ்வாரஸ்யம் தோற்றச்சொல்லுகை, உகாரம் ஸ்தாநப்ர மாணத்தாலே அவதாரணபரமானாலும், ப்ரணவ கடகமான உகாரத்தை எடுத்து அவதாரணபரமாக ச்ருதிஸ்மிருதிகள் ஒன்றும் சொல்லாமை யாலும் "அநந்யார்ஹ ..." என்கிறபடியே "ஸதிஸம்பவே ... வாக்யம் ஸாவதாரணம் ஜ்ஞேயம்" என்கிற ந்யாயத்தின்படியே ஒஹ்ரேவ என்றுவது அவோரேவ என்றுவது, யோஜிக்கைக்கு விரோதம் ஒன்றும் சொல்லவொண்ணாதாகையாலும் இந்த உகாரத்தையே லக்ஷ்மீபரமென்று கடச்ருதி விவரிக்கையாலும்,

> "அகாரஸ்சிதஸ்மாதேவஸ்ய விஷ்ணோர்வாசக இஷ்யதே ।
> உகாரஸ்சிதஸ்மாதேவாயா: ஸ்ரீயோ வாசீ ததா விது: ॥
> மகாரஸ்து தயோர்தாஸ: இதி ப்ரணவலக்ஷணம் ॥"

என்றும்,

> "அகாரேணோச்யதே விஷ்ணு: ஸர்வலோகேஸ்வரோ ஹரி: ।
> உத்த்ருதா விஷ்ணுநா லக்ஷ்மீ: உகாரேணோச்யதே ததா ॥
> மகாரஸ்து தயோர்தாஸ: ஸ்ரீநாராயணயோஸ்ததா ।
> ஸ்ரீநர்ப்ரேஷ்ய ... வாசகஸ்து ... இதி போதித: ॥"

இத்யாதிகளான பகவச்சாஸ்திர வசநங்களை அந்த வ்யாக்யாதாவே உபா தாநம் பண்ணியிருக்கையாலும். இந்த யோஜனையே வைதிகர் முக்கிய மென்ன வேண்டியிருக்க, அவதாரணபரயோஜனை முக்கியமென்று இதைக் கொள்ளாதது, வைதிக பக்ஷத்துக்குச் சேராது. இப்படி சாப்தமாயாவது ஆர்த்தமாயாவது அவதாரணம் ஸித்தித்தாலும் இத்தாலே இத்தம்பதி களை யொழிந்தார்க்கு இவ்வாத்மா சேஷமன்றென்று இப்படி அந்யயோக வ்யவச்சேதம் ஸித்திக்கு மொழிய, ப்ரதாநப்ரதிதந்த்ரமா யிருந்த சரீராத் மபாவம் ஸித்தியாதே அப்போது அவதாரணத்தாலே சரீராத்மபாவம்

சொல்லித்தாகிறது, என்கிறதும், ஸத்ஸம்ப்ரதாயமாகையாலே அதுக்கு விரோதம் வாராதோ வென்ன வருளிச்செய்கிறார். "இந்த வவதாரணத்தாலே" இத்யாதி. இந்த அவதாரணத்தாலே என்றது ப்ரணவத்திலே சாப்தமாகவாதல் ஆர்த்தமாகவாதல் ப்ரதிபந்நாவதாரணத்தாலே என்றபடி, "சரீராத்மபாவம் ஸித்திக்கிறது" என்பார்க்கு இதி.

"ஆயெயகவூஹாதி நியெஜொஷிகதஹீஸூரீம
ஸதூாஷெஉவுயதந ஷெஜெஷெ தஷாயதூஜெ௨தக ॥
விஷூம் வஶாஷிதி ஜஶவதிவுாவகா உஶஹூஷெ ॥"

என்கிறபடியே எம்பெருமானுக்கும் சேதநாசேதநங்களுக்கும் நியந்த்ருத்வ விதேயத்வ சேஷத்வங்களாலே சரீராத்மபாவம் திருமந்திரத்திலே ஸம்ப்ரதாய ஸித்தமாகையாலே நாராயணசப்தத்தில் தத்புருஷ பஹுவ்ரீஹிஸமாஸத்வயங்கள் தோன்றி சேஷத்வம் தோற்றவேண்டியது, அகாரத்தின் மேலுள்ள லுப்தசதுர்த்தியிலே யாகையாலே இதன் நையத்யம் அவதாரணத்தாலே ஸித்திக்க வேண்டியத்தாலும் நையத்யமில்லாதபோது கேவல சேஷத்வ மாத்திரம் சரீர லக்ஷணமாகாதாகையாலும் அவதாரணத்தாலே சரீராத்மபாவம் ஸித்திக்கக் குறையில்லை என்று திருவுள்ளம். அவதாரணத்தாலே—அவதாரண ஸஹக்ருத சேஷத்வத்தாலே. ஆனாலும் அவதாரண ஸஹக்ருத சேஷத்வத்தாலே ஸ்ரீவிசிஷ்டனுக்கோ, இருவருக்குமேயோ, சேஷம் மற்றொருவருக்கும் சேஷமன்று என்றிப்படி தோன்று மொழிய ஆத்மசரீரபாவம் ஸித்திப்பதெங்ஙனே என்னவருளிச்செய்கிறார்—சேஷத்வாயோகவ்யவச் சேத்திலே தாத்பர்யம் கொள்ளலாம் என்று—ஏவகாரம் வ்யவச்சேதகமாகையாலே, வ்யவச்சேதிக்கும் போது அந்யயோகவ்யவச்சேதகமாயும் அயோகவ்யவச் சேதகமாயும் இரண்டுபடி பட்டிருக்குமாகையாலே இந்தவவதாரணம் ப்ரக்ருதியோடு (விசேஷ்யத்தோடு) சேர்ந்தால் இத்தம்பதிகளுக்கே சேஷம்; மற்றொருவருக்கு சேஷமன்றென்று சேஷத்வத்துக்கு அந்யயோகத்தை வ்யவச்சேதித்தாலும் ஜீவனுக்கு விசேஷணமாய் தோற்றின லுப்தசதுர்த்யர்த்தமான சேஷத்வத்தோடே சேர்த்தால் சேஷஏவ என்றதாய் இத்தம்பதிகளுக்கு சேஷமாயே இருக்கும் இப்படியல்லதிராது' சேஷத்வாயோகத்தை வ்யாவர்த்திப்பிக்கையில் தாத்பர்யம் கொள்ளலாம். இந்தயோஜனையில் நியமேந

சேஷத்வம் தோற்றுகையாலே ஆத்மசரீரபாவம் ஸித்திக்கு மென்று திருவுள்ளம். இந்த நியதசேஷசேஷிபாவத்தாலே ஆத்மா பிமாநாநுகுண புருஷார்த்தவ்யவஸ்தையின் படியே ஸ்வரூபாநுரூப புருஷார்த்தருசியும் அப்புருஷார்த்தத்துக்கு அநுரூபமுமாய் நிரபேக்ஷமாயிருந்துள்ள உபாய விசேஷத்தை அறிகையும் பலிக்கையாலே இந்த யோஜனை ஆவச்யகமென்று கொண்டு இங்கனே அருளிச்செய்தார். அவதாரணத்தாலே சரீராத்மபாவம் ஸித்திக்கிறதென்பார்க்கு என் கையாலே விசேஷண (ப்ரத்யய) ஸங்கதைவகாரபரமான யோஜனையொழிய விசேஷ்ய (ப்ரக்ருதி) ஸங்கதைவகாரபரமாக வொரு யோஜனை உண்டென்றிங்கனே திருவுள்ளம்தோற்றுகிறது. அப்போது ஏவகாரமந்யயோகவ்யவச் சேதபரமானாலும் ப்ரதமாக்ஷரத்தில் சதுர்த்தியில் தோன்றின தாதர்த்யத்துக்கு உபாதியில்லாமையாலே விசேஷண ஸங்கதைவகார மில்லாதே போனாலும் தத்பலமான யாவத்ஸ்வரூபம் சேஷத்வ ஸம்பந்தம் சப்தத்தினுடைய அஸங்குசிதவ்ருத்திஸ்வபாவ ஸித்தமாகையாலே இப்படி யாவத்ஸ்வரூபம் ஸம்பந்தம் சொல்லுகை அயோகவ்யவச்சேதமாய் தலைக்கட்டுகையாலே ஆத்மசரீரபாவம் ஸித்திக்கக் குறையில்லை. சேஷத்வத்துக்கு ஒரு உபாதியுண்டாய் அது நிவர்த்தித்தாலிறே சேஷத்வம் நிவர்த்திப்பது, "ஊாஸஹூதாஃ ஷூதஷூவெஹீ ஹூாதூாநஃ வஶஊாதூநஃ" என்று சேஷத்வம் ஸ்வரூபப்ரயுக்தம் என்றிறே யிருப்பது.

அவ—ஆனாலும் இப்படிதோற்றின சேஷத்வத்துக்கு ஆச்ரயமான ஜீவனுக்கு வாசகமான மகாரம் ஸர்வஜீவ ஸாதாரண மாகையாலே ஊாஸஹூதாஃ இத்யாதி ப்ரமாணத்தின்படியே ஜீவஜாதம் பகவச்சேஷமென்று மந்த்ரத்திலே அநுஸந்தாநம் ஸித்தித்தாலும் "ஊஹம் ஜஶவஜூ ஷஹூதஃ" என்று ஆவச்யகமான வநுஸந்தாநம் ஸித்திக்கும்படி எங்ஙனே என்ன வருளிச்செய்கிறார்.

மூ—மகாரார்த்தோஜீவ : இத்யாதிகளிற்படியே த்ருதீயாக்ஷரம் ஜீவஜாதீய ஸர்வபரம் என்பார்க்குமிதில் ஸ்வாநுஸந்தாநம் ஆர்த்தமென்ன வேணும்.

வ்யா—ஊகாஶாஜெஹீாஜீவஃ இதுபட்டர் ஸ்ரீஸூக்திம் மகார; ஜீவஸாமாந்ய பரமென்னும், ஸம்ப்ரதாயம் உண்டென்கைக்காக, உபாதாநம்

பண்ணினது. ஆதிசப்தத்தாலே “உகாரம் ஜீவஹ்ருதம் தாஸ்ரீஶே வ்யாவகம் ந்ருஸெஷ” என்றும்.

“வம்ஶாணாம் நாம் தா வஹ்நா நாம வஹ்ணாம்வாஶேஷ்மஃ।
ஸம்ஷ்டிதஃ காஷிமாஹா நாம தகவா தஸெவ ந ஸவஷ்டா ॥

என்னும் “ஆஜ்ஞா தா ஸஉகாரோாயம் வஹ்ஜுவிம்ஶஃ ப்ரக்ருதித்தஃ” என்றுமிது முதலான ப்ரமாணங்கள் விவக்ஷிதங்கள். “ஜீவஜாதீயஸர்வபரம் என்பார்க்கும்” மந, ஞாநே என்கிற தாதுவிலே நிஷ்பந்நமான மசப்தம் ஸ்வரூபதோகுணதச்ச, ஞாநாகாரனென்கையாலே “உகாரம்ஜீவ ஹ்ருதம் தா” இத்யாதி ப்ரமாண ஸஹக்ருதமானவிது, ஸர்வஜீவ ஸாதாரணமாயிருக்குமென்று திருவுள்ளம். என்பார்க்குமென்கையாலே இப்படி யன்றிக்கே இம்மகாரமே சருங்கக்ராஹிகயா அஹமர்த்தத்தைக் காட்டுகிறது என்றுமொருயோஜனை, ஸ்ம்ப்ரதாயத்தி லுண்டென்று தோற்றுகிறது. இதிலே,—ஜீவஸாமாந்யம் பகவச்சேஷமென்னு மநுஸந்தாநத்திலே ஸ்வாநுஸந்தாநம் ஆர்த்தம். திருமந்திரத்திலே சேஷத்வஞ்ஞாநம் தனக்குப் பிறக்கவேண்டிய தாகையாலே அதுக்குத் தன்னைக்காட்ட வேண்டியது ஆவச்யகமாகையாலே இம்மந்திரத்திலே எல்லாஜீவர்களும் பகவச் சேஷமென்று அநுஸந்திக்கவே தானுமதில் அந்தர் பூதனாகையாலே “ஸோ தாஹமேவி தேஷாஸஃ” என்கிறபடிக்கு ஸ்வாநுஸந்தாநமும் அர்த்தாத்ஸித்திக்குமென்று திருவுள்ளம். என்னவேணுமென்கையாலே இந்த யோஜனை கொஞ்சம் அஸ்வரஸமென்று தோற்றுகிறது. சேஷத்வஞ்ஞாநமும், ஸ்வஸ்வாதந்த்ர்யா பிமாநநிவ்ருத்யாதிகளும் உபாயவிசேஷபரிக்ரஹமும் பலபூதசேஷவ்ருத்தி ப்ரார்த்தனையும் தனக்குப்பிறக்க வேண்டியதாகையாலே தன்னை விசிஷ்ய காட்டவேண்டியது ஆவச்யகமிறே. அதுக்காக இந்த த்ருதீயா க்ஷரத்துக்கு விசேஷ்யபதமாக அஹம்சப்தத்தை அத்யாஹரித்து அந்வய மாகிறதென்றும் சிலவாசார்யர்கள் சொல்லுவார்கள். இந்த அத்யாஹாரமு மின்றிக்கே அஸ்மச்சப்தத்தில் வ்யஞ்சநமாத்திரமான மகாரத்தை யெடுத்து ஸாரூஸ்ய்ருகி யையாலே அஸ், அத் என்கிற பூர்வோத்தர பாகங்கள் லோபித்து நிற்கிறதாய் த்ருதீயாக்ஷரம் தானே அஹமர்த்தத்தைக் காட்டுகிறதென்றும் சிலவாசார்யர்கள் அருளிச் செய்வார்கள்.

இந்த உலகம் எல்லாம் பகவானுடைய விபூதியில் கால்பாகம் என்றும், மிகுந்த முக்கால் பாகம் நித்யவிபூதி என்றும் விச்வம் என்று சொல்லப்பட்ட ப்ரகிருதிமண்டலத்தைக் கடந்து அதற்கு மேற்பட்ட விஷ்ணுவின் ஸ்தானமே ஸம்ஸாரமார்கத்திலிருந்து முமுக்ஷுக்கள் சேரவேண்டிய உயர்ந்த இடம் என்பதும் அனேக உபநிஷத்துக்ளில் சொல்லப்பட்டது. அந்த பரமபதத்தை நித்யசூரிகள் எப்போதும் அனுபவிக்கிறார்கள். அந்த பரமாத்மா அழிவற்ற பரமபதத்தில் இருக்கிறது. தமோகுண ரஜோகுண ஸம்பந்நமான இவ்வுலகங்களுக்கப்புறம் அப்பரமாத்மாவிற்கு இருப்பிடம், தமஸ் என்று சொல்லக்கூடிய பிரகிருதி மண்டலத்திற்கு புறமே அனாதியாயும், அனந்தமாயும் உள்ள பரமபதம். அந்த மஹாத்மாக்கள் அந்த விராட்புருஷனனின் உத்தமமான ஸ்தானத்தை அடைகிறார்கள். அந்த விடத்தில் ஏற்கனவே விராட் புருஷனை உபாஸனை செய்து ஸித்திபெற்ற தேவர்கள் வசிக்கிறார்கள். என்று பற்பல விடங்களில் காணலாம்.

---

३. अन्तराधिकरणम्

सू—अन्तर उपपत्तेः ॥ १. २. १३ ॥

“य एषोऽन्तरक्षिणि पुरुषो दृश्यते एष आत्मेति होवाच एतदमृतमभयमेतद्ब्रह्म “ इत्यत्र अक्ष्याधारः परमपुरुषः निरुपाधिकामृतत्वाभयत्व संयद्वामत्वादीनामस्मिन्नेवोपपत्तेः ॥ ”

நமது கண்ணின் உள்ளில் காணப்படுமவன் பரமாத்மாவே. அவனுக்குச் சொன்ன அம்ருதத்வம் முதலான குணங்கள் பரமாத்மாவுக்கே உரித்தானவை. யாதொருவன் நமது கண்ணின் உள்ளில் காணப்படுகிறானோ, அவனே ஆத்மா என்று சொல்லி அகவே அம்ருதம், அபயம், ஆகவே ப்ரஹ்மம் என்ற விடத்தில் கண்ணில் வஸிப்பவன் பரமபுருஷன் என்றே கொள்ள வேண்டும். நிருபாதிகமான அதாவது, ஒரு காரண விசேஷத்தை அபேக்ஷிக்காத தனக்குத்தானே போக்யமாக இருக்கையும், துக்கம் கலசாத இருப்பும் எல்லா நற்குணங்களுக்கும் இருப்பிடமாய் இருத்தல் இது முதலியவை பரமாத்மாவிற்கே உண்டு.

सू—स्थानादिव्यपदेशाच्च ॥ १. २. १४ ॥

"यश्चक्षुषि तिष्ठन्" इत्यादिना स्थितिनियमनादि व्यपदेशाच्चायं परः ॥

ப்ரஹதாரண்யகத்தில் நமது கண்ணினுள் வசித்துக்கொண்டு, கண்ணினுள் புகுந்து அந்த கண்ணினின் வியாபாரங்களை செய்விக்கிறான் என்று சொல்லி இருப்பதால் அப்படிப்பட்ட பரமாத்மாவே இங்கே கண்ணினுள் வசிப்பவன். மற்றவிடத்தில் சொன்னதை ப்ரஸித்தமானது போல் கூறுவது வழக்கம். இங்கே ப்ரஸித்தமானதாக சொல்லப்பட்டிருப்பதால் வேறு இடத்தில் சொன்னதை ஒட்டி அர்த்தம் கொள்ளவேணும்.

सू—सुखविशिष्टाभिधानादेव च ॥ १. २. १५ ॥

"कं ब्रह्म खं ब्रह्म" इति पूर्वत्रास्यैव सुखविशिष्टतया अभिधानाच्चायं परः ॥

இதற்கு முன் ஸந்தர்ப்பத்தில் அந்தப்ரஹ்மமே அளவற்ற இன்பமுடையது என்று சொல்லி இருப்பதால் அந்த ப்ருஹ்மம் பரமாத்மாவே.

सू—अत एव च स ब्रह्म ॥ १. २. १६ ॥

यतस्तत्र भवभीताय उपकोसलाय ब्रह्मजिज्ञासवे "कं ब्रह्म खं ब्रह्म" इत्युपदिष्टः, "यद्वाव कं तदेव खम्" इति सुखरूपः ; अतः सुखशब्दाभिधेय आकाशः परमेव ब्रह्म ॥

உபகோஸலன் என்பவன் ஜபாலன் என்ற வேதாந்தியினிடத்தில் மாணாக்கனாகவிருந்தான். அவன் பன்னிரண்டு வர்ஷங்கள் அக்னிகளை பூஜித்து வந்தான். ஆசார்யன் இவனுக்கு வித்யை சொல்லிக்கொடுக்காமலே தேசாந்தரம் சென்றார். மனோதுக்கத்தினால் பீடிக்கப்பட்ட உபகோஸலன் உண்ணாவிரதமிருந்தான். ஆசார்ய பத்னி ஏன் ஆஹாரம் சாப்பிடவில்லை என்று கேட்டபோது உபகோஸலன் "இந்த ஸம்ஸாரத்தில் நேரக்கூடிய ஜராமர்ணம் முதலிய துக்கங்களால் வருத்தமுற்றேன்" என்றான். அப்போது அந்த ஆசாரியன் கிருஹத்தில் இருக்கும் அக்னிகள் அவனுக்கு ப்ராணசப்தவாச்யமான அளவற்ற ஸுகரூபமானதே ப்ரஹ்மம் என்று உபதேசித்தன. ஆகாசம் என்ற சொல்லால் அளவில்லாமையைச் சொல்லி அப்படி அளவில்லாத ப்ரஹ்மம் ஸுகரூபமே என்று சொல்லிற்று.

सू—श्रुतोपनिषत्कगत्यभिधानाच्च ॥ १. २. १७ ॥

श्रुतब्रह्मस्वरूपाणामधिगन्तव्याया अर्चिरादिगतेरक्षिपुरुषं श्रुतवते "तेऽर्चिषमेवाभिसम्भवन्ति" इत्यादिनाभिधानाच्चायं परमपुरुषः"

உபநிஷத்தில் கூறப்பட்ட பரமாத்மஸ்வரூபத்தை கேட்டுத் தெரிந்தவன் போய் சேரவேண்டிய அர்சிராதி மார்க்கம் என்னும் வழியை உபநிஷத்து கூறி இருக்கிறது. இந்த கண்ணில் இருக்கும் புருஷனைப்பற்றி கேட்டுத்தெரிந்தவனுக்கே அப்படிப்பட்ட அர்ச்சிராதிகதி உண்டு என்று சொல்லியிருப்பதால் இந்த அக்ஷ்யாதாரம் பரமபுருஷன் என்றே தீர்மானிக்கப்படுகிறது.

सू—अनवस्थितेरसम्भवाच्च नेतरः ॥ १. २. १८ ॥

परस्मादितरो जीवादिर्नाक्ष्याधारः, चक्षुषि नियमेन अनवस्थितेः अमृतत्वाद्यसम्भवाच्च ॥

பரமாத்மாவைக் காட்டிலும் இதரனான ஜீவன் இந்த அக்ஷ்யாதாரன் அல்ல. இதரன் எப்போதும் கண்ணில் வசிப்பவன் அல்லன் அம்ருதத்வம் முதலான குணங்கள் இதரனுக்கு ஸம்பவிக்காது. எதிரில் நிற்பவனுடைய ப்ரதிபிம்பம் கண்ணில் காணப்படுகிறது. அந்த ப்ரதிபிம்பத்தை அக்ஷ்யாதாரன் என்று சொல்லுவது சரியல்ல. சுத்த ப்ரதிபிம்பம் எப்போதும் கண்ணில் தென்படாது; உபநிஷத்தில் கண்ணில் இருப்பவன் என்றது எப்போதும் வசிப்பவனைச் சொல்லுகிறது. ஆகையால் பரமாத்மா என்றே தீர்மானம்.

---

४. अन्तर्याम्यधिकरणम्

सू—अन्तर्याम्यधिदैवाधिलोकादिषु तद्धर्मव्यपदेशात् ॥ १. २. १९ ॥

"यः पृथिव्यां तिष्ठन्" इत्यादिषु अधिदैवाधिलोकादिपदचिह्नितेषु वाक्येषु श्रूयमाणोन्तर्यामी परमपुरुषः, सर्वान्तरत्वसर्वाविदितत्वसर्वशरीरकत्वसर्वनियन्तृत्वादि परमात्मधर्मव्यपदेशात् ॥

அதிதைவம், அதிலோகம் முதலான சொற்களால் குறிப்பிடப்பட்ட வாக்யங்களில் சொல்லப்படும் அந்தர்யாமி என்பவன் பரமபுருஷனே. ஜீவன் அல்லன்; ஏனெனில் பரமாத்மாவினிடத்தில் பரமாத்மாவிற்கே உரியவையான அனேக தர்மங்களைச் சொல்லி இருப்பதால். அதாவது எல்லா வஸ்துக்களில் உட்புகுந்து நிற்கை, ஒருவராலும் அறியக்கூடாமை, எல்லாவற்றையும் தனக்கு சரீரமாக பெற்றிருக்கை, எல்லா வற்றையும் தானிட்ட வழக்காம்படி நியமனம் செய்யும்படி திறமை. இவை முதலான தர்மங்கள் கூறப்பட்டன. இவை பரமாத்மாவிற்கே உரித்தானவை.

सू—न च स्मार्तमतद्धर्माभिलापाच्छारीरश्च ॥१. २. २० ॥

नायं प्रधानं जीवश्च, तयोरसम्भावित सर्वाविदितत्वादिधर्माभिलापात् असम्भावनया यथा न स्मार्तम्, तथा जीवोपीत्यर्थः ॥

இந்த அந்தர்யாமீ என்பவன் ப்ரதானம் எனப்படும் ப்ரகிருதி அல்ல. ஜீவனும் அல்ல. அவ்விருவரிடத்திலும் ஸம்பவிக்காத ஸர்வாவிதிதத்வம் அதாவது எல்லாரும் அறியக் கூடாமை முதலிய தர்மங்கள் கூறப்பட்டிருப்பது கொண்டு. ப்ரகிருதியினிடத்தில் அந்த தர்மங்கள் ஸம்பவிக்காதவைபோலவே ஜீவனிடத்திலும் ஸம்பவிக்காதவை.

सू—उभयेपि हि भेदेनैनमधीयते ॥ १. २. २१. ॥

उभये काण्वा माध्यन्दिनाश्च, "यो विज्ञाने तिष्ठन्", "य आत्मनि तिष्टन् आत्मनोन्तरो यमात्मा न वेद यस्यात्मा शरीरं य आत्मानमन्तरो यमयति" इति प्रत्यगात्मनो भेदेन, एनम् अन्तर्यामिणम् अधीयते; अतः पर एवायम् ॥

காண்வ சாகையிலும், மாத்யந்தின சாகையிலும், இந்த பரமாத்மாவை ஜீவாத்மாவைக் காட்டிலும் வேறுபட்டவனாகவே படிக்கிறார்கள். காண்வ சாகையில், ஆத்மா என்ற பதத்தாலும் ஜீவனைச் சொல்லி அந்த

ஆத்மாவை சரீரமாகக் கொண்டவன் என்றும், அந்த ஆத்மாவை நியமிக்கிறவன் என்றும், பரமாத்மாவை வேறுபட உரைத்திருப்பதால் அந்த அந்தர்யாமி பரமாத்மா வென்றே சொல்லவேண்டும்.

---

५. अदृश्यत्वादिगुणकाधिकरणम् ॥

सू—अदृश्यत्वादिगुणको धर्मोक्तेः ॥ १. २. २२ ॥

"अथ परा यया तदक्षरमधिगम्यते यत्तदद्रेश्यम्" इत्यारभ्य, "यद्भूतयोनिं परिपश्यन्ति धीराः", "अक्षरात् परतः परः" इत्यादौ प्रधानात्प्रत्यगात्मनश्च अर्थान्तरभूतः परमात्मा प्रतिपाद्यते, "यस्सर्वज्ञस्सर्ववित्" इत्यादि धर्मोक्तेः ॥

முண்டகம் என்னுமுபநிஷத்தில் கண்ணுக்கு புலப்படாத வஸ்துவை அறிவிக்கும் வித்யை என்று தொடங்கி, அந்த கண்ணுக்குப் புலப்படாத வஸ்து ஸர்வபூதங்களுக்கும் மூலகாரணம் என்றும், ப்ரகிருதியைக் காட்டிலும் ஜீவனைக் காட்டிலும் வேறு என்றும், அந்த பரமாத்மாவைச் சொல்லுகிறது. எல்லாவற்றையும் பொதுவாகவும், விரிவாகவும், அறிபவன் என்று பரமாத்மாவிற்கே உரிய தர்மங்களைச் சொல்லி இருப்பதால் இந்த ப்ரகரணம் பரமாத்மாவைப் பற்றியதே.

सू—विशेषणभेदव्यपदेशाभ्याञ्च नेतरौ ॥ १. २. २३ ॥

एकविज्ञानेन सर्वविज्ञानरूपविशेषणव्यपदेशान्न प्रधानम्, "अक्षरात् परतः परः" इति प्रधानात्परतः प्रत्यगात्मनोपि पर इति भेदव्यपदेशात्, न प्रत्यगात्मा च ॥ अथवा सामानाधिकरण्येन परतोऽक्षरात् पंचविंशकात् पर इति भेदव्यपदेशः ॥

இந்த ப்ரகரணத்தில் ஒரு வஸ்துவை அறிந்ததால் மற்றெல்லா வஸ்துக்களும் அறிந்தவை ஆகின்றன என்று ப்ரகிருதியைக் காட்டிலும் வேற்றுமை சொல்லப்பட்டது.

"அக்ஷராத்பரத:' பர:" என்று ப்ரகிருதியைக் காட்டிலும் வேறானது ஜீவாத்மா, ஜீவாத்மாவைக் காட்டிலும் வேறானது பரமாத்மா என்று தெளிவாய் உரைக்கப்பட்டது "அக்ஷராத் பரத;" என்று ப்ரகிருதியையும் ஜீவனையும் ஒரே வேற்றுமையால் சொல்லி பர: என்று அவ்விரண்டைக் காட்டிலும் வேற்றுமை தோற்ற சொல்லி இருப்பதால் ப்ரகிருதி ஜீவர்களைக் காட்டிலும் பரமாத்மா அன்யன் :

सू—रूपोपन्यासाच्च ॥ १. २. २४ ॥

" अग्निर्मूर्धा " इत्यादिना त्रैलोक्यशरीरोपन्यासाच्च परमात्मा ॥

அந்த முண்டகோப நிஷத்தில் அக்நிர் மூர்த்தா என்று தொடங்கி மூன்று உலகங்களும் அந்தபரமாத்மாவிற்கு சரீரமாகின்றன என்று உபன்யஸித்திருப்பதால் அப்படிப்பட்டவன் ப்ரகிருதியுமல்ல ஜீவனுமல்ல. இப்படி கண்ணுக்குப் புலப்படாதவன் என்று சொல்லப் பட்டவன் பரமாத்மாவே.

---

६. वैश्वानराधिकरणम् ॥

सू—वैश्वानरस्साधारणशब्दविशेषात् ॥ १. २. २५ ॥

" आत्मानमेवेमं वैश्वानरम् " इत्यादौ वैश्वानरः परमात्मा, जाठराग्न्यादिषु साधारणस्यापि वैश्वानर शब्दस्य अस्मिन्प्रकरणे परमात्मासाधारणैः सर्वात्मकत्वब्रह्मशब्दादिभिर्विशेष्यमाणत्वात् ॥

சாந்தோக்கிய உபநிஷத்தில் "வைச்வாநரன் என்பவன் யார்" என்று கேள்வி கேட்டு அதற்கு ஸமாதானம் எல்லா பூதங்களுக்கும் ஆத்மாவாயும் ப்ருஹ்மம் என்ற பெயர் பெற்றதுமான வஸ்துவே வைச்வாநரன் என்று சொல்லி யிருக்கிறது. வைச்வாநரன் என்ற சொல்லிற்கு அக்னி என்று பொருள்.

இந்த சொல் பரமாத்மாவையும் அக்னியையும் சொல்லி பின்னே பரமாத்மாவிற்கே உரியதான அனேக விசேஷணங்களால் குறிக்கப்பட்டிருப்பதால் இங்கு வைச்வாநரன் என்ற சொல் பரமாத்மாவையே சொல்லும்.

सू—स्मर्यमाणमनुमानं स्यादिति ॥ १. २. २६ ॥

158716

द्युलोकप्रभृति पृथिव्यन्तं रूपम् " अग्निर्मूर्धा " इत्यादिषूक्तम् , अत्र प्रत्यभिज्ञायमानमस्य परमात्मत्वे अनुमानम् लिंगमित्यर्थः ॥

ஸ்மர்யமாணம்—மற்ற விடங்களில் காணப்படும் அடையாளச் சொல், அதைக்கொண்டு பரமாத்மா இன்னதென்று அனுமானம் செய்யக்கூடும். முண்டகோப நிஷத்தில் "அக்னிர் மூர்தா" என்று தொடங்கி, த்யுலோகம் முதல் ப்ருதிவீ வரை எல்லாம் பரமாத்மாவின் உருவம் என்று சொல்லப்பட்டது. அதைக்கொண்டு இங்கு வைச்வாநரன் பரமாத்மாவே என்று நிர்ணயிப்பது யுக்தம்.

सू—शब्दादिभ्योऽन्तः प्रतिष्ठानाच्च नेति चेन्न तथा दृष्ट्युपदेशाद सम्भवात्पुरुषमपि चैनमधीयते ॥ १. २. २७ ॥

" स एषोऽग्निर्वैश्वानरः " इति अग्निशब्दसामानाधिकरण्यात प्राणाहुत्याधारत्वादिभिः " पुरुषेऽन्तः प्रतिष्ठितम् " इत्यादेश्च नायं परमात्मेति चेत्—नैतत् , जाठराग्निशरीरकत्वेनोपास्यत्वोपदेशात् केवलजाठराग्नेः त्रैलोक्यशरीरकत्वाद्यसम्भवाच्च । " स एषोऽग्निर्वैश्वानरो यत्पुरुषः " इत्येनं वैश्वानरं पुरुषमप्यधीयते वाजिनः " । निरुपाधिक पुरुषशब्दश्च परमात्मनि नारायण एव " सहस्रशीर्षम् " इत्यारभ्य " विश्वमेवेदं पुरुषः " इत्यादिषु प्रसिद्धः " ।

முன் ஸூத்திரத்தில் வைச்வாநரன் என்பவன் பரமாத்மாவே என்று நிரூபிக்கப்பட்டது. அதன் மேல் ஒரு ஆக்ஷேபம் தோன்றுகிறது. அந்த வைச்வாநரன் அக்னி என்று சொல்லப்பட்டிருப்பதாலும், அந்த அக்னியில் ப்ராணாஹுதி செய்ய விதி இருப்பதாலும், நம்முடைய சரீரத்தின் உள் வஸிக்கின்றான் என்று சொல்லி இருப்பதாலும், வைச்வாநர சப்தம் பரமாத்மாவையே சொல்லும் என்பதற்கு இடமில்லை என்று. ஸமாதானம்—வைச்வாநரன் பரமாத்மாவே; அவனை நமது சரீரத்தில் இருக்கும் அக்னி ரூபமாக உபாஸிக்கவேண்டும் என்று விதி. நமது வயிற்றிலிருக்கும் அக்னிக்கு த்ரிலோக ரூபத்வம் ஒவ்வாது; அந்த வைச்வாநரனே புருஷன் என்று சொல்லி இருப்பதும் பொருந்தாது. விச்வமேவேதம் புருஷ: என்று முதலிய வாக்யங்களில் புருஷன் என்று சொல்லப்பட்டது பரமாத்மாவிற்கே ஒக்கும்.

सू—अत एव न देवता भूतञ्च ॥ १. २. २८ ॥

यतोयं वैश्वानरः त्रैलोक्यशरीरः पुरुषशब्दनिर्दिष्टश्च, ततोयं नाग्न्याख्यदेवता, तृतीयमहा भूतञ्च ॥

இந்த வைச்வாநரன் மூன்று உலகங்களையும் சரீரமாகக் கொண்டவன் என்றும், புருஷன் என்றும் சொல்லி இருப்பது கொண்டு இவனை அக்னி என்றாவது பஞ்சபூதங்களில் மூன்றாவதான தேஜஸ் என்றாவது சொல்லக்கூடாது.

सू—साक्षादप्यविरोधं जैमिनिः ॥ १. २. २९ ॥

नावश्यमग्निशरीरकत्वेन उपास्यत्वायेदमग्निशब्दसामानाधिकरण्यम्, अग्रनयनादियोगेन परमात्मन्येवाग्निशब्दस्य साक्षाद्वृत्तेस्सामानाधिकरण्याविरोधं जैमिनिराचार्यो मन्यते ॥

பரமாத்மாவை அக்னி சரீரகனாக உபாஸிக்கவேணும் என்று, அந்த பரமாத்மாவை வைச்வாநர சப்தத்தால் சொல்லியது என்று சொல்ல வேண்டிய அவச்யமில்லை. அக்னி, வைச்வாநர முதலிய சப்தங்களை பரமாத்மாவையே சொல்லும்படி பொருள் படுத்தக்கூடும். அதாவது, அக்னி என்றால் முன் செல்லுகிறவன் அல்லது எல்லாவற்றையும் முன்னே நடத்துகிறவன். இவ்விதம் எல்லா பதங்களும் பொருள் சொல்லக்கூடும் என்று ஜைமினி என்ற ஆசார்யன் அபிப்பிராயப்படுகிறார்.

सू—अभिव्यक्तेरित्याश्मरथ्यः ॥ १. २. ३० ॥

"यस्त्वेतमेवं प्रादेशमात्रम्" इत्यनवच्छिन्नस्य द्युप्रभृतिपरिच्छिन्नत्वम् उपासकाभिव्यक्त्यर्थमिति आश्मरथ्यः ॥

ஆச்மரத்யர் என்ற ஆசார்யன் இவ்விதம் அபிப்பிராயத்தை வெளியிடுகிறார். அளவிட முடியாத பரமாத்மாவை அளவிட்டுச் சொன்னது உபாஸகன் எளிதில் அறிவதன் பொருட்டு; அளவில்லாத வஸ்துவை அறிந்து உபாஸிப்பது ச்ரமம். அதற்காக அவனை அளவிட்டுச் சொன்னது.

सू—अनुस्मृतेर्बादरिः ॥ १. २. ३१ ॥

Registered No. M. 3778.

சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனாயிருப்பது
வைர நகையே.

சீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே [illegible] தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्रैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥

“ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள்

குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர்கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகு பிரசஸ்தமானது. அவ்வாறு உயர்குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்.”



உத்தம குணம் பொருந்திய வைரங்களே அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்றாகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸூராஜ்மல் கம்பெனியாரே.

SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.

Printed by S. Krishna at Kabeer Printing Works, 195, High Road, Triplicane, and Published by V. Ananthachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.